

தமிழரசு
மார்ச் 16 1973. 40 காசு


நாடும் நாமும்......
நம் நல்வாழ்வை நாடும் திட்டங்களுக்கே
நமது அரசு முதலிடம் தருகிறது !
பசுமைப்புரட்சி மூலம்
உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று
இந்தியாவில் முதலிடம் வகிக்கிறோம்.
சமதர்மத் திட்டங்களைச் செயல்படுத்துவதில்
நமது அரசு முன்னணியில் திகழ்கிறது!
பன்னிரண்டு ஆண்டுத் தொலை நோக்குத் திட்டத்தின் கீழ்
புதுவாழ்வு மலர அரும் பெரும் முயற்சிகள் !
இந்தப் பணிகளுக்கு
வலுமிக்க அடித்தளம் அமைய
நாம் செய்யும் கைம்மாறுதான்
அளவான குடும்பம்!
நாட்டின் முன்னேற்றத்தின் அடையாளம்
திட்டமிட்ட குடும்பம்
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம் !
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம் !!
குடும்ப நலத்துறை
தமிழ்நாடு அரசு

# தமிழரசு

16-3-'73

கோவை மாவட்டச் செய்தித் தொகுப்பு




ஏப்ரல் 1௨ இதழ்
ஊர் வளர்ச்சிச்
சிறப்பிதழ்

# பால் வளம் பெருகிட...

## முதல்வர் டாக்டர் கலைஞர்

உலகில் பெரும்பான்மையான பகுதிகளிலே — பெரும்பாலான மொழிகளிலே 'பால்' எனும் சொல் தூய்மை என்பதுடன் தொடர்பு கொண்டு விளங்குகிறது. இது அதன் வெண்ணிறத்தால் மட்டுமன்று ; அது குழந்தைகளுக்கும், மெலிந்தார்க்கும், முதியோர்க்கும் உரமூட்டும் உணவாய் அமைந்துள்ளது. தாயின்பால் தூயது ; நோயணுக்களால் பாதிக்கப்படாதது.

தமிழகத்திலே விழாக்களில் எல்லாம் பால் இடம்பெறுகிறது. திருமணம் முதலாகக் குழந்தைப் பேறு ஈறாக எல்லா விதமான மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளில் எல்லாம் பாலும், பாலினின்று ஆக்கப்படும் பலவகைப் பொருள்களும் பயன்படுத்தப்படுகின்றன. புதிய இல்லத்திற்குக் குடிபோகும்போது பால் காய்ச்சு விழா எடுக்கிறோம். எனவே, அனைத்து மொழிகளிலும் பால் தூய்மைக்கும் இன்றியமையாமைக்கும்பயன்படுத்தும் ஒன்றாகப் பொலிகிறது.

பாலின் பெருமையையும், சிறப்பையும், புகழையும் பாதுகாப்பது எவ்வாறு என்பதே இன்றையப் பால் பண்ணையாளரின் பெரும்பணியாக விளங்குகிறது. அதை எவ்வாறு தூயதாகவும், கலப்படமின்றியும் வைத்துக் கொள்வது, மேலும் மேலும் பாலை எவ்வாறு பெருக்கலாம் ; அதை மேலும் பலர் பெறுமாறு செய்வது எங்ஙனம் ? இது சொல்வது எளிது ; ஆனால், செயலிற் கொண்டு வருவது அத்துணை எளிதன்று.

உழவன் தன் வருவாயைப் பெருக்கி வாழ்வை வளமாக்க விரும்பினால் உணவு தானியங்களைப் பயிரிடுதலை மட்டும் நம்பியிருந்தால் போதுமானதன்று ; வேளாண்மையுடன் பால்பண்ணை, கோழி வளர்த்தல் போன்ற தொழில்களையும் மேற்கொள்ள வேண்டும். இது அவர்கள்-வாழும் இடம், சூழ்நிலை, தட்பவெப்பநிலை, மண்ணியல்பு, விற்பனை வாய்ப்பு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு இவற்றுள் ஏதேனும் ஒன்றை மேற்கொள்ளலாம். ஒருஏக்கர் நிலமுள்ள உழவன் கூட இரண்டொரு பால் மாடுகளைப் பேணிவரின் தனது வருவாயை அவன் பெருக்கிக் கொள்வான் ; ஆனால், அவற்றிற்குச் சிக்கனமான முறையில் தீனி இடவேண்டும். இதற்குத் தன்னிலத்திலேயே-இரண்டு மூன்று சென்டு நிலத்தை அவற்றின் தீனி பயிரிட ஒதுக்கினால் போதுமானது. இரண்டு மூன்று ஏக்கர் நிலமுடையார்க்கு இது மேலும் எளிதாகும்.

1970–71-ஆம் ஆண்டில் இந்தியாவில் ஒவ்வொரு மனிதனுக்கும் நாள்தோறும் சராசரி 105 கிராம் பால் கிடைத்ததெனப் புள்ளி விவரம் கூறுகிறது. சத்துணவு வல்லுநர்கள் ஒவ்வொருவரும் நாளொன்றுக்குக் குறைந்த அளவு 300 கிராம் பாலேனும் பருகவேண்டுமெனக் கூறுகின்றனர் ; தமிழகத்திலே ஒவ்வொருவருக்கும் நாள்தோறும் சராசரி கிடைக்கும் பால் 63 கிராம் அளவே ; இது தேசிய அளவுக்கு மிகவும் குறைவே.

உலகில் உள்ள ஏனைய நாடுகளைவிட நம் நாட்டிலே கால்நடைகளின் தொகை மிகுதியே; 229 இலட்சம் கால்நடைகள் இங்கு உள்ளன. இவற்றில் 80 இலட்சம் இனவிருத்திக் கேற்றவை. ஆனால், இந்தியக் கறவைகள் தரும்பால் உலகிலேயே மிகக் குறைவு. அதாவது பால் கறக்கும் பருவக் காலத்தில் அவை தரும் மொத்த அளவு 200 லிட்டரே. டேனிஷ்பசு 3,700 லிட்டரும், அமெரிக்கப் பசு 3,200 லிட்டரும் தருகின்றன. 1980-ஆம் ஆண்டில் 25 இலட்சம் கால்நடைகள் 2,500 லிட்டர் பால், கறவைக் காலத்தில் தருமானால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும்.

இனக்கலப்பு முறையால் கால்நடைகளைப் பெருக்கலாம் ; இதற்குரிய வசதிகளை உழவர்களுக்கு வழங்கல் வேண்டும். தமிழ்நாட்டுப் பால்வள மேம்பாட்டுக் கழகம் இத்திட்டத்தை மேற்கொண்டுள்ளது பாராட்டத்தக்கது.

கால்நடைத் தீனி மற்றொரு பிரச்சினையாகும் ; தீனி வகைகளின் விலை மிகவும் உயர்ந்திருக்கிறது. இது கால்நடை வளர்ப்பாரைச் சிறப்பாக நகரத்திலே உள்ளவரை மிகவும் பாதித்திருக்கிறது. புல்போன்ற தீனி வகைகளின் நிலை அஞ்சத்தக்கதாயுள்ளது ; இந்த நெருக்கடி நிலத்தின் ஒரு பகுதியைக் கால்நடைத் தீனி பயிரிட ஒதுக்குவதாலேயே தீர்க்க முடியும் ; இது ஒரு சக்கரம் போன்று சுழன்று வரும் திட்டமாகும். நிலங்களைக் கால்நடை உணவு பயிரிட ஒதுக்கினால் பால் பெருகும் ; பால் பெருக உழவர்க்கும் மற்றையோர்க்கும் மிகுதியாகக் கிடைக்கும்: மிகுதியான உடல் நலமும் உழவரின் பொருளாதார நிலையும் ஓங்கும்.

பால் உற்பத்தியைப் பெருக்கும் நிலையில் அதை விற்பனை செய்வதற்குரிய வசதிகளையும் பெருக்க வேண்டும்; பாலைப் பாதுகாத்து வழங்கத் தக்க இயந்திரங்கள் அமைக்க வேண்டும். இது சிக்கனமும் சீரிய பயனும் தரும்வகையில் அமைய வேண்டும்.

கூட்டுறவு முறையில் பால் விற்பனை செய்வது சிறந்த பயன்தரும். இம் முறையினால் உழவர்களும் பெரிதும் பயன்பெறுவர்; இடைத்தரகர்கட்கு இதில் இடமில்லை. பொருளாதார வகையிலும் தொழில்நுட்பத் துறையிலும் கூட்டுறவு முறை கையாளப்படல் வேண்டும்.

இந்தியா முழுவதிலும் கூட்டுறவு முறை பால் உற்பத்தித் தொழிலில் மேற்கொள்ளப்படின் குடியானவர்க்கு ஊதியம் பெருகும்; மக்களுக்கும் குறைந்த விலையில் கூடுதலான பால் கிடைக்கும்.

எல்லைக்குட்பட்ட இந்த உலகிலே மக்களுக்கும், விலங்குகளுக்கும் வருந்தத்தக்க போட்டி நிகழ்கிறது. நமது தமிழகத்தே இன்றைய மக்கள்தொகை 41 மில்லியனாகும். இது 1980-ல் 48 ஆக உயரும்; நமது மொத்த நிலப்பரப்பு 13 மில்லியன் ஹெக்டேராகும்; இதில் 13 மில்லியன் கால்நடைகள் பாதுகாக்கப்படவேண்டும்; விரும்பியபடி கால்நடைகள் வெளியே சென்று மேய்ந்து வரும் நிலங்கள், மக்கள் தொகைப் பெருக்கால் நாள்தோறும் குறைந்து வருகின்றன. இந்நிலையில் நாள்தோறும் 300 கிராம்பால் ஒவ்வொருவரும் பெறுமாறு செய்ய இயலுமா என்பது சிந்திக்கத்தக்கது.

**(8—3—1973 அன்று சென்னை இராஜாஜி அரங்கில் நடைபெற்ற அனைத்து இந்தியப் பால்பண்ணைத் தொழில் கருத்தரங்கினைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரையின் முக்கியப் பகுதிகள்)**

"வேளாண்மைத் துறையில் பலமுனையிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதனால், நமது முயற்சிக்குப் பலமுனைகளிலும் இருந்து பாராட்டுகள் குவிந்து வருகின்றன. ஆனால், கால்நடைப் பராமரிப்பின் நிலை மகிழ்ச்சியூட்டும் அளவுக்கு இல்லை.

தமிழ்நாட்டில் பல இலட்சம் பசுக்களும் எருமைகளும், உள்ளன. ஆனால், அவைகள் உற்பத்தி செய்யும் பாலின் அளவு மிகவும் குறைவு. மக்கள் நல்வாழ்வுத் துறை வல்லுநர்கள் வரையறுத்துக் கூறும் குறைந்த அளவு பால் தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமானால், தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு பசுவும் தற்பொழுது கொடுத்துவரும் பாலின் அளவை விட 5 மடங்கு அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலாவது இந்த அளவுக்குப் பால்உற்பத்தி செய்ய இயலுமா? இந்த இலக்கினை எய்திட என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்?

நமது உள்ளூர்க் கால்நடைகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் 'முரா' எருமைக் கடாக்களைக் கொண்டு எருமைகளையும், 'சிந்தி', 'தர்பார்க்கர்' பொலி காளைகளைக்கொண்டு பசுக்களையும் மேம்படுத்தும் (grading up) முறையை, நாம் அண்மைக் காலம் வரை மேற்கொண்டு வந்துள்ளோம். இம்முறையினால் நமது தமிழ்நாட்டின் பால் உற்பத்தி 2 மடங்காகப் பெருகியுள்ளது. ஆனால், இவ்வாறு 2 மடங்கு பால் உற்பத்தி செய்யும் இலக்கினை எய்திட ஏறத்தாழ 70 ஆண்டுகள் அல்லது 16 தலைமுறைக் காலம் தேவைப்பட்டுள்ளது. எனவே, நமதுமுன்னேற்றத்தைத் தீவிரப்படுத்தி, தேவைக்கேற்பப் பால் உற்பத்தி செய்திட வேண்டிய இலக்கினை வெகுவிரைவில் அடைய வேண்டியுள்ளது.

பால் உற்பத்தியையே முக்கியத் தொழிலாகக் கொண்ட நாடுகளில் ஒவ்வொரு பசுவும் 305 நாட்களில் (பால் கொடுக்கும் காலம்) 3,000 லிட்டருக்குக் குறையாமல் பால் கொடுக்கின்றன. நமது நாட்டில் பால் தருவதற்கென்றே உள்ள தரமான பசுக்களில்கூட இந்த அளவு பால் உற்பத்தி செய்ய முடியவில்லை. 5,000 முதல் 6,000 லிட்டர் பால் கொடுக்கக் கூடிய பசுக்களை உற்பத்தி செய்யும் திறன் படைத்த காளை ரகங்கள் மேலை நாடுகளில் உள்ளன.


இந்த இதழுடன்

இலவச இணைப்பு

# இருளும் ஒளியும்

## புகழ் மணக்கும் கோவை !

கோவை மாவட்டத்தில் பல்வேறு நகரங்கள், ஓரோர் வகையில் தனிச்சிறப்பும் புகழும் பெற்றவை. உதாரணத்துக்குச் சில :

| | |
|---|---|
| **பொள்ளாச்சி** | — சந்தை |
| **கோவை** | — சிறுவாணி நீர் |
| மேட்டுப்பாளையம் | — ஒற்றைச் சாயப்பாக்கு |
| **அந்தியூர்** | — துளிர் வெற்றிலை |
| **மாயாறு** | — மீன் |
| **பவானி** | — ஜமுக் காளம் |
| **சத்தியமங்கலம்** | — சந்தன மரம் |
| **ஈரோடு** | — மொந்தன் பழம் |
| **காங்கேயம்** | — காளை |
| **திருப்பூர்** | — பனியன் |
| **பேரூர்** | — சிற்பம் |
| **அவிநாசி** | — தேர் |

பால் உற்பத்தி செய்யும் திறனில் 50 சத அளவைத் தன்னுல் பிறக்கவிருக்கும் கன்றுகளுக்கு அளித்திட வல்லவை பொலி காளைகள் என்பது உலகம் அறிந்த உண்மையாகும். நமக்குத் தேவையான அளவு பால் தரும் சக்தியை நமது பசுக்களுக்குப் பொலிகாளைகள் ஒரு தலைமுறைக்காலத்திலேயே அளித்துவிடும். குளிர்விக்கப்பட்ட விந்து பயன்படுத்தும் தொழில் நுட்பமுறை மேற்கொள்ளப்படுமானுல், செயற்கை இன விருத்தி முறையினுல், ஒரு பொலி காளையைக் கொண்டு ஓர் ஆண்டில் 5,000 பசுக்களைக் கருவுறச் செய்ய முடியும். இத்தகைய 500 பொலி காளைகளைக் கொண்டு ஒரே ஆண்டில் 25 இலட்சம் பசுக்களைக் கருவுறச் செய்ய முடியும். இதனுல் பிறக்கவிருக்கும் கன்றுகளில் 50 சத அளவு காளையாக இருந்துவிடும் என்று எடுத்துக்கொண்டாலும், மேலும் ஓர் ஆண்டுக்காலத்திலேயே நமக்குத் தேவையான அளவு பால்உற்பத்தி செய்வதற்குத் தேவையான பசுக்களை உற்பத்தி செய்துவிடமுடியும். எனவே, நாம் திட்டமிட்டுள்ளபடி பால்உற்பத்தி இலக்கினை அடைய, குறைந்த அளவு 500 மேல் நாட்டுப் பொலி காளைகளை வாங்க வேண்டியுள்ளது.

மைசூர் மாநிலத்தில் 'கசர் கட்டா' என்ற இடத்தில் உள்ள 'இந்திய-டேனிஸ்' திட்டப் பண்ணையும் கேரள மாநிலத்தில் 'முன்ஞர்' என்ற இடத்தில் உள்ள 'இந்திய-ஸ்விஸ்' திட்டப் பண்ணையும் தரமான காளைகளை உற்பத்தி செய்து வருகின்றன. நமது திட்டத்திற்கு அப்பண்ணைகளிலிருந்து முடிந்த அளவுக்குப் பொலிகாளைகளை வாங்க வேண்டும். மீதித் தேவைக்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டும். இதற்கிடையில் இத்திட்டத்தை மேற்கொள்வதற்குத் தேவையான உள்ளமைப்புகளை (Infar Structure) மேம்படுத்த வேண்டும். இத்திட்டத்தின் பணிகள் உழவர்களின் வீட்டு வாசலிலேயே, தேவையான காலத்தில் கிடைக்கச் செய்வதற்குரிய வகையில் கால்நடைப் பராமரிப்புத் துறையின் உள்ளமைப்புகள் அமைக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்தால் தமிழ்நாட்டின் பால் உற்பத்தி வெகு விரைவில் பன் மடங்கு பெருகும் என்பது திண்ணம்.

**பேராசிரியர் க. அன்பழகன்,**

மக்கள் நல்வாழ்வு, கால்நடைத் துறை அமைச்சர்.

(பத்தாவது அனைத்து இந்திய பால் பண்ணைத் தொழில் கருத்தரங்கிற்கு வருகை தந்த பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசிய உரையில் ஒரு பகுதி)

---

"இந்தியா ஒரு மிகப்பெரிய வேளாண்மை நாடு. இந்திய மக்களில் பெரும்பாலானவர்கள் வேளாண்மை மற்றும் அதன் தொடர்பான தொழில்களையே நம்பி வாழ்கின்றனர். அவர்களுக்கு, வேளாண்மை முழு நேர வேலை வாய்ப்பையும், போதிய வருவாயையும் அளிக்காததால், பெரும்பாலான உழவர் பெருமக்கள் பால்உற்பத்தி, கோழி வளர்த்தல் முதலிய பணிகளில் இன்று ஈடுபட்டுள்ளனர். உழவர்களால் உற்பத்தி செய்யப்படும் பால், அவர்களுடைய வருவாயைப் பெருக்குவதுடன், ஊட்டச்சத்து மிகுந்த உணவாகவும் மக்களுக்குப் பயன்படுகிறது. ஆனுல், சமுதாயத்தின் அடித்தளத்திலே வாழும் சாதாரணப் பொதுமக்கள் பாலின் சிறப்பையும், அதில்உள்ள ஊட்டச்சத்து மதிப்பையும் உணராமல் உள்ளனர். எனவே, இந்த நேரத்தில், 'அன்ருட உணவில் பாலையும் பயன்படுத்த வேண்டும்' என்ற எண்ணத்தை அவர்களுடைய மனத்திலே ஏற்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். ஆனுல், அதே நேரத்தில், குறைந்த விலையில் பால்வழங்க நாம் முயற்சி எடுக்காவிட்டால், நமது அறிவுரையைக் கேட்டு அன்ருட உணவில் பாலைப் பயன்படுத்த முன்வரமாட்டார்கள் என்பதையும் நாம் நினைவுகொள்ள வேண்டும். எனவே, பால் உற்பத்தியைப் பெருக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் பால் உற்பத்தியைப் பெருக்கினுல் மட்டும் போதாது ; அதே நேரத்தில் சாதாரணப் பொது மக்களும் வாங்கும் நிலையில் பாலின் விலையைக் கட்டுப் படுத்த வேண்டும்."

**திரு மு. கண்ணப்பன்,**

அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர்.

(பத்தாவது அனைத்து இந்திய பால் பண்ணைத் தொழில் கருத்தரங்கில் சிறப்பு மலரை வெளியிட்டு உரையாற்றியதில் ஒரு பகுதி)

# வீட்டு மனை அளித்து வாட்டம் போக்கினோம்!

ஏழையின் தோழனாக விளங்கும் இன்றையத் தமிழ்நாடு அரசு, கோவை மாவட்ட ஏழை எளிய மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா அளிப்பதில் வியத்தகு சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

### அன்றும் இன்றும்

வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ்க் கோவை மாவட்டத்தில் 1967-68-ஆம் ஆண்டு முதல் 15—1—1973 வரையான $5\frac{3}{4}$ ஆண்டுக் காலத்தில் ஏற்பட்டுள்ள சாதனையை, 1960-61 முதல் 1966-67 வரையான 7 ஆண்டுக் காலத்தில் ஏற்பட்டுள்ள சாதனையுடன் ஒப்பு நோக்கின், இன்றைய அரசு செய்துள்ள சேவை வியப்பிற்குரியது மட்டுமல்ல, மனிதாபிமான அடிப்படையானது என்பதும் புலனாகும். இதைத் தெளிவுபடுத்தவே பின் கண்ட புள்ளி விவரங்களைக் கோவை மாவட்ட ஏழை எளிய மக்களின் முன் படைக்கின்றோம்.

வீட்டுமனை ஒப்படை விவரம்—அன்றும் இன்றும்

### அன்று

| ஆண்டு. | வீட்டுமனை பெற்றவர் களின் எண்ணிக்கை. | வீட்டுமனைக் காக ஒப்படை செய்த பரப்பு (ஏக்கர்). |
|---|---|---|
| 1960-61 | 1,240 | 41 |
| 1961-62 | 1,220 | 57 |
| 1962-63 | 1,275 | 143 |
| 1963-64 | 1,170 | 33 |
| 1964-65 | 1,270 | 40 |
| 1965-66 | 1,270 | 48 |
| 1966-67 | 1,223 | 49 |
| மொத்தம் | 8,578 | 411 |

### இன்று

| ஆண்டு. | வீட்டுமனை பெற்றவர் களின் எண்ணிக்கை. | வீட்டுமனைக் காக ஒப்படை செய்த பரப்பு (ஏக்கர்). |
|---|---|---|
| 1967-68 | 1,380 | 58 |
| 1968-69 | 2,031 | 88 |
| 1969-70 | 9,416 | 288 |
| 1970-71 | 24,147 | 708 |
| 1971-72 | 36,925 | 741 |
| 1972-73 (15—1—1973 வரை) | 14,642 | 290 |
| மொத்தம் | 88,547 | 2,173 |

அன்று 7 ஆண்டுகளில் 8,578 பேர்களுக்கு 411 ஏக்கர் நிலம் வீட்டு மனைக்காக ஒப்படை செய்யப்பட்டது.

இன்று 5 ஆண்டுகளில் 88,547 வீடற்ற ஏழைகளுக்கு 2,173 ஏக்கர் நிலம் வீட்டு மனைக்காக ஒப்படை செய்யப் பட்டுள்ளது.

அன்று 7 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றவர் களின் எண்ணிக்கையை, கடந்த 5 ஆண்டுகளில் வீட்டுமனைப்பட்டா பெற்றவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பு நோக்கினால், இன்றைய 5 ஆண்டுகளில் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள், அன்றைய 7 ஆண்டுகளில் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களைப்போல் 10 மடங்காக இருப்பதும், அதுபோலவே, வீட்டுமனையாக வழங்கப்பட்ட நிலப்பரப்பும் 5 மடங்காகப் பெருகியுள்ளதும் வெள்ளிடை மலையென விளங்குகிறது.




எனவே, இன்றையத் தமிழ்நாடு அரசு கோவை மாவட்ட ஏழை, எளிய, பாமரப் பாட்டாளி, தொழிலாளிகளுக்கு, வீட்டு மனைப்பட்டா வழங்குவதில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது என்பதை நடுநிலையாளர் எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.




உழைப்பையே மூலதனமாகக் கொண்டு, உழவிலும் தொழிலிலும் உயர்ந்துள்ளது கோவை மாவட்டம். ஆனால், இயற்கையோ கோவை மாவட்டத்தின் பெரும் பகுதிக்குப் போதிய மழையைக் கொடுப்பதில்லை. மேற்குத் தொடர்ச்சி மலையின் மழை மறைவுப் பகுதியில் அமைந்துள்ள கோவை மாவட்டத்தின் தென் பகுதியில் அமைந்துள்ள பல்லடம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாராபுரம், ஆகிய வட்டங்கள் போதிய மழை இன்றி வறண்டு, வளமற்ற நிலையில் அமைந்துள்ளது. பல்லாண்டுக் காலமாக வானத்தையே நம்பி, அப்பகுதி மக்கள் வாழ்ந்து வந்தனர். ஆயினும் உழைப்பால் உழவிலும், தொழிலிலும் உயர்ந்து வாழ்ந்தனர். அவர்களை மேலும் ஊக்கப்படுத்தவே பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டம் உருவாக்கப்பட்டது.

பரம்பிக்குளம் — ஆழியாறு திட்டம் கோவை மாவட்டத்தின் வறண்ட பகுதிகளை வளப்படுத்துவதற்காகவே முக்கியமாக உருவாக்கப்பட்ட தென்றாலும், கோவை மாவட்டத்திற்கு மட்டுமல்லாமல் தமிழ்நாட்டிற்கே பல்வேறு பயன்தரும் பலநோக்குத் திட்டமாகவும், பல்வேறு பள்ளத்தாக்குகளை இணைக்கும் திட்டமாகவும் ( Multi-purpose and Multi-valley Project ) விளங்குகிறது. இத்திட்டத்தினால் பின்கண்ட பயன்கள் ஏற்பட்டுள்ளன :—

1. வறண்ட நிலங்கள் வளம் பெற்று, பசுமைப் புரட்சி ஏற்பட்டு, வேளாண்மை உற்பத்தி பெருகி வருகிறது.

2. மின்சக்தி உற்பத்தி பெருகியது.

3. மீன் வளம் பெருகி வருகிறது.

4. சுற்றுலாவுக்கான இடங்கள் தோன்றி வருகின்றன.

5. கால்நடைகளின் தண்ணீர்ப் பஞ்சம் தீர்ந்தது.

6. வனச்செல்வம் வளர்ந்து வருகிறது.

7. வேலைவாய்ப்புப் பெருகியது.

8. நாட்டின் பொருளாதாரம் மேம்பட்டு வருகிறது.

'காட்டில் காய்ந்த நிலவுபோல்' யாருக்கும் பயனின்றி மேற்குத் தொடர்ச்சி மலையில் உருவாகி, மேற்கு நோக்கி ஓடி அரபிக் கடலில் கலந்து வீணாகிக்கொண்டிருந்த ஆற்று நீரைத் திருப்பிக் கோவை மாவட்டத்தை வளம் கொழிக்கச் செய்யவும் அதன் பயனாய் மாவட்ட மக்களின் வாழ்வு வளம் பெறவும் வழி வகுத்தது பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டம். இத்திட்டத்தின் கீழ் நீராறு பள்ளத்தாக்கும், சோலையாறு பள்ளத்தாக்கும் இணைக்கப்படுகிறது. அதன்பிறகு இவ்விரு பள்ளத்தாக்குகளும் பரம்பிக்குளம் பள்ளத்தாக்குடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. பரம்பிக்குளம் பள்ளத்தாக்கிலிருந்து, மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குச் சரிவில் அடிவாரத்தில் உள்ள ஆழியாறு நீர்த்தேக்கத்திற்கும், திருமூர்த்தி நீர்த் தேக்கத்திற்கும் தண்ணீர் திருப்பி விடப்பட்டு, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாராபுரம், பல்லடம், காங்கேயம் ஆகிய வட்டங்களுக்குப் பாசனவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பரம்பிக்குளம்— ஆழியாறு திட்டத்தில் 8 ஆறுகள் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றில் நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம் ஆறு தூனக் கடவு, பெருவாரிப் பள்ளம் ஆகிய ஆறுகள் ஆனைமலைக் குன்றுகளிலும், ஆழியாறு பாலாறு ஆகியவை சமவெளியிலும் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறுகளின் குறுக்கே அணைகளைக் கட்டி, ஒன்றில் தேங்கும் நீரை மற்றொன்றுக்குச் சுரங்கங்கள் மூலமாகக் கொண்டு சென்று கோவை மாவட்டத்தின் சமவெளிப் பகுதியிலும், கேரள மாநிலத்தின் சித்தூர் பகுதியிலும் பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் 9 அணைகள் இடம் பெறுகின்றன. அவ்வணைகளில் மேல்நீராறு சிற்றணையும் ( Upper Nirar weir ) கீழ் நீராறு அணையும் ( Lower Nirar Dam ) 'சின்கோனா' பகுதியில் அமையவிருக்கின்றன. சோலையாறு அணை, ஆனைமலைப் பகுதியில் அமைந்துள்ளது. பரம்பிக்குளம் அணை, தூனக்கடவு-பெருவாரிப்பள்ளம் அணைகள் கேரள மாநில எல்லையில் அமைந்துள்ளன ; ஆழியாறு, திருமூர்த்தி ஆகிய 2 அணைகள் சமவெளியில் அமைந்துள்ளன.

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் பரம்பிக்குளமே மிகவும் பெரிய நீர்த்தேக்கமாகும். முழு நீர்த்தேக்க மட்டத்தில் இதன் கொள்ளளவு 17,820 மில்லியன் கன அடியாகும். இந்நீர்த் தேக்கத்திற்கு நீராற்றிலிருந்தும் மின் உற்பத்திக்குப் பிறகு சோலையாற்றிலிருந்தும் தண்ணீர் கிடைக்கிறது. சோலையாறு அணையே மிகவும் உயரமான அணையாகும்; கடைக்காலில் இருந்து 300 அடி உயரம் உள்ளது.

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் தமிழ்நாடு, கேரளா ஆகிய 2 மாநிலங்களுக்கும் தொடர்புடைய கூட்டு முயற்சியாகவும் விளங்குகிறது. பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் அடங்கியுள்ள சில நீர்த் தேக்கங்களும், நீர்ப்பிடிப்பு நிலங்களும் (Catchment area) கேரள மாநில எல்லையில் இருப்பதால், இத்திட்டத்தின் கீழ் தண்ணீரைப் பகிர்ந்து கொள்வதற்குத் தமிழ்நாடு அரசும், கேரள அரசும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன. இக்கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் 28,000 மில்லியன் கன அடி தண்ணீரைத் தமிழ்நாடு பெறுகிறது. அதற்குப் பதிலாகக் கேரள மாநிலத்திற்குச் சோலையாறு பள்ளத்தாக்கிலிருந்து 12,300 மில்லியன் கன அடி தண்ணீரையும், ஆழியாறு திட்டத்திலிருந்து 7,250 மில்லியன் கனஅடி தண்ணீரையும் சித்தூர் புழாப் பள்ளத்தாக்கின் பாசன வசதிக்காகத் தமிழ்நாடு வழங்குகிறது.

தமிழ்நாடு அரசின் பொதுப் பணித்துறை, மின்சார வாரியம் ஆகிய இரு துறைகளின் கூட்டு முயற்சியே பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் சோலையாறு-1, சோலையாறு-2, சர்க்கார் பதி, ஆழியாறு ஆகிய 4 மின் உற்பத்தி நிலையங்கள் மின் சக்தியை உற்பத்தி செய்கின்றன. பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள 4 மின் உற்பத்தி நிலையங்களும் மொத்தம் 185 'மில்லியன் வாட்' மின் சக்தியை உற்பத்தி செய்கின்றன.

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் கீழ்க்கண்ட 9 அணைகளும், 19 மைல் நீளமுள்ள சுரங்கப்பாதைகளும், 4 மின் உற்பத்தி நிலையங்களும், 170 மைல் நீளமுள்ள முக்கியக் கால் வாய்களும் அடங்கியுள்ளன.

### அணைகள்

1. மேல் நீராறு சிற்றணை.
2. கீழ் நீராறு அணை.
3. சோலையாறு அணை.
4. பரம்பிக்குளம் அணை.
5. தூனக்கடவு அணை.
6. பெருவாரிப்பள்ளம் அணை.
7. மேல் ஆழியாறு அணை.
8. ஆழியாறு அணை.
9. திருமூர்த்தி அணை.

### சுரங்கப் பாதைகள்

1. நீராறு சுரங்கப்பாதை.
2. சோலை யாறு சுரங்கப் பாதை.
3. பரம்பிக் குளம் சுரங்கப் பாதை.
4. சர்க்கார் பதி சுரங்கப் பாதை.
5. சமநிலைக்கோட்டுக் கால் வாயிலுள்ள நவமலைச் சுரங்கப் பதை.
6. சிறு சுரங்கப்பாதைகள்.

### மின் உற்பத்தி நிலையங்கள்

1. சோலையாறு மின் உற்பத்தி நிலையம்-1.
2. சோலையாறு மின் உற்பத்தி நிலையம்-2.
3. சர்க்கார்பதி மின் உற்பத்தி நிலையம்.
4. ஆழியாறு மின் உற்பத்தி நிலையம்.

### கால்வாய்கள்

1. சமநிலைக்கோட்டுக் கால்வாய்.
2. வேட்டைக்காரன் புதூர்க் கால்வாய்.
3. பொள்ளாச்சிக் கால்வாய்.
4. ஆழியாறு நிரப்புக் கால்வாய்.
5. சேத்துமடைக் கால்வாய்.
6. பரம்பிக்குளம் மூலக் கால்வாய்.
7. உடுமலைப்பேட்டைக் கால்வாய்.



மாண்புமிகு
பொதுப்பணித்துறை அமைச்சர்
எஸ்.ஜே.சாதிக்பாட்சா

பரம்பிக்குளம்-ஆழியாறுதிட்ட வேலை 1958-ஆம் ஆண்டிலே துவக்கப்பட்டது. ஆனால், பின் கண்ட வேலைகள் தவிர, மற்றெல்லா வேலைகளும் முடிக்கப்பட்டு, 1967–68-ஆம் ஆண்டில் தான் பாசனத்திற்குத் திறந்து விடப்பட்டது.

1967–68 வரை முடிக்கப்படாதிருந்த பணிகள்.

1. சோலையாறு அணை, சுரங்கப் பாதை.

2. பெருவாரிப்பள்ளம் அணை.

3. பரம்பிக்குளம்நீர்த்தேக்கத் தொகுதியில் பெருவாரிப் பள்ளத்தையும், தூனக்கடவு அணையையும் இணைக்கும் கால்வாய்.

4. மேல் நீராறு சிற்றணை சுரங்கப்பாதை.

5. கீழ் நீராறு அணை, சுரங்கப் பாதை.

பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டிற்கும், கேரள மாநிலத்திற்கும் இடையே ஒரு முடிவான ஒப்பந்தம் 1970-ஆம் ஆண்டு மே திங்கள் வரை ஏற்படாதிருந்த காரணத்தினால், பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் 28,000 மில்லியன் கன அடி தண்ணீரில், 9,000 மில்லியன் கன அடி தண்ணீரைக் கொடுக்கும் மேல் நீராறு சிற்றணையைக் கட்ட முடியவில்லை.

இன்றையத் தமிழ்நாடு அரசு எடுத்துக் கொண்ட தீவிர முயற்சிகளின் காரணமாக—கேரள அரசுடன் மேற்கொண்டிருந்த நீண்ட நாளையக் கடிதத் தொடர்பிற்கும், பல்வேறு கட்டங்களில் நடைபெற்ற உயர் மட்டப் பேச்சுவார்த்தைக்கும் பிறகு 1970-ஆம் ஆண்டில் மே திங்கள் 29-ஆம் நாள் ஒரு முடிவான ஒப்பந்தம் ( Firm agreement) ஏற்பட்டது. அதன் பிறகே, பரம்பிக்குளம்- ஆழியாறு திட்டத்தில் நின்றிருந்த பணிகள், மீண்டும் சுறுசுறுப்பாகத் துவங்கின. அதன் பயனாய், 1960-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு முடியாமல் இருந்த சோலையாறு அணையும், அதைச் சார்ந்த

சுரங்கப் பாதையும் உடனடியாக முடிக்கப்பட்டு, 1971-ஆம் ஆண்டில் திறந்துவிடப்பட்டது.

பெருவாரிப் பள்ளம் அணையைப் பொறுத்தவரையில் 45 சத வேலைகள் முடிந்துவிட்ட நிலையில், 1966-ஆம் ஆண்டில் கேரள அரசின் வனத்துறையினரால் தடுக்கப்பட்டது. இத்திட்டத்தை மீண்டும் தொடர, தமிழ்நாடு—கேரள மாநிலத் தொடர்புடைய ஒப்பந்தம் (Inter - State Agreement) மே 1970ஆம்ஆண்டு கையெழுத்தான பிறகே கேரள அரசின் அனுமதி கிடைத்தது. அனுமதி கிடைத்த உடனேயே வேலைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு 1971-ஆம் ஆண்டின் நடுவில் முடிக்கப்பட்டன.

### இன்றைய நிலைமை

தற்பொழுது பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் மேல் நீராறு சிற்றணையும், அதிலிருந்து சோலையாறு பள்ளத்தாக்கிற்குத் தண்ணீர் கொண்டு வரக்கூடிய 15,000 அடி நீளமும் 22 அடி விட்டமும் உள்ள குடைவரை சுரங்கப் பாதையையும் (Tunnel) அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ் வேலைகள் 1969-ஆம் ஆண்டு மே திங்களில் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது தமிழ்நாடு, கேரளம் ஆகிய 2 மாநிலங்களின் முதல் அமைச்சர்களும் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்குப் பிறகு துவக்கப்பட்டன. ஆனால், இவ்வேலைகள் தமிழ்நாட்டிற்கும் கேரளாவிற்கும் இடையே மாநிலத் தொடர்புடைய ஒப்பந்தம் 1970-ஆம் ஆண்டு மே திங்களில் கையெழுத்தான பிறகே தீவிரமடைந்தன.

### எதிர்காலத் திட்டம்

தமிழ்நாடு-கேரள மாநிலங்களுக்கிடையே 1970-ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி கீழ் நீராறு நீர்த் தேக்கத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு 2,500 மில்லியன் கன அடி தண்ணீர் கிடைக்கும் கீழ் நீராறு நீர்த்தேக்கத்தையும், அதிலிருந்து சோலையாற்றுக்குத் தண்ணீரைத் திருப்பிவிடும் சுரங்கப் பாதையையும் அமைப்பதற்கு ஆகும் செலவில், கேரள அரசும் பங்கு பெறுவதால் திட்ட வரை படத்தையும் (Plan) மதிப்பீட்டையும் (Estimate) கேரள அரசு மேலொப்பம் செய்தபிறகு 'சின் கோண' பகுதியில் தமிழ்நாடு அரசு கீழ்நீராறு நீர்த்தேக்கத்தை அமைக்கவிருக்கிறது. இத்திட்டம் பற்றிய விரிவான ஆய்வு வேலைகள் முடிந்துவிட்டன. கேரள அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப் படுகிறது.

ஆனைமலையாற்றுத் தண்ணீரைக் கீழ் நீராற்றிற்கும், அங்கிருந்து சோலையாற்றுக்கும் திருப்பி விட்டுப் பாசனத்திற்குப் பயன் படுத்தும் திட்டம் பற்றிய ஒப்பந்தம் ஏற்படுவதற்குக்கடிதப் போக்குவரத்தும், பேச்சு வார்த்தைகளும் நடைபெறவிருக்கின்றன. இதுபற்றிய கலந்துரையாடல் (Negotiation) கீழ் நீராறு அணை பற்றிய பேச்சு வார்த்தை முடிவு பெற்ற பிறகு, மேற்கொள்ளப்படும்.

### எதிர்கால நன்மைகள்

பரம்பிக்குளம் — ஆழியாறு திட்டத்தினால் தற்பொழுது ஆண்டு தோறும் ஏறத்தாழ 1·5 இலட்சம் ஏக்கர் மட்டுமே பாசன வசதி பெற்று வருகிறது. நீராறு பள்ளத்தாக்கில் கட்டப் படவிருக்கும், ஆண்டு தோறும் 9,000 மில்லியன் கன அடி நீர் கொடுக்கக் கூடிய மேல் நீராறு நீர்த்தேக்கமும், 2 500 மில்லியன் கனஅடி நீர் வழங்கக்கூடிய கீழ் நீராறு நீர்த்தேக்கமும் கட்டி முடிக்கப்படுமானால், பரம்பிக் குளம்—ஆழியாறு திட்டம் ஏறத்தாழ முழுமை நிலைமையை அடைந்துவிடும். இத்திட்டத்தின் கீழ் வெட்டப்பட்டுள்ள கால் வாய்கள் திட்டப்பகுதி முழுவதும் 'நரம்புகளைப் போல்' பரவியுள்ளன. இவ்வாய்க்கால் களின் அடிப்பகுதியிலும், பக்கங் களிலும் தண்ணீர் கசிந்து வடிவதைத் தடுக்க. சிமெண்டுப் பலகைகளைக் கொண்டு தளம் அமைக்கப்பட்டுள்ளன. இவ் வாய்க்கால்கள் 2·54 இலட்சம் ஏக்கருக்கு நீர்ப்பாசனம் அளிக்கக் கூடும். பல்லடம், தாராபுரம் வட்டங்களைச் சார்ந்த 95,000 ஏக்கர் வறண்ட நிலமும், பொள்ளாச்சி உடுமலைப்பேட்டை வட்டங்களைச் சார்ந்த 1,56,000 ஏக்கர் வறண்ட நிலமும் பாசன வசதி பெற்று விரைவில் வளம் பெறும்.

### பசுமைப்புரட்சி பரவுகிறது

இத்திட்டப் பகுதியில் உள்ள உழவர்கள் முன்பெல்லாம் மழையைப் பயன்படுத்தி நிலக்கடலை, பருத்தி, மற்றும் சிறுதானியப் பயிர்களையும், கிணறு உள்ள பகுதிகளில் நெல், மிளகாய், கரும்பு ஆகியவற்றையும் பயிரிட்டு வந்தனர். நடப்பிலுள்ள வேளாண்மை முறையைக் கருத்திற் கொண்டும், பரம்பிக் குளம்-ஆழியாறு திட்டத்தின் பயன் பலருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதற்காகவும், இத்திட்டப்பகுதியில் முக்கியமாகப் புன்செய்ப்பயிர்களுக்கே நீர்ப்பாசன வசதியளிக்கும் திட்டமாக இது அமைந்துள்ளது. தாழ்வான நிலங்களிலும், புன்செய்ப்பயிர் சாகுபடிசெய்ய இயலாத பகுதிகளிலும் மட்டுமே நன்செய்ப் பயிர் சாகுபடி செய்ய அனுமதிக்கப்படுகிறது. இத்திட்டத்தினால் பயனடையும் மொத்த நிலங்களில் 15 சத அளவில் மட்டுமே நன்செய்ப் பயிர்கள் சாகுபடி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள 85 சத அளவு நிலங் களில் புன்செய்ப் பயிர்கள் சாகுபடி செய்யவே அனுமதிக்கப் படுகிறது.

பரம்பிக்குளம் — ஆழியாறு திட்டம் நிறைவேற்றப்பட்டதனால், பல்லாண்டுக் காலமாகப் பருவமழை இல்லாததால், பயிர் விளைவிக்க முடியாமல் பரிதவித்து வந்த பல்லடம், தாராபுரம், பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை வட்டங்களைச் சேர்ந்த உழவர் பெருமக்கள் தங்கள் நிலங்களுக்கு உறுதியான பாசன வசதியைப் பெற்றுள்ளனர். அதைப் பயன்படுத்தி நிலக்கடலை, பருத்தி, சிறுதானியங்கள் முதலிய இறைவைப் புன்செய்ப், பயிர்களைப் பயிரிட்டு வருகின்றனர். பரம் பிக்குளம்—ஆழியாறு திட்டக் கால்வாயில் தண்ணீர் விடப் பட்ட பிறகு, இத்திட்டப்பகுதியில் உள்ள கிணறுகளின் நீர் மட்டம் (Water table) உயர்ந்துள்ளதால், அதைக் கொண்டு நெல், மிளகாய், கரும்பு, தென்னை ஆகிய பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

வேளாண்மை மறுநிதி கழகத்தின் (Agricultural Re-finance Corporation) உதவியுடன் பரம்பிக் குளம்—ஆழியாறு திட்டப்பகுதியில் உள்ள உழவர்களுக்கு, நிலச் சீர்திருத்தம் செய்யவும், விதைகள், இரசாயன உரங்கள், முதலியன வாங்கவும் கடனுதவி செய்யும் திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு அனுமதித் துள்ளது. இத்திட்டம் கூட்டுறவுத் துறையின் மூலம் செயல்படுத்தப் படுகிறது.

பரம்பிக்குளம் — ஆழியாறு திட்ட ஆயக்கட்டுப்பகுதி முறையான மேம்பாடு எய்த வேண்டும் என்பதற்காக, வேளாண்மை வருவாய், பொதுப்பணி, கூட்டுறவு முதலிய துறையினர்

ஒருங்கிணைந்து செயல்படுவதை ஊக்குவிப்பதற்கு மாநில அளவில் ஒரு 'ஒருமைப்படுத்தும் குழு' (Co-ordination Board) திட்டப் பகுதி அளவில் திட்டத்தைப் பயனுக்குக் கொண்டுவரும் 'பயன்படுத்துக் குழு' (Project Utilisation Team) ஆகிய வற்றைத் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. திட்டத்தைப் பயனுக்குக் கொண்டுவரும் குழு வில் உள்ள வேளாண்மைத்துறை யினர் தகுந்த பொறுக்கு விதை களைப் பயன்படுத்திப் பயிரிடு வது, இறைவைப் புன்செய்ப் பயிர்களுக்கு ஏற்ற பயிர்வகை கள், இரசாயன உரமிடும் முறை ஆகியவற்றைப் பற்றி நல்ல ஆராய்ச்சி செய்து, அதன் அடிப் படையில் உழவர் பெருமக் களுக்கு நவீன சாகுபடி முறை களைக் கற்றுக் கொடுத்து வரு கின்றனர்.

எனவே, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தால், பரம்ப ரையாகப் புன்செய்ப் பயிர்களே பயிரிட்டு வந்தால் பகுதிகளில் அப்படிப் பயிரிட்ட புன்செய்ப் பயிர்களின் மகசூலும் வழக்க மாகப் பருவ மழை பொய்த்து வந்ததால் பாதிக்கப்பட்டு வந்த பகுதிகளில் இலாபகரமாக இறை வைப் புன்செய்ப் பயிர் களையோ அல்லது பணப் பயிர்களையோ (Cash crops) பயிரிடவும், சில இடங்களில் நெல், கரும்பு ஆகியவைகளைச் சாகுபடி செய்யவும் வழி பிறந் துள்ளது.

இத்திட்டத்தினுல் ஆண்டு தோறும் பின்கண்ட அளவு அதிக மகசூல் கிடைக் கும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

அரிசி—25,000 டன்.

சிறுதானியங்கள்—40,000 டன்

பருத்தி—7,700 டன்

நிலக்கடலை—10,000 டன்.

## வேலைவாய்ப்பும் தொழிலாளர் நலமும்

இத்திட்டத்தில் பணியாற் றும் தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் தமிழ் நாடு அரசு, தங்குவதற்கான இட வசதி, மருத்துவ வசதி, பள்ளி செல்லும் குழந்தை களுக்கான போக்குவரத்து வசதி ஆகியவை செய்து கொடுத்துள்ளது. தற் பொழுது ஏறத்தாழ 2,000 முதல் 4,000 தொழிலாளர்கள் இத்திட்ட வேலைகளில் ஈடு பட்டுள்ளனர்.

## சிறந்த குடிநீர்

**சுவைமிகு சிறுவாணி யாற்றுத் தண்ணீர் உலகில் இரண்டாவது சிறந்த குடிநீர் என்ற புகழ் பெற்றது. புகழ் பெற்ற இச் சிறுவாணியாற்றுத் தண்ணீரை நீண்ட நாட் களாகவே கோவை நகர மக்க ளுக்கு வழங்கி வருவது கோவை நகராட்சி.**

## சுற்றுலா வளர்கிறது

பரம்பிக்குளம் — ஆழியாறு திட்டம் சுற்றுலா வளர்க்கும் திட்டமாகவும் அமைந்துள்ளது. அணைகளையும், நீர்த்தேக்கப்பகுதி களைச் சார்ந்த இயற்கைஎழில் களையும் காணவரும் சுற்றுலாப் பயணிகளின் வசதியைமுன்னிட்டு பொள்ளாச்சி, ஆழியாறு, பரம் பிக்குளம், சோலையாறு, நீராறு திருமூர்த்தி ஆகிய இடங்களில் எல்லா வசதிகளுடனும் கூடிய ஓய்வு இல்லங்கள் (Rest Houses) அமைக்கப்பட்டுள்ளன. திரு மூர்த்தி மலையின் அடிவாரத் தில் ஒரு ஓய்வு இல்லம் கட்டப் பட்டுள்ளது. திருமூர்த்தி மலை யிலுள்ள நீர்வீழ்ச்சியும், பஞ்ச லிங்கம் பகுதியும் மேம்படுத்தப் பட்டுள்ளன. இவை, திரு மூர்த்தி மலையின் இயற்கை எழிலையும் நீர் வீழ்ச்சியின் அழ கையும் காணவரும் சுற்றுலாப் பயணிகளையும், திருமூர்த்தி கோயிலுக்கு வரும் பக்தர் களையும் கவருவதாக அமைந் துள்ளன.

கண்ணையும் கருத்தையும் கவர்ந்து மனத்திற்கு மகிழ் வையும் அளிக்கும் இடங்களை (Picnic Spots) பரம்பிக் குளம்—ஆழியாறு திட்ட நீர்த் தேக்கப் பகுதிகளில் அமைத்து, சுற்றுலாவரும் பொதுமக்கள் இனிதே பொழுது போக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந் நீர்த் தேக்கங்களில் படகு ஓட்டி மகிழ்வதற்குத் தேவை யான படகுகளையும், படகுத் துறைகளையும் அமைத்திட தமிழ் நாடரசு ஆவன செய்து வரு கிறது.

## மீன்வளம் பெருகுகிறது

பல்வேறு நீர்த்தேக்கங்கள் வெவ்வேறு மட்டத்தில், ஒன்றுக் கொன்று வேறுபட்ட கொள்ள ளவில் பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை வட்டங்களில் வெவ் வேறு பகுதிகளில் கட்டப்பட் டுள்ளதால், மீனளத் துறையினர் அந்த நீர்த்தேக்கங்களில் மீன் வளர்க்கும் பணியைத் துவக்கி யுள்ளனர், இதனுல் மாநிலத்தின் மீன் உற்பத்தி கணிசமாக உயர்ந்து வருகிறது. ஆழியாறு, திருமூர்த்தி நீர்த் தேக்கங்கள், முன்பே மீன் வளத்தைப் பெரு மளவு பெருக்கியுள்ளனர். சோலை யாறு நீர்த்தேக்கமும் கீழ்நீராறு நீர்த்தேக்கமும் மீன்வளத்தை மேலும் பெருக்கிட உதவும் இத் திட்டங்களினுல் ஆண்டுதோறும் ஏறத்தாழ 140 டன் மீன்அதிகம் உற்பத்தியாகும்என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

## மாதிரிக் குடியிருப்புகள்

பொள்ளாச்சி, வேட்டைக் காரன் புதூர், 'டாப்சிலிப்' சோலையாறு, சிங்கோனு, திரு மூர்த்தி, உடுமலைப்பேட்டை பொங்கலூர், பல்லடம் ஆகிய இடங்களில் நல்ல அமைப்புடன் கட்டப்பட்டுள்ள குடியிருப்புக் கள் மாநிலத்தின் பொருளாதார மதிப்பை கூட்டுவனவாக அமைந் துள்ளன. இக் குடியிருப்புக்களை மாதிரிகுடியிருப்புகளாகவைத்துப் பரம்பிக்குளம்—ஆழியாறுதிட்டப் பகுதிகளில் உள்ள கிராமங் களை முன்னேற்றலாம்.

## திட்டச் செலவு

பரம்பிக்குளம்-ஆழியாறு திட் டம் முழு அளவில் முடிக்கப் படுவதற்கு இன்னும் வேலை துவக்கப்படாமல் உள்ள கீழ் நீராறு அணையின் செலவைச் சேர்க்காமல் ஏறத்தாழ 68 கோடி ரூபாய் செலவாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பெய்யெனப் பெய்யும் மழை

பொள்ளாச்சி, பல்லடம், தாராபுரம், உடுமலைப் பேட்டை ஆகிய வட்டங்கள் வறண்ட பாலைவனமாக மாறிவிடுமோ? என்று பயந்து கொண்டிருந்த மக்களுக்கு, பரம்பிக்குளம்-ஆழி யாறு திட்டம் 'பெய்யெனப் பெய்யும் மழையாக' அமைந் துள்ளது என்றால் மிகையல்ல!

பல்வேறு வகையில் பயன் தரும் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தை விரைந்து முடிக்க அயராது உழைத்துவரும் தமிழ் நாடு அரசும் அதற்குத் துணை யாக இருந்து வரும் கேரள அரசும் கோவை மாவட்ட மக்களின் நினைவில் என்றும் நிலைத்து நிற்கும் என்பது திண் ணம்.

மாநிலங்களுக்கு இடையே தேசிய ஒருமைப் பாட்டை (National Integration) வளர்க்கும் திட்டமாகப் பரம்பிக் குளம்-ஆழியாறு திட்டம் திகழ் கிறது.



# கோவை மாவட்டத்தில் அறநிலையத்துறையின் ஆக்கப் பணிகள்

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்
**மு. கண்ணப்பன்**

அறநிலையத்துறை என்றால் ''கடவுள் வழிபாடு'' மட்டுந்தான் என்ற நிலைமாற்றி, இத்துறையின் மூலம் இன்று நாம் பல்வேறு சமுதாய முன்னேற்றத்திற்கான பணிகளை நிறைவேற்றி வருகின்றோம்.

''அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்''

என்றார் பாரதி. இந்த வகையில் தமிழகத்தில் இன்று ஆலயங்கள் மூலம் வரும் வருமானத்தில் பல முனைத் திட்டங்கள் பாங்குற நடைபெற்று வருகின்றன. கல்விப்பணி வளர்ச்சியில் அறநிலையத்துறை மூலம் இன்று தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் கல்விக் கூடங்கள் நிறுவி, ஏழைகள் இலவசமாகக் கண்ணெனும் கல்வி பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தில் அதிக வருமானம் வரும் பழனிக் கோயில் நிதியில் இருந்து ''பழனியாண்டவர் கலைக் கல்லூரி'' தொடங்கப்பட்டு ஏழை மாணவர்களுக்கு கல்வி வழங்கப்படுகிறது. பூம்புகாரில் 'கீழ்த் திசைப் பண்பாட்டுக் கல்லூரி'' ஒன்றும் செம்மையுற நடைபெற்று வருகின்றது. ஆரம்பப் பள்ளி முதல் உயர்நிலைப் பள்ளி வரை கல்வி வசதி அளிக்கப்படுகின்றது. அந்த வகையில் கோவை மாவட்டத்தில் மருதமலை முருகன் கோயில் நிதியிலிருந்து உயர்நிலைப் பள்ளி தொடங்கப்பட்டுச் சிறப்புற நடைபெற்று வருகின்றது. அதே போன்று வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் நிதியிலிருந்தும் ஒரு உயர்நிலைப் பள்ளி நடைபெற்று வருகின்றது. இவ்விரு பள்ளிகளிலும் சுமார் 500 ஏழை மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களைப் பொறுத்த மட்டில் 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்பது எக்காலும் உண்மையாகும். வரும் 1973–74-ஆம் கல்வி ஆண்டில் 'பண்ணாரி' என்ற இடத்தில் (சத்திய மங்கலம் அருகில்) சுமார் 3 லட்சம் ரூபாய் செலவில் உயர்நிலைப் பள்ளி அமைந்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. வாழைத் தோட்டத்து அய்யன் கோயிலில், தாய்-தந்தையற்ற 30 திக்கற்ற மாணவர்களுக்கு கல்வி அளிக்கப்பட்டு வருவதுடன், உணவு, உடை, உறைவிடம் ஆகிய அடிப்படைத் தேவைகளும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. காரமடையில் கோயில் வருவாயிலிருந்து, 'சிசு பராமரிப்பு நிலையம்' ஒன்று தொடங்கப்பட்டு 40 இளஞ்சிறார்கள் இந்த அரசு பராமரிப்பில் வளர்ந்து வருகின்றார்கள். அத்துடன், கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுத் தாய் தந்தையரை இழந்த 5 குழந்தைகளை அரசு தத்து எடுத்துக் கொள்ள, அறநிலையத் துறை அவர்களுக்குத் தாயாக நின்று தக்கன செய்து வருகின்றன.

திருமண முறைகளில் இருந்த சிக்கலை நீக்கிச் சட்டம் செய்த பின்னர், கோயில்களில் திருமணங்கள் நடப்பது மிகவும் உயர்ந்திருக்கின்றது. திருமணங்கள் செய்ய இடவசதி, பொருள் வசதியற்றோர் குறைந்த செலவில் கோயில்களுக்குச் சென்று முடித்துக் கொள்வது பெரிய வழக்கமாக இருந்து வருகின்றது. இத்தகைய திருமணங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதைக் கணக்கில் கொண்டு, கோயில் நிதியிலிருந்து 'திருமண மண்டபங்கள்' கட்டப்பட்டு வருகின்றன. கோவை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், தற்பொழுது கீழ்க் கண்ட 5 கோயில்களில் திருமண மண்டபங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

| | இலட்சம் ரூபாய். |
|---|---|
| 1. பண்ணாரி மாரியம்மன் கோயில். | 1·80 |
| 2. வெங்கம்பூர் வரத ராசப் பெருமாள் கோயில். | 1·75 |
| 3. பெரிய களந்தை ஆதிகேஸ்வரர் திருக் கோயில். | 0·40 |
| 4. கிணத்துக் கடவு, பொன்மலை வேலாயுதசாமி கோயில். | 1·40 |
| 5. காட்டூர் விநாயகர் — சுப்ரமணியர் — மாரியம்மன் கோயில். | 0·60 |

வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் அருகே ரூபாய் 3·75 இலட்சத்தில் ஒரு திருமண மண்டபம் கட்டப்படும்.

கோயில் நிதியிலிருந்து, ஏழை மக்களுக்கு இலவசமாகத் திருமணங்கள் செய்து வைப்பது

என்ற கொள்கைக்கு ஏற்ப, கோவை மாவட்டத்தில் 300 திருமணங்கள் நடந்தேற இருக்கின்றன.

சிறிய, பெரிய, நடுத்தரக் கோயில்கள் தமிழகத்தில் பல்லாயிரக் கணக்கில் இருக்க கோவை மாவட்டத்தில் 1967-ம் ஆண்டில் அறநிலையத் துறையின் கீழ் 921 கோயில்கள் இருந்தன. ஆனால், இன்று 1,293 கோயில்கள் அறநிலையத் துறை நிர்வாகத்தின் கீழ் வந்துள்ளன. 1973—74-ஆம் ஆண்டு இறுதிக்குள் 1,528 கோயில்களை அறநிலையத் துறையின் கீழ் கொண்டு வரப்படும். வருவாயைப் பொறுத்த அளவில் 1967-ல் ரூ. 18,67,450 என்றிருந்த வருவாய் 1972-ல் ரூ. 29,33,620 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 1,528 கோயில்களை அறநிலையத் துறையின் கீழ் கொண்டு வருவதன் மூலம் கோவை மாவட்ட அறநிலைய வருமானம் மேலும் ரூபாய் 5 இலட்சம் அளவுக்கு உயரும்.

### தமிழில் அர்ச்சனை

கோயில்களில் தமிழிலேயே அர்ச்சனை செய்திட வழி வகுத்து, பலரும் போற்றும் வண்ணம் சிறப்புற நடந்தேறி வருகின்றது. மேலும், அர்ச்சகர்களாக யார் வேண்டுமானாலும் வரலாம் என்ற சமுதாயச் சீர்திருத்தச் சட்டம் கொணர்ந்ததால், கோயில்களில் சாதி பேதம் நீக்கி, சமதர்மச் சமுதாயம் உருவாக வழியேற்பட்டுள்ளது. ஆண்டவன் முன்னால் அனைவரும் சமம் என்ற தத்துவம் உண்மையாகிறது. கோயில் நிருவாகக் குழுவில் ஒருவர் கட்டாயமாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்ற புரட்சிகரமான மாற்றத்தைச் சட்டம் மூலம் நம்முடைய அரசு இந்தியாவிலேயே முதன் முதலில் ஏற்படுத்தியுள்ளது.

### வருமானம்

பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில்—

| ஆண்டில். | | ரூபாய். |
|---|---|---|
| 1967 | .. | 1,62,286·44 |
| 1972 | .. | 2,99,376·54 |

வாழைத் தோட்டத்து அய்யன் கோயில், அய்யம்பாளையம்.

| | | |
|---|---|---|
| 1967 | .. | 1,47,922·57 |
| 1972 | .. | 1,92,812·35 |

வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம், ஊஞ்சலூர், ஈரோடு

| | | |
|---|---|---|
| 1967 | .. | 47,171·00 |
| 1972 | .. | 1,87,549·00 |

அருள்மிகு தண்டுமாரியம்மன் கோயில், கோயம்புத்தூர்.

| | | |
|---|---|---|
| 1967 | .. | 18,862·00 |
| 1972 | .. | 46,013·70 |

அருள்மிகு அவினாசிலிங்கேஸ்வரர் கோவில், அவினாசி.

| | | |
|---|---|---|
| 1967 | .. | 15,001·00 |
| 1972 | .. | 28,515·00 |

சுப்ரமணியசாமி தேவஸ்தானம், திருப்பூர்.

| | | |
|---|---|---|
| 1967 | .. | 15,028·80 |
| 1972 | .. | 69,781·47 |

மகுடேஸ்வரர் வீர நாராயணப் பெருமாள் தேவஸ்தானம் கொடுமுடி, ஈரோடு.

| | | |
|---|---|---|
| 1967 | .. | 71,902·01 |
| 1972 | .. | 1,29,631·83 |

கோனியம்மன் தேவஸ்தானம், கோயம்புத்தூர்.

| | | |
|---|---|---|
| 1967 | .. | 54,080·44 |
| 1972 | .. | 61,580·15 |

சங்கமேஸ்வரர் ஸ்வாமி தேவஸ்தானம், பவானி.

| | | |
|---|---|---|
| 1967 | .. | 30,902·28 |
| 1972 | .. | 62,210·09 |

கோவை மாவட்டத்தில் ஆயிரக் கணக்கில் கோயில்கள் இருந்தாலும் பெருவாரியான மக்களின் எண்ணத்தில் இருப்பவைகளாகவும், பெரியவைகளாகவும் உள்ளவை (1) மருதமலை முருகன் கோயில், (2) பேரூர் கோயில் (3) சிவன்மலை சுப்ரமணியசுவாமிதேவஸ்தானம் (4) வாழைத் தோட்டத்து அய்யன் கோயில், (5) அவினாசி அவிநாசிலிங்கேஸ்வரர் கோவில், (6) கோவை தண்டுமாரியம்மன் கோயில் (7) கோவை கோனியம்மன் கோயில், (8) பண்ணாரி மாரியம்மன் கோயில், (9) வெங்கம்பூர் வரதராஜ பெருமாள் கோயில், (10) பவானி சங்கமேஸ்வரஸ்வாமி தேவஸ்தானம் (11) கொடுமுடி வீரநாராயணப் பெருமாள் கோயில் ஆகிய கோயில்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கவையாக விளங்குகின்றன. இக்கோயில்கள் வழிபட்டுத் தலங்களாக மட்டுமல்லாது, சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடங்களாகவும் திகழ்கின்றன. சுற்றுலாக் கண்ணோட்டத்தில், மருதமலை, பேரூர், கொடுமுடி கோயில்கள் பெருமை பெற்று விளங்குகின்றன. பேரூர் கோயிலில் உள்ள சிற்பங்கள் அயல்நாட்டினரைப் பெரிதும் கவருகின்றன.

### கோவை மாவட்டத்தில் முதல் நிலை நல்வாழ்வு நிலையங்கள் உள்ள ஊர்கள்.

| | |
|---|---|
| அவினாசி. | குன்னத்தூர். |
| பெரியநாயக்கன்பாளையம். | தாளவாடி. |
| பொன்னுபுரம். | சிறுவலூர். |
| தாயம்பாளையம். | புஞ்சை புளியம்பட்டி. |
| முத்தூர். | எரிசனம்பட்டி. |
| தூக்க நாயக்கன்பாளையம். | கணியூர். |
| உக்கரம். | குடிமங்கலம். |
| நல்லட்டிபாளையம். | மூலனூர். |
| சந்திராபுரம். | புலுவப்பட்டி. |
| எ. வடுக பாளையம். | நம்பியூர். |
| சோமனூர். | அத்தாணி. |
| காரமடை. | பெருமாநல்லூர். |
| அன்னூர். | சாவடிப்பாளையம். |
| கவுந்தப்பாடி. | நெகமம். |
| குருவரெட்டியூர். | கோலார்ப்பட்டி. |
| சுண்டாக்காமுத்தூர். | செம்மிப்பாளையம். |
| சர்க்கார் சாமக்குளம். | பெரியபோது. |
| அரிசிப்பாளையம். | வால்பாறை. |
| சித்தோடு. | கணபதிப்பாளையம். |
| சிவகிரி. | காசிப்பாளையம். |
| மொடக்குறிச்சி. | கொளாநல்லி. |
| பெருந்துறை. | வெள்ளக்கோவில் |
| சென்னிமலை. | |

# பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில்

பண்ணாரி அஞ்சல், சத்தியமங்கலம் வழி :

கோபி வட்டம், கோவை மாவட்டம்.

(தொலைபேசி எண். சத்தி : 89)

---

பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில் கோவை மாவட்டத்திலேயே புகழ்மிக்க திருத்தலங்களுள் ஒன்றாகும். இத் திருத்தலம் கோவை மாவட்டம் சத்திய மங்கலத்திலிருந்து மைசூர்-கொள்ளேகாலம் நெடுஞ்சாலையில் 14 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

தீராத நோய் தீர்த்தருளும் உமையம்மை, அன்னை, பராசக்தி மாரியம்மனாக இத் திருத்தலத்தில் சுயம்பு வடிவில் எழுந்தருளப் பெற்றுள்ளனள். அண்டினவருக்கும் அடியார்களுக்கும் அருளை அள்ளி அள்ளி வழங்குவதோடு எல்லைத் தெய்வமாக இருந்து இவ்வழியே செல்லும் பாதசாரிகளுக்கும், பேருந்துகள் மற்றும் இதர வாகனாதிகளுக்கும் பாதுகாப்பாக அமர்ந்துள்ளனள். மலைமீது போவோரும் அங்கிருந்து கீழே வருவோரும் இத் திருத்தலத்தில் தங்கள் வாகனாதிகளை நிறுத்திச் சாதி, மத வேறுபாடின்றி அம்மனைத் தரிசனம் செய்து காணிக்கை வகையறுக்களைச் செலுத்திய பின்னரே தங்கள் பிரயாணங்களைத் தொடர்கின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் பங்குனித் திங்களில் நடைபெறும் குண்டம் பெருந் திருவிழா மிக்கச் சிறப்பானதாகும். குண்டம் திருவிழாவின் போது இத்தலத்தில் சுமார் 3 இலட்சம் பக்தர்கள் கூடுவார்கள். இத் திருக்கோயில் ஆதரவில் ஓர் இலவசச் சித்த மருந்தகம் துவக்கப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தவிர, ஒரு திருக்கல்யாண மண்டபம் கட்டும்பணியும், மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி ஒன்றும் கட்டும் பணி நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

இத் திருத்தலத்திற்கு ஒருமுறை வருகைதந்து அம்மன் அருளுக்குப் பாத்திரர்களாகும்படி பக்தர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு :—இத் திருத்தல வரலாறு மற்றும் அம்மன் திருவுருவப் படங்கள் விலைக்குக் கிடைக்கும்.

சி. பி. வீரப்பகவுடர்,
தலைவர், அறங்காவலர் குழு.

எல். வெங்கட்ராமன், பி. ஏ.,
செயல் அலுவலர்.

சி. டி. வெங்கட்ராம நாயுடு,
என். பழனியப்ப கவுடர்,
ஊ. இராமசாமி கவுண்டர்,
வெ. வீரப்ப கவுடர்,
சி. ஆர். தங்கவேல்,
பரம்பரை அறங்காவலர்கள்.

# கால்நடைகளின் நலம் காத்தோம்!



எப்பொழுதும் சுறுசுறுப்பாக உழைத்து வரும் கோவை மாவட்ட மக்கள் வளமுடன் திகழ, நல்ல ஊட்டச் சத்துள்ள உணவு மிகவும் அவசியம். குறிப்பாகப் பாலூட்டும் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும், வளரும் இளவட்டங்களுக்கும் சத்துணவு மிகவும் அவசியம். பால், முட்டை, இறைச்சி போன்றவற்றில் ஊட்டச்சத்து அதிகமாக உள்ளதால் அவை தட்டுப்பாடின்றிக் கோவை மாவட்ட மக்களுக்குக் கிடைக்கத் தமிழ்நாடு அரசின் கால்நடைத்துறை பெரும் முயற்சி செய்து வருகிறது. கால்நடைகளின் நலம் காத்து, அதன் மூலம் மக்களின் நலம் பேணுவதற்காகத் தமிழ்நாடு அரசு, கோவை மாவட்டத்தில் இயங்கி வந்த கால்நடை பராமரிப்புத் துறையினை 1—1—1970 அன்று சீரமைப்புச் செய்தது.

கால்நடைப் பராமரிப்புத்துறை சீரமைப்புச் செய்யப்படுவதற்கு முன்பு, கோவை மாவட்டத்தில் கோவை, ஈரோடு ஆகிய 2 இடங்களில் மாவட்டக் கால்நடைப் பராமரிப்பு அலுவலர்களாலும், ஈரோடு, காங்கேயம், தாராபுரம் முதலிய இடங்களில் கேந்திர கிராமத் திட்ட ஆய்வாளர்களாலும், கோவையில் தீவிரக் கால்நடைத் திட்டத்தின் கீழ்த் திட்ட அலுவலராலும், கோழி வளர்ப்பு தொடர்பாகக் கோவையில் மாவட்டக் கோழி வளர்ப்பு அலுவலராலும், மாவட்டக் கோழி விற்பனை அலுவலராலும், கால்நடைகளின் நலம் பேணும் பணிகள் தனித்தனியாகச் செய்யப்பட்டு வந்தன.

தற்போது கால்நடைப் பராமரிப்புத் துறையின் சீரமைப்புக் காரணமாக 1—1—1970 முதல் கோவை மண்டலப் பகுதி கோவை, சேலம், நீலகிரி ஆகிய 3 மாவட்டத்தையும் ஒருங்கே இணைத்து ஓர் மண்டலத் துணை இயக்குநரது நேரடிப் பார்வையின் கீழ், கால்நடைத்துறை செயலாற்றி வருகிறது.

மண்டலத் துணை இயக்குநரின் கீழ்த் தனி அலுவலர் (நோய் ஆராய்ச்சி), தனி அலுவலர் (கால்நடைப் பராமரிப்பு), தனி அலுவலர் (கோழியின வளர்ச்சி), மற்றும் 13 உதவி இயக்குநர்களும், ஒரு கண்காணிப்பாளரும் கால்நடைப் பராமரிப்புத் துறையின் பணிகளில் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார்கள்.

கோவை மாவட்டத்தில் கோவை, பொள்ளாச்சி அரசூர், அவினாசி, கோபி, ஈரோடு, தாராபுரம், உடுமலைப்பேட்டை ஆகிய வட்டங்களில் ஒவ்வொரு உதவி இயக்குநர் நியமிக்கப்பட்டு வட்ட அளவில் கால்நடை பராமரிப்புக்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு உதவி இயக்குநர் கண்காணிப்பின் கீழும் கால்நடை மருத்துவமனை, கால்நடை மருந்தகங்கள், கேந்திர கிராம நிலையங்கள், செயற்கை முறை இனவிருத்தி நிலையங்கள், கிளை நிலையங்கள் ஆகியவை கால்நடைப் பராமரிப்புப் பணிகளைக் கவனித்து வருகின்றன. கோவை மாவட்டக் கிராமங்களில் உள்ள உழவர் பெருங்குடி மக்கள் கால்நடைப் பராமரிப்புத் தொடர்பான வசதிகளைத் தடையின்றி பெற்றுப் பயன்பெறத் தக்க வகையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் கால்நடை உதவி மருத்துவர்களும், அவருக்கு உதவியாகக் கால்நடை விரிவாக்க அலுவலர்களும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள்.

கால்நடைகள்

| | |
|---|---|
| கால்நடை இனம் .. .. | 4,78,262 |
| ஆட்டினம் .. .. .. | 3,71,630 |
| கோழியினம் .. .. .. | 7,99,970 |

கோவை மாவட்டத்தின் கால்நடை பராமரிப்புக்காகக் கீழ்க்கண்ட நிலையங்கள் பணியாற்றுகின்றன—

| | |
|---|---|
| கால்நடை மருத்துவமனை .. | 3 |
| கால்நடை மருந்தகம் மற்றும் கேந்திர கிராம நிலையங்கள். | 5 |
| கால்நடை மருத்துவமனைகள் | 23 |
| கால்நடை மருத்துவ மனைகள் மற்றும் கேந்திர கிராம நிலையங்கள். | 35 |
| கால்நடை கிளை நிலையங்கள் .. | 201 |
| நகராட்சியில் உள்ள கிளை நிலையங்கள். | 10 |
| பசு வளர்ப்பு மடங்கள் (ஆநிரை காப்பகங்கள்). | 3 |
| ஆய்வுக் கூடம் .. .. .. | 1 |
| கோழி விரிவினை நிலையங்கள் .. | 5 |
| தீவிரக்கோழி 'வளர்ப்புச்' சங்கம் (ஈரோடு). | 1 |
| தீவனக் கலவை நிலையம் (அரசூர்). | 1 |

தற்பொழுது பின்கண்ட கால்நடை மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன.

கால்நடை மருந்தகங்கள், கிளை நிலையங்கள்.

கேந்திர கிராமத் திட்டம், செயற்கை முறை இனவிருத்தித் திட்டம்.

பசு மடங்கள் அபிவிருத்தித் திட்டங்கள்.

வெக்கை நோய்த் தடுப்புத் திட்டம்.

கால்நடை மருந்தகங்கள், கிளை நிலையங்கள் மூலம் 1967–68 முதல் 31—12—1972 வரை செய்யப்பட்டபணிகள்கீழேகொடுக்கப்பட்டுள்ளன:

சிகிச்சை அளிக்கப்பட்ட கால்நடைகள்

| ஆண்டு | | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 1,96,354 |
| 1968–69 | .. | .. | 2,14,381 |
| 1969–70 | .. | .. | 1,97,507 |
| 1970–71 | .. | .. | 3,17,589 |
| 1971–72 | .. | .. | 3,74,889 |
| 1972–73 | .. | .. | 3,07,372 |



காயடிக்கப்பட்ட கால்நடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 56,913 |
| 1968–69 | .. | .. | 53,917 |
| 1969–70 | .. | .. | 27,069 |
| 1970–71 | .. | .. | 30,586 |
| 1971–72 | .. | .. | 33,747 |
| 1972–73 | .. | .. | 31,077 |

கடந்த $5\frac{3}{4}$ ஆண்டுகளில் கோவை மாவட்டத்தில் உள்ள கால்நடைகள் தொண்டை அடைப்பான், சப்பை நோய், வெக்கை நோய், வெறிநாய்க்கடி, கோழிக் கழிச்சல், மற்றும் இதர நோய்களால் தாக்கப்படாமல் இருப்பதற்காகக் கீழ்க்கண்ட அளவு தடுப்பு ஊசிகள் போடப்பட்டுள்ளன.

தடுப்பு ஊசி போடப்பட்ட விவரம்

| ஆண்டு | | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 5,96,689 |
| 1968–69 | .. | .. | 9,01,753 |
| 1969–70 | .. | .. | 7,19,025 |
| 1970–71 | .. | .. | 12,64,549 |
| 1971–72 | .. | .. | 13,39,053 |
| 1972–73 | .. | .. | 13,81,768 |

கோவை மாவட்டத்தில் செயலாற்றி வரும் கேந்திர கிராம நிலையங்கள் ( Key Village Centres) மற்றும் செயற்கை முறை இன விருத்தி நிலையங்கள் (Artificial Insemination Centres) மூலம் கீழ்க்கண்ட பணிகள் செய்யப்பட்டுள்ளன.

பராமரிக்கப்பட்ட பொலிகாளைகள்

| ஆண்டு | | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 138 |
| 1968–69 | .. | .. | 134 |
| 1969–70 | .. | .. | 162 |
| 1970–71 | .. | .. | 163 |
| 1971–72 | .. | .. | 167 |
| 1972–73 | .. | .. | 155 |

செயற்கை முறையில் சேகரிக்கப்பட்ட விந்தின் அளவு

| ஆண்டு | | | அளவு (சி.சி.) |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 6,810 |
| 1968–69 | .. | .. | 7,032 |
| 1969–70 | .. | .. | 9,317 |
| 1970–71 | .. | .. | 10,854 |
| 1971–72 | .. | .. | 10,840 |
| 1972–73 | .. | .. | 9,107 |

செயற்கை முறையில் கருவூட்டப்பெற்ற அளவு

| | | | |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 1,33,176 |
| 1968–69 | .. | .. | 1,30,636 |
| 1969–70 | .. | .. | 2,23,262 |
| 1970–71 | .. | .. | 2,60,788 |
| 1971–72 | .. | .. | 2,28,994 |
| 1972–73 | .. | .. | 2,12,026 |

செயற்கை முறையில் கருவூட்டப்பெற்றதால் பிறந்த கன்றுகள்

| ஆண்டு | | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 30,295 |
| 1968–69 | .. | .. | 40,413 |
| 1969–70 | .. | .. | 62,801 |
| 1970–71 | .. | .. | 44,844 |
| 1971–72 | .. | .. | 48,023 |
| 1972–73 | .. | .. | 47,587 |

இனவிருத்தி செய்வதற்கு உயர் இனங்களான ஜெர்சி, சிந்திக் காளைகள் பயன்படுத்தப்படு கின்றன.

நோயினுல் பாதிக்கப்படாத நல்ல ஆடுகளைத் தேர்ந்தெடுத்து அவைகளைத் தூய்மையான முறையில் அறுத்து, இறைச்சியை வழங்குவதற் காகக் கால்நடைப் பராமரிப்புதுறை பின்கண்ட அளவு ஆடு அறுப்பு நிலையங்களைச் செயல் படுத்தி வருகிறது.

ஆடு அறுப்பு நிலையம்

| ஆண்டு | | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 15 |
| 1968–69 | .. | .. | 19 |
| 1969–70 | .. | .. | 21 |
| 1970–71 | .. | .. | 26 |
| 1971–72 | .. | .. | 27 |
| 1972–73 | .. | .. | 27 |

ஆடு அறுப்பு நிலையங்கள் கால்நடை உதவி மருத்துவர்களால் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையங்களில் கடந்த 5¾ ஆண்டுகளில் கீழ்க் கண்ட அளவு ஆடுகள் அறுக்கப்பட்டு, கோவை மாவட்ட மக்களுக்கு இறைச்சியாக வழங்கப்பட்டுள்ளது.

அறுக்கப்பட்ட ஆடுகள்

| ஆண்டு | | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 97,013 |
| 1968–69 | .. | .. | 1,50,660 |
| 1969–70 | .. | .. | 2,86,939 |
| 1970–71 | .. | .. | 3,13,924 |
| 1971–72 | .. | .. | 3,70,342 |
| 1972–73 | .. | .. | 3,49,932 |

ஆநிரை காப்பகங்கள்

கோவை மாவட்டத்தின் கீழ்க்கண்ட 3 ஆநிரை காப்பகங்கள் உள்ளன.

1. இராமலிங்கம் காசநோய் நிலையம், பெருந்துறை.

2. கௌமார மடாலயம், பேரூர்.

3. சாந்தலிங்க சுவாமிகள் மடம், பேரூர்.

வெக்கை நோய்

வெக்கை நோய் என்ற கொடிய நோயினை அறவே தடுக்கும் பொருட்டுத் தமிழக–மைசூர் எல்லையில் வரக்கூடிய கால்நடைகளுக்கு வெக்கை நோய்த் தடுப்பு ஊசி போட ஏதுவாகத் திம்மத்தில் ஒரு கால்நடை வெக்கை நோய்த் தடுப்புச் சாவடியும், கோபிச் செட்டிப்பாளையத் தில் வெக்கை நோய்த் தடுப்பு விழிப்புக் குழுவினரும் சிறப்பாகப் பணியாற்றிக் கால்நடைச் செல்வங்களை வெக்கை நோயினின்றும் காப்பாற்றி வருகின்றனர். கடந்த 2 ஆண்டுகளில் இவ்வகை யில் தடுப்பு ஊசி போடப்பட்ட விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | 1970–71 | 1971–72 |
|---|---|---|
| கோபி வெக்கை நோய்த் தடுப்புக் குழுவினர் போட்ட வெக்கை நோய்த் தடுப்பூசி யின் எண்ணிக்கை. | 54,314 | 1,67,857 |
| வெக்கை நோய்த் தடுப் புச் சாவடியில் போடப்பட்ட வெக் கை நோய்த் தடுப் பூசியின் எண்ணிக்கை. | 15,440 | 1,38,486 |





### கோழியின மேம்பாடு

கோவை மாவட்டத்தில் கோழியினங்களை மேம்படுத்துவதற்காகக் கீழ்க்கண்ட நிலையங்களும், திட்டங்களும், சங்கங்களும் பாடுபட்டு வருகின்றன.

1. கோழியின மேம்பாட்டு நிலையங்கள்.
2. தீவிரக் கோழி வளர்ப்புத் திட்டம்.
3. கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், மற்றும் கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சம்மேளனம்.
4. சத்துணவுத் திட்டம் (கிராமப் புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டம்).
5. உலக உணவுத் திட்டம் (சத்துள்ள கோழியின் உற்பத்தியும், விநியோகமும்).

கோழியின மேம்பாட்டு நிலையங்கள் மூலமாகவும், தீவிரக் கோழி வளர்ப்புத் திட்டப் பணிகள் மூலமாகவும், 31—12—1972 வரை கீழ்க்கண்ட முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகள்

| ஆண்டு | | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 2,64,333 |
| 1968–69 | .. | .. | 2,55,185 |
| 1969–70 | .. | .. | 2,95,071 |
| 1970–71 | .. | .. | 2,91,601 |
| 1971–72 | .. | .. | 5,48,370 |
| 1972–73 | .. | .. | 4,99,546 |

அடைக்கு விற்கப்பட்ட முட்டைகள்

| ஆண்டு | | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 8,088 |
| 1968–69 | .. | .. | 7,207 |
| 1969–70 | .. | .. | 4,117 |
| 1970–71 | .. | .. | 19,102 |
| 1971–72 | .. | .. | 23,053 |
| 1972–73 | .. | .. | 13,870 |

உண்பதற்காக விற்கப்பட்ட முட்டைகள்

| ஆண்டு | | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 2,08,548 |
| 1968–69 | .. | .. | 1,41,947 |
| 1969–70 | .. | .. | 23,898 |
| 1970–71 | .. | .. | 1,36,094 |
| 1971–72 | .. | .. | 1,75,852 |
| 1972–73 | .. | .. | 3,03,495 |

வளர்ப்பதற்காக விற்கப்பட்ட கோழிகள்

| ஆண்டு | | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 5,615 |
| 1968–69 | .. | .. | 7,401 |
| 1969–70 | .. | .. | 10,120 |
| 1970–71 | .. | .. | 14,189 |
| 1971–72 | .. | .. | 21,116 |
| 1972–73 | .. | .. | 13,925 |

தற்பொழுது கோவை மாவட்டத்தில் 404 தனியார் கோழிப் பண்ணைகள் உள்ளன. கால்நடைப் பராமரிப்புத்துறை உயர்ரக முட்டைகளை அடைக்காக விற்பதுடன், கோழிக் குஞ்சுகளை விற்பனை செய்வதிலும் கடந்த 3 ஆண்டுகளில் தீவிரக் கவனம் செலுத்தி வருவதால் பின் கண்டவாறு கோழிக் குஞ்சுகளின் விற்பனை பெருகியுள்ளது.

விற்பனை செய்யப்பட்ட கோழிக்குஞ்சுகள்

| ஆண்டு | | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1970–71 | .. | .. | 22,418 |
| 1971–72 | .. | .. | 1,19,243 |
| 1972–73 (31-12-72) | | | 83,324 |

கோவை மாவட்டத்தில் 19 கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்டுக் கூட்டுறவு முறையில் கோழிகளைச் சிறப்பாக உற்பத்தி செய்து பயன்பெற்று வருகின்றன.

உலக உணவுத் திட்டம் :—இத் திட்டத்தின் கீழ் கோழி வளர்ப்பவர்களுக்குச் சரிவிகித கோழித் தீவனம் குறைந்த விலையில் வழங்கும் பொருட்டு, அரசூரில் ஓர் தீவனக் கலப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்ட சரிவிகிதக் கோழித் தீவனத்தின் அளவு பின்கண்ட அளவில் அமைந்துள்ளது.

| ஆண்டு | | | வழங்கப்பட்ட தீவன அளவு (கிலோ கிராம்) |
|---|---|---|---|
| 1968–69 | .. | .. | 6,211 |
| 1969–70 | .. | .. | 39,982 |
| 1970–71 | .. | .. | 93,321 |
| 1971–72 | .. | .. | 1,89,186 |
| 1972–73 | .. | .. | 1,96,125 |

கோவை மாவட்டத்தில் 2 ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்டுச் சிறப்பாகக் கூட்டுறவு முறையில் ஆட்டினத்தை உற்பத்தி செய்து பயன் பெற்று வருகின்றன.

தீவன அபிவிருத்தியை அதிகரிக்க ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடைத் திட்டத்தின்கீழ்த் தீவன விதைகள், தீவன நாற்றுகள் வழங்கப்பட்டு தீவனப் பயிர்ப் பாத்திகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வெள்ளையினச் சீமைப் பன்றிகளைக் குறைந்த விலையில் மக்களுக்கு வழங்கி, பன்றி உற்பத்தியைப் பெருக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது. பன்றி இறைச்சியை அதிகமாக உட்கொள்ளச் செய்ய வேண்டும் என்பதற்காக முக்கிய நகரங்களில் 'வெண்பன்றி இறைச்சிக் கழகம்' தோற்றுவிக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது.

நவீன முறையில் கால்நடைகளைப் பேணுதல், நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் போன்றவை திரைப்படங்கள் வாயிலாகவும், துண்டு வெளியீடுகள் மூலமாகவும் விளக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கால்நடைப் பராமரிப்புத் துறை கோவை மாவட்ட உழவர் பெருங்குடி மக்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் சிறப்பாகச் செய்து வருகிறது.


கோயமுத்தூர் மாவட்டம்
0 5 10 15 20 கி. மீ.
77° 0'
77° 30'
78° 0'
11° 30'
11° 0'
10° 30'
மைசூர்
நீலகிரி
சேலம்
திருச்சிராப்பள்ளி
கேரளம்
மதுரை
பவானி
கோபிசெட்டிபாளையம்
அவிநாசி
ஈரோடு
கோயமுத்தூர்
பல்லடம்
தாராபுரம்
உடுமலைப்பேட்டை
பொள்ளாச்சி
தாளவாடி
மோயாறு
சத்தியமங்கலம்
பவானி சாகர்
அந்தியூர்
அம்மாபேட்டை
நம்பியூர்
ஈரோடு
பெருந்துறை
மொடக்குறிச்சி
சென்னிமலை
ஊத்துக்குழி
அன்னூர்
காரமடை
மேட்டுப்பாளையம்
பெரிய நாயக்கன் பாளையம்
சர்க்கார் சாமக்குளம்
திருப்பூர்
சூலூர்
பல்லடம்
காங்கேயம்
பொங்கலூர்
வெள்ளக் கோவில்
கொடுமுடி
தொண்டா முத்தூர்
கோயமுத்தூர்
பேரூர்
சிங்காநல்லூர்
மதுக்கரை
சுல்தான் பேட்டை
குண்டடம்
மூலனூர்
அரவக்குறிச்சி
தாராபுரம்
குடிமங்கலம்
பொள்ளாச்சி
உடுமலைப்பேட்டை
ஆனைமலை
மடத்துக்குளம்
பழனி
திண்டுக்கல் சந்திப்பு
வால்பாறை
பாலாறு
ஆழியாறு
சேலம் சந்திப்பு
திருச்சி சந்திப்பு
கரூர்
பாலக்காடு
ஒலவக்கோடு சந்திப்பு
குறிப்பு
மாநில எல்லை
மாவட்ட எல்லை
வட்ட எல்லை
ஊராட்சி ஒன்றிய எல்லை
மாநில நெடுஞ்சாலை
இதர சாலைகள்
இருப்புப்பாதை (பி. கே.)
இருப்புப்பாதை (மீ. கே.)
ஆறு, ஓடை
மாவட்டத்தலைநகர்
வட்டத்தலைநகர்
ஊராட்சி ஒன்றியம்
இதர கிராமங்கள்
மத்திய நிலஅளவை அலுவலகம், சென்னை.

# கொங்கு நாட்டுக் கோவை தரும் வரலாறு

நா. அமிர்தலிங்கம்

தங்கத் தமிழகத்தின் தொன்மையான பகுதிகளில் ஒன்று இன்றையக் கோவை மாவட்டத்தினை உள்ளடக்கிய கொங்கு நாடாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே அதாவது கற்காலம், உலோக காலம் ஆகிய காலங்களிலேயே இப்பகுதியில் ஆதிகுடிகள் பலர் வாழ்ந்ததற்கான தொல்பொருள் சாதனங்கள் பல கிடைத்துள்ளன. பழங்குடி மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்கள், உலோகக் கருவிகள், நடுகற்கள், கல்லறைக் கற்கள் மற்றும் உரோம, யவன நாட்டு நாணயங்கள் பலவும் கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கிடைத்துள்ளன. அவைகளில் குறிப்பிடத் தகுந்த சில ஊர்கள் நல்லம்பட்டி, வெள்ளலூர், இருகூர், சாவடிப்பாளையம், நட்டுக்கல் பாளையம், பூண்டி, பொள்ளாச்சி ஆகியவையாகும்.



## சங்க காலம்

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில்இப்பகுதியில் குரும்பர், எயினர், வேடர் போன்ற பழங்குடி மக்கள் வாழ்ந்ததாகத் தெரிகிறது. சங்க காலத்தில் மாலவர், கோசர், கொங்கர் எனப்படும் மக்கள் இப்பகுதியில் வாழ்ந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டிய முடி மன்னர்களில் யாராவது ஒரு மன்னனின் ஆட்சியின் கீழ் இப்பகுதி உட்பட்டும், உட்படாமலும் அவ்வப் போது இருந்து வந்தது. இப்பகுதியில் பெரும்பாலும் வேளிர் எனப்படும் குறுநிலமன்னர்களே ஆட்சி புரிந்து வந்தனர். அதியமான், குமணன் போன்றோர் இவ்வகையினர்.



## சேரர் ஆட்சி

சேரப் பெருமன்னன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் காலத்தில் கொங்கு நாடு அவனது ஆட்சிக்குட்பட்டிருந்ததாகத் தெரிகிறது. அவன் சோழ, பாண்டிய மன்னர்களையும், ஐந்துவேளிர் மன்னர்களையும் போரில் வென்றதாக இலக்கியக் குறிப்பு உள்ளது. சேரன் செங்குட்டுவன் காலத்தில் கொங்கு நாடு சீரும் சிறப்பும் பெற்றிருந்தது. கொங்குநாட்டை ஆண்ட சேரர்களுக்குக் கொங்குச் சேரர்கள் என்று பெயர். இவர்களில் புகழ் மிக்கவன் கருரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட யானைகண் சேய்மாந்தரம்சேரல் என்பான். தலையாலம் கானம் போரில் இவன் பாண்டியன் நெடுஞ்செழியனால் தோற்கடிக்கப்பட்டான். பின்னர் கொங்குப் பகுதி பல வேளிர் மன்னர்களின் ஆட்சியின் கீழ் வந்தது. அதில் குறிப்பிடத் தகுந்தவர்கள் பொதிகையைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்ட வேள் ஆயும், அவன் மகன் திதியனும் ஆவர். அதியன் என்பான் இன்றையக் கோவைமாவட்டத்தின் தெற்குப் பகுதியை ஆட்சி செய்த வேளிர் மன்னன். ஆய்ஆந்திரன், பாலக்காட்டுக் கணவாய் முதல் குமரி வரை ஆண்டவன் வேள்பேகன், வேள் பாரி முதலானோர் இப்பகுதியில் ஆண்ட இதர வேளிர் மன்னர்களாவார்கள்.

## ராஷ்டிரகூடர் ஆட்சி

சேரர் ஆட்சி முடிவுக்கு வந்ததும் ராஷ்டிரகூடர்களில் ஒரு பகுதியினர் கொங்கு நாட்டைக் கைப்பற்றி ஆண்டனர். அவர்கள் கி.பி. மூன்று நான்காம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்தனர். அவர்களில் குறிப்பிடதகுந்தவர்கள் கன்னரதேவா, திரு விக்கிரமதேவா ஆகியோராவர். இவர்கள் காலத்தில் சமண சமயம் கொங்கு நாட்டில் உயர்வு பெற்றிருந்தது.

## கங்கர் ஆட்சி

ராஷ்டிரகூடர் ஆட்சிக்குப் பிறகு கர்நாடகத்தைச் சேர்ந்த கங்க மன்னர்கள் வட கொங்கு நாட்டைக் கைப்பற்றினர். இவர்

களில் புகழ்மிக்க மன்னவன் கொங்கணிவர்மன் என்பவன் ஆவான். இவன் ஸ்கந்த புரத்தைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 405 முதல் 450 வரை ஆட்சி செய்தான். இந்தக் கங்க மன்னர்களின் ஆட்சியை வரிசைப்படுத்திக் 'கொங்குதேச ராசாக்கள்' என்ற பழைய நூல் விவரிக்கிறது.

துர்வீநதன் என்ற கங்க பேரரசனின் காலத்தில் கங்கர்களின் ஆட்சி உச்ச நிலைக்கு வந்தது. அவன் மகனுக்குச் சோழ இளவரசியை மணம் முடித்ததாகச் சொல்லப்படுகிறது. கங்கப் பேரரசு எட்டாம் நூற்றாண்டின் ஆரம்பக் காலத்தில் முடிவுக்கு வந்தது. பின்னர் கொங்கு நாட்டில் கங்க மன்னர்கள் சிற்றரசர்களாக ஆனார்கள். இவர்களுக்குக் கொங்குக் கங்கர்கள் என்று பெயர் ஏற்பட்டது. இவர்களது ஆட்சியும் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் முடிவு பெற்றது.

## சோழப் பேரரசு

பிற்காலச் சோழப் பேரரசு எழுச்சிபெற்ற போது ஆதித்த சோழன் கொங்கு நாட்டை வென்று தன்னாட்சிக்குள் அதனைக் கொண்டு வந்தான். பின்னர் பராந்தகன், இராசராசன், இராசேந்திரன் ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசு உச்சக் கட்டத்தை அடைந்தது. இராசேந்திரன் காலத்தில் தமிழகத்தின் எல்லைக்கு அப்பாலும் சோழப் பேரரசு பரந்து விரிந்து கிடந்தது. அக்காலத்தில் சோழப் பேரரசு பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப்பட்டது. ஒவ்வொரு மண்டலமும் ஒரு மண்டலாதிகாரியின் தலைமையில் இருந்தது. இன்றையச் சேலம், தருமபுரி, கோவை மாவட்டங்கள் அடங்கிய கொங்குநாடு அன்று அதிராசராச சோழமண்டலம் என்று வழங்கப்பட்டது. அதற்குச் சோழ கேரள மண்டலம் என்றும் வேறு ஒரு பெயர் உண்டு. அதனைப் பொதுவாகக் கொங்கு மண்டலம் என்றும் அழைத்து வந்தனர்.

இந்த அதிராசராச சோழமண்டலப்பகுதி மேற்குக் கடற்கரை வரை பரவி இருந்தது. அங்குள்ள துறைமுகங்களின் வழியே வெளிநாடுகளுக்கு வாணிகத் தொடர்பு ஏற்பட்டது. ரோம், கிரிஸ், எகிப்து, அரபு நாடுகளுடன் வாணிகம் நடந்தது. அகில், சந்தனம், யானைத்தந்தம், மயில்தோகை, மூங்கில் முதலியன ஏற்றுமதி செய்யப்பட்டன. அக்கால வாணிபத்தில் பயன்படுத்தப்பட்ட ரோம, யவன நாணயங்கள் பல கோவை மாவட்டத்தில் கிடைத்துள்ளமையால் இவ்வணிகத் தொடர்பு மேலும் உறுதியாகிறது. கொங்குநாட்டில் சோழர் ஆட்சி நான்கு நூற்றாண்டுக் காலம் நீடித்தது. அவர்களது ஆட்சிக் காலத்தில் ஊராட்சி முறையும் இதர சோழ அரசியல் முறைகளும் கொங்கு நாட்டில் ஏற்படுத்தப்பட்டன. நிலவரி முறை ஒழுங்குப்படுத்தப்பட்டது. பாசன வசதிகளும், உழவுமுறைகளும் பெருகின. கல்வி, கலைத் துறையிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. கொங்கு நாட்டில் அக்காலத்தில் சிறந்த தமிழ் இலக்கியங்கள் பல இயற்றப்பட்டன. கொங்குவேளிர் என்னும் சமணப் புலவர் உதயணன் கதையை ஆக்கித்தந்தார். பவணந்தி முனிவர் என்னும் தமிழ்ப்புலவர் எழுத்திலக்கிணமும், சொல் இலக்கணமும் கூறும் நன்னூல் என்னும் இலக்கண நூலைச் செய்தார்.

## பாண்டியர் ஆட்சி

சோழரது ஆட்சி குன்றி, பாண்டியர் பலம் ஓங்கியபோது ஜாதவர்மன் சுந்தரபாண்டியன் என்பான் கொங்குநாடு உட்படத் தமிழ்நாடு முழுவதும் வெற்றி கொண்டான். இது பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நடந்தது. கொங்கு நாட்டை வெற்றி கொண்ட பாண்டியர்கள் அதனைத் தாமே நேரடியாக ஆட்சி செய்ய வில்லை. ஆங்காங்கே குறுநில மன்னர்களை நியமித்துக் கப்பம் வசூலிப்பதோடு திருப்தி அடைந்தனர்.

## ஹொய்சாளர் ஆட்சி

ஹொய்சாளர் குலத்தில் வந்த விஷ்ணுவர்த்தனன் வடகொங்கு நாட்டைப் பிடித்துக் கொண்டான். பின்னர் இரண்டாம் நரசிம்மன் என்னும் ஹொய்சாள மன்னன் சோழ, பாண்டிய நாடுகளில் நடைபெற்ற உள்நாட்டு கலகங்களில் ஈடுபட்டான். சிறிது சிறிதாக இக்குழப்பத்தில் அவன் தனது ஆட்சியை விரிவுபடுத்திக் கொண்டான். கொங்கு நாட்டில் கொள்ளேகாலம் வரை இவனது ஆட்சி பரவி நின்றது. பின்னர் ஹொய்சாள அரசு இரு பிரிவாக ஆனபோது கொங்கு நாட்டுப் பகுதிகள் வீரராமநாதர் என்னும் அரசர் வசம் வந்தது.

## மாலிக்கபூர் படையெடுப்பு

டெல்லியில் சுல்தான்களின் ஆட்சி ஏற்பட்டதும், அவர்களது கவனம் தெற்கே திரும்பியது. அப்படி ஏற்பட்ட

படையெடுப்பில் ஹொய்சாள மன்னனான வீரபல்லாளனை, துவாரசமுத்திரத்தில் டெல்லி சுல்தானின் தளபதியான மாலிக் காபூர் தோற்கடித்தான். இதனால் தென்னாட்டில் டெல்லி சுல்தான்களின் ஆட்சி ஏற்பட்டது.

## விசயநகர வல்லரசு

சுல்தானின் ஆட்சியை எதிர்த்து விசயநகர வல்லரசு எழுச்சிபெற்றதும் கொங்கு நாடும் நாயக்கர்களின் ஆட்சிக்குள் வந்தது. கொங்குநாட்டில் பல பாளையக்காரர்கள் இந்தக் காலத்தில் தோன்றினர். அவர்களில் பலர் மதுரை நாயக்க மன்னனுக்குக் கட்டுப்பட்டு இருந்தனர். மைசூரில் விசயநகரப் பிரதிநிதியாக இருந்தவர்களுக்கும் மதுரை நாயக்கர்களுக்கும் அடிக்கடி போர் ஏற்பட்டது. கொங்கு நாட்டைத் தங்கள், தங்கள் வசம் வைத்துக்கொள்ள இருவரும் சச்சரவிட்டனர்.



## மைசூர் ஆட்சி

மைசூரில் நாயக்கர் ஆட்சி வலுவிழந்ததும் அவர்களது பிரதிநிதியை நீக்கி விட்டு மைசூர் உம்மத்தூர் அரசர்களான உடையார் குலத்தவர்கள் அரசரானார்கள். அவர்கள் விசயநகரத்தின் மேலாதிக்கத்தை நீக்கிச் சுயேச்சை அரசர்கள் ஆனார்கள். அந்த உடையார்கள் சிறிது சிறிதாகக் கொங்குநாட்டின் பகுதிகளையும் கைப்பற்றினர். நாளடைவில் கோவைப் பகுதிகள் முழுதும் மைசூர் ஆட்சிக்குட்பட்டன. உடையார்களின் ஆட்சிக்காலத்தில் மைசூர்ப் பகுதிகளிலிருந்து கன்னடம் பேசும் மக்கள் இம்மாவட்டத்தில் பெருமளவில் குடியேறினர். அவர்களது ஆட்சிக் காலத்தில் பல கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன. விவசாயம், பாசனம் ஆகியவற்றிலும் கவனம் செலுத்தப்பட்டது.

## ஐதரின் எழுச்சியும் திப்புவின் வீழ்ச்சியும்

மைசூரில் உடையார்கள் குல அரசர்களை நீக்கிவிட்டு ஐதர் அலி பதவிக்கு வந்தான். ஐதர் மைசூர் மன்னராக ஆனதும் தென்னாட்டு அரசியலில் தீவிரமாகத் தலையிட்டு ஒரு பெரிய வல்லரசை நிறுவத் திட்டமிட்டான். ஆனால், அதேசமயம் நம் நாட்டிற்கு வியாபாரம் செய்ய வந்திருந்த ஆங்கிலேயரும், பிரஞ்சுக்காரரும்கூட நமது நாட்டு அரசியலில் தலையிட்டுப் போரிட ஆரம்பித்தார்கள்.

ஐதரின் திட்டத்திற்கு ஆங்கிலேயர்எதிர்ப்பாக இருந்தார்கள். அதனால் ஆங்கிலேயருக்கும் ஐதர் அலிக்கும் பல போர்கள் ஏற்பட்டன. ஐதருக்குப் பிறகு அவன் மகன் திப்பு சுல்தான் அந்தப் போர்களைத் தொடர்ந்து நடத்தினான். அந்தப் போர்கள் மைசூர்ப் போர்கள் என்றழைக்கப்பட்டன.

மைசூர்ப் போர்களின் ஆரம்பக் காலத்தில் கோவைப் பகுதிகள் மைசூர் அரசின் ஆட்சியின்கீழ் தான் இருந்தன. மூன்றாவது மைசூர்ப் போர் தொடங்கியதும் சேலம், கோவை மாவட்டங்களில் ஆங்கிலேயப் படையெடுப்பு ஏற்பட்டது. அதனால் கோவை மாவட்டத்தின் பல பகுதிகளில் கடுமையான சண்டைகள் ஏற்பட்டன. ஜெனரல் மாடோஸ் என்னும் ஆங்கிலக் கவர்னர் ஒரு படையுடன் வந்து திண்டுக்கல், பாலக்காடு, கோயம்புத்தூர் ஆகிய இடங்களைப் பிடித்துக்கொண்டான். பின்னர் நடந்த சமாதான உடன்பாட்டின் படி ஆங்கிலேயருக்கும் மலையாளம், திண்டுக்கல், பாரமகால் பிரதேசங்கள் கிடைத்தன. கோவை மாவட்டம் திப்புவின் வசமே விடப்பட்டது. இறுதியான நான்காவது மைசூர்ப் போரில் திப்புசுல்தான் தோற்றுப் போகவே கோவை மாவட்டம் ஆங்கிலேயர் ஆட்சிக்குள் வந்தது.

## பிரிட்டிஷ் ஆட்சி

கி. பி. 1799-ல் கோவை மாவட்டம் ஆங்கில ஆட்சியின் கீழ் வந்ததும் அது இருபகுதிகளாகப் பிரிக்கப்பட்டு வடக்குப் பகுதி பவானியைத் தலைநகராகவும், தெற்குப் பகுதி தாராபுரத்தைத் தலைநகராகவும் கொண்டு அமைக்கப்பட்டது. சேலம் பகுதிகள் வடக்குக் கோவை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டன. கி. பி. 1804-ல் கோயம்புத்தூரைத் தலைநகராகக் கொண்டு தனியான கோவை மாவட்டமும், சேலத்தைத் தலைநகராகக் கொண்ட தனிச் சேலம் மாவட்டமும் அமைக்கப்பட்டன.

ஆங்கிலேயரை எதிர்த்து நடந்த விடுதலைப் போராட்டத்தில் கோவை மாவட்டம் பெரும் பங்கு வகித்தது. ஆங்கிலேயர்களைத் தீரமுடன் எதிர்த்து உயிர் விட்டவருள் குறிப்பிடத்தக்கவர் தீரன் சின்னமலை என்னும் பாளையக்காரரும் திருப்பூர் குமரனும் ஆவர்.

# அரிசன நலனுக்கு ஆற்றியுள்ள பணிகள்!

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்" என்ற திருவள்ளுவரின் வாக்கிற் கிணங்க, "அவரவர் செய்யும் தொழிலுக்கு ஏற்ப வேறுபாடு உள்ளதே தவிர, பிறப்பின் அடிப்படையில் வேற்றுமை இல்லை; அனைவரும் சமமே!" என்ற நிலை, பழந்தமிழகத்தில் நீண்ட காலம் நிலவி வந்துள்ளது. ஆனல், "ஒன்றே குலம்! ஒருவனே தேவன்!" என்ற பொது நோக்குடனும், "யாதும் ஊரே! யாவரும் கேளிர்!" என்ற பரந்த நோக்குடனும், வாழ்ந்த தமிழர்களிடையே, காலப்போக்கில் ஆயிரம் சாதி பேதங்கள் வளர்ந்து விட்டன. அதன் காரணமாக அரிசனங்கள் சமுதாயத்தின் அடித்தளத்திற்குத் தள்ளப்பட்டு, உயர்குடி மக்களின் சமுதாயச் சட்டத்திட்டம் என்னும் கொடுங்கால்களின் அடியில் சிக்கித் தவித்தனர்.

அண்ணல் காந்தி அடிகள் அரிசன மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டார். அண்ணல் வழியில், பேரறிஞர் **அண்ணு** அவர்கள் அரிசனங்களின் முன்னேற்றத்தையே தன் இலட்சியமாகக் கொண்டு, அரிசனங்களின் நல்வாழ்விற்கு நல்ல பல திட்டங்களைச் செயல் படுத்தினர்.

"ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமமே; அப்படியிருக்க அரிசனங்கள் மட்டும் ஏன் தீண்டத்தகாதவர்களாக இருக்க வேண்டும்?" என்ற கேள்வியை இளமைக் காலம் முதலே எழுப்பி வந்துள்ள இன்றையத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், அண்ணன் காட்டிய வழியில் அரிசனங்களின் முன்னேற்றத்திற்குத் தன்னையே ஒப்படைத்துக் கொண்டுள்ளார். அதன் பயனுய் அரிசன மக்கள் அரசியல், பொருளாதார, சமுதாய முன்னேற்றம் பெற்று வளமோடு வாழ்கின்றுர்கள். இது உண்மை என்பதைக் கோவை மாவட்டத்தில் கடந்த 5$\frac{3}{4}$ ஆண்டுகளில் அரிசனங்களின் முன்னேற்றத்திற்காகச் செய்துள்ள பணிகள் மெய்ப்பிக்கின்றன.

கோவை மாவட்ட அரிசன மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவும், அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், தீண்டாமை என்னும் கொடுந்துன்பம் நீங்கவும், நமது தமிழ்நாடு அரசு அடியிற் குறுப்பிட்டுள்ள திட்டங்களைக் கோவை மாவட்டத்தில் செயல் படுத்தி வருகிறது.

நல்வாழ்வு :—

1. இலவச வீட்டுமனை வழங்குதல்.
2. குடி தண்ணீர் வசதி செய்தல்.
3. அரிசனக் குடியிருப்புகள் மற்றும் மயானங்களுக்கு இணைப்புப் பாதைகள் அமைத்தல்.
4. அரிசனங்களுக்காகத் தனி மயானம் அமைத்தல்.
5. அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி அளித்தல்.

கல்வி :—

6. கல்விக் கூடங்கள் அமைத்தல்.
7. மாணவ மாணவியர்க்கு இல்லங்கள் அமைத்தல்.
8. பள்ளிகளில் மதிய உணவு வழங்குதல்.
9. கற்பலகை, புத்தகங்கள் வழங்குதல்.
10. பள்ளிகள் மற்றும் இல்லங்களில் உள்ள மாணவர்களுக்குச் சீருடைகள் வழங்குதல்.
11. இல்லங்களை நன்முறையில் பராமரிக்கும் காப்பாளர்களுக்குப் பரிசு வழங்குதல்.
12. பள்ளிக்கு அதிக நாட்கள் வருகை தந்த மாணவர்களுக்கும் மாணவியர்களுக்கும் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கும் பரிசுகள் வழங்குதல்.
13. உபகாரச் சம்பளம் வழங்குதல்.

வேளாண்மை :—

14. வேளாண்மை வளர்ச்சிக்குப் புதிய பாசனக் கிணறு வெட்ட மானியம் வழங்குதல்.
15. உழவு மாடுகள், வேளாண்மைக் கருவிகள் வழங்குதல்.

தொழில் வளம் :—

16. இலவசத் தொழிற் கருவிகள் வழங்குதல்.
17. தொழில் நடத்த வட்டியில்லாக் கடன் வழங்குதல்.

தீண்டாமை ஒழிப்பு :—

18. சமுதாய நல மன்றங்கள் அமைத்தல்.
19. கலப்புத் திருமணத் தம்பதியர்க்குத் தங்கப் பதக்கம் வழங்குதல்.
20. தீண்டாமை ஒழிப்புப் பணியை மேற்கொள்வதில் சிறந்த கிராமங்களுக்குப் பரிசு வழங்குதல்.

மேற்கண்ட திட்டங்களின் மூலம் கோவை மாவட்டத்தில் கடந்த 5$\frac{3}{4}$ ஆண்டுகளில் செய்துள்ள சாதனைகளும், ஒதுக்கீடு-செலவு விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



### வீட்டு மனைக்கு நில ஆர்ஜிதம்

சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் அரிசன மக்கள், சமுதாயத்தில் மேம்பாடடைய அவர்களுக்குக் குடியிருப்பு மனை வழங்கப்படல் மிகவும் இன்றியமையாததென்பதைக் கருதி, அதன் பொருட்டுக் கோவை மாவட்டத்தில், வீட்டு மனைக்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் மூன்று அரிசன நலத் தனி வட்டாட்சியாளர்கள் கோவை, பொள்ளாச்சி, ஈரோடு வட்டங்களில் இருந்து நில ஆர்ஜித வேலையைக் கவனித்து வருகின்றனர். 1967-68 முதல் 1972-73 (1972 டிசம்பர் திங்கள் முடிய) வீட்டு மனைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட பரப்பும், செலவிடப்பட்ட தொகை விவரமும் கீழ் வருமாறு உள்ளன.

நில ஆர்ஜிதத்திற்கு அரசு செலவிட்ட தொகையும் பரப்பும்

| ஆண்டு | | செலவிட்ட தொகை (ரூபாய்) | பரப்பு. |
|---|---|---|---|
| 1967-68 | .. | 4,33,880 | 151·27 |
| 1968-69 | .. | 1,52,265 | 40·68 |
| 1969-70 | .. | 4,11,200 | 109·35 |
| 1970-71 | .. | 1,48,890 | 58·53 |
| 1971-72 | .. | 29,245 | 10·2 |
| 1972-73 | .. | 1,33,840 | 44·37 |

(31 டிசம்பர் 1972 வரை).

நில ஆர்ஜிதம் செய்த வகையில் பயன் அடைந்தவர்கள் விவரம்

| ஆண்டு | | | பயனடைந்தவர்கள் |
|---|---|---|---|
| 1967-68 | .. | .. | 3,305 |
| 1968-69 | .. | .. | 817 |
| 1969-70 | .. | .. | 1,137 |
| 1970-71 | .. | .. | 697 |
| 1971-72 | .. | .. | 172 |
| 1972-73 | .. | .. | 842 |
| (31 டிசம்பர் 1972 வரை) | | | |
| மொத்தம் | | .. | 6,970 |

நிலப்பட்டா வழங்கப்பட்ட விவரம்

| ஆண்டு | | | பட்டாக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967-68 | .. | .. | 886 |
| 1968-69 | .. | .. | 700 |
| 1969-70 | .. | .. | 860 |
| 1970-71 | .. | .. | 1,302 |
| 1971-72 | .. | .. | 172 |
| மொத்தம் | | .. | 3,920 |

### விடுகள் கட்டிக்கொள்ளக் கடன்

கோவை மாவட்டத்தில் அரிசனங்கள் வீடுகள் கட்டிக் கொள்ளக் கடன் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு அரிசனக் குடும்பத்திற்கும் ரூபாய் 940 மதிப்பில் வீடு கட்டிக் கொடுக்கப்பட்டு வந்தது. 1972-73—ஆம் ஆண்டிலிருந்து இத் தொகையை ஒவ்வொரு அரிசன வீட்டிற்கும் ரூபாய் 1,600 எனத் தமிழ் நாடு அரசு உயர்த்தியுள்ளது. கடந்த நான்காண்டுகளில் கட்டிக் கொடுக்கப்பட்ட இல்லங்களும், அதற்கான செலவு விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | | செலவு. (ரூபாய்) | வீடுகள் |
|---|---|---|---|
| 1969-70 | .. | 31,300 | 34 |
| 1970-71 | .. | 22,100 | 30 |
| 1971-72 | .. | 20,700 | 30 |
| 1972-73 | .. | 12,465 | 30 |

(31 டிசம்பர் 1972 முடிய)

**கல்வி:**—இம்மாவட்டத்தில் அரிசன நலத் துறையின் கீழ் 17 துவக்கப் பள்ளிகளும், 3 உயர் துவக்கப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் மொத்தம் 2,457 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளிகளில் கல்வி பயிலும் அரிசன மாணவர்களுக்கு இலவசக் கரும் பலகைகள், புத்தகங்கள், நோட்டுகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 10,000 செலவு செய்யப்படுகிறது.

நலப் பள்ளிகளில் பயிலும் எல்லா அரிசன மாணவ மாணவியர்களுக்கும் ஆண்டொன்றுக்கு இரு முறை இலவசச் சீருடைகள் தீபாவளி, பொங்கல் திருநாட்களில் வழங்கப்படுகின்றன. தவிர, அரிசன மாணவ, மாணவியர்க்குப் படிப்பில் ஊக்கம் ஏற்படுத்தும் வகையில் பள்ளிக்கு அதிக நாட்கள் வருகை தரும் நலப்பள்ளி மாணவ, மாணவியர்களுக்கும், அதனை ஊக்குவித்த தலைமை ஆசிரியர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படும் திட்டமும் செயலாக்கப்படுகிறது. ஒவ்வொரு நலப் பள்ளியிலும் அதிக நாட்கள் வருகை தந்த மூன்று மாணவர்களுக்குப் பரிசுத் தொகைகள் முறையே ரூபாய் 20, 15, 10 மதிப்புள்ள துணிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு நலப் பள்ளிகளுக்கு அதிக நாட்கள் வருகை தரும்படி மாணவர்களைக் ஊக்குவிக்கும் ஆசிரியர்களுக்கும் 25 ரூபாய் மதிப்புள்ள வெள்ளிப் பதக்கம் வழங்கப்படுகின்றது.



**இல்லங்கள் :**—தாழ்த்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்காக இந்த மாவட்டத்தில் 19 மாணவர் இல்லங்களும், 10 மாணவியர் இல்லங்களும் செயல்பட்டு வருகின்றன. இந்த இல்லங்களில் 1,637 மாணவ மாணவியர்கள் தங்கிக் கல்வி பயிலுகின்றனர். இதில் கல்லூரி மாணவர்களுக்காக 2 இல்லங்களும், தொழிற் கல்வி பயிலும் மாணவர்களுக்காக ஒரு இல்லமும் இயங்கி வருகின்றன. இந்த இல்லங்களின் பராமரிப்புக்காக ஒவ்வோர் ஆண்டும் ரூபாய் 4,50,000 செலவிடப்படுகிறது.

### மதிய உணவு

'' செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும் ''

என்ற பெரு நோக்கத்துடன் 20 நலப் பள்ளிகளில் பயிலும் எல்லா மாணவ மாணவியர்களுக்

கும் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. தவிர தனியார், மற்றும் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்பட்டு வரும் 12 பள்ளிகளில் பயிலும் அரிசன மாணவ மாணவியர்களுக்கு மட்டும் நிதி ஒதுக்கீடு வரம்பிற்குட்பட்டு மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. இதனால் மொத்தம் பயனடையும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை 3,150. கடந்த ஆண்டுகளில் மதிய உணவு அளிப்பதற்காகப் பின் கண்டவாறு செலவிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | தொகை (ரூபாய்) |
|---|---|
| 1968-69 .. .. .. | 88,496 |
| 1969-70 .. .. .. | 88,352 |
| 1970-71 .. .. .. | 87,697 |
| 1971-72 .. .. .. | 1,01,901 |
| 1972-73 .. .. .. | 69,310 |

(31 டிசம்பர் 1972 முடிய)

**படிப்பு உதவித் தொகை** :—ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் எல்லா அரிசன மாணவ மாணவியர்களுக்கும் கல்வி உதவித் தொகை (Scholarship) வழங்கப்படுகின்றன.

கடந்த ஐந்தாண்டுகளில் கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்ட தொகையும், பயன்பெற்ற மாணவர்கள் எண்ணிக்கையும் வருமாறு :

பயன்பெற்ற பள்ளிப்படிப்பு மாணவர்கள்

| ஆண்டு | | பயன் பெற்றவர் எண்ணிக்கை | வழங்கப் பட்டஉதவித் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1967-68 | .. | 13,817 | 3,36,980 |
| 1968-69 | .. | 21,639 | 3,85,640 |
| 1969-70 | .. | 26,387 | 4,36,480 |
| 1970-71 | .. | 23,327 | 4,53,690 |
| 1971-72 | .. | 26,518 | 4,54,616 |
| 1972-73 | .. | 33,592 | 4,33,904 |

(31 டிசம்பர் 1972 வரை)

உதவித் தொகை பெற்ற கல்லூரி மாணவர்கள்

| ஆண்டு | | மாணவர்கள் (எண்ணிக்கை) | வழங்கப் பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1967-68 | .. | 80 | 33,857 |
| 1968-69 | .. | 90 | 37,534 |
| 1969-70 | .. | 141 | 58,761 |
| 1970-71 | .. | 143 | 65,189 |
| 1971-72 | .. | 164 | 94,720 |
| 1972-73 | .. | 249 | 80,498 |

(31 டிசம்பர் 1972 வரை)

கடந்த 5¾ ஆண்டுகளில் கோவை மாவட்டத்தில் படிப்பு உதவித் தொகை பெற்ற அரிசன மாணவ மாணவியர்களின் எண்ணிக்கையும், வழங்கப்பட்ட உதவித் தொகையும் ஆண்டிற்காண்டு கூடி வருவதை மேற்கண்ட புள்ளிவிவரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

## அரிசனங்களின் பொருளாதாரத்தை முன்னேற்றும் திட்டங்கள்.

வேளாண்மை :—

'' உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர் ''

என்ற வள்ளுவரின் பொய்யா மொழிக்கிணங்க வேளாண்மைத் தொழிலே மேன்மை உடையது என்பதனை உணர்த்தி, அரிசன மக்கள் வேளாண்மைத் தொழிலில் முன்னேற்றம் பெறவும், வேளாண்மை வளர்ச்சியில் பெரும் பங்கு பெறவும் வேண்டி அவர்கள் புதிய பாசனக் கிணறுகள் வெட்டுவதற்கு ஒவ்வொரு புதிய கிணற்றுக்கும் ரூபாய் 2,000 மானியமாகவும், உழவு மாடுகளும் விதைப் பொருள்களும் வாங்க ரூபாய் 500 மானியமாகவும் வழங்கப்பட்ட வகையில் கீழே விவரித்துள்ளபடி செலவிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | | பாசனக் கிணறு வெட்ட வழங்கிய மானியம் (ரூபாய்) | உழவு மாடுகள் வழங்கிய மானியம் (ரூபாய்) |
|---|---|---|---|
| 1967-68 | .. | 57,060 | 33,340 |
| 1968-69 | .. | 75,170 | 11,375 |
| 1969-70 | .. | 1,28,075 | 38,685 |
| 1970-71 | .. | 1,00,810 | 14,000 |
| 1971-72 | .. | 1,12,250 | 15,600 |
| 1972-73 | .. | 1,10,000 | 15,500 |

(31 டிசம்பர் 1972 வரை)

முன்பு பாசனக் கிணறு ஒவ்வொன்றுக்கும், ரூபாய் 1,500 மட்டுமே வழங்கப்பட்டது. இன்



றைய அரசு அதை 6—6—1970 தேதிய அரசு ஆணை 54-ன்படி ரூபாய் 2,000 ஆக உயர்த்தியுள்ளது.

### இணைப்புச் சாலைகள்

அரிசன மற்றும் மலைசாதியினர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைப்பதில் கடந்த 5¾ ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு செலவிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | | செலவிட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1967-68 | .. | 9,925 |
| 1968-69 | .. | 2,000 |
| 1969-70 | .. | 4,500 |
| 1970-71 | .. | 9,920 |
| 1971-72 | .. | 6,200 |
| 1972-73 | .. | 2,396 |

(31 டிசம்பர் 1972 முடிய)

### குடி தண்ணீர்க் கிணறுகள்

அரிசனக் குடியிருப்புகளுக்கு குடி நீர் வசதி செய்யும் பொருட்டு பழைய கிணறுகளை ஆழப்படுத்தியதுடன், புதிய கிணறுகளும் வெட்டப்படுகின்றன. இவ்வகையில் கடந்த $5\frac{3}{4}$ ஆண்டுகளில் கோவை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் கீழ்க் கண்டவாறு உள்ளது.

ஆழப்படுத்தப்பட்ட பழைய கிணறுகள்

| ஆண்டு. | | ஆழப்படுத் தப்பட்ட கிணறுகள் | செலவிட்ட தொகை. (ரூபாய்) |
|---|---|---|---|
| 1967-68 | .. | 14 | 23,000 |
| 1968-69 | .. | 64 | 3,50,580 |
| 1969-70 | .. | 35 | 1,14,835 |
| 1970-71 | .. | 56 | 1,61,500 |
| 1971-72 | .. | 22 | 1,21,710 |
| 1972-73 | .. | 85 | 1,30,000 |

(31 டிசம்பர் 1972 முடிய)

புதிதாக வெட்டப்பட்ட கிணறுகள்

| ஆண்டு. | | வெட்டப்பட்ட புதிய கிணறுகள் | செலவிடப் பட்ட தொகை (ரூபாய்). |
|---|---|---|---|
| 1967–68 | .. | 6 | 61,620 |
| 1968–69 | .. | 12 | 80,980 |
| 1969–70 | .. | 8 | 66,245 |
| 1970–71 | .. | 9 | 70,280 |
| 1971–72 | .. | 30 | 1,25,685 |
| 1972–73 | .. | 34 | 97,461 |

(31, டிசம்பர் 1972 வரை)

### ஊராட்சி ஒன்றிய வேலைக்குப் பங்குத் தொகை

அரிசன நலத்துறையில் இல்லாமல் ஊராட்சி ஒன்றியங்களாலும் அரிசனங்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய குடிநீர்க் கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகள், இணைப்புச் சாலை வேலைகள் ஆகியவை கிராம வேலைத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படுகின்றன. இதன்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகளில் 20 சதவிகிதம் அரிசனங்களுக்கான வேலைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. ஆனால், அவ்வாறு ஒதுக்கப்படும்பொழுது அவ்வேலைகளினால் பயன் பெறுவோரான அரிசன மக்கள் பங்குத் தொகையாக ஒரு குறிப்பிட்ட அளவு கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனை எழுகிறது. பொருளாதார வசதியற்ற அரிசனங்களால் இந்தப் பங்குத் தொகையைச் செலுத்த இயலுவதில்லை. ஆகவே, அரிசனங்கள் செலுத்த வேண்டிய பங்குத் தொகையையும்



அரசே, அரிசன நலத்துறை மூலம் கொடுக்க ஆணையிட்டுள்ளது. அதன்படி செலவிடப்பட்ட தொகை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | | வழங்கப்பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1968–69 | .. | 52,310 |
| 1969–70 | .. | 28,482 |
| 1970–71 | .. | 35,487 |
| 1971–72 | .. | 50,568 |
| 1972–73 | .. | 36,056 |

(31–12–1972 முடிய)

### மின்வசதி

அனைத்துக் கிராமங்களும் மின்இணைப்புப் பெற்று ஒளிமயமாகத் திகழ வேண்டுமென்பதனைக் கருத்தில் கொண்டு கோவை மாவட்டத்தில் உள்ள அரிசனக் குடியிருப்புகளுக்கும் மின் இணைப்புக் கொடுத்து ஒளி மயமாக்கியுள்ளது தமிழ்நாடு அரசு. அரிசனக் குடியிருப்புகளின் தெருக்களில் மின்குழல் விளக்குகள் போடப்பட்டு வருகின்றன. 1–1–1973 வரை 2,783 அரிசனக் காலனிகளுக்கு மின்வசதி செய்யப்பட்டுள்ளது.

### தொழில் வளம்

'' கைத்தொழில் ஒன்றினைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் ''

என்ற புதுமொழிக்கிணங்க அரிசன மக்கள் பொருளாதாரத்தில் மேம்பாடடையவும், அவர்களிடையே தொழில் திறமையை ஊக்குவிக்கவும், தொழில் திறன்படைத்த அரிசனங்களுக்கு ரூபாய் 100 முதல் ரூபாய் 2,000வரை பெறுமானமுள்ள கீழ்க்குறிப்பிட்ட தொழில்களுக்கான தொழிற் கருவிகள் அரிசன நலத்துறை மூலம் இலவசமாக வழங்கப்படுகின்றன.

1. தையல் வேலை, 2. தோல் தைத்தல், 3. கருவிகள் தொழில், 4. கொல்லர் தொழில், 5. கல் உடைத்தல், 6. புத்தகம் பைண்டு செய்தல் 7. கேஸ் வெல்டிங், 8. மின் ஒயரிங், 9. சலவைத் தொழில், 10. முடிதிருத்தும் தொழில், 11. காலணி செய்தல், 12. இலாடம் கட்டுதல்.

மேற்கண்ட திட்டத்திற்கு கடந்த $5\frac{3}{4}$ ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகையும், பயன்பெற்றோர் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது

| ஆண்டு | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய்) | பயன் பெற்றோர் (எண்ணிக்கை) |
|---|---|---|---|
| 1967–68 | .. | 23,000 | 137 |
| 1968–69 | .. | 23,000 | 143 |
| 1969–70 | .. | 23,014 | 125 |
| 1970–71 | .. | 23,036 | 117 |
| 1971–72 | .. | 17,592 | 51 |

(31-12-1972 முடிய)

### வட்டியில்லாக் கடன்

தமிழ்நாடு அரசு சிறு வியாபாரம் செய்துவரும் அரிசனங்களை ஊக்குவிக்கவும், அவர்களைப் புதிய வியாபாரங்களில் ஈடுபடச் செய்யவும் வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டத்தினை உருவாக்கி, அத் திட்டத்தை 1968–69 நிதியாண்டிலிருந்து கோவை மாவட்டத்தில் செயல்படுத்தி வருகிறது.

21 வகைத் தொழில்களுக்குத் தொழில் தன்மைக்கு ஏற்றவாறு ரூபாய் 250 முதல் ரூபாய் 10,000 வரை வட்டியில்லாக் கடன் வழங்கப்பட்டு வருகின்றது. இந்தக் கடனை, கடன் பெற்ற ஓராண்டுக் காலத்திற்குப் பின் 100 சமமான, சுலபமான தவணைகளில் திருப்பிச் செலுத்துவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் கீழ் பயன்பெற்றோர் விவரமும், செலவினமும் பின் வருமாறு உள்ளது :—

| ஆண்டு | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய்) | பயன் பெற்றோர் (எண்ணிக்கை) |
|---|---|---|---|
| 1968–69 | .. | 9,250 | 16 |
| 1969–70 | .. | 24,000 | 61 |
| 1970–71 | .. | 36,500 | 103 |
| 1971–72 | .. | 29,150 | 54 |
| 1972–73 | .. | 11,750 | 22 |

### தட்டெழுத்துப் பயிற்சி

கோவை மாவட்டத்தில் ஆண்டுதோறும் 50 அரிசன மாணவர்கள் தட்டெழுத்துப் பயிற்சி பெற 10 திங்கள் காலத்திற்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

### வேலை வாய்ப்பு

அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் உள்ள பதவிகளில் 18 சதவீதம் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைச் சாதியினருக்கு ஒதுக்கப்பட்டு வருகிறது. மேற்படி ஒதுக்கீடு சரிவரக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளதா என்பதைத் தமிழ்நாடு அரசு அவ்வப்போது கண்காணித்து வருகிறது. படித்த அரிசன இளைஞர்கள் தமிழ்நாடு பொதுத் தேர்வு எழுதத் தனிப் பயிற்சிக்கு மனுச் செய்யும் வழிவகைகளை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் அவ்வப்போது எடுத்துரைத்து, நிரந்தரப் பதவிகளுக்கு நியமனமாகத் தேவையான வழிவகைகளையும் அவ்வப்போது செய்து வருகின்றது. கோவை மாவட்டத்தில் வேலை தேடித் தரும் அலுவலகத்தின் மூலம் வேலையில் நியமனம் செய்யப்பட்ட அரிசன இளைஞர்களின் விவரம் வருமாறு :—

| ஆண்டு | | | வேலையில் நியமனம் செய்யப்பட்ட அரிசன இளைஞர்கள் |
|---|---|---|---|
| 1967 | .. | .. | 394 |
| 1968 | .. | .. | 544 |
| 1969 | .. | .. | 436 |
| 1970 | .. | .. | 617 |
| 1971 | .. | .. | 709 |

### கூட்டுறவுச் சங்கங்கள்

''கூட்டுறவே நாட்டுயர்வு'' என்ற கொள்கைக் கேற்ப இம்மாவட்டத்தில் கீழ்க்கண்ட கூட்டுறவுச் சங்கங்கள் அரிசனத் தொழிலாளர் நலனுக்காகச் செயல்பட்டு வருகின்றன.

1. பவானி அரிசனத் தச்சுத் தொழிற்சாலைக் கூட்டுறவுச் சங்கம்.

2. ஈரோடு அரிசனத் தச்சுத் தொழிற்சாலைக் கூட்டுறவுச் சங்கம்.

3. ஜம்பை கிராமம் அரிசன் ஜமக்காளத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.

4. பெரிய அக்கிரகாரம் அரிசனத் தோல் பதனிடுவோர் கூட்டுறவுச் சங்கம்.

இவைகளைத் தவிர இம் மாவட்டத்தில் ஈரோட்டில் அரிசனங்களின் நலனுக்காக மோட்டார் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் இயங்கி வருகிறது.

அரிசன மக்கள் நலனுக்கு அரசு செலவிட்ட தொகை

| ஆண்டு | | மொத்தச் செலவு |
|---|---|---|
| 1967–68 | .. | 29,44,641 |
| 1968–69 | .. | 31,15,612 |
| 1969–70 | .. | 38,37,034 |
| 1970–71 | .. | 48,33,705 |
| 1971–72 | .. | 52,99,324 |
| 1972–73 | | 51,97,818 |
| (31–12–72 வரை) | | |

கோவை மாவட்ட அரிசன மக்கள் கடந்த $5\frac{3}{4}$ ஆண்டுகளில் பெரும் முன்னேற்றம் பெற்றுள்ளார்கள் என்பது வெள்ளிடை மலையாக விளங்குகிறது.

கோவை மாவட்டத்தைச் சார்ந்த அரிசன, மலைச்சாதி, விமுக்த பரம்பரை, பிற்பட்ட வகுப்பு ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்கு $5\frac{3}{4}$ ஆண்டுகளில் அரிசன நலத்துறை மூலம் இலட்சம் இலட்சமாகப் படிப்பு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

| ஆண்டு. | உதவித் தொகை (ரூபாய்) | மாணவர் (எண்ணிக்கை) |
|---|---|---|
| 1967–68 | 9,66,061 | 15,919 |
| 1968–69 | 11,18,001 | 24,829 |
| 1969–70 | 16,58,670 | 32,755 |
| 1970–71 | 24,73,532 | 35,763 |
| 1971–72 | 35,19,423 | 40,482 |
| 1972–73 | 34,21,033 | 48,509 |

கோவை மாவட்டத்தில் 1967–68-ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள மொத்த உதவித் தொகையுடன், நடப்பாண்டில் 31—12—1972 வரை வழங்கப்பட்டுள்ள உதவித் தொகையை ஒப்பிட்டுப் பார்த்தால், கடந்த 5 ஆண்டில் கோவை மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள படிப்பு உதவித் தொகை ஏறத்தாழ 4 மடங்காகப் பெருகியுள்ளது. படிப்பு உதவித் தொகை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை கடந்த 5 ஆண்டுகளில் 3 மடங்கிற்கும் மேல் உயர்ந்துள்ளது.

## ஸ்ரீ மகுடேஸ்வரசுவாமி, ஸ்ரீ வீரநாராயணப் பெருமாள் தேவஸ்தானம்

கொடுமுடி (அஞ்சல்)

ஈரோடு வட்டம். கோயம்புத்தூர் மாவட்டம்.

கோயில் விளக்கம்

கோயில்: திருப்பாண்டிக் கொடுமுடி

இடம்: கொடிமுடி

மூலவர்: ஸ்ரீ மகுட லிங்கர்

தேவியார்: ஸ்ரீ வடிவுடை நாயகி

திருமால்: ஸ்ரீ வீரநாராயணப் பெருமாள்

தேவியார்: திருநங்கை நாச்சியார்-மகாலட்சுமி

தீர்த்தம்: காவிரி

மரம்: வன்னி மரம்

முக்கிய ஸ்தலச் சிறப்பு: மும்மூர்த்தி ஸ்தலக் கோவில்

மேற்படி கோவில் காவிரிக் கரையில் அமைந்துள்ளது.

தற்பொழுது திருப்பணிகள் நடந்து வருவதால் பொது மக்கள் நன்கொடை வழங்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அறங்காவலர்கள்:

கே. ஆர். பாலசுப்ரமண்யம்
கே. எம். சண்முகம்
கே. பி. தன்ருசி
கே. எஸ். பழனியப்பன்

எம். ராமசாமி,
செயல் அலுவலர்.

# காலக் கண்ணாடி

[illegible] அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. [illegible] திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுக்களுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.

[illegible] நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் [illegible] 'அந்த வரிசை' ஆராய்ச்சியப் பெருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ?

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்.**

பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB



# நில ஒப்படைத் திட்டத்தில்

# நிகரற்ற சாதனைகள்!

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'' என்ற இலட்சியத்துடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பேரறிஞர் அண்ணா வழியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கலைஞர் அவர்கள் ஏழை, எளிய பாமரப் பாட்டாளி, சாமான்ய மக்களின் தேவையை நாளும் ஆராய்ந்து, அத்தேவைகளைக் காலங்கடத்தாது உடனுக்குடன் அவர்களுக்கு அளித்திடுவதில் கண்ணும் கருத்துமாக உள்ளார். ஏழை, எளிய பாமர, பாட்டாளி சாமான்ய மக்கள் எல்லா வசதிகளையும் பெற்று, குறையில்லாது மனநிறைவோடு வாழ்ந்து இன்புற்றிருக்கத் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி அவைகளை வேகமாகவும், திறமையாகவும் செயலாற்றி வருகிறது. ஏழைகளை வாழவைக்கும் அத் திட்டங்களில் ஒன்றே 'தீவிர நில ஒப்படைத் திட்டம்'.

கூட கோபுரங்களில், மாட மாளிகைகளில் வாழும் சீமான்களுக்கும், நிலக்கிழார்களுக்கும், காலமெல்லாம் மாடாக உழைத்துத் தங்கள் எசமானர்களின் வாழ்வை வளமாக்கிய கோவை மாவட்ட ஏழை மக்களின் மனத்திலே நிம்மதி இல்லை. ''காலமெல்லாம் கூலியாளாகவே பிழைப்பதா? நமக்கென்று கால் ஏக்கர் பூமி இருந்தால் கூட உழைத்துப் பிழைத்து உயர்வடையலாமே! நமக்குப் பூமி கிடைக்காதா, நம் வாழ்வில் நிம்மதி பிறக்காதா?'' என்று ஏங்கிய சாமான்ய மக்களின் மனநிலை அறிந்து, அவர்கள் கேட்பதற்கு முன்னதாகவே நிலம் கொடுத்திட வேண்டும் என்பதற்காகத் தமிழ்நாடு அரசு கடந்த 5 ஆண்டுகளில் பெரு முயற்சி செய்து கோவை மாவட்டத்தில் 24,627 ஏக்கர்

கோவை மாவட்டத்தில் ஆண்டு வாரியாக நில ஒப்படை செய்த விவரம்

அன்று

| ஆண்டு | நில ஒப்படை பெற்றவர்கள் (எண்ணிக்கை) | நில ஒப்படை செய்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|
| 1960–61 .. .. .. | 82 | 321·00 |
| 1961–62 .. .. .. | 32 | 112·00 |
| 1962–63 .. .. .. | 387 | 1,148·00 |
| 1963–64 .. .. .. | 499 | 1,300·00 |
| 1964–65 .. .. .. | 823 | 3,101·00 |
| 1965–66 .. .. .. | 620 | 2,100·00 |
| 1966–67 .. .. .. | 674 | 1,899·00 |
| மொத்தம் .. | 3,117 | 9,981·00 |

இன்று

| ஆண்டு | நில ஒப்படை பெற்றவர்கள் (எண்ணிக்கை) | நில ஒப்படை செய்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|
| 1967–68 .. .. .. | 374 | 855·00 |
| 1968–69 .. .. .. | 231 | 704·00 |
| 1969–70 .. .. .. | 3,407 | 10,394·00 |
| 1970–71 .. .. .. | 3,873 | 9,695·00 |
| 1971–72 .. .. .. | 1,073 | 2,113·15 |
| 1972–73 (15–1–1973 வரை) | 509 | 866·83 |
| | 9,467 | 24,627·98 |



98 சென்ட் நிலத்தை 9,467 நிலமற்ற ஏழைகளுக்குப் பட்டா செய்து கொடுத்து அவர்களின் மனத்திலே மகிழ்ச்சியும், நிம்மதியும் நிறைந்திடச் செய்துள்ளது.

1967–68-ஆம் ஆண்டிற்கு முன்பு கோவை மாவட்டத்தில், வேளாண்மைக்குத் தகுதியான மலைப்பகுதித் தரிசு நிலங்களை ஒப்படை செய்யப் பெரும் வாய்ப்பிருந்தும், நில ஒப்படை செய்யப்பட்ட அளவு மிகவும் குறைவாகவே இருந்துள்ளது. இதை உணர்ந்த தமிழ்நாடு அரசு, கோபிச்செட்டிப்பாளையம், பவானி வட்டங்களில் குத்தியாலத்தூர், பருகூர், தாளவாடி மலைப்பகுதிகளில் மொத்தம் 7,446 ஏக்கர் நிலத்தை 2,252 நிலமற்ற ஏழைகளுக்கும், அரிசன மக்களுக்கும், மலைச்சாதியினர்க்கும் 1969–70-ஆம் ஆண்டில் வழங்கியுள்ளது. அதற்குப் பிறகு, மீதியிருந்த நிலங்களையும் நில ஒப்படை செய்யத் தனி நில அளவர்களைக் கொண்டு துரிதமாக உட்பிரிவு நிலப்பதிவேடுகள் தயார் செய்து நில ஒப்படை செய்துள்ளது.

நில ஒப்படையைப் பொறுத்தவரையில் கோவை மாவட்டத்தில் 1969–70-ஆம் ஆண்டில் ஏற்பட்டுள்ள சாதனை போற்றுதற்குரியதாக விளங்குகிறது. 1969–70-ஆம் ஆண்டில் கோவை மாவட்டத்தில் 3,500 ஏக்கர் நிலங்களை ஏழை எளியவர்களுக்கு நில ஒப்படை செய்து கொடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு முதலில் இலக்கு நிர்ணயித்திருந்தது. ஆனால், அதன் பிறகு ''செய்வதைச் செம்மையாகச் செய்ய வேண்டும்; அதையும் சீக்கிரமாகச் செய்ய வேண்டும்'' என்று விரும்பும் தமிழ்நாடு அரசு, கோவை மாவட்ட ஏழை எளிய மக்களுக்கு விரைந்து நிலம் கொடுத்து உதவ வேண்டும் என்ற இலட்சியத்துடன் 1969–70-ஆம் ஆண்டின் நில ஒப்படை இலக்கை 3,000 ஏக்கரிலிருந்து 10,000 ஏக்கராவாக உயர்த்தியது. கோவை மாவட்டத்தில் நில ஒப்படை செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த அலுவலர்கள் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளின் காரணமாக 1969–70-ஆம் ஆண்டில் (1—4—1969 முதல் 31—3—70 வரை) கோவை மாவட்டத்தில் 10,394 ஏக்கர் நிலத்தை 3,407 நிலமற்ற ஏழை எளியவர்களுக்கு ஒப்படை செய்து கொடுத்தது ஏற்றமிகு சாதனையாக விளங்குகிறது.

சட்டத்தின் துணையோடு நில ஒப்படை செய்வதில் இன்றையத் தமிழ்நாடு அரசு எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியின் காரணமாக, கோவை மாவட்டத்தில் 1960–61-ஆம் ஆண்டு முதல் 1966–67-ஆம் ஆண்டு வரையான 7 ஆண்டுக் காலத்தில் நிலப்பட்டா பெற்றவர்களின் எண்ணிக்கையைப் போல் 3 மடங்கு ஏழை, எளியவர்கள், 1967–68 முதல் 15—1—1973 வரையான 5 ஆண்டுக் காலத்தில் நிலப்பட்டா பெற்றுள்ளார்கள். அது போலவே, 'அன்று' 7 ஆண்டுக் காலத்தில் நில ஒப்படை செய்த பரப்பைப் போல், 'இன்று' 5 ஆண்டில் ஏறத்தாழ 2½ மடங்குப் பரப்பு ஒப்படை செய்யப்பட்டுள்ளது என்பதும் இங்கேயுள்ள அட்டவணையிலிருந்து வெள்ளிடை மலையென விளங்குகிறது.

**கோவை மாவட்டத்தில் ஏழை எளியவர்களுக்கு வழங்கப்பட்ட நிலப்பட்டா**
**அன்றும்—இன்றும்**

| | நிலப்பட்டா பெற்றவர்கள் (எண்ணிக்கை). | ஒப்படை செய்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|
| **அன்று** | | |
| 7 ஆண்டுகளில் (1960 முதல் 1967 மார்ச் முடிய) | 3,117 | 9,981·00 |
| **இன்று** | | |
| கடந்த 5 ஆண்டுகளில் (1—4—67 முதல் 15—1—73 வரை). | 9,467 | 24,627·98 |

அன்று 7 ஆண்டுகளில் 3,117 பேர்களுக்கு 9,981 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

இன்று 5 ஆண்டுகளில் 9,467 நிலமற்ற ஏழை எளியவர்களுக்கு 24,627·98 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு நில ஒப்படை பெற்றவர்களில் அதிக அளவில் பயனடைந்தவர்கள் அரிசன மக்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

நிலப்பட்டா வழங்குவதில் கோவை மாவட்டம் தீவிரமாகச் செயலாற்றி வருவதால் நில ஒப்படை செய்வதற்குக் கிடைக்கும் நிலம் குறைந்து விட்டதால் 1969–70-ஆம் ஆண்டிற்குப் பிறகு, நில ஒப்படை செய்யப்பட்ட நிலங்களின் பரப்பும் குறைந்து கொண்டே வருகிறது. இந்த ஆண்டு (1972–73) முடிவிற்குள் நில ஒப்படை செய்வதற்குக் கிடைக்கும் நிலங்கள் முழுவதும் ஒப்படை செய்யப்பட்டு, ஏழை எளியவர்களுக்கு வழங்கப்பட்டுவிடும். பெரும்பாலும் அடுத்த ஆண்டில் (1973–74) நில ஒப்படை செய்யக் கோவை மாவட்டத்தில் நிலமே இல்லை என்று கூறும் நிலை ஏற்பட்டு விடும் என்பதில் ஐயமில்லை.

# தென்னிந்தியாவின் 'டெட்ராயிட்'

பல்வேறு வகைப் பொறியியல் தொழிற்சாலைகள் (Engineering Industries) நிறைந்துள்ளதால் சிறப்பாகக் கோவையையும், பொதுவாகக் கோவை மாவட்டத்தையும் தென் இந்தியாவின் 'டெட்ராய்ட்' என்று சிறப்பித்து கூறுகிறோம்.

கோவை மாவட்டத்தில் ஏறத்தாழ 1,300 பெரிய தொழிற்சாலைகளும், 2,300-க்கும் மேற்பட்ட சிறிய தொழிற்சாலைகளும் இருக்கின்றன.

இந்தியாவில், பம்புசெட்டுகளின் உற்பத்தியில் கோவை மாவட்டமே முதலிடம் வகிக்கிறது. இந்தியாவில் முதன்முதலில் பம்புசெட் உற்பத்தி செய்தஇடம் கோவைக்கு அருகில் உள்ள பாப்ப நாய்க்கன் பாளையமே! 1920-ஆம் ஆண்டில் பி.எஸ்.ஜி. குடும்பத்தினர் பாப்ப நாயக்கன் பாளையத்தில் ஒரு சிறு தொழிற்சாலையை ஆரம்பித்தனர். அந்தத் தொழிற்சாலையில்தான் இந்தியாவிலேயே, முதன் முதலாக ஒரு பம்பு 1824-ஆம் ஆண்டில் செய்யப்பட்டது.

இன்று இந்தியாவில் உற்பத்தியாகும் 'சென்ட்ரிபியூகல்' பம்புசெட்டுகளில் 50 சதமும், வேளாண்மை பம்புசெட்டுகளில் 30 சதமும் கோவை மாவட்டத்தில்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. பம்புசெட் மோட்டார் ஆகியவைகளின் உற்பத்தியில் ஏறத்தாழ 150 பிரிவுகள் (Units) ரூபாய் 2 கோடி மூலதனத்துடன் கோவை மாவட்டத்தில் இயங்கிவருகின்றன. இவைகளில் 20,000 தொழிலாளர்கள் ஈடுபட்டு உள்ளனர். பம்புசெட்டுகளையும், அவற்றிற்கான உறுப்புகளையும் உற்பத்தி செய்யும் பணியில் 40-க்கும் மேற்பட்ட பட்டறைகள் ஈடுபட்டுள்ளன. இத்தொழிலுக்குத் தேவையான 'ஸ்ட்ரம்பிங்' காரமடையில் உற்பத்திசெய்யப்படுகின்றன. கோவை மாவட்டத்தில் 22-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் திங்கள் தோறும் ஏறத்தாழ 1,800 மின்சார மோட்டர்களைத் தயாரிக்கின்றன.

கோவை மாவட்டத்தில் உற்பத்தியாகும் பம்புசெட்டுகளும், மோட்டர்களும், ஸ்டார்ட்டர்களும், 'ஸ்விச்'சுகளும் இந்தியாவின் பிற மாநிலங்களுக்கும், மையக் கிழக்கு நாடுகளுக்கும், இதர அயல் நாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றள.

நெசவாலைகளுக்கான இயந்திரங்களையும், உதிரி பாகங்களையும் உற்பத்தி செய்யக் கோவை மாவட்டத்தில் 16 பெரிய தொழிற்சாலைகள் உள்ளன. அவைகளில் மிகப்பெரியது 'ரைட்டர்' எனப்படும் சுவிட்சர்லாந்து நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இயங்கிவரும் 'இலட்சுமி மெஷின் ஒர்க்ஸ்' நிறுவனமாகும். நூற்பு ஆலைகளுக்குத் தேவையான அனைத்து இயந்திரங்களையும் இந்நிறுவனம் தயாரித்து வழங்குகிறது. இந்நிறுவனம் தயாரிக்கும் இயந்திரங்களை இலங்கைக்கும், எகிப்துக்கும் ஏற்றுமதி செய்வதற்கான ஆணை (Order) இந்நிறுவனத்திற்கு அண்மையில் கிடைத்துள்ளது கோவை மாவட்டத்தின் பொறியியல் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

கோவை மாவட்டத்திலிருந்து கடந்த ஆண்டில் நூற்பு ஆலைகளுக்குத் தேவையான இயந்திரங்களையும், இதர பாகங்களையும் ஏற்றுமதி செய்த வகையில், 3 கோடி ரூபாய்க்கும் மேலான அந்நியச் செலாவணியை (Foreign Exchange) கோவை மாவட்டம் இந்தியாவிற்கு ஈட்டித் தந்துள்ளது.

சிறு சிறு 'பட்டன்'கள் முதல், பெரும் பெரும் இயந்திரங்கள் வரையான எல்லாப் பொருள்களும் கோவை மாவட்டத்தில் தயாரிக்கப்பட்டு வருவதால், கோவை மாவட்டத்தைத் தென் இந்தியாவின் 'டெட்ராய்ட்' என்று கூறுவது பொருத்தமானதே!



குமார்

# விளையாட்டு அரங்கம்





நல்லதோர் விளையாட்டு அரங்கம் (Stadium) கோவை நகரில் இல்லையே என்ற குறை நெடு நாட்களாகக் கோவை மக்களின் மனத்திலே இருந்து வந்தது. அந்தக் குறையை அகற்றிட மாவட்ட விளையாட்டுக் குழு (District Sports Committee) முயன்று, அம்முயற்சியில் வெற்றியும் பெறும் நிலையில் உள்ளது.

30,000 பேர் நன்கு வசதியுடன் அமர்ந்து விளையாட்டுகளைக் கண்டு களிப்பதற்கு எற்ற அரங்கைக் கட்டி முடிக்கும் பணி, முக்கால் பகுதிக்குமேல் முடிந்த நிலையில் உள்ளது. அதன் ஒரு பகுதியையே இங்கு காணுகின்றீர்கள்.

விரைவில் கட்டிமுடிக்கப்பட்டுத் திறக்கப்படவிருக்கும் இவ்விளையாட்டு அரங்கிற்கு எறத்தாழ 30 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கின்றனர்கள். இந்த விளையாட்டு அரங்கம் சிதம்பரம் பூங்காவின் அருகில் அமைந்துள்ளது.

எறத்தாழ 50 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இடத்தைக் கோவை நகராட்சி, இவ்விளையாட்டு அரங்கம் கட்டுவதற்காக வழங்கியுள்ளதுடன், விளையாட்டு அரங்கக் கட்டடம் கட்டுவதற்கு 5 இலட்சம் ரூபாயையும் நன்கொடையாக வழங்கியுள்ளது.

கொடை கொடுக்கும் பண்பு கொண்ட கோவை மாவட்ட மக்களின் நன்கொடையைக் கொண்டு கட்டப்பட்டுவரும் இவ்விளையாட்டு அரங்கம் கோவையின் சிறப்பை மேலும் மிகுவிக்கும்!

# புகழ்பெற்ற பொள்ளாச்சிச் சந்தை

தமிழ்நாட்டில் பொள்ளாச்சிச் சந்தையே மிகவும் புகழ்பெற்று விளங்குகிறது. இங்கு தமிழ்நாட்டுப் பொருட்களும், கேரளப் பொருட்களும், கால்நடைகளும், மலைநாட்டுப் பொருட்களும் பெருமளவில் விற்கப்படுகின்றன. வாரம் இருமுறை கூடும் இந்தச் சந்தையில் விற்கப்படாத பொருட்களே இல்லை என்று கூறலாம். இந்தச் சந்தை மூலம் 1971-72-ஆம் ஆண்டில் பொள்ளாச்சி நகராட்சிக்கு ரூ. 4,92,000 வருவாய் கிடைத்துள்ளது.



# 5 ஆண்டுகளில் 4 மின் நிலையங்கள்



கோவை மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் சர்க்கார்பதி ஆழியாறு, சோலையாறு-1, சோலையாறு-2 ஆகிய 4 மின் நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. அந்நான்கு மின் நிலையங்களின் மொத்த நிறுவனத் திறன் 185 'மெகாவாட்டு'களாகும். அந்நான்கு நிலையங்களையும் அமைக்க ஏறத்தாழ, 2,636·75 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

ஆழியாறு மின்நிலையம் 60 'மெகாவாட்' மின்சக்தியை உற்பத்தி செய்யக் கூடியது. அந்த மின்நிலையம் 21-3-70 அன்று துவக்கப்பட்டு, வாணிகப் பணிகளுக்குப் பயன்படுவதற்காக 23-3-70 அன்று தமிழ்நாடு மின் இணைப்புடன் இணைக்கப்பட்டது.



சோலையாறு-1 மின் நிலையம் மொத்தம் 70 'மெகாவாட்' மின்சக்தி உற்பத்தி செய்யும் நிறுவனத்திறன் வாய்ந்தது. அந் நிலையத்தில் ஒவ்வொன்றும் 35 மெகாவாட் மின்சக்தி உற்பத்தி செய்யக்கூடிய 2 பிரிவுகள் அடங்கியுள்ளன. அந்நிலையம் 1971-ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. அதுமுதல் மின் சக்தியை உற்பத்தி செய்து வருகிறது.



சர்க்கார்பதி மின்நிலையம் 30 'மெகாவாட்' மின்சக்தி உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. அந்நிலையம் செயல்படுத்தப்பட்டு 1967-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் வாணிகப் பணிகளுக்காகப்பயன் படுத்தப்படுகின்றது.



சோலையாறு-2 மின் நிலையம் 25 மெகாவாட் மின்சக்தி உற்பத்தி செய்யும் திறன் பெற்றது. அந்த மின் நிலையம் 2-3-1971 அன்று தமிழ்நாடு மின் இணைப்புடன் இணைக்கப்பட்டது.



# வேளாண்மைத் துறையில் வியத்தகு சாதனைகள்

கோவை மாவட்ட உழவர் பெருமக்கள் மிகவும் முற்போக்கானவர்களாகவும், உழைப்பால் உயர்ந்தவர்களாகவும் விளங்குகின்றார்கள். கோவை மாவட்டத்தில் மழையளவு மிகவும் குறைவாக இருந்தாலும், கோவை மாவட்ட மக்களில் 53 சத அளவினர் வேளாண்மையில் ஈடுபட்டுத் தங்களது சலியாத உழைப்பினால், பெய்யும் மழையைக் கொண்டு பெரும் பரப்பில் மானாவாரியாகப் பயிரிட்டுப் பெரு மகசூல் எடுத்து வந்துள்ளார்கள். சில முற்போக்கு உழவர் பெருமக்கள் பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவிட்டு, மிகவும் ஆழமான கிணறுகளை வெட்டி, அதில் 2 அல்லது 3 நிலைகளில் பம்பு செட்டுகளை அமைத்து, தண்ணீரை மேலே கொண்டு வந்து சாகுபடி செய்வதைப் பார்த்த எவரும் கோவை மாவட்ட உழவர் பெருமக்களின் உழைப்பைப் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள். கோவை மாவட்டத்தில் பயிரிடப்படாத பயிர்களே கிடையாது எனலாம். இந்த அளவிற்குக் கோவை மாவட்டம் உயர்ந்துள்ளதற்கு வேளாண்மைத் துறையினரின் தீவிர நடவடிக்கைகளே மூல காரணம் என்று பல முற்போக்கு உழவர் பெருமக்கள் கூறுகின்றார்கள்.

கோவை மாவட்ட உழவர் பெருமக்களுக்கு உதவி செய்து உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் கோவை மாவட்டம் கோவை, கோபி, பொள்ளாச்சி, ஈரோடு ஆகிய 4 வேளாண்மை மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும் ஒரு மாவட்ட வேளாண்மை அலுவலரின் கீழ் இயங்கி வருகிறது. கோவையில் ஒரு துணை வேளாண்மை இயக்குநர் அலுவலகம் உள்ளது. கோவை மாவட்டத்தில் 41 துணை வேளாண்மை அலுவலர்கள் வளர்ச்சி, மற்றும் பல வேளாண்மைத்துறை அலுவலர்கள், ஊர்நல ஊழியர்கள் ஆகியோர் உழவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, உழவர்களின் உயர்வுக்கும், வேளாண்மைப் பொருள்களின் உற்பத்திப் பெருக்கத்திற்கும் உதவி வருகின்றார்கள். இவர்களது சலியாத உழைப்பினால் கோவை மாவட்டத்தில், கடந்த 5 ஆண்டுகளில் குறிப்பிடத் தகுந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளதுடன், பல சாதனைகளும் ஏற்பட்டுள்ளன. அவைகளில் ஒரு சிலவற்றைக் கோவை மாவட்ட உழவர் பெருமக்களுக்குக் காணிக்கையாகக் கீழே படைத்துள்ளோம்.

## தீவிர வேளாண்மைப் பகுதித் திட்டம்

உணவு தானியப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய சிறந்த முறைகள் என்று பல்வேறு சோதனைகளுக்குப் பிறகு மெய்ப்பிக்கப்பட்ட எல்லாவிதமான நவீன சாகுபடி முறைகளையும் ஒருங்கே பயன்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு 'தீவிர வேளாண்மைப் பகுதித் திட்டம்' (Intensive Agricultural Area Programme) கோவை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பிடத்தகுந்த முறையில் உற்பத்தித் திறனைப் பெருக்குவதன் மூலமாக, இத்திட்டம் நாளடைவில், கிராமியப் பொருளாதாரத்தை வளப்படுத்தவும் பெருக்கிடவும், பெருந்துணை புரியும்.

இத்திட்டத்தின் கீழ், இறைவை நெல், இறைவைச் சோளம், இறைவை ராகி, இறைவைப் பருத்தி, இறைவை நிலக்கடலை ஆகிய பயிர்கள் பயிரிடப்படுகின்றன. கோவை மாவட்டத்தில் ஏனைய மாவட்டங்களை விட அதிகமான பரப்பளவு உறுதியான பாசன வசதி உள்ளதாலும், முற்போக்கு உழவர் பெருமக்கள் நிறைந்துள்ளதாலும், வேளாண்மைத் துறையினரின் இடைவிடா முயற்சிகளாலும் கடந்த 5 ஆண்டுகளில் தீவிர வேளாண்மைப் பகுதித் திட்டத்தின் கீழ், பின் கண்ட பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

| ஆண்டு | சாகுபடி செய்யப்பட்ட பரப்பு (ஏக்கர்) |
|---|---|
| 1967–68 | 3,80,633 |
| 1968–69 | 4,62,373 |
| 1969–70 | 5,13,200 |
| 1970–71 | 5,15,000 |
| 1971–72 | 4,71,827 |

### உயர் விளைச்சல் தரும் வகைகள் திட்டம்

வளர்ந்து வரும் மக்கள் தொகையின் உணவுத் தேவையை ஈடுசெய்ய வேண்டும் என்ற இலட்சியத்துடன் உயர் விளைச்சல் தரும் வகைகள் திட்டம் கோவை மாவட்டத்தில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. குறுகிய காலத்தில் பெரும் மகசூல் தரக்கூடிய உயர் விளைச்சல் தரும் வகைகள் இத்திட்டத்தின் கீழ், சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

கோவை மாவட்டத்தில் 1966–67-ஆம் ஆண்டில் உயர் விளைச்சல் வகைகள் திட்டத்தின் கீழ் 47,822 ஏக்கரில் மட்டுமே உயர் விளைச்சல் நெல் ரகங்கள் பயிரிடப்பட்டிருந்தன. இன்றையத் தமிழ்நாடு அரசு உயர் விளைச்சல் வகைகள் திட்டத்தில் பேரார்வம் காட்டியதால், வேளாண்மைத் துறையினர் எடுத்துக் கொண்ட தீவிர முயற்சிகளின் காரணமாக, கோவை மாவட்டத்தில் உயர் விளைச்சல் நெல் ரகங்களின் சாகுபடிப் பரப்பு பின் கண்டவாறு ஆண்டிற்காண்டு அதிகமாகி வருகிறது.

#### உயர் விளைச்சல் நெல் ரகங்கள் பயிராகிய பரப்பு

| ஆண்டு | பரப்பு (ஏக்கர்) |
|---|---|
| 1967–68 | 52,491 |
| 1968–69 | 1,12,260 |
| 1969–70 | 1,67,051 |
| 1970–71 | 1,60,607 |
| 1971–72 | 2,02,561 |

உயர் விளச்சல் நெல் ரகங்களின் பரப்பு கடந்த 5 ஆண்டுகளில் சற்றேறக் குறைய 4 மடங்கு அதிகமாகியுள்ளது. அது போலவே ஒட்டு வீரியக் கம்பு சாகுபடி பரப்பும் ஆண்டிற்காண்டு கூடி வருவதுடன் கடந்த 5 ஆண்டுகளில் 9 மடங்காகப் பெருகியுள்ளது என்பதைப் பின் கண்ட புள்ளி விவரங்கள் தெளிவாக்குகின்றன.

#### ஒட்டு வீரியக் கம்பு பயிராகிய பரப்பு

| ஆண்டு | ஏக்கர் |
|---|---|
| 1966–67 | 5,837 |
| 1967–68 | 17,858 |
| 1968–69 | 21,668 |
| 1969–70 | 36,021 |
| 1970–71 | 48,356 |
| 1971–72 | 53,864 |

ஒட்டு வீரிய மக்காச் சோளச் சாகுபடியில் தமிழ் நாட்டில் மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் கோவை மாவட்டம் ஒரு மாபெரும் சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

1966–67-ஆம் ஆண்டில் 30 ஏக்கராக இருந்த ஒட்டு வீரிய மக்காச் சோளச் சாகுபடிப் பரப்பு ஆண்டுதோறும் பல மடங்காகப் பெருகி, 1971–72 ஆம் ஆண்டில் 23,106 ஏக்கராக உயர்ந்துள்ளது. ஒட்டு வீரிய மக்காச் சோளப் பரப்பு 1966–67 ஆம் ஆண்டினைக் காட்டிலும் கடந்த 5 ஆண்டுகளில் கோவை மாவட்டத்தில் 770 மடங்கிற்கும் மேல் பெருகியுள்ளது என்பது பின் கண்ட புள்ளி விவரங்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

#### ஒட்டு வீரிய மக்காச் சோளச் சாகுபடி பரப்பு

| ஆண்டு | ஏக்கர் |
|---|---|
| 1966–67 | 30 |
| 1967–68 | 640 |
| 1968–69 | 13,680 |
| 1969–70 | 19,296 |
| 1970–71 | 20,820 |
| 1971–72 | 23,106 |

ஊட்டச் சத்து மிகுந்த உணவை மக்களுக்கும், சத்துள்ள தீவனத்தைக் கால் நடைகளுக்கும் அளிக்கவல்ல ஒட்டு வீரிய மக்காச் சோளச் சாகுபடியில் கோவை மாவட்ட உழவர் பெருமக்கள் பேரார்வம் காட்டியதற்கு வேளாண்மைத் துறையினரின் இடைவிடா முயற்சியே காரணம் என்றால் மிகையல்ல!

#### தரமான விதைகளை வழங்கியது

கோவை மாவட்டத்தில் கண்ணம்பாளையம், பாப்பான்குளம், பெங்கலூர், பவானி, பவானிசாகர், சத்தியமங்கம் ஆகிய 6 இடங்களில் உள்ள மாநில விதைப் பண்ணைகளில் முதல் நிலை நெல், சிறு தானிய விதைகளை உற்பத்தி செய்து, உழவர் பெருமக்களுக்கு வேளாண்மைத் துறை வழங்கி வருகிறது. கடந்த ஆண்டு கீழ்க்கண்ட அளவு முதல் நிலை விதைகளை வேளாண்மைத் துறை கோவை மாவட்டத்தில் வழங்கியுள்ளது.

| | |
|---|---|
| முதல் நிலை நெல் விதைகள் .. | 213 மெட்ரிக் டன். |
| முதல் நிலை சிறு தானிய விதைகள் | 49 மெட்ரிக் டன். |

#### பயிர்களைக் காத்துப் பசிப்பிணி அகற்றியது

வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பதற்காக உழவர் பெருமக்களும், வேளாண்மைத் துறையினரும் உழைத்து வருகின்றனர். ஆனால் அவர்களின் உழைப்பையும் உழைப்பின் பலனையும் கெடுக்கப் பொல்லாத பூச்சிகளும், நோய்களும் தோன்றிப் பயிர்களைத் தாக்கிச் சேதம் விளைவிக்கின்றன. அவைகளைக் கட்டுப்படுத்தி, அதிக மகசூல் பெறுவதற்காகத் தகுந்த பூச்சிப் பூஞ்சாள மருந்துகளையும், தெளிப்பான்களையும், தூவான்களையும் வேளாண்மைத் துறை வழங்கி வருகிறது.

கோவை மாவட்டத்தில் பயிர்ப் பாதுகாப்புக்காக வேளாண்மைத் துறை கீழ்க் கண்ட அளவு ரூபாய்க்கான மருந்துகளையும், கையால் இயக்கும் தெளிப்பான்களையும், தூவான்களையும் வேளாண்மைத் துறை மூலம் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

#### வழங்கப்பட்ட மருந்தின் மதிப்பு

| ஆண்டு | இலட்சம் (ரூபாய்) |
|---|---|
| 1967–68 | 75.17 |
| 1968–69 | 43.29 |
| 1969–70 | 63.79 |
| 1970–71 | 80.83 |
| 1971–72 | 115.77 |

சலுகை விலையில் வழங்கப்பட்ட தெளிப்பான்கள்

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1967–68 .. .. .. | 1,620 |
| 1968–69 .. .. .. | 1,449 |
| 1969–70 .. .. .. | 1,650 |
| 1970–71 .. .. .. | 1,457 |
| 1971–72 .. .. .. | 1,209 |

சலுகை விலையில் வழங்கப்பட்ட தெளிப்பான்கள்

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1967–68 .. .. .. | 537 |
| 1968–69 .. .. .. | 203 |
| 1969–70 .. .. .. | 376 |
| 1970–71 .. .. .. | 282 |
| 1971–72 .. .. .. | 254 |

காய்கறிகள் அபிவிருத்தித் திட்டம்

கோவை மாவட்ட மக்களுக்குச் சத்துள்ள காய்கறிகள் கிடைத்திடச் செய்ய வேண்டும் என்ற நோக்குடன், காய்கறிகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், வேளாண்மைத் துறை காய்கறிச் சாகுபடிக்காக ஏக்கருக்கு ரூபாய் 120 வீதம் கடன் கொடுத்து உதவுவதுடன், தரமான காய் கறி விதைகளையும் வழங்கி வருகிறது. இத் திட்டத்தின் கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பின்வருமாறு அமைந்துள்ளது.

## 9 திங்களில் 11 இலட்சம்

சேரன் போக்குவரத்துக் கழகம் 1—3—1972 அன்று 80 வழித்தடப் பேருந்துகளையும், 29 உதவி பேருந்துகளையும் சேர்த்து மொத்தம் 109 பேருந்து களுடன் துவங்கியது. இப்போக்குவரத்துக் கழகம் 1—3—1972 முதல் 31—3—1972 வரையான காலத்தில் 55 வழித்தடங்கள் பேருந்துகளை விட்டு, பொது மக்களுக்குச் சேவை செய்துள்ளதுடன், அந்த ஒரு திங்களில் மட்டும் 1·29 இலட்சம் ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது.

தற்பொழுது சேரன் போக்குவரத்துக் கழகம் 104 வழித்தடப் பேருந்துகளைக் கொண்டுள்ளது. இக் கழகத்தின் பேருந்துகள் நாளொன்றுக்கு சராசரி யாக 22,000 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதித்து வருகின்றன. சில நாட்களில் இதன் வருவாய் 27,000 ரூபாய்க்கு மேலும் அதிகமாகிறது.

நடப்பாண்டில் முதல் ஒன்பது மாதங்களில் சேரன் போக்குவரத்துக் கழகம் 11 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது. தமிழ்நாடு அரசின் நாட்டுடைமையாக்கும் திட்டங்கள் நல்ல முறையில் செயல்படுகின்றன என்பதற்குச் சேரன் போக்கு வரத்துக் கழகம் ஈட்டியுள்ள இலாபமே நல்லதோர் சான்றாக விளங்குகிறது.

அண்மையில் இக்கழகம் மாணவர்களுக்குக் குறைந்த கட்டணத்தில் பயணம் செய்யும் சலுகையை வழங்கியுள்ளது.

காய்கறிச் சாகுபடிக்குக் கொடுத்த கடன் தொகை

| ஆண்டு | இலட்சம் (ரூபாய்) |
|---|---|
| 1967–68 .. .. .. | 1.82 |
| 1968–69 .. .. .. | 1.79 |
| 1969–70 .. .. .. | 1.80 |
| 1970–71 .. .. .. | 1.80 |
| 1971–72 .. .. .. | 1.74 |

வழங்கப்பட்ட காய்கறி விதைகள்

| ஆண்டு | கிலோ கிராம் |
|---|---|
| 1967–68 .. .. .. | 4,883 |
| 1968–69 .. .. .. | 4,509 |
| 1969–70 .. .. .. | 6,496 |
| 1970–71 .. .. .. | 5,848 |
| 1971–72 .. .. .. | 5,051 |

பழ அபிவிருத்தித் திட்டம்

கோவை மாவட்டத்தில் பழங்களின் உற் பத்தியைப் பெருக்குவதற்குப் பெரும் வாய்ப் புள்ளதால், பழ அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், திராட்சைப் பழத்தோட்டம் ஏற்படுத்த ஏக் கருக்கு ரூபாய் 1,500 வீதமும், மா, எலுமிச்சை, ஆரஞ்சு போன்ற இதர பழத் தோட்டம் அமைக்க ஏக்கருக்கு ரூபாய் 300 வீதமும் வேளாண்மைத் துறை நீண்ட காலக்கடன் கொடுத்து வருகிறது. இவ்வகையில் கீழ்க்கண்ட வாறு கோவை மாவட்டத்தில் கடன் கொடுக்கப் பட்டுள்ளது.

திராட்சைப் பழத் தோட்டம் அமைக்கக் கொடுத்துள்ள கடன்

| ஆண்டு | ரூபாய் |
|---|---|
| 1968–69 .. .. .. | 57,600 |
| 1969–70 .. .. .. | 52,500 |
| 1970–71 .. .. .. | 27,000 |
| 1971–72 .. .. .. | 42,750 |

இதர பழத்தோட்டம் அமைக்கக் கொடுத்துள்ள கடன்

| ஆண்டு | ரூபாய் |
|---|---|
| 1968–69 .. .. .. | 21,300 |
| 1969–70 .. .. .. | 15,000 |
| 1970–71 .. .. .. | 18,000 |
| 1971–72 .. .. .. | 21,000 |

இவ்வாறு பல்வேறு வகையில், கோவை மாவட்ட உழவர் பெருமக்களின் வாழ்வை வளப் படுத்தவும், வேளாண்மை உற்பத்தியை விரை வாகப் பெருக்கிடவும் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை பாடுபட்டு வருவதுடன் உழவர் பெருமக்களின் உற்ற துணையாகவும் விளங்கி வருகிறது.

# அருள்மிகு பட்டிப்பெருமான் திருக்கோயில்

## பேரூர்—கோவை-10

இது தொன்மையும் பழமையும் வாய்ந்த சிவாலயம். இங்கு எழுந்தருளி யுள்ள இறைவன் சுயம்பு மூர்த்தி. இவ்வாலயத்திலுள்ள கனகசபையில் கோமுனி, பட்டிமுனி இருவருக்காக ஆடிய பாதத்தோடு விளங்கும் நடராஜர் வடிவம் மிக மிக அழகானது. நடராஜப் பெருமானை வலம் வரும் வண்ணம் அமையப் பெற் றுள்ள தலம் இது ஒன்றே என்று சொல்லலாம். இத் தலம் மேலைச் சிதம்பரம் எனவும் வழங்கப்படுகிறது. கனகசபை, மதுரை திருமலை நாயக்கர் சகோதரரான அளகாத்திரி நாயக்கரால் (1625—1659) கட்டப்பட்டது. இக்கனகசபையில் சிற்பக்கலை வேலைப்பாடுகள் மிளிர்கின்றன.

புராதனமான பட்டிப்பெருமான் கோவிலின் கர்பக்கிருகத்தைக் கரிகால் சோழன் அமைத்ததாகச் சொல்லப்படுகிறது என்றும் அழிவற்ற இறவாப்பனை யும், பிறப்பே இல்லாத பிற வாப்புளியும், பைத்தியத்தை நீக்கும் புண்ணிய தீர்த்தம் சுரக்கும் பிரம்ம தீர்த்தக் கிணறும் இத் தலத்தின் புனிதத்தை இன்றும் எடுத்துக் கூறுபவை. அப்பரும் சுந்தரரும் இத் தலத்தைப் புகழ்ந்து பாடியுள்ளனர். இங்குள்ள முருகப்பெருமான் தண்டாயுதபாணி என அழைக்கப்படுகிறார். மேற்கு நோக்கி நின்று அருள் புரிகின்றார். அருணகிரிநாதர் இத் தண்டாயுதபாணிப் பெருமானை இரு திருப்புகழ் பாடல்களால் பாடியுள்ளார். கடந்த 5 வருடங்களாக இச் சன்னதி திருப்பணி செய்யப்பெற்று கடந்த (12—7—1971) அன்று குட முழுக்கு விழா சிறப்புற நடைபெற்றது.

ஆரூ ரத்தா! ஐயாற் றமுதே! அளப்பூர் அம்மானே!
காரூர் பொழில்கள் புடைசூழ் புறவிற் கருகா வூரானே!
பேரூர் உறைவாய்ப் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே!
பாரூர் பலரும் பரவப் படுவாய் பாரூர் அம்மானே!

(சுந்தர மூர்த்திகள் தேவாரம்— ஊர்த்தொகை.)

தீராப் பிணிதீர சிவாத்துமஞான
ஊராட் சியதான ஓர்வாக் கருள்வாயே
பாரோர்க் கிறைசேயே பாலாக் கிரிராச
பேராற் பெரியோனே பேரூர் பெருமானே

(திருப்புகழ்.)

ஆலயத்திற்கு வரும் சேவார்த்திகளின் சௌகரியத்தை முன்னிட்டு ஆற்றங் கரையில் மேல்நிலைத் தொட்டிகட்டுதல், அதன் பக்கத்தில் குளியல் அறைகள் பத்து கட்டுதல், திருக்குளம் பழுதுபார்த்தல், ஆலயப் பிரகாரத்தில் கருங்கல் தளவரிசை அமைத்தல், ஆகிய திருப்பணிகள் சுமார் $1\frac{1}{2}$ இலட்ச ரூபாய் செலவில் விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

அன்பர்கள் வந்து தரிசித்து வணங்கிப் பச்சைநாயகி சமேதப் பட்டிப்பெருமான் தண்டாயுதபாணிப் பெருமானின் திருவருளைப் பெறுமாறு வேண்டுவ துடன் ஆலயத்திருப்பணிக்குத் தாராளமாக நிதியளிக்குமாறும் வேண்டுகிறோம்.

என். ஆர். லிங்கமராஜா எம்.ஏ.,
செயல் அலுவலர்.

எம். ஆர். சிவசாமி,
தலைவர் (அறங்காவல்குழு).

கெ. சிவசாமி
ஆர். கருப்புசாமி
கெ. பி. ஜெகன்னாதன்
ந. இராசு
(அறங்காவலர்கள்)

**கொ**ங்கு நாட்டின் குக்கிராமங்களுக்கும் சாலை அமைத்துப் போக்குவரத்துக்கு உதவி செய்து, உழவிலும் தொழிலிலும் உயர்ந்து விளங்கும் கோவை மாவட்டத்தில் வாணிகம் பெருகக் கடந்த $5\frac{3}{4}$ ஆண்டுகளில் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறை பெரிதும் உதவியுள்ளது. கோவை மாவட்டத்தில் சாலைகள் அமைக்கவும், பாலங்கள் கட்டவும், அவைகளை நன்கு பராமரித்து வரவும் வேண்டி, கோவை மாவட்டம் கோயம் புத்தூர் கோட்டம், ஈரோடு கோட்டம் என 2 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கோட்டமும் ஒரு கோட்டப் பொறியாளர் தலைமையில் நடைபெறும். பணிகளை மேற்பார்வையிடக்கோவையில் ஒரு மேற்பார்வைப் பொறியாளரும் உள்ளார்.

கோவை மாவட்டத்தில் கடந்த $5\frac{3}{4}$ ஆண்டுகளில் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொதுப்பணித்துறை யின்கீழ், பின் கண்டவாறு 5,31,91,000 ரூபாய் மதிப்புள்ள வேலைகள் நடைபெற்றுள்ளன.

**1967 முதல் 1972 வரை நடைபெற்றுள்ள பணிகளின் செலவு**

| | | ரூபாய் |
|---|---|---|
| மூலதன முதலீட்டுப் பணிகள் | .. | 1,48,40,000 |
| பராமரிப்புப் பணிகள் .. | .. | 3,83,50,000 |
| மொத்தம் | .. | 5,31,90,000 |

**கோவை மாவட்டத்தில் 1967 முதல் 1972 வரை முடிக்கப்பட்டுள்ள முக்கிய வேலைகள்**

| | மதிப்பீடு (இலவசம் ரூபாய்) |
|---|---|
| உடுமலைப் பேட்டை—திருப்பூர் சாலையில் மைல் 38/4-ல் நொய்யல் பாலத்தை அகலப்படுத்துதல். | 5·75 |
| உடுமலைப் பேட்டை— குமாரலிங்கம் சாலையில் மைல் 9/8-ல் அமராவதியின் குறுக்கே கட்டப் பட்ட கொழுமம் பாலம். | 6·25 |
| கோவை காந்திபுரத்தில் சங்கனூர் பள்ளத்தில் அமைக்கப்பட்டுள்ள பாலம். | 1·92 |
| கோவை — பொள்ளாச்சி சாலையில் மைல் 17/4-ல் உள்ள பாலம். | 2·09 |
| தாராபுரம்—அலங்கியம் சாலையில் அமராவதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம். | 4·10 |
| ஈரோடு — சத்தி சாலையில் 18/1 — 36/5-ல் உள்ள பாலங்கள். | 1·65 |
| உடுமலைப் பேட்டை — திருப்பூர் சாலையை அகலப் படுத்துதல். | 2·54 |
| அந்தியூர் — அம்மாப் பேட்டைச் சாலையில் மைல் 5/6-ல் உள்ள பாலம். | 2·60 |
| இதரப் பால வேலைகள் (12) | 25·83 |
| ஒன்றியக் கட்டடங்கள் (2) | 1·90 |
| அனுப்பர் பாளையம்—ஆத்துப் பாளையம் சாலையில் மைல் 0/7-ல் நல்லாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தாம் போகி (தரைப்பாலம்). | 1·37 |
| சேலம் — கோவை சாலையில் கல் 308/1-ல் தெக்கலூர் அரு[illegible] பாலம் கட்டுதல். | 2·40 |
| மொத்தம் .. | 58·40 |

கோவை மாவட்டத்தில் கீழ்க்கண்ட 29 முக்கியப் பணிகள் ரூபாய் 288·91 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## சாலைகள் அமைத்தோம் பாலங்கள் கட்டினோம்

**தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்ட வேலைகள்**

| | மதிப்பீடு (இலட்சம் ரூபாய்) |
|---|---|
| சேலம் — கோவை சாலையை (தேசிய நெடுஞ்சாலை 47) மேம்படுத்துதல். | 144·00 |
| கோவையில் அவினாசி ரோடு மேம்பாலம். | 44·00 |
| கோவை நகரிலிருந்து விமான நிலையம் வரை சாலையை அகலப்படுத்துதல். | 5·00 |
| கோவை — திருச்சி சாலையை ஒண்டிப்புதூர் வரை அகலப் படுத்துதல். | 5·00 |
| தாளவாடி — எரகனஹள்ளி சாலை மைல் 0/1 முதல் 8/0 வரை மேம்படுத்துதல். | 10·50 |
| கொள்ளேகால் — செல்லம் பாளையம் மலைச்சாலையை அபிவிருத்தி செய்து தார் சாலையாக்குதல். | 11·00 |
| கணியூர் — கடத்தூர் சாலை மைல் 1/1-ல் அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல். | 9·90 |
| வால்பாறையில் வாராந்திரச் சந்தையைப் புதுப்பித்தல். | 18·00 |

| | |
|---|---|
| திம்பம் — தலமலைச் சாலையை அபிவிருத்தி செய்தல். | 8·50 |
| அவல்பூந்துறை — பண்ணைக் கிணறு சாலையில் பாலம் அமைத்தல். | 4·20 |
| ஆனைமலை உப்பாறின் குறுக்கே இரண்டு பாலங்கள். | 3·32 |
| கோவை புறச்சாலை அமைக்க நில உரிமை பெறல். | 50·00 |
| திருப்பூர் ஜம்மனை காந்தி பாலம் அகலப்படுத்துதல். | 3·30 |
| திருச்சி — கோயம்புத்தூர் சாலையில் கி.மீ. 285·60 முதல் 305·8 வரை அகலப்படுத்துதல். | 7·70 |
| திருச்சி — கோயம்புத்தூர் சாலையில் கி.மீ. 252·4 முதல் 285·0 வரை அலகப் படுத்துதல். | 4·40 |
| சத்தி — கொத்தமங்கலம் சாலையில் மைல் 1/5, 6/1-ல் பாலங்கள் கட்டுதல். | 3·30 |
| ஈரோடு — கோயம்புத்தூர் சாலை, ஈரோடு — காங்கேயம் சாலைகளை இணைக்கும் மாற்றுப் பாதை அமைத்தல். | 3·00 |
| கோவை நகர்ப்புற மாற்றுச் சாலையை வாலாங்குளம் ஏரிக்கரை வழியாக அமைத்தல். | 2·00 |
| பட்டணம் புதூர் சாலையும் பாலங்களும். | 1·75 |
| கரட்டடிப் பாளையம் — பங்களாப்புதூர் சாலையை மேம்படுத்துதல். | 1·54 |
| அந்தியூர் — அத்தாணிச் சாலை மைல் 0/3-ல் உள்ள தவிட்டுப் பள்ளம் குறுக்கே பாலம் அமைத்தல். | 1·75 |
| சென்னிமலை — ஊத்துக்குளி சாலையிலிருந்து பொன்னமா குட்டை செல்லும்பாதையை மேம்படுத்துதல். | 2·00 |
| இதரப் பால வேலைகள் (1) .. | 0·74 |
| ஊராட்சி ஒன்றியக் கட்டடங்கள் (2) | 2·20 |
| சாவடிப்புதூர் சாலையில் மைல் 0/2-ல் பாலம் கட்டுதல். | 1·29 |
| மதுக்கரை—செட்டிப்பாளையம் சாலையில் மைல் 7/2-ல் ஒரு பாலம் கட்டுதல். | 1·02 |
| மதுக்கரை—செட்டிப்பாளையம் சாலையில் மைல் 5/1-ல் பாலம் கட்டுதல். | 1·57 |
| எட்டிமடை ரயில்வே பீடர் சாலையில் மைல் 0/2-ல் பாலம் கட்டுதல். | 1·83 |
| தாளவாடி — ஏரகனஹள்ளி சாலையில் மைல் 0/1-ல் மேம்பாலம் அமைத்தல். | 4·00 |
| மொத்தம் | 288·91 |

### செய்துள்ள சாதனை

கோவைக் கோட்டத்தில் கடந்த $5\frac{3}{4}$ ஆண்டுகளில் நடைபெற்றுள்ள வேலைகள் திட்டவாரியாகவும், ஆண்டு வாரியாகவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

சிறு பாலங்களை அகலப்படுத்தியும், புதுப்பித்தும் கட்டிய விவரம்.

| வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூபாய்) |
|---|---|
| **1967–68-ஆம் ஆண்டு** | |
| திருப்பூர்—மேட்டுப் பாளையம் சாலையில் மைல் 32/5-ல் கண்வாயுடன் கூடிய தரைப் பாலம் (Cuseway) கட்டியது. | 11,500 |
| மேற்கூறிய சாலையில் மைல் 15/3-ல் மேற்கண்ட வாறு தரைப்பாலம் கட்டியது. | 9,500 |
| சென்னை — கள்ளிக் கோட்டைச்சாலையில் மைல் 296/3-ல் உள்ள சிறு பாலத்தைப் புதுப்பித்துக் கட்டியது. | 13,700 |
| சென்னை — கள்ளிக்கோட்டை சாலையில் மைல் 33/1-ல் உள்ள சிறு பாலத்தை அகலப்படுத்தியது. | 16,000 |
| **1968– 69-ஆம் ஆண்டு** | |
| சென்னை — கள்ளிக்கோட்டை சாலையில் மைல் 298/4-ல் உள்ள சிறு பாலத்தைப் புதுப்பித்துக் கட்டியது. | 11,000 |
| சென்னை — கள்ளிக்கோட்டை சாலையில் 16 சிறு பாலங்களை அகலப்படுத்திக் கட்டியது. | 1,43,000 |
| **1969 -70-ஆம் ஆண்டு** | |
| சென்னை—கள்ளிக்கோட்டைச் சாலையில் 3 சிறு பாலங்களை அகலப்படுத்திக் கட்டியது | 40,000 |
| கோயம்புத்தூர் — திண்டுக்கல் சாலையில் மைல் 5/6, மைல் 32/3-ல் உள்ள 2 சிறு பாலங்களையும் முறையே அகலப்படுத்தியும், வலுவூட்டியும் கட்டியது. | 27,000 |

## புதிதாகத் தார் போடப்பட்ட சாலைகள்:

### 1969—70-ஆம் ஆண்டு

| | மதிப்பீடு (ரூபாய்) |
|---|---|
| செல்லக்கரச்சல்-சுல்தான் பேட்டை தண்ணீர்ப்பந்தல் சாலை. | 10,500 |
| நெகமம்-எரிசனம் பட்டி சாலை மூன்று பகுதிகள் | 40,800 |
| அன்னூர்-உதிமலைச்சாலையில் 2 பகுதிகள். | 36,000 |
| அன்னூர்-சிறுமுகைச்சாலையில் 2 பகுதிகள். | 27,500 |
| செய்யூர்-குன்னத்தூர் சாலையில் 5 பகுதிகள். | 63,800 |
| காமநாய்க்கன்பாளையம்-அன்னூர் சாலையில் 6 பகுதிகள். | 1,28,000 |
| பாப்பம்பட்டி சாலை .. | 51,000 |
| சூலூர்-சோமனூர் சாலை .. | 23,500 |
| பல்லடம்-மங்கலம் சாலை .. | 42,700 |

### 1970—71-ஆம் ஆண்டு

| | |
|---|---|
| உடுமலைப்பேட்டை-இணையா முத்தூர் சாலையில் 2 பகுதிகள். | 46,300 |
| கோமங்கலம்-எரிசனம்பட்டி சாலை. | 34,000 |
| உடுமலைப்பேட்டை-செஞ்சேரி மலைச்சாலையில் 5 பகுதிகள். | 1,41,500 |
| பெரியப்பட்டி-நெகமம் சாலையில் 6 பகுதிகள். | 90,200 |
| துங்கவி-புலவடிச்சாலையில் 5 பகுதிகள். | 1,19,000 |
| உடுமலைப் பேட்டை-திருப்பூர் சாலையில் இருந்து புலவடிக்குச் செல்லும் சாலையில் 2 பகுதிகள். | 36,500 |
| பொள்ளாச்சி-பல்லடம் சாலையில் இருந்து மலையாண்டிப் பாளையம் செல்லும் சாலையில் 3 பகுதிகள். | 40,200 |
| பெரியப்பட்டி-நெகமம் சாலையில் 3 பகுதிகள். | 43,900 |
| கட்டாம்பட்டி-கொடுவை சாலையில் 2 பகுதிகள். | 28,600 |
| நெகமம்-எரிசனப்பட்டி சாலையில் 4 பகுதிகள். | 60,100 |
| திப்பம்பட்டி-செல்லம்பாளையம் சாலையில் 4 பகுதிகள். | 73,100 |
| சமத்துர்-தேவனூர் புதூர் சாலை. | 15,000 |

## கருங்கல் ஜல்லி பரப்பி மேம்படுத்திய சாலைகள்

இத்திட்டத்தின் கீழ்க் கடந்த 5½ ஆண்டுகளில் பின்கண்டவாறு 162 பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

| ஆண்டு | பணிகள் |
|---|---|
| 1967—68 .. .. .. | 7 |
| 1968—69 .. .. .. | 26 |
| 1969—70 .. .. .. | 55 |
| 1970—71 .. .. .. | 51 |
| 1971-62 .. .. | 23 |
| மொத்தம் .. | 162 |

## கட்டப்பட்டுள்ள முக்கியக் கட்டடங்கள்

### 1967—68-ஆம் ஆண்டு

| | செலவு (ரூபாய்) |
|---|---|
| சுல்தான்பேட்டை ஊராட்சி அலுவலகம். | 70,000 |
| ஜல்லிப்பட்டியில் பள்ளிக்கூடம் | 26,254 |
| உடுமலைப்பேட்டையில் பள்ளிக் கூடம். | 20,000 |
| மடத்துக்குளம் உயர்நிலைப் பள்ளியில் கூடுதல் கட்டடம். | 22,5000 |

### 1968—69-ஆம் ஆண்டு

| | |
|---|---|
| கோவை இராமநாதபுரத்தில் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் கூடுதல் இடவசதிக்கான கட்டடம். | 20,400 |

### 1969—70-ஆம் ஆண்டு

| | |
|---|---|
| பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகம். | 80,000 |

### 1970—71-ஆம் ஆண்டு

| | |
|---|---|
| பேரூர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம். | 1,10,000 |

இவ்வாறு கோவைக் கோட்டத்தில் நெடுஞ் சாலை-கிராமப் பணித்துறை சிறப்பாகப் பணியாற்றி வருகிறது.







# கோக்காத கோவை





உதடு திறக்கின்ற ஒளிவட்ட மலர்களிலே
மதுவசூல் நடத்துகின்ற வண்டுகளின் பாடலைக்
காற்று ரதமேற்றிக் கண்ணியப் படுத்தியே
போற்றும் 'குறிஞ்சிப் புடைப்புப்' புடைசூழும்
கொங்குமண் டலத்தின் குளிர்நெற்றிக் குங்குமமாய்த்
தங்குமெங்கள் இளகல் வெயில்நகரம் தான்கோவை!
'பாடாத தேவாரம், படுப்பதற் கெடுத்தெவரும்
போடாத திண்டுக்கல் . . . புகுந்து திருடர்கள்
தட்டிக்கொண் டோடாத பொன்மலை தன்கொடுக்கால்
கொட்டாத தேனீப் போலெவரும் கோக்காத
கோவை! கொடியிலே பழுக்காத கோவை! எங்
கோ'வை! என் றெண்ணி இருக்காமல் 'எங்கோவை!
எங்கோவை, என்றிதயத் தேற்றிவைக்கும் இன்கோவை!
செங்கோவை! 'ஏழையரின் ஊட்டி'யெனும் நற்கோவை
'ஏனுங்க! ஆமாங்க,' எனும்கொங்கு வார்த்தைகளைத்
தேனுங்க என்போமா திதிப்புங்க என்போமா?
சுடும்போது சூரியர்கள் நெஞ்சம் குளிர்ந்து
விடும்போது வெண்ணிலவு விழுதுகளே மக்கள்!
எதார்த்தத்தால் தூய்மையுள்ள இதயங்கள் வஞ்சகப்
பதார்த்தத்தால் கெட்டுப் பழுதடையாப் பளிங்குகள்!
தென்றல் வரும்தெருவில் தீபமலர்க் கூட்டங்கள்
நின்று தலையசைக்கும் நேர்த்தியுள்ள மதுரையிலே
பாடுதுறை அறிந்தகடைச் சங்கப் பழத்தோப்பை
வாடுதுறை யாக்கவந்த களப்பிர வம்பரால்
சிறகசைப்பில் தேம்பல் ததும்பப் புலமைப்
பறவைகள் கோவைப் பழம்பதியம் விசயமங்
கலச்சங்கத் தையடைந்த கதை, சரிதப் பொன்தேர்
வலத்தை அறிபவர்கள் மறப்பதற்கு முடியாது!
மகரந்த வார்த்தைச்சங் கிலியால் பெருங்கதையாம்
நிகரற்ற ஊஞ்சலிலே நெஞ்சேற்றி அசைத்துவிட்ட
கொங்குவே ளிர்தமிழ் வளர்த்திட்ட கோவையினச்
சங்கவேள்! சங்காத அகவல் அரசவேள்!
வாக்கியத்தைப் புல்லரிக்க வைப்பதற்குத் தேன்கவிதைத்
தேக்கத்தால் தீர்மானம் செய்வோர்க்குப், பிறதானம்
வெட்க விதானத்துள் குறுகச் சிரதானம்
தட்டாமல் தந்திட்ட குமணனன்றோ கொடைவள்ளல்!



படுமலைச் சந்தனப் பைந்தமிழ்க்குத் தலைகொடுத்தான்
உடுமலை வாசியே! உலகத்து நீர்க்குடும்பம்
இனிப்புக் கனவுகளை எழுதிவைத்த வரியொன்று
நனவாகி நடப்பதுதான் சிறுவாணி நதியாகும்;
புத்திரிகை யில்மஞ்சள் வளர்க்காமல் பாத்திகளாம்
சித்திர வரப்புகளில் செழிக்கவைக்கும் கோவையிலே
புகையிலை தரையிலே! புதுப்புது ஆலைகளால்
புகையுண்டு வானத்தில்! புன்செய் நிலங்களிலே
சூரியப் பகலுக்குத் துண்டுதுண்டு விமர்சனங்கள்
ஏற்பாடு செய்ததுபோல் எங்கெங்கும் வெண்பருத்தி!
நூலைப் பதம்பார்க்கும் நுண்ணிய அறிவோடே
தோலைப் பதம்பார்க்கும் தொழில்வல்ல ஈரோடே
ஆளைப் பதம்பார்க்கும் அரசியற்கும் பட்டறை!
காலப் பதம்பார்த்துக் கண்மூடி வழக்கங்கள்
மண்மூடிப் போக மதகளிறாய்ப் புறப்பட்ட
வெண்தாடிப் பெரியார்! விடுதலை வேள்வியிலே
திருப்பூரில் உயிர்கொடுத்த தியாகி குமரனைக்
கருத்தாங்கிப் பெற்றசென்னி மலையதுதான் கற்பனையை
நூலிலே நெய்கின்ற நுணுக்கத்தை யெலாம்போர்வை
வேலையிலே காட்டும் விதமறிந்த குறுந்தொகையூர்!
புதுமை வெளிச்சத்தில் புன்னகைக்கும் கோவையிலே
அதிசய மனிதர் அறிஞர் ஜி. டி. நாயுடு
ஆச்சரியக் குறிகளின் அணிவகுப்பை ஏற்கின்ற
மூச்சுள்ள சிந்தனையால் முழுப்பெருமை சேர்க்கின்றார்!
இராகங்கள் கதவுதட்டி எழுந்திருங்கள் என்றபின்னும்
வராமல் மறுதலிக்கும் பாடல்கள் கேட்டதுண்டா?
அன்பவா நீ! என் அழகைச் சுவைவாநீ
என்றுமென் பவானிசா, கார்மலம்புழா, எழிலணைக்
கட்டுக்கள்! பயணப் பதிகத்தைக் கற்கின்ற
சிட்டுகட்குத் திறந்துவைத்த ஓவியப் புத்தகங்கள்!
ஊர்ப்பட்டி யல்தர முற்பட்டால், பா, சுமையால்
வேர்த்துவிடும் அதனால் இத்தோடு விடுக்கின்றேன்!
தேனூறு தமிழில் திகழ்கின்ற கோவைக்கோ
நானூறு துறையுண்டு! நாகரிகம் கொப்புளிக்கும்
எங்களின் கோவைக்கோ எண்ணத் துறைகளுண்டு!
தங்கத் தரைமார்பை அழகுறுத்தும் அதன்பெருமை
அத்தனையும் பாட அவாமிக இருந்தாலும்
இத்தனைக்கே இங்கே இடம்!







கவிஞர் ஈரோடு தமிழன்பன்



# தென்னிந்தியாவின் மான்செஸ்டர்!

கோவை மாவட்டத்தில் உள்ள பஞ்சாலைகள் உயரிய ஆடைகளை உற்பத்தி செய்து, அயல் நாடுகளுக்கும் அனுப்பி, அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்றன.

தற்பொழுது தமிழ்நாட்டில் உள்ள 203 பஞ்சாலைகளில் 100 பஞ்சாலைகள் கோவை மாவட்டத்தில் உள்ளன. கோவை நகரிலும், அதைச் சுற்றிலும் 70 பஞ்சாலைகளுக்கு மேல் இருப்பதால், கோவை நகரைத் தென் இந்தியாவின் 'மான்செஸ்டர்', என்று கூறப்படுவதுண்டு.

இந்தியாவில் பஞ்சாலைகள் துவக்கப்பட்டு ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. கோவை மாவட்டத்தில் 1888-ஆம் ஆண்டில் முதன் முதலாகப் பஞ்சாலை துவக்கப்பட்டது. கோவை மாவட்டத்திற்கு 1930-ஆம் ஆண்டில், 'பைக்காரா' மின் உற்பத்தி நிலையத்திலிருந்து மின்சக்தி வரத் தொடங்கியதிலிருந்து கோவை மாவட்டத்தில் பஞ்சாலைகள் வெகு வேகமாக வளர்ச்சி அடைந்து வருகின்றன.

கோவை மாவட்டத்தில் பருத்தி சாகுபடி செய்வதற்கான நல்ல மண் வளமும், நூல் நூற்பதற்கான நல்ல தட்ப-வெப்ப நிலையும் (climate) அமைந்துள்ளதுடன், பஞ்சாலைத் தொழிலில் மிகுந்த துணிவுடன் இறங்கும் ஆற்றல் கோவை மாவட்டத்தினருக்கு இருப்பதாலும், கோவை மாவட்டத்தில் பஞ்சாலைத் தொழில் விரைவாக வளர்ச்சி அடைந்து வருகிறது.





வெளி நாடுகளில் உற்பத்தியாகும் உயர்ரகப் பஞ்சு வகைகளை, இந்தியாவிலேயே முதன் முதலில் பஞ்சாலையில் உபயோகப்படுத்திய பெருமை, கோவை பயனீர் பஞ்சாலைக்கே (Pioneer mills) உரியது. அவ்வகைப் பஞ்சு ரகங்களைக் கொண்டு வெகு நயமான நூல் உற்பத்தி செய்த பெருமையும் பயனீர் பஞ்சாலையையே சாரும்.

கோவை மாவட்டத்தில் உள்ள பஞ்சாலைகளில் ஏறத்தாழ 75,000 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

கோவை மாவட்டத்தில் உள்ள பஞ்சாலைகள் ஆண்டுதோறும் ஏறத்தாழ 50 கோடி ரூபாய் மதிப்புள்ள நூல் பேல்களையும், ஏறத்தாழ 10 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகளையும் உற்பத்தி செய்து வருகின்றன.

கோயம்புத்தூர் மாவட்டப் பஞ்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட நூல்களுக்கும், துணிகளுக்கும் இந்தியாவில் மட்டுமல்ல, உலகெங்கிலும் நல்ல மதிப்பு உள்ளது.

அண்மையில் கண்டுபிடித்து, வெளியிடப்பட்டுள்ள 'சுஜாதா' பருத்தியிலிருந்து தயாரிக்கப்பட்ட 'தமிழ்நாட்டுத் தங்கம்' என்ற துணியையும், மற்றும் பல் வேறு பெயரில் வெளியிடப்பட்டுள்ள உயர்ரகத் துணிகளையும் வெளிநாட்டினர் விரும்பி வாங்குகின்றனர். கோவை மாவட்டப் பஞ்சாலைத் தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆகியவர்களின் அயர்ந்த உழைப்பும், தொழில் நுட்பச் செறிவுமே தென் இந்தியாவின் 'மான்செஸ்டர்' எனப்படும் கோவையின் புகழ் அவனியெங்கும் பரவுவதற்கு அடிப்படையாகத் திகழ்கிறது!



# புது வாழ்வு தரும் மறுவாழ்வு இல்லங்கள்

கோவை மாவட்டம் சத்தியமங்கலத்திற்கு அருகேயுள்ள "விண்ணம்பள்ளி" என்னும் ஊரில் 10·45 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தொழுநோய்ப் பிச்சைக்காரர் இல்லம் 31·40 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 504 தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் தங்குவதற்காக 4 இரண்டு அடுக்குக் கட்டடங்களும், அவர்கள் தொழில் செய்வதற்காக 2 பணிக் கொட்டகை, களும், கோழி வளர்ப்பதற்கான கொட்டகைகளும், 20 கழிப்பிடங்களும், 20 குளியலறைகளும் கட்டப்பட்டுள்ளன.

இவ்வில்லத்தை நிருவாகம் செய்யும் அலுவலகத்திற்காகவும், தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கான மருத்துவ மனை ஏற்படுத்தவும் ஒரு முக்கிய கட்டடமும் கட்டப்பட்டுள்ளது. கண்காணிப்பாளர், மருத்துவ அலுவலர், மருந்தாளுநர், நர்சு ஆகியோர்களுக்கான 4 இல்லங்களும், கடைநிலை ஊழியர்களுக்கான 8 இல்லங்களும், 1 கிணறும் இங்கு கட்டப்பட்டுள்ளன.

விண்ணம்பள்ளி தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இல்லத்தின் சிறப்பு என்னவெனில் இங்கு தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் வேளாண்மை வேலைகளில் ஈடுபட்டுத் தங்கள் உணவுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை விளைவித்துக் கொள்வதற்காக 17·20 ஏக்கர் நிலம் உழுது பண்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இங்கு 300 தென்னங்கன்றுகளும், 500 வாழைக் கன்றுகளும், கொய்யா, மா, எலுமிச்சை, சப்போட்டா போன்ற மரங்கள் கொண்ட பழத் தோட்டமும் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த மறுவாழ்வு இல்லத்தை அமைக்கும் வேலை அக்டோபர் 1972-ல் துவக்கப்பட்டது. இடையில் 30 நாட்கள் விடுமுறை நாட்களாக அமைந்து விட்டன. ஆயினும் நாள் ஒன்றுக்கு 500 ஆட்களை வைத்து இவ்வில்லத்திற்கான கட்டடங்களைக் கட்டும் பணி 90 நாட்களில் வெகு தீவிரமாகவும், வெகு நேர்த்தியாகவும் கட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தகுந்ததாகும். இவ்வில்லம் விரைவில் துவக்கப்படவிருக்கிறது.



பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி
ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்



# மீன்வளம் பெருக்கினோம்

உணவுப் பற்றுக்குறை பறந்தோடத் தமிழ்நாடு அரசு தீட்டிய திட்டங்கள் பலப் பல! சத்துள்ள மீன் அனைவருக்கும் எளிதில் கிடைக்கச் செய்ய வேண்டுமென்பதற்காக, மேற்கொள்ளப்பட்ட மீன்வளப் பெருக்கப் பணிகளாலே கோவை மாவட்டம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள ஏனைய மாவட்டங்களுக்கும் முன்னோடியாகத் திகழ்கின்றது. வீணாகும் ஆற்று நீரை வேளாண்மைக்குப் பயன்படுத்தவும், மின்சாரம் உற்பத்தி செய்யவும் கட்டப்பட்ட நீர்த்தேக்கங்களில் மீன் உற்பத்தியைப் பெருக்கி, சென்னைக்கும், வங்கத்திற்கும் தேவையான மீனை அனுப்பும் பணியில் முதலிடம் பெறுகிறது.

இம்மாவட்ட மீன் வளப் பெருக்கத் திட்டங்களைச் செவ்வனே செயல் படுத்தும் பணிகளில் கோவையில் உள்ள மண்டல மீன்துறை துணை இயக்குநரும், பொள்ளாச்சியில் உள்ள மீன் துறை உதவி இயக்குநரும், பவானி சாகரில் நன்னீருயிரியல் ஆராய்ச்சி மீன்துறை உதவி இயக்குநரும் ஈடுபட்டுள்ளனர். மீன்துறையினரால் கீழ்க்கண்ட திட்டங்கள் கோவை மாவட்டத்தில் செயல் படுத்தப்படுகின்றன.

உள்நாட்டு மீன்வளப் பெருக்கம்.

நீர்த்தேக்க மீன்வளப் பெருக்கம்.

தீவிர மீன்குஞ்சு உற்பத்தி.

மீனவர் நலம் காத்தல்.

## உள்நாட்டு மீன்வளம்

கோவை மாவட்டத்திலுள்ள ஆறுகள், குளங்கள் ஆகிய நீர்நிலைகளில் மீன்வளம் பெருக்குவதுடன் மீன் பிடிப்பதையே தொழிலாகக் கொண்ட மீனவர்களுக்கு மீன்பிடி உரிமைச் சீட்டு வழங்கல், மற்றும் மீன்பிடி உரிமைதனை அளித்தல் ஆகிய பணிகள் மீனளத் துறையினரால் செயல்படுத்தப்படுகின்றன.

காவிரி ஆற்றிலே மேட்டூர் அணைக்குக் கீழும், சேடர்பாளையம் அணைக்கு மேலுமுள்ள பகுதியில் மீன்கள் முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்க வாய்ப்பிருந்தது. ஆனால் அங்கு மீனினங்கள் முட்டையிட்டுக் குஞ்சு பொறித்து மீனிவளத்தைப் பெருக்கிட முடியாமல், அம்மீன்னங்களைச் சிலர் நாட்டு வெடிகள் பயன்படுத்தி ஒழித்து வந்தனர். அதைத் தடுத்திட 1968-ஆம் ஆண்டு முதல், ஆண்டில் 6 மாத காலத்திற்கு ஒரு முறை மீன்துறை ஆய்வாளர் மற்றும் 6 மீனவப் பாதுகாவலர்களைக் கொண்ட 'ரோந்துக்குழு' ஏற்படுத்தி மீன்வளம் பெருகப் பாதுகாப்பளிக்கப்பட்டு வந்தது. பவானியினைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்ட அக்குழு, 1972-ஆம் ஆண்டு முதல் ஆண்டு முழுவதும் செயல்படத் தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது.

## நீர்த்தேக்க மீன்வளப் பெருக்கம்

தமிழ்நாட்டிலேயே அதிகமான நீர்த்தேக்கங்களைப் பெற்றுள்ளது கோவை மாவட்டம். இம் மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட 7 நீர்த் தேக்கங்களில் மீனளத்துறையின் மூலம் மீன்வளம் பெருக்கப்படுகிறது.

பவானிசாகர் நீர்த்தேக்கம்.

அமராவதி நீர்த்தேக்கம்.

ஆழியார் நீர்த்தேக்கம்.

திருமூர்த்தி நீர்த்தேக்கம்.

உப்பாறு நீர்த்தேக்கம்.

சோலையாறு நீர்த்தேக்கம்.

பில்லூர் நீர்த்தேக்கம்.

இந் நீர்த்தேக்கங்களிலே விரைவில் வளர்ந்து பயன்தரும் மீன்வகைகளை இருப்பு செய்து, வளர்த்து, மக்களுக்கு மீனுணவு அளிக்கப்படுகிறது.

### மீன் வளர்ப்புக்கு எடுக்கப்பட்ட நீர்த்தேக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1967-க்கு முன் | .. | 3 | நீர்த்தேக்கங்கள்— 8,865 எக்டேர் நீர்ப் பரப்பு. |
| 1972-ல் உள்ளவை. | | 7 | நீர்த்தேக்கங்கள்— 10,562 எக்டேர் நீர்ப் பரப்பு. |

### இருப்புச் செய்யப்பட்ட மீன் குஞ்சுகள்

| | | |
|---|---|---|
| 1967-க்கு முன் | .. | 5,00,000 |
| 1972-ல் | .. | 20,00,000 |

பிடிக்கப்பட்ட மீன்கள்—

| | | |
|---|---|---|
| 1967-க்கு முன் | | 75,000 கிலோ. |
| 1972-ல் | .. | 2,06,193 கிலோ. |

கோவை மாவட்டத்தில் உள்ள நீர்த்தேக்கங்களில் 1967–68 முதல் 1972–73 (31—1—1973) முடியவுள்ள காலத்தில் பிடிக்கப்பட்ட மீன்களின் எடை பின் வருமாறு உள்ளது.

| ஆண்டு | | | மீன்களின் எடை (கிலோகிராம்) |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 1,77,415 |
| 1968–69 | .. | .. | 2,17,876 |
| 1969–70 | .. | .. | 2,08,431 |
| 1970–71 | .. | .. | 2,52,167 |
| 1971–72 | .. | .. | 2,61,158 |
| 1972–73 (31—1—73 முடிய). | | | 1,81,407 |

# திரு வரதராஜப் பெருமாள் வகையரு திருக்கோவில்கள்

## வெங்கம்பூர்

ஈரோடு வட்டம் கோவை மாவட்டம்

வெங்கம்பூர் கிராமத்தில் கரூர்—ஈரோடு செல்லும் நெடுஞ்சாலைக்குக் கிழக்குப் பக்கத்தில் திரு வரதராஜப் பெருமாள் கோயில் திரு சோளீஸ்வர ஸ்வாமி கோயில், திரு அங்காளம்மன் கோயில், திரு மாரியம்மன் கோயில் ஆகிய கோவில்கள் பிரசித்தி பெற்ற கிராமத்துக் கோவில்களாகும். அவைகளைத் தவிர திரு பொங் காளி யம்மன் கோவிலும் ஒரு முக்கியமான கோவிலாகும். அநேக பக்தர்கள் கோவில்களுக்கு வந்து ஸ்வாமி தரிசனம் செய்து வருகிறார்கள்.

இத் திருக்கோவில்களில் ஏழு விமானங்களில் சுமார் ரூ. 27,500 செலவில் சுதைகள் அமைத்தும், பழுதான சுதைகளைப் புதுப்பித்தும், வர்ணம் பூசியும் நல்ல கவர்ச்சியான முறையில் வேலை செய்யப்பட்டிருக்கிறது. திரு வரதராஜப்பெருமாள் கோவிலில் ரூ. 15,500 செலவில் ஆர். சி. சி. மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது. இவைகளைத் தவிர சனீஸ்வரர் கோவில், நவக்கிரகக் கோவில் கட்டப்பட்டு இருக்கிறது. சூரியன், சந்திரன் கோவில்கள் கட்டப்பட இருக்கிறது. திரு அங்காளம்மன் கோவில் முன் முகப்பில் ரூ. 4,000 செலவில் சாலஹார விமானம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இத்திருக்கோவில் நிதியிலிருந்து வெங்கம்பூர் கிராமத்தில் சுமார் 1½ லட்சம் ரூபாய் செலவில் ஒரு கல்யாண மண்டபம் கட்டும் வேலைக்கு தமிழ்நாடு அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்களால் அடிக்கல் நாட்டப் பெற்றது. மேற்படி வேலை விரைவில் ஆரம்பமாக இருக்கிறது.

திருப்பணி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு, பரிதாபி ஆண்டு ஐப்பசி திங்கள் 9 ஆம் நாள் (25—10—72) திருக்குட முழுக்குப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. கோவை மண்டல அறநிலைய ஆட்சித் துறை துணை ஆணையர் உயர் திரு எம். சூரியராஜ், பி.ஏ., பி.எல்., அவர்கள் வருகை தந்து சிறப்பித் துள்ளார்கள். சுமார் 3,000 பக்தர்களுக்குக் குட முழுக்குப் பெருவிழாவின்போது அன்னதானம் செய்யப்பட்டது. செவல்குளம் சி. தங்கையா அவர்கள் வில்லிசைக் கச்சேரியும், மதுரை சோமு அவர்கள் இன்னிசைக் கச்சேரியும், நா. கிரிதாரி பிரசாத் அவர்கள் சொற்பொழிவும், பவானி மு. கண்ணப்பன் அவர்கள் இன்னிசைச் சொற்பொழிவும், மு. குமாரசாமி தேசிகர் திருமுறைக் கச்சேரியும் நடைபெற்றன. வடக்குப் புதுப்பாளையம் மணியக்காரர் உயர்திரு சி. பெரியசாமி கவுண்டர், திரு வி. பி. கணபதி, வி. எஸ். ராமலிங்க கவுண்டர், கே. துரைசாமி, கே. எஸ். பழனிசாமி, ஏ. கொமரராயர் ஆகிய தர்மகர்த்தர்களும், மற்றும் பிரமுகர்களும் குட முழுக்குப் பெருவிழா சிறப்புற நடைபெற ஏற்பாடு செய்தார் கள்.

பக்தர்கள் கோவில்களுக்கு வருகை தந்து இறைவன் திருவருளைப் பெற்றுய்யு மாறு வேண்டப்படுகிறது.

த. முனியப்பன், பி.ஏ.,
செயல் அலுவலர்.

### தீவிர மீன்குஞ்சு உற்பத்தி

தரமான மீன்குஞ்சுகள் கிடைப்பதற்குப் பல்லாண்டு ஆராய்ச்சியின் மூலம் கண்டு பிடிக்கப்பட்ட 'தூண்டுதல் முறை' மீனினப் பெருக்க முறை தீவிரமாகச் செயல் படுத்தப்படுகிறது. முன்பு இயற்கையிலே சேகரித்த மீன்குஞ்சுகளில் பயன் தரும் மீனினங்கள் மிகக் குறைவாக இருந்தும் இதனைச் சேகரம் செய்திட அதிகமான மனித சக்தியும் பொருளும் விரயமாகி வந்தது. ''தூண்டுதல் முறை'' கண்டு பிடிக்கப்பட்டபின், கோவை மாவட்டம் மீன்குஞ்சு தேவையில் தன்னிறைவு பெற அமராவதிநகர், பவானிசாகர் நிலையங்களுக்கு அதிக வசதிகள் செய்யப்பட்டுள்ளதுடன், ஆழியாரில் புதிய நிலையமொன்று 1972-ஆம் ஆண்டில் செயல்படச் செய்து மீன்குஞ்சு உற்பத்திப் பெருக்கம் தீவிரமாக நடைபெறுகிறது.

உற்பத்தி செய்யப்படும் மீன்குஞ்சுகளை 60 நாட்கள் வளர்த்து, நீர்த்தேக்கத்தில் இருப்பு செய்திடத் தேவையான மீன் வளர்ப்பிடங்களைக் காட்டும் பணியில் முன்னேற்றம் காண்பதிலும் கோவை மாவட்டம் முன்னோடியாகத் திகழ்கிறது.

### மீன் வளர்ப்பிடங்கள்

| | |
|---|---|
| 1967-க்கு முன் .. .. | 22 |
| 1973-இல் .. .. .. | 104 |

இம்மாவட்டத்தில் ஆண்டொன்றுக்குத் தற்போது உற்பத்தியாகும் 300 மெட்ரிக் டன்கள் மீன்களை 900 மெட்ரிக் டன்னுகைப் பெருக்கிட ஏறத்தாழ ரூபாய் 15,00,000 செலவாகக் கூடிய திட்டம் திட்டப் பெற்று, பரிசீலனையில் உள்ளது.

### மீன்குஞ்சு உற்பத்தி

| | |
|---|---|
| 1967-க்கு முன் .. | 57,00,000 |
| 1972-ல் .. .. | 2,22,50,000 |

### மீனவர் நலம்

மீன்பிடிப்பதையே தொழிலாகக் கொண்டு பல்லாண்டுக் காலம் மீன் பிடித்தும் முன்னேற்றத்தைக் காணமல் வறுமையில் வாடும் மீனவச் சமுதாயத்தினரை முன்னேற்ற ''மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்'' அமைத்து அச்சங்கங்களுக்குச் செயல் மூலதனக் கடன் அளித்தல், மீனவர்களுக்கு நடுத்தரக்காலக் கடன் வழங்கல், மானியத் திட்டத்தில் நூல் வழங்கல், மானியக் கடன், வட்டியில்லாக் கடன் அளித்து வீட்டு வசதி அளித்தல், புறம்போக்கு நிலத்தில் வீட்டுமனைப்பட்டா வழங்கல் ஆகிய திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகிறது. அவைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது :—

| | 1967-க்கு முன் இருந்தவை | 1972-ல் இருப்பவை |
|---|---|---|
| மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள். | 8 | 16 |
| வீட்டு மனைப்பட்டா | கொடுக்கப் படவில்லை. | 45 |
| வீட்டு வசதி .. .. | 10 | 44 |
| மானியத் திட்டத்தில் நைலான் நூல் வழங்குதல். | வழங்கப் படவில்லை. | ரூ.10,000 |

கோவை மாவட்டத்தில் உள்ள மீனவர்களுக்கு கடந்த 5½ ஆண்டில் ரூபாய் 65,400 கடனுகக் கொடுக்கப்பட்டுள்ளது. இதனுல் 394 மீனவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

கோவை மாவட்ட மீனவர்கள் வீடுகட்டிக் கொள்வதற்குக் கடன் வழங்கும் திட்டம் 1969—70-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த ஆண்டில் மீனவர்கள் வீடுகட்டிக் கொள்வதற்காக ரூபாய் 8,500 கடனுகவும், ரூபாய் 25,500 மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது. இதனுல் 34 மீனவர்கள் பயன் அடைந்துள்ளனர். அதுபோலவே, கோவை மாவட்ட மீனவர்களுக்குச் செயற்கை நூல் வழங்கும் திட்டத்தின் கீழ், 1969—70 முதல் துவக்கப்பட்ட திட்டத்தின் கீழ், கடந்த 3 ஆண்டுகளில் ரூபாய் 4,321·38 மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதனுல் 237 மீனவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

### மீன்துறைப் பணிகளின் சிறப்பு அம்சங்கள்

வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்த ''புல் கெண்டை'' என்னும் புது ரக மீன்களைத் தூண்டுதல் முறையில் அமராவதி மீன் பண்ணையில் முட்டையிடச் செய்து, இம்முயற்சியில் வெற்றி கண்டது, இந்தியாவிலேயே தமிழ்நாடு அரசு மீன் துறைதான் என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

இந்தியாவில் ஒரு ஹெக்டேர் நீர்ப்பரப்பில் ஆண்டுக்கு மிகஅதிகமான அளவு மீன்களை உற்பத்தி செய்வது 'அமராவதி நீர்த்தேக்கம்' தான் என்பதும் பெருமைக்குரிய செய்தியாகும்.

இவ்விரு சாதனைகளும் கோவை மாவட்ட மீன்வளத் துறையின் செயல் திறமையை எடுத்துக் காட்டுகின்றன.

## கோவை மாவட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை

கோவை மாவட்டத்தில் அமைக்கப்பட இருக்கும் கூட்டுறவு சர்க்கரை ஆலை, கோவையிலிருந்து 20 மைல் தொலைவில் உள்ள காரமடைப்பகுதியில் நிறுவப்பெறும். இதற்காக 100 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சர்க்கரை ஆலையை அமைக்க ரூ. 2 கோடி செலவாகும்; இங்கு நாள் ஒன்றுக்கு, 1250 டன் கரும்பு பிழியப் படும்.

தந்தி : "காட்டன்"

போன் : ஆபீஸ் : 216 & 321
வீடு : 310 & 311
"பவானி"

# சுந்தரம் நூற்பு ஆலை

தபால் பெட்டி எண் : 25

கொமாரபாளையம் அஞ்சல், (வழி) ஈரோடு

நிறுவப்பட்ட கதிர்கள் : 25,228 முறுக்குக் கதிர்கள் : 1,200

டெக்ஸ் மார்க் நெ. 2950

16 நிர் முதல் 100 வரை

கைத்தறி, விசைத்தறி, பனியன், உற்பத்திக்குத் தேவையான

முதல் தர கோன்—கட்டு நூல்—முறுக்கு நூல் தயாரிப்பாளர்கள்.

குறிப்பு :—எமது மேற்கண்ட ஆலைகளில் தயாராகும் நூல்கள், பல வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

உரிமையாளர்கள் :

ஜே. கே. கே. அங்கப்பன், ஜே. கே. கே. சுந்திரம்,

ஜே. கே. கே. நடராஜா, ஜே. கே. கே. முனிராஜா.



# தேயிலைக்கு ஒரு வால்பாறை

தொழிற்சாலைகள் நிறைந்த கோவை மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்களும் நிறைந்துள்ளன. கோவை மாவட்டம் வால்பாறை நகரிய எல்லையில் மட்டும் 47,038,88 ஏக்கரில் தேயிலை பயிரிடப்படுகிறது. அப்பகுதியில் 56 தேயிலைத் தோட்டங்கள் (Tea Estates) உள்ளன. அவைகள் (Groups) 18 தொகுதிகளாக இணைந்து இயங்குகின்றன.

வால்பாறை நகரிய எல்லையில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் ஏறத்தாழ 30,000 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். அவர்களில் ஏறத்தாழ 3,000 தொழிலாளர்கள் தற்காலிகத் தொழிலாளர்களாகப் பணியாற்றி வருகின்றனர். பெரும்பாலான தொழிலாளர்கள் நாள்தோறும் சராசரி ரூபாய் 3 முதல் 4 வரை கூலியாகப் பெறுகின்றனர்.

தேயிலைத் தோட்ட முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே எழுந்த கூலிப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில், தமிழ்நாடு அரசு மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக அண்மையில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி தேயிலை பறிக்கும் ஒவ்வொரு பெண்ணுக்கும் குறைந்த அளவுக் கூலி ரூபாய் 2·95 ஆகவும், ஆணுக்குக் குறைந்த அளவு கூலி ரூபாய் 3·50 ஆகவும் கொடுக்கப் பட்டு வருகிறது. இந்த அளவு கூலி பெற ஒவ்வொரு பெண்ணும் ஆணும் முறையே 10 கிலோ, 12 கிலோ தேயிலைக் கொழுந்துகளைப் பறிக்க வேண்டும். அதற்கு மேல் பறிக்கும் ஒவ்வொரு கிலோ தேயிலைக்கும் $6\frac{1}{2}$ காசு கூலியாக வழங்கப்படுகிறது.

தேயிலையைப் பதப்படுத்துவதற்காக வால்பாறை நகரியப் பகுதியில் மட்டும் 26 தேயிலை பதப்படுத்தும் தொழிற்சாலைகள் (Tea Factories) உள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்படும் தேயிலைத் தூள் உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் பெரும் புகழ் பெற்றுள்ளது.

# நலம் பயக்கும் நல்வாழ்வுப் பணிகள்

நாட்டுமக்களின் நல்வாழ்வில் நாட்டம் கொண்டுள்ள தமிழ் நாடு அரசு, கோவை மாவட்டத்தின் பெரும்பான்மையான பகுதிகளில் வெப்பமும், வறட்சியும் நிலவுவதால், காலரா, பெரியம்மை, மலேரியா, 'பிளேக்' முதலிய நோய்கள் தோன்றக் கூடும் என்பதைக் கவனத்தில் கொண்டு கோவை மாவட்ட மக்கள் நல்வாழ்விற்கான பணிகளைச்செய்வதில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. கிராமப் புறங்களில் வாழும் மக்களுக்கும் எளிதில் மருத்துவ வசதிகள் கிடைத்திட வேண்டுமென்பதற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு முதல் நிலை நல்வாழ்வு நிலையத்தைத் துவக்கிவரும் தமிழ் நாடு அரசு கடந்த 5 ஆண்டுகளில் கோவை மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு 18 முதல் நிலை நல்வாழ்வு நிலையங்களைப் ( Primary Health Centres ) புதிதாகத் திறந்துள்ளது.

**புதிதாகத் திறக்கப்பட்ட முதல்நிலை நல்வாழ்வு நிலையங்கள்**

| ஆண்டு | | | திறக்கப்பட்ட நல் வாழ்வு நிலையங்கள் |
|---|---|---|---|
| 1967 | .. | .. | 1 |
| 1968 | .. | .. | 8 |
| 1969 | .. | .. | 2 |
| 1970 | .. | .. | 4 |
| 1971 | .. | .. | 3 |
| | மொத்தம் | | 18 |

கோவை மாவட்டத்தில் தற்பொழுது 45 முதல் நிலை நல்வாழ்வு நிலையங்கள் செயல்படுகின்றன. கோவை மாவட்டத்தில் 41 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் 41 முதல்நிலை நல்வாழ்வு நிலையங்கள் என்ற அளவுக்கும் மேலே, மேலும் 4 நிலையங்கள் செயல்படுவதால் கோவை மாவட்டக் கிராமப்புற மக்களுக்கு எளிதில் மருத்துவ வசதிகள் கிடைக்கின்றன. அதன் பயனாய்க் காலரா, பெரியம்மை, மலேரியா, பிளேக் ஆகிய நோய்கள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டு விட்டன.

பெண்களை இந்த நாட்டின் கண்களாகவும், குழந்தைகளை எதிர்காலத்தின் தூண்களாகவும் கருதும் தமிழ்நாடு அரசு, கடந்த $5\frac{3}{4}$ ஆண்டுகளில் கோவை மாவட்டத்தில் 60 தாய் சேய் நல விடுதிகளைத் ( Maternity and child welfare centres ) திறந்துள்ளது. அவைகளின் விவரம் பின்வருமாறும் அமைந்துள்ளன.

**புதிதாகத் திறக்கப்பட்ட தாய்சேய் நல விடுதிகள்**

| ஆண்டு | | | திறக்கப்பட்ட தாய்சேய் நல விடுதிகள் |
|---|---|---|---|
| 1968 | .. | .. | 28 |
| 1969 | .. | .. | 18 |
| 1970 | .. | .. | 9 |
| 1972 | .. | .. | 5 |
| மொத்தம் | .. | | 60 |

தற்பொழுது கோவை மாவட்டத்தில் மொத்தம் 322 தாய்சேய் நலவிடுதிகள் பணியாற்றுகின்றன.

''டிரிபில் ஆண்டிஜென்'' ( Triple Antigen ) எனப்படும் மூன்று நோய்த் தடுப்பு ஊசி போட்டதால் கோவை மாவட்டத்தில் பின்கண்டவாறு 66, 619 குழந்தைகள் கக்குவான், காசநோய், தொண்டை அடைப்பான் ஆகிய மூன்று கொடிய நோய்களால் தாக்கப்படாத தன்மையைப் பெற்றுள்ளனர்.

| ஆண்டு | | | மூன்று நோய் தடுப்பு ஊசி போடப் பெற்ற குழந்தைகள் |
|---|---|---|---|
| 1967 | .. | .. | 5,963 |
| 1968 | .. | .. | 4,520 |
| 1969 | .. | .. | 5,065 |
| 1970 | .. | .. | 6,864 |
| 1971 | .. | .. | 31,687 |
| 1972 (31–12–72 வரை) | | | 12,520 |
| மொத்தம் | .. | | 66,619 |

மகப்பேறு எய்தும் நிலையில் உள்ள பெண்களுக்கும், மகவுக்குப் பாலூட்டும் நிலையில் உள்ள தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் சத்துணவு அளிக்கும் திட்டத்தின் கீழ், ''யூனிசெப்'' உதவியின் மூலம் கிடைக்கப்பெறும் பால்பவுடரையும், 'கேர்' உதவியின் மூலம் கிடைக்கப்பெறும் மக்காச் சோள-சோயாப் பாலும் (Corn Soya Milk), ''சாலட் எண்ணெய்யும் (Salad oil) கோவை மாவட்டத்தில் வழங்கப்பெற்ற வகையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பின்வருமாறு அமைந்துள்ளது.

**வழங்கப்பட்ட பால் பவுடர்**

| ஆண்டு | | | வழங்கப்பட்ட அளவு (பௌண்ட்) |
|---|---|---|---|
| 1967 | .. | .. | 67,000 |
| 1968 | .. | .. | 12,469 |
| 1969 | .. | .. | 56,926 |

**வழங்கப்பட்ட சோயாப் பால்**

| ஆண்டு | | | அளவு (கிலோ) |
|---|---|---|---|
| 1971 | .. | .. | 43,523 |
| 1972 | .. | .. | 86,978 |

**வழங்கப்பட்ட சாலட் 'எண்ணெய்'**

| ஆண்டு | | | அளவு (கிலோ) |
|---|---|---|---|
| 1971 | .. | .. | 4,506 |
| 1972 | .. | .. | 7,506 |

**பயன்பெற்ற குழந்தைகள்**

| ஆண்டு | | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1971 | .. | .. | 14,508 |
| 1972 | .. | .. | 28,999 |

மேலும்'யூனிசெப்' நிறுவனத்திலிருந்து கிடைத்த மருந்து மற்றும் துணை உணவுப் பொருள்கள் முதல் நிலை நல்வாழ்வு நிலையம், நகராட்சி மன்றங்கள் மூலம் வழங்கப்பெற்றுள்ளன.

பெரியம்மை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் கோவை மாவட்டத்தில் ஏராளமான பேர்களுக்கு அம்மைத் தடுப்பு ஊசி குத்தப்பட்டுள்ளது. கடந்த $5\frac{3}{4}$ ஆண்டுகளில் கோவை மாவட்டத்தில் கீழ்க்கண்ட அளவில் அம்மைத் தடுப்பு ஊசி குத்தப்பட்டுள்ளது.

| ஆண்டு | | | அம்மைத் தடுப்பு ஊசி குத்தப்பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 80,051 |
| 1968–69 | .. | .. | 2,27,486 |
| 1967–70 | .. | .. | 2,12,878 |
| 1970 | .. | .. | 1,30,290 |
| 1971 | .. | .. | 1,33,834 |
| 1972 | .. | .. | 1,24,740 |




சிட்கோவின் சிறப்பான பணி



தமிழ்நாட்டில் சிறு தொழில்களின் மேம்பாட்டிற்காகச் சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தை (SIDCO) இன்றையத் தமிழ்நாடு அரசு 1970-ஆம் ஆண்டில் துவக்கியது. சிறு தொழில்கள் சிறப்பாக நடைபெற்று வரும் கோவை மாவட்டத்தில் மேலும் சிறு தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக 24–4–1971 அன்று கோயம்புத்தூரில் சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் கிளை அலுவலகம் திறக்கப்பட்டது. அக் கிளை அலுவலகம் 12–5–1971 முதல் கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் சிறு தொழில்கள் மேம்பாடடையப் பணியாற்றி வருகிறது.

'சிட்கோ'வின் கோயம்புத்தூர் கிளை அலுவலகம் கோவை மாவட்டத்தில் உள்ள சிறு தொழிற்சாலைகளுக்கு இயந்திரம் வாங்குவதற்கும், பணிக் கொட்டகைகள் அமைக்கவும், வாடகைக் கொள்முதல் திட்டத்தின் (Hire Purchase Scheme) கீழும், கடன் திட்டத்தின் (Loan Scheme) கீழும், பின்கண்டவாறு உதவி செய்துள்ளது.

**இயந்திரம் வாங்க உதவும் திட்டம்**

| 'சிட்கோவின்' உதவி பெற்ற யூனிட்டுகள். | அனுமதிக்கப் பெற்ற உதவித் தொகை (ரூபாய்) |
|---|---|
| 41 | 14,58,029 |

**பணிக் கொட்டகை கட்ட உதவும் திட்டம்**

| பயன்பெற்ற யூனிட்டுகள். | அனுமதிக்கப் பெற்ற உதவித் தொகை (ரூபாய்). |
|---|---|
| 5 | 1,87, 600 |

**கடன் உதவித் திட்டம்**

| உதவி பெற்ற யூனிட்டுகள். | கடனுகைக் கொடுத்த தொகை (ரூபாய்) |
|---|---|
| 9 | 28,500 |

'சிட்கோ'வின் கோயம்புத்தூர் கிளை இதுவரை கோவை, சேலம், நீலகிரி, தருமபுரி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் உள்ள 100 சிறு தொழில் யூனிட்டுகளுக்கு ரூபாய் 32,36,002 உதவியுள்ளது. அவ்வாறு உதவி பெற்றுள்ள தொழிற்சாலைகள் தொழில் வாரியாகக் கீழ்க் கண்ட அளவில் அமைந்துள்ளன.

**'சிட்கோ' மூலம் உதவிபெற்ற தொழிற்சாலைகள்**

| தொழிற்சாலையின் வகை | உதவி பெற்ற எண்ணிக்கை |
|---|---|
| பொறியியல் தொழிற்சாலை .. | 57 |
| அச்சகத் தொழிற்சாலை .. .. | 10 |
| பிளாஸ்டிக் தொழிற்சாலை .. | 7 |
| இரசாயனத் தொழிற்சாலை .. | 6 |
| உணவுப் பொருள் தொழிற்சாலை. | 7 |
| மர அடிப்படையான தொழிற்சாலை | 5 |
| மின்சாரப் பொருள் தொழிற்சாலை | 1 |
| காகிதப் பொருள் தொழிற்சாலை | 2 |
| 'மொசைக்' கல் தொழிற்சாலை. | 1 |
| கண்ணாடித் தொழிற்சாலை .. | 1 |
| 'டயர்' ரீட்ரடிங் தொழிற்சாலை | 2 |
| துணிகளில் அச்சிடுதல், மற்றும் சாயம் ஏற்றும் தொழிற்சாலை. | 1 |
| மொத்தம் | 100 |

இக் கிளை நிறுவனம், 'சிட்கோ'வின் மூலம் சிறு தொழில் யூனிட்டுகள் உதவி பெறுவதற்காக இதுவரை 2,180 மனுக்களைத் தொழில் அதிபர்களுக்கும், புதிய தொழில்களைத் துவக்கவிருக்கும் தொழில் முனைவோருக்கும் வழங்கியுள்ளது.

**குறிச்சியில் ஒரு தொழிற்பேட்டை விரைந்து வளர்கிறது**

கோவை நகருக்கு அருகில் உள்ள 'குறிச்சி' என்ற இடத்தில் நெசவாலைகளுக்குத் தேவையான துணைக் கருவிகளைத் தயாரிப்பதற்காக ஒரு தொழிற் பேட்டையை 'சிட்கோ' அமைத்து வருகிறது. இத் தொழிற்பேட்டையில் பணிக் கொட்டகை ஒதுக்கீடு செய்து கொடுக்கும்படி இது வரை 47 மனுக்கள் 'சிட்கோவின்' கோவை அலுவலகத்திற்கு வந்துள்ளன. இன்னும் சில மனுக்கள் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிச்சி தொழிற்பேட்டையில் 50 பணிக் கொட்டகைகள் கட்டி முடிக்கப்பட்டுத் தொழில் முனைவோருக்கு (Enterpreneurs) ஒதுக்கீடு செய்யப்படும்.

கோவை மாவட்டத்தில் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியான தாராபுரம் வட்டத்தில் 'ஜனதா தொழிற்பேட்டை' துவங்குவதற்கான சாத்தியக் கூறுகளை 'சிட்கோ' ஆராய்ந்து வருகிறது.






தமிழ்நாட்டில் கோவை மாவட்டம் ஆனைமலைப் பகுதியில் உள்ள காடம்பாறையில் 400 மெகவாட் உற்பத்தித் திறன் கொண்ட குழாய் நீர்த் தேக்கத் திட்டம் ஒன்றினை உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும் என்ற தமிழ்நாடு மின்சார வாரியத்தின் திட்டத்திற்குத் தேசியத் திட்டக் குழு தன்னுடைய ஒப்புதலை அண்மையில் அளித்துள்ளது.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டத்தைச் சேர்ந்த ஆனைமலைப் பகுதியில் இந்தத் திட்டம் நிறுவப்படும். காடம்பாறையில் அமையும் அணை, பொள்ளாச்சியிலிருந்து 72 கிலோ மீட்டர் தூரத்திலும், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த வால்பாறை நகரத்திலிருந்து 27 கிலோ மீட்டர் தொலைவிலும் அமையும். மேல் ஆழியாறு ''கேம்ப்'' இடத்திலிருந்து இங்கு நிறுவப்படும் மின் நிலையம் 7 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும்.

இந்தத் திட்டத்தின் மூலதனச் செலவு மதிப்பீடு ஏறத்தாழ ரூபாய் 35 கோடியாக இருக்கும். காடம்பாறையில் ஒரு நீர்த் தேக்க அணை, 1·25 கிலோ மீட்டர் நீளத்தில் ஒரு மின் குடைவறை (Tunnel) நிலத்திற்கடியில் ஒரு மின் நிலையம், இப்பொழுதுள்ள மேல் ஆழியாறு அணையுடன் தொடர்பு படுத்த ஒரு கிலோ மீட்டர் நீளத்தில் மின்சாரம் தயாரிக்க உபயோகித்த தண்ணீரைக் கொண்டு செல்லும் குடைவறை (Tail Race Tunnel) ஒன்று ஆகியவை இத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும்.

இந்தத் திட்டம் செயல்படத் தொடங்கினால், இந்தியத் துணைக் கண்டத்திலேயே இதுதான் இந்த மாதிரி மின் நிலையங்களில் இரண்டாவதாக அமையும். இதே மாதிரி ஒரு நீர் மின் திட்டம் ஆந்திர மாநிலத்தில் உள்ள நாகார்ஜுன சாகர் குழாய் நீர்த் தேக்கத்திட்டத்தின் கீழ்ச் செயல்படுத்தப்பட உள்ளது.

தமிழ் நாட்டில் நிலத்திற்கடியில் அமையப் பெறும் முதல் மின் உற்பத்தி நிலையமாகக் காடம்பாறை குழாய் நீர் மின் நிலையம் அமையும். ஒரு மின் நிலையத்திற்குப் பெரிய அளவில் யூனிட் அமைப்பினைப் பெற்றுள்ள, மாநிலத்திலேயே மிகப் பெரிய, நீர் மின் நிலையமாகவும் இது அமையும்.

நான்கு 100 மெகவாட் திறனுள்ள இயக்கத் திசை மாற்றக் கூடிய பம்பு டர்பைன் பிரிவுகள் (Reversible pump Turbine units) காடம் பாறை குழாய் நீர்த் தேக்கத் திட்டத்தின் இறுதியில் அமையும். உச்ச மின் சுமைக் காலங்களில், காடம் பாறை அணையில் தேக்கப்பட்டுள்ள நீரினைப் பயன்படுத்துவதன் மூலம், இந்த நான்கு பிரிவுகளும் மின் உற்பத்திக் கருவிகளாக இருக்கும்.

கல்பாக்கம் அணு மின் நிலையம் நெய்வேலி, எண்ணூர், தூத்துக்குடி அனல் மின் நிலையங்களிலிருந்து உச்ச நேரமில்லாத காலங்களில் கிடைக்கப் பெறும் உபரியாக உற்பத்தியாகும் மின்சாரத்தைப் பெற்று, மேல் ஆழியாறு அணையிலிருந்து காடம் பாறை அணைக்குத் தண்ணீரை மேல் நோக்கிக் கொண்டு செல்லும் குழாய்களாக இக் கருவிகள் இயங்கும்.

இத் திட்டத்தின் கீழ் மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டுப் பிறகு விழுகிற நீரானது, கீழ் மட்டத்தில் உள்ள ஒரு நீர்த் தேக்கத்தில் அடைக்கப்பட்டு, மேலும் அதிக மின்சார உற்பத்திக்காக மேலே உள்ள நீர்த் தேக்கத்திற்குக் குழாய் மூலம் கொண்டு செல்லப்படுவதால், வழக்கமாக உள்ள நீர் மின் திட்டங்களுக்கு வேண்டியதைப்போல் அல்லாமல் இத் திட்டத்திற்குச் சிறிதளவு நீர்த் தேக்கமே போதுமானது. குறிப்பாக, இயற்கையான நீர் மின் ஆதாரங்கள் மிகவும் குறைவான நிலையில் உள்ள தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு இப்படிப்பட்ட திட்டம் மிகுந்த பயன் அளிக்கக் கூடிய ஒன்றாகும்.

இந்தத் திட்டத்தில் மொத்தம் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியானது இரண்டு ஒற்றைச் சர்க்யூட் 230 கே.வி. கம்பித் தொடர்களின் மூலம், உடுமலைப் பேட்டையில், தமிழக மின் இணைப்புடன் (Grid) இணைக்கப்படும்.

கடந்த சில ஆண்டுகளாக கிராம மின் வசதித் திட்டத்திற்கு மிகுந்த முக்கியத்துவத்தை நாம் அளித்து வந்துள்ளோம். வேளாண்மை விசையேற்றங்கள் மின்சாரத்தினால் இயக்கப்படுவதால் பகல் நேரங்களில் மிக உச்ச அளவில் மின்சாரம் பயன்படுத்தப்பட்டு இரவில் குறைந்த அளவு மின் சுமை உள்ள நிலை ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளைச் சமாளிக்க, குழாய் நீர்த் தேக்க அமைப்புகள் மிகவும் பொருத்தமானவையாகும். ஏனெனில், மின் இணைப்பில் மின் உற்பத்தித் திறனை நிரப்பும் வகையில் உச்ச மின் சுமை நேரத்தில் அவை மின்சாரத்தை உற்பத்தி செய்வதுடன், மின் சுமை குறைவாக உள்ள நேரத்தில் அவை குழாய்களாகப் பயன்படுத்தப் பட்டு, அனல் நீர் மின் நிலையங்களிலிருந்து வெளியாகும் மின் சக்தியைச் சேமிக்கவும் செய்கின்றன. இப்படி இல்லையென்றால், இந்த நிலையங்கள் இரவு நேரங்களில் முழுச் சுமையுடன் இயங்காமல் போய்விடலாம்.

ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில், இத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதில் தமிழ்நாடு மின் வாரியம் மிகுந்த அக்கறை காட்டி வருகிறது.

காடம்பாறை நீர்த் தேக்கத் திட்டப் பணிகள் இவ்வாண்டு துவங்கப்படும். இதன் முதல் 100 மெகவாட் பிரிவானது 1977—78-ல் செயல்படத் துவங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டு கட்டங்களாக நிறைவேற்றப்பட விருக்கும் காடம்பாறை குழாய் நீர் மின் திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டான 1978—79-ல் நிறைவேற்றப் பட்டுச் செயல்படத் துவங்கும்.





# குழந்தையும் அறியுமே!
# தமிழ்நாடு பரிசுச் சீட்டு
# தன்மையில் சிறந்தது!

இன்றே வாங்குங்கள்

## தமிழ்நாடு அரசு
## பரிசுச் சீட்டு

முதல் பரிசு:

# ரூ. 1,00,000

(ஒவவொரு வரிசைககும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுககு முனனும, பின்னும் உள்ள இலககங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிககபபடும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

54-வது குலுக்கல் நாள்

# 10-4-1973



பரிசு சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்

கடிதத தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு: இயககுநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.
2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

# கோயம்புத்தூர் கூட்டுறவு அச்சுக்கூடம் லிமிடெட்

**திருச்சி ரோடு, கோயம்புத்தூர்-18.**

தபால் பை நெ. 1522. தொலைபேசி : 22889.

தலைவர் :

**திரு. A. M. இராசா, எம். ஏ., எம். எல். ஏ.,**

உபதலைவர் :

**திரு. T. S. இராமலிங்கம், பி. எஸ்ஸி.,**

மாநிலத்திலுள்ள எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேவையான புத்தகங்கள், பாரங்கள் முதலியனவும், அச்சியற்றல் தொடர்பான அனைத்து வேலைகளும், அலுவலகங்களுக்குத் தேவையான எல்லாவிதமான எழுதுபொருள்களும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

* மாநிலம் முழுவதிலும் உள்ள
அச்சுக்கூடங்களிலும் சிறந்த அச்சுக்கூடம்
எனப் புகழ் பெற்றது.

* எல்லாவிதமான ரப்பர் ஸ்டாம்புகளும்
தயார்செய்து கொடுக்கப்படும்.

**விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.**

K. மாரப்பன், எம். ஏ.,
செயலாளர்.

With the best compliments from

## UNITED COTTON TRADERS

**45, Dr. Nanjappa Road,**

**COIMBATORE-60018**

Tel. : SAGAYAM

Phone { Office : **35850**
Res. : **34550**

Grams : CONVEYANCE LGB Phone : **30355**

## L. G. BALAKRISHNAN & BROS. PRIVATE LTD

**India House, Trichy Road, Coimbatore-641018.**

MOTOR SALES & SERVICE DEPT

Overhauling Perkins & Tata Diesel Engines
Specialised Servicing of Fuel Injection Equipments;
by qualified & trained staff on most modern & highly precisioned machines.
Metalspraying of Crankshafts & Camshafts by latest scientific method
with latest machineries imported from Europe.

*Authorised Distributors for*

**MICO & BOSCH**

Products for Coimbatore & Nilgiris Districts

BOSCH SERVICE MICO SERVICE

Fuel Injection Service Station branch at **"Appachi Buildings", Ettines Road, Ootacamund-643001**

Grams : CONVEYANCE Phone : 2730

# பரிசு பெற்ற உழவர் பெருமக்கள்

பல்வேறு வகையில் கோவை மாவட்டத்தின் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க ஆவன செய்து வரும் வேளாண்மைத் துறை, உழவர் பெருமக்களிடையே 'வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கிட வேண்டும்', என்ற விரும்பத்தக்க போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தவும், அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கும் முறைகளை உழவர்களிடையே பரப்பவும் வேண்டி, ஆண்டு தோறும் மகசூல் போட்டி நடத்தி வருகிறது. மகசூல் போட்டி கிராம, வட்டார, மாவட்ட, மாநில நிலைகளில் நடத்தப்பட்டு அதில் உயர்ந்த அளவு மகசூல் பெற்ற உழவர் பெருமக்களுக்குப் பரிசும், நற்சான்றிதழும் வழங்கப்படு கின்றன. கோவை மாவட்டத்தில் கீழ்க்கண்ட உழவர் பெருமக்கள் மகசூல் போட்டியில் பரிசு பெற்று உள்ளனர்.

## மாவட்டப் பரிசு பெற்றவர்கள்

| பயிர் வகை. | பரிசு பெற்ற உழவர் பெருமகனின் பெயரும், ஊரும். | பரிசின் வகை. | ஏக்கர் மகசூல் (கிலோ/ரகம்.) |
|---|---|---|---|
| | **1967-68-ஆம் ஆண்டு** | | |
| நெல் | திரு ஜி. சண்முகசுந்தரம், பொள்ளாச்சி | முதற் பரிசு. | 3,431 (ஆடுதுறை-27) |
| நெல் | திரு அர்ஜுன உடையார், பேரூர் | இரண்டாம் பரிசு. | 2,470 (ஆடுதுறை-27) |
| | **1968-69-ஆம் ஆண்டு** | | |
| நெல் | திரு டீ. என். சீரங்க செட்டியார், பெரியநாயக்கன் பாளையம். | முதற் பரிசு. | 3,833 (ஐ. ஆர். 8) |
| நெல் | திரு என். ரெங்கசாமி, பெரியநாயக்கன் பாளையம் | இரண்டாம் பரிசு. | 3,145 (ஐ. ஆர். 8) |
| சோளம் | திரு என். கே. கோபால், கணபதி | முதற் பரிசு. | 2,550 (சி. எஸ். எச். 1) |
| | **1969-70-ஆம் ஆண்டு** | | |
| சோளம் | திரு கே. துரைசாமி நாயுடு, பெரியநாயக்கன்பாளையம் | முதற் பரிசு. | 2,279 (சி. எஸ். எச். 1) |
| | **1970-71-ஆம் ஆண்டு** | | |
| நெல் | திரு கே. எம். மாணிக்கம், குகளூர், கோபி | முதற் பரிசு. | 3,471 (ஐ. ஆர். 8) |

## மாநிலப் பரிசு பெற்றவர்

1969-70-ஆம் ஆண்டில் கொடுமுடியைச் சார்ந்த திரு கே. பி. துரைசாமி அவர்கள், ஐ. ஆர். 8 நெல் பயிரிட்டு, ஏக்கருக்கு 4,847 கிலோ நெல் விளைவித்து மாநில முதற் பரிசு பெற்றுள்ளார்.

1970-71-ஆம் ஆண்டிலும் திரு கே. பி. துரைசாமி அவர்களே ஐ. ஆர். 8 பயிரிட்டு ஏக்கருக்கு 4,618 கிலோ நெல் விளைவித்து இரண்டாம் முறையாக மாநில முதற் பரிசு பெற்றுள்ளார்.

# வெண்பாப் போட்டி

## 52. மிகைநாடி மிக்ககொளல் மேல்

நகைநாடி உன்னருகே நான்வந்தால் தங்க
நகைகேட் டழுவதுமேன் நங்காய் ?—பகையைப்
புகைக்கும் நகைபெரிதா ? புன்னகையா ? தேர்ந்து
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—சி. செள. கருப்பன், திருச்சி-15.

திங்கட் கறையுண்டு தேமாவில் நாருண்டு
பொங்கும் புனற்கும் நுரையுண்டு—எங்கும்
பகுத்துணர்ந்து நன்றாகும் பண்பேகாண் என்றும்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—சிவ. கிருட்டிணன், கணியூர்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி
எல்லையில் பல்பிறவி ஏற்றுப்பின்—நல்ல
வகையறியும் மானிடராய் வாழ அறத்தின்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—அ. குமாரசாமி, தூத்துக்காடு கிராமம்.

காலமெலாம் மேனாட்டுக் கைநாடி நில்லாது
மூலப் பொருள்விளைத்து முன்னேற—நீலப்
புகைவான்கீழ்ப் பாடுபடின் பொன்கொழிக்கும் ''தாய்ப்பூ
மி'' கைநாடி மிக்ககொளல் மேல்.

—எழில்வேந்தன், சென்னை-28.

பல்லிளித்தே நாளும் பகைமுடிக்கும் பொல்லாரின்
கொல்நட்பை இன்றே குழிபுதைத்தே—நல்லோய்
நகையின்றி நன்மைதரும் நல்லோர்தம் நட்பின்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—நூருன்னிசா, பத்ராவதி.

கற்றார் உரைத்தாலும் கல்லாதார் சொன்னாலும்
சற்றும் வெறுப்புதனைச் சாராது—முற்றும்
வகையறிந்தே நாமும் வளமாய் அவற்றில்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—ப. குப்புசாமி, திருச்சி-4.

நகையாடல் என்றும் நலம்பயக்கும் ; நாளும்
பகையாடல் வாழ்வைப் பறிக்கும் ;—சகியே !
புகையாடல் பண்புதனில், பூஆடல் பண்பில்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் கோம்பைச்சிரான், கோம்பை.

'உள்ளத் தனைய துயர்வாகும் என்றதமிழ்
வள்ளுவனார் சொன்ன வழிநிற்போம்—சொல்லில்
பகைநாடிப் பண்பை இழக்காமல் என்றும்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

இப்பாவுக்(கு) எப்பாதான் இப்பாரில் ஒப்பாமோ ?
செப்பியசெந் நாப்போதர் சீர்குறளாம்—முப்பால்
வகையறிந்து வாழும் முறைதெரிந்து நாளும்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—க.ச. இசைகொண்டான், சம்புகுட்டப்பட்டி.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
திரு சி. செள. கருப்பன், கணிதத்துறை,
மண்டலப் பொறியியல் கல்லூரி,
திருச்சி–15.

# வெண்பாப் போட்டி

நாட்டில் அமைதியொடு நாம்வாழ வேண்டுமென
ஏட்டில் எழுதிவிட்டால் என்னபயன் ?—போட்டி
பகையாவும் நெஞ்சகற்றிப் பார்மக்கள் அன்பை
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—சி.மு. சிவலிங்கம், மதுரை-21.

வற்ருக் குறளோன் வகுத்த வழியதனை
முற்ருய்ந்து நம்கலைஞர் முன்செல்வார்—சற்றும்
பகையாது மின்றிப் பகுத்தறிவா லாய்ந்து
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—எஸ். திருநாவுக்கரசு, தூத்துக்குடி

கற்கின்ற நூற்ருெகையில், காணும் திரைப்படத்தில்,
சொற்பெருக்கில் தீங்கருத்தைத் துய்க்காமல்—உற்ற
திகழ்நற் கருத்தேற்றுத் தேர்ந்தாய்ந்து பார்த்து
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

சிந்திக்கக் கற்றுக்கொள் ; சீர்தூக்கி நல்லனசொல்;
நந்தா அறிவொளியை நாடிநில்—மைந்தா !
தகைசான்ற கொள்கைத் தகவுடையோ ஞக
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—சோ. தமிழரசு, ஆலம்பட்டு.

புகைகின்ற தீப்போலும் புன்செயலும் தீய
பகையை மறக்கும்நற் பண்பும்—தொகையாய்
வகைபிரித்து மாந்தரின்நல் வாழ்விற்கு வல்ல
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—மு. அழகிரிசாமி, உதயை.

இரவுபகல் மாறுதல்போல் ஈண்டுமக்கள் வாழ்வில்
உறவுபகை உண்டிங்கே உண்மை—இரவில்
நகைகாட்டும் விண்மீன்போல் நன்மைதீமை ஆய்ந்து
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—இரா. தியாகராசன், கத்திரிப்புலம்.

குறையொன்றைக் கூறுவதே கொள்கையாக் கொண்டு
நிறைபலவும் சொல்லாத நெஞ்சே !—அறிவாய்
'' குணம்நாடி குற்றமும் நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்ககொளல் '' மேல்.

—புலவர் வெ.வா. நடராசன், சென்னை-5.

நல்லழகுள் நாமுணரா நச்சரவம் வாழ்ந்தாலும்
வெல்லத்துள் வெவ்விடமும் தோய்ந்தாலும்—சொல்லில்
பகைதேடித் தொல்அன்பு பாய்ந்தாலும் என்றும்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் நா. மலையமான், பட்டினப்பாக்கம்.

பகைவனையும் அன்போடு பார்த்திருக்க, ஆங்கே
நகைமுகமும் கொண்டிடுநீ நன்கு !—தகைசால்
வகையாலே நல்லார்மற் றல்லாரின் பண்பில்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

நல்லறிஞர் நட்புறவு, நங்கையரின் கற்புறவு,
வல்லோர்தம் வீர வரிவுணர்வு—நல்லோர்
தகைசான்ற வாழ்வியலின் தன்மை, இவற்றின்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—பி.சி. அசனல்லி, அரக்கோணம்.

ஏரான நற்பணிகள் எம்மரசு செய்துளதில்
ஓரோர் சிறுகுறைகள் உண்டென்ருல்—சீரார்
முகைநாடித் தேனருந்தி முள்மறக்கும் வண்டாய்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—த.ச. தவசிமணி, அருப்புக்கோட்டை

தீட்டுமுய ரைந்தாண்டுத் திட்டமும், வங்கி-உந்தை
நாட்டுடைமை யாக்குதலும் நன்மைக்கே !—வாட்டும்
பகையொழிக்கப் பாடுபடும் பாராள்வோர் போக்கில்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

ஆயிரவர் ஆள நினைந்தெழினும், வென்றிடினும்
தூயசன நாயகத்தின் தோன்றல்காள் !—ஆய்ந்து
தகைநாடிச் சால்பின்மை நாடி இரண்டுள்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—சு. பொன்னுராசு, சின்னவிரம்பட்டி.

ஓங்குசிற் றூர்கள்முன் னேறிடவே பாடுபடும்
தூங்கா இளைஞரணித் தொண்டரெலாம்—வாங்கும்
தொகைநாடிச் சோராமல் மேலாம் அத்தொண்டின்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—இராச. ஆனந்தன், பூதலூர்.

## வெண்பாப் போட்டி

நஞ்சால் பிழைத்திடலாம் ; நல்லமுதால் செத்திடலாம் ;
வஞ்சமனம் கூட வரம்தரலாம் ;—நெஞ்சே !
வகையாக ஆய்ந்து வளம்பெறவே என்றும்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—அரிமதி, தென்னகன், புதுச்சேரி.

பாணர் கவியதனில் பல்வேறு பேதங்கள்
காணல் உலகினிலே கண்கூடு !—வீணே
பகைநாடி வாழாது பண்பொன்றே மேலாய்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

— தமிழ்க்கனல், கோவை-25.

கொஞ்சும் இளமைநலம் குன்றினளே என்றேதன்
வஞ்சி துணைவெறுக்கும் வன்நெஞ்சீர்—பஞ்சின்
நகைதோன்றின் உம்தலையே நாடீரோ ? கற்பின்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—ப. வேங்கடாசலன், கருக்காடிப்பட்டி.

வாழ்ந்தாலும் ஏசும், வலியிழந்து தாழ்ந்துநாம்
வீழ்ந்தாலும் ஏசும் வியனுலகம்—ஆழ்ந்து
தகைசான்ற மேலோர்தாம் தந்த வழியில்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—கோ. பாலசுப்பிரமணியன், கும்பகோணம்.

இக்காலத் தேயெழும் எண்ணிலா நூல்களைத்
தக்கார் மதிக்குந் தரத்திலே—மிக்க
நகையும் உவகையும் நற்கருத்துங் கண்டே
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—டி.யு. சுப்பையா, புயங்கனூர்.

நன்றே முடிப்பாரில் ; நாடின்பல் தீமைகளே
என்றும் இழைப்பாரில் ; ரெண்டும்செய்—கின்றார்
வகைநாடிக் கண்டறிய வள்ளுவர்செய் தீர்வாம்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—அரு. காந்தி, கள்ளிக்குடி.

நல்லனவுந் தீயனவும், நாட்டில் நிலவிடினுங்
கல்வியொடு செல்வங் கதித்தோங்க—ஒல்லும்
வகையால் அரசினர்செய் வாகார் பணியில்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—வித்துவான் நா. சிவராமமுத்துக்குமரவேல், தேனி.

நாடி மிகவருந்தி நாடெங்கும் தேடினுமே
கோடியில் யாருமிலர் குற்றமிலார்—தேடித்
தகைசால் குணமோடு குற்றம்தான் ஆய்ந்தே
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் சு. இராமானுசன், ஆ. தெற்கூர்.

நாட்டு நலன்கருதும் நல்லபல திட்டத்தால்
கேட்டைச் சிலரடைதல் கூடுங்காண் !—கேட்டைப்
பகைக்கண்ணால் பார்த்துப் பழிதூற்றிப் பேசேல்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் வெ. இரா. இராசகோபாலன், ஆலங்குடி.

துரும்பும் எரிபொருளாம் தொண்டுள்ளுந் தானென்
றரும்பும் அவாவுண்டா மாக—விரும்பும்
வகையோடு வாழ்வில் வளமூட்டும் பண்பில்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் அ. ஆறுமுகம், திருச்சி-20.

சாதனையைக் காட்டும் தகுந்த விளம்பரத்தைக்
பேதமையால் தூற்றுதல் பெட்பாமோ ?—மோதும்
புகையால் நெருப்பறிந்து போற்றுதார் உண்டோ ?
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

சந்தைக்கு வந்தவற்றைச் சல்லடைக்கண் கொண்டாய்ந்து
சிந்தைக் குகந்தவற்றைத் தேர்ந்திடுக—செந்தேன்
வகையுணரும் வைத்தியர்போல் வாங்குபொருட் பண்பின்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் அ.வே. காசிநாதன், கோடாலிக்கருப்பூர்.

யார்உலகில் மாசற்றோர் ? யானைக்கும் கால்சறுக்கும்
பார்உலகின் பண்பிதுவே ! யார்மறுப்பர் ?—சீர்நல்
வகைதேடி வாழநனி நல்லறிஞர் போல்நாம்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—ஆ. பிளாரன்ஸ் புஷ்பத்தாய், தளவாய்புரம்.

தன்னலம் பேணான் ; தரணிக்குத் தாமென்பான் ;
சொன்னசொல் காக்கின்ற சோர்வில்லான்—மின்னும்
பகைசாடி நாட்டின் பயனெண்ணும் மிக்கோன்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—வீர முருகேசன், தருமபுரி.



# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

## • சேமிப்புப் பழக்கமே எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்



சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | ரூ. 337. 50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை,

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு

தமிழரசு

ஆதாயம் இல்லாமல் பேசுவோர், ஆதாரம் இல்லாமல் பேசுவோர் என்று இரண்டு வகை உண்டு.

மணிவாசகன்—நர்மதா இவர்களை நோக்கி ஓடிவந்த கூட்டத்தினரின் பேச்சிலே ஆதாயமும் இல்லை, ஆதாரமும் இல்லை; இவை இரண்டும் இல்லையே என்ற கவலையும் அவர்கள் மனத்துள் இருப்பதாகத் தெரியவில்லை....

ஒரு ஆண், ஒரு பெண், ஒரு குழந்தை என்ற கோணத்தில் பார்த்தால் அவர்கள் கணவனும் மனைவியுமாக இருந்து, கையிலிருப்பது அவர்களின் குழந்தையுமாகத்தான் இருக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் தமக்குள் ஏதோ முடிவுகட்டியபடி அவர்களை நெருங்கி வந்தது அந்தக் கூட்டம்.

ஓர் அரைநரைக் கிழவர் வலிய வந்து சமாதானம் பேசத் தொடங்குகிறார்: 'தம்பி.. 'என் குழந்தைதான்', 'இல்லையில்லை என் குழந்தைதான்' என்று நீங்கள் சண்டை போடுவது தவறு..வயதிலே பெரியவன், நான் சொல்வதைக் கேளுங்கள்!'

# உடலுக்கும் இரண்டு கிளைகள்



டி. என். சுகி சுப்பிரமணியன்

வந்து நிற்கும் கூட்டத்திற்குப் பெரும் வியப்பு. பரபரப்பான குடும்பச் சண்டை ஏதோ நிகழப் போகின்றதே, அதைத் புரிந்து கொண்டு விலகட்டும் என்று நயமாக நம்மை விரட்டுகிறார்..வா..வா'' என்றபடியே அவசரமாகப் புறப்படுகிறார்.

## 5. உதகையில் ஓர் எரிமலை

''புருஷன் பெண்சாதிக்குள் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் வந்தாலும் குழந்தை பொதுச் சொத்து. குடும்பப் பூசல் குழந்தையைப் பாதிக்கக் கூடாது; இரண்டாவது கருத்துக்கு இதில் இடமேயில்லை!'' என்கிறார் ஒரு அம்மணி—அரைநரைக்கிழவரின் இல்லத்தரசி.

உதகைக்குச் சுற்றுலா வந்திருக்கும் இடத்தில், நடக்காத கல்யாணத்திற்குப் பிறகு, பிறக்காத தம் குழந்தைக்காகப் பரிந்து பேச வந்திருக்கும் அந்தப் பெரியவர்களைக் கண்டு மணிவாசகனுக்குச் சிரிப்புப் பிறக்கிறது.

அலையலையாகச் சிரிப்பு. ஆனந்த வெள்ளமாகச் சிரிப்பு; அவனுடைய சிரிப்பிலே நர்மதையின் இதயம் ஒன்றிக் கலக்கிறது. சூழ்நிலையை மறந்து அவளும் சிரிக்கத் தொடங்குகிறாள். அலைகளுக்கு நிழல் இருக்குமானால் எப்படியிருக்கும்? மணிவாசகனின் சிரிப்புக்கு மறுமொழி போல் சிரிக்கிறாளே நர்மதா, அதைப் போல இருக்கும்.

தீர்த்து வைக்கும் புண்ணியம் தம்மைச் சேரட்டுமே என்ற அக்கறையுடன் வந்தவர்கள் அனைவரும், ஆணும் பெண்ணுமாக அலையலையாகச் சிரிப்பதைப் பார்த்ததும் திகைத்து நிற்கிறார்கள்.....

''ஐயா....நாங்கள் இருவரும்..'' என்று நர்மதா ஆரம்பிப்பதற்குள், ''அவர்கள் தீர்ப்பைச் சொல்லட்டும், பேசாமலிருங்கள் மிஸ் நர்மதா'' என்று குறுக்கிட்டுக் கூறுகிறான் மணிவாசகன்.

''புறப்படு ரஞ்சிதம்.... போகலாம்....'' என்று தம் மனைவியை அழைக்கிறார் அரைநரைக் கிழவர்.

''என்னங்க இது..?'' என்று தயங்குகிறாள் அந்த அம்மணி.

''அவர்தான் 'மிஸ் நர்மதா' என்று சொல்லி விட்டாரே .. அவர்கள் கணவன்-மனைவி அல்ல! அதற்கும் மேலே.... புத்தியுள்ளவன் புரிந்துகொள்ளட்டும்,

அவ்வளவு விரைவாக அவர் அந்த இடத்தை விட்டுப் புறப்படுவதற்கு வேறொரு காரணமும் உண்டு..அருகில் வந்து பார்த்த பிறகுதான் மணிவாசகனை இதற்கு முன் எங்கோ பார்த்திருப்பதாக நினைவு வந்தது. அவன் யாராக இருக்கக் கூடும் என்பதைச் சிந்தித்தறிய அவருக்குச் சிறிது தனிமை தேவைப்படுகிறது. அதனாலேயே அவர் விரைவாக விலகிச் செல்கிறார்.

அவள் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கத்தில் வெறும் வாயை வேகமாக மென்றபடி மற்றவர்களும் பிரிந்து செல்கிறார்கள்.

பத்திருபது அடி தள்ளிச் சென்றதும் அந்தப் பெரியவர் திரும்பிப் பார்க்கிறார். மணிவாசகன் யார் என்பதை இனங் கண்டுவிட்டதற்கான அறிகுறிதான் அந்தப் பார்வை!

அமைதியைக் கலைக்க வேண்டுமென்ற உணர்வில், ''அந்தப் பெரியவரை எனக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டது!'' என்கிறான் மணிவாசகன்.

''அவர் இங்கிதம் தெரிந்தவர், அதனால்தானே?''

''ஆமாம்... இனிமையான சூழ்நிலையில் நம் இல்லறச் சண்டையைத் தொடர அனுமதித்து விட்டுப் போய் விட்டார் அல்லவா?''

''இந்தத் தனிமை, சண்டை போடுவதற்காகத்தான் இருக்க வேண்டுமா?''

''இதயங்கள் ஒன்றிக் கலக்கவும் இந்த இனிமையும் தனிமையும் உதவட்டுமே..''

'' ஓ ! ''

'' நர்மதா.. ''

'' ...... ''

உதகையின் குளுமை அவர்கள் உள்ளங்களுக்கு இடம்பெயருகின்றது. எல்லைக்கோடு தெரியாமல் தழுவுகின்ற மாநிலங்களைப் போல் இதயங்கள் இரண்டும் இயல்பாக ஒன்றி இணைகின்றன.

இருவர் பிடிக்குள்ளும் சிக்கியிருக்கும் குழந்தை சிணுங்குகிறது.... ''என்னை மறந்து விடாதீர்கள்'' என்ற எச்சரிக்கையோ?

''நர்மதா. இந்தக் குழந்தை யாருடையது என்று தெரியவில்லையே...''

'' எங்கிருந்து வந்திருக்கும் என்பதும் புரியவில்லையே!''

'' எவ்வளவு அழகான குழந்தை !''

'' குழந்தை என்றால் உங்களுக்குக் கொள்ளை ஆசையா? ''

'' பாசம் பெண்களின் தனிச் சொத்து என்பதாக நினைப்போ? என் நெஞ்சிலும் இரக்கம் ... பாசம் எல்லாம் இருக்கிறது..''

'' குழந்தையை நாமே எடுத்துக்கொண்டு போய் விடலாமா?''

'' நான் சட்டம் படிப்பவன் அம்மணி.. ஊரார் பொருளை அனுமதியின்றி எடுப்பது சட்டப்படி தவறு..''

'' உடைமைக்காரர் யாரென்பதுதான் தெரியவில்லையே ! ''

'' தெரியாத வரையில் இது சட்டத்தின் குழந்தை. அரசினரின் குழந்தை....' காவல் நிலையத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பதுதான் நம் கடமை .. வா....போகலாம்..''

'' குதிரைச் சவாரிக்குத்தான் என் துணை வேண்டும். குழந்தையை ஒப்படைக்கப் போகும் போது கூட என் துணை வேண்டுமாக்கும்....அதுவும் காவல் நிலையத்திற்கு ! ''

'' காவல் நிலையம் என்ன, நீதி மன்றத்திற்குக் கூட என்னோடு உன்னை அழைத்துப் போக நான் தயாராகத்தான் இருக்கிறேன்''

'' ஒரு டாக்டர், நீதிமன்றத்தில் வந்து நிற்பதா..வேடிக்கைதான் ''

'' வேடிக்கையோ.. விளையாட்டோ..அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.... முதலில் புறப்படு காவல் நிலையத்திற்கு........''

'' குதிரைகளை எப்படித் திருப்பி அனுப்புவதாம் ?''

'' மனிதர்களுக்குத்தான் பாதை மறந்து போகும் ; மாறியும் போகும் ; குதிரைகளுக்கு அந்தத் திண்டாட்டம் இல்லை. நேரான இடத்தில் தானாகப் போய்ச் சேர்ந்து விடும் !''

நர்மதாவுக்கு மறுமொழி கூறியபடியே எதிர்த்திசையில் ஒற்றையடிப் பாதையில் ஏறிச் செல்கிறான் மணிவாசகன். குழந்தை எந்தப் பாதை வழியே வந்திருக்கக் கூடும் என்பதை அறிய முயற்சி. சுனையை அடுத்து மேல் நோக்கிப் போகும் ஒற்றையடிப் பாதையில் நாலடி நடந்த பிறகு மேட்டுக்கு அப்பால் சமவெளி. அதன் முடிவில் சிறு சிறு கட்டடங்கள். ஏதேனும் வீடுகள்....கடைகள் இருக்கலாம்... அல்லது காவல் நிலையமாகக் கூட இருக்கலாம்.

'' போக்கிரிப் பயலே.''

—என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்புகிறான் மணிவாச



கன். அவனுடைய அதிர்ச்சியைக் கண்டதும் நர்மதா கலகலவெனச் சிரிக்கத் தொடங்குகிறாள்..

"என்ன சிரிப்பு? எனக்கு அதிர்ச்சியோ, அவமானமோ ஏற்பட்டால் உனக்குச் சிரிப்பு வருகிறதோ?"

"கூப்பிட்டது யார், கூப்பிட்டது யாரை என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் உங்களுக்கு அதிர்ச்சி வருவானேன்? இங்கே பாருங்கள். குழந்தையைத் தேடிக் காவலர்களே வந்துவிட்டார்கள்" என்கிறாள் நர்மதா.

ஏரிக்கரையைச் சுற்றிச் சுற்றித் தேடி வந்த காவலர்கள் 505-ம், 606-ம் தான், நர்மதாவின் கையில் குழந்தையைப் பார்த்ததும் உற்சாக மிகுதியால் ''போக்கிரிப் பயலே'' என்று கூவியிருக்கிறார்கள்.

அவர்களின் பின்னால் கற்பகம் பரபரப்பாக வந்து நிற்பதைப் பார்த்ததும் நர்மதாவுக்கு மன ஆறுதல்......... 'கற்பகமே குழந்தையின் தாய்' என்ற நம்பிக்கை நர்மதாவுக்கு.... 'குழந்தையின் தாயைக் கண்டு பிடித்து விட்டோம்' என்ற நிம்மதி கற்பகத்துக்கு.

முந்தைய இரவு தன் பொறுப்பில் விடப்பட்டிருந்த குழந்தை காணப்படவில்லையே என்ற வேதனையில் துடித்துக்கொண்டிருந்த கற்பகத்திற்கு, குழந்தை கிடைத்த மகிழ்ச்சியுடன் குழந்தைக்குப் பெற்றோர்களும் கிடைத்துவிட்ட நிம்மதியும் சேரவே நெஞ்சுக்கு இதமாகத் தோன்றுகிறது.

"ஏட்டய்யா.. குழந்தை தன்னோட அப்பா அம்மாவைக் கண்டுபிடிச்சுட்டுது" என்று மகிழ்ச்சி மேலிடக் கூறுகிறாள் கற்பகம்.

"அப்பாவா?"

"அம்மாவா?"

—மணிவாசகனும் நர்மதாவும் ஏக காலத்தில் கூவுகிறார்கள்.



'' சார், இது எங்கள் குழந்தையில்லே ''

''நாங்கள் கணவன்—மனைவியுமில்லே''

கற்பகத்திற்கும் காவலர்களுக்கும் இது பெரும் அதிர்ச்சி .... இவர்கள் யாராக இருந்தால் இனிமேல் அவர்களுக்கென்ன? குழந்தையின் பெற்றோரைக் கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு இன்னும் தீரவில்லையே!

'' நீங்க ரெண்டு பேரும் — '' என்று சந்தேகத்துடன் மீண்டும் கேட்கிறார் ஏட்டய்யா..

'' சத்தியமாக நாங்கள் இந்தக் குழந்தையின் தாய் தகப்பன் இல்லே.. அவர் யாரோ.. நான் யாரோ'' என்கிறாள் நர்மதா. அவளை இடைமறித்து, ''அவங்க யாரோ,நான் யாரோவாகத்தான் இருந்தோம் போன நிமிஷம் வரை....இந்தக் குழந்தையைக் காப்பாற்றுவதற்காக ஓடிவந்த ஒரு விநாடியில், ஒரே நோக்கத்தோடு செயல்பட்ட அந்த ஒரு நிமிடத்தில் நாங்கள் யார் யாரோ என்ற நினைவு மறந்து விட்டது.... எங்களுக்குள் நெருக்கடி பிறந்து விட்டது..'' என்கிறான் மணிவாசகன்.

அறிமுகமில்லாத காவலர்களிடம் அவன் அவ்வாறு கூற வேண்டியதன் நோக்கம் ? தன்னை நர்மதைக்கு முழுமையாக உணர்த்துவதற்கு இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டதுதான் காரணம்....' வாய்ப்புகளைப் பயன்படுத்துவதில் வல்லவனாயிற்றே மணிவாசகன் !

ஏட்டய்யாவின் முகத்தில் இளஞ்சிரிப்பு. '' பரவாயில்லே ! பெற்றவர்களைப் பிரிஞ்சு வந்த குழந்தை இங்கே இரண்டு பேர்களைச் சேர்த்து வைக்கும் பாலமாகவும் இருந்திருக்கிறானே.'' என்று பாராட்டுகிறார். சிரித்துப் பேசிய நேரத்திலும் அவர் மனத்துள் கவலே.. இந்தக் குழந்தை அனாதையாகி விடக் கூடாதே என்ற பெருங்கவலே..

அதே நேரத்தில்—

''கற்பகத்தக்கா— கற்பகத்தக்கா..'' என்று கூக்குரலிட்டபடி குதிரைக்காரக் கோவிந்தன் ஓடிவருகிறான்.

'' என்ன கோவிந்தா?'' என்று பதறுகிறாள் கற்பகம்.

'' ஒன்னை எங்கெல்லாம் தேடறது ? உம் புருசனை வீட்டுக்குள்ளே பூட்டிப் போட்டுட்டே.. புள்ளையைத் திண்ணையிலே தூங்க வச்சிட்டு வந்துட்டே.. உம் புருசனுக்கு காக்கா வலிப்பு.. புள்ளேக்குப் பசிமயக்கம்..''

''அடிப் பாவி!'' என்று கதறியபடி புறப்படுகிறாள் கற்பகம். புறப்பட்டவள், '' போகலாமுங்களா ஏட்டய்யா?'' என்று அனுமதி கேட்டுத் தயங்கி நிற்கிறாள்.

'' போம்மா—போ..போ..'' என்று தலையசைக்கிறார் ஏட்டய்யா....புயலாகப் புறப்பட்டுப் போகிறாள் கற்பகம்.

மணிவாசகன், ''இந்தப் பெண் உங்கள் காவலில் இருப்பவளா?'' எனக் கேட்கிறான்.

'' ஆமா சார்.. முன்னெல்லாம் ஒரு மாதிரி..இப்ப பாவம், நல்ல பெண்ணாகத்தான் நடந்துக்கிறா....'' என்கிறார் ஏட்டய்யா. கோவிந்தன் குறுக்கிட்டு, 'கற்பகத்தக்கா புருசனுக்கு காக்கா வலிப்பு....தேரு திருவிழா, கூட்டம், கொண்டாட்டம்னு வெளியிலே வந்தாருன்னு சந்தோஷமும் ஆகாது..சந்தடியும் ஒத்துக்காது.....அதுக்காக வீட்டுக்குள்ளாற பூட்டிப் போட்டுட்டுக் கற்பகம் வெளித் திண்ணையிலே படுத்திருக்குது..அதனாலே சந்தேகப்பட்டு............'' என்று விவரம் கூறுகிறான்.

'' ஒரு தடவை தவறு செய்திருந்தால் அதையே தொடர்ந்து செய்வார்கள் என்று தீர்மானமா? திருந்தியிருக்கலாமே என்ற நம்பிக்கை ஏன் உங்களுக்கு வருவதில்லே?'' என்று சீறுகிறாள் நர்மதா.

ஏட்டய்யா பதில் கூறுவதற்குள், ''சாதாரண மனிதர்களுக்கும், சட்டத்தின் கண்களுக்கும் இதுதான் வேறுபாடு நர்மதா'' என்கிறான் மணிவாசகன்.

நர்மதாவின் இதயம் முழுவதும் இரக்கம். அவள் பார்வையில் அந்தப் பரிவு தெரிகின்கின்றது.

'' நர்மதா! ஒரு டாக்டரின் இரக்கம் கற்பகத்தின் கணவனுடைய நோயைத் தீர்க்கலாமே..'' என்கிறான் மணிவாசகன்.

'' ஒரு வக்கீலின் திறமை அவள் மேலுள்ள கறையைப் போக்கலாமே'' என்கிறாள் நர்மதா.

,' நீ டாக்டர் !''

'' நீங்கள் வக்கீல் !''

'' நாம் இருவருமே சமுதாயத்துக்கு நன்மை தர வேண்டியவர்கள்.''

'' போகலாமா !''

'' புறப்படு.... ''

'' குழந்தை ?''

'' போலீசாரிடம் ஒப்படைத்து விட்டோமா..... பெற்றவர்கள் தேடி வருவார்கள் காவல் நிலையத்திற்கு'' என்று மணிவாசகன் கூறியதும் ஏட்டய்யா, ''ஆமாம் ..அட்ரஸைக் கண்டுபிடிக்க போஸ்டாபீஸ்.. ஆளைக் கண்டு பிடிக்க போலீஸ் ஸ்டேஷன்!'' என்கிறார்.

மகனைப் பிரியும் தாயைப் போல் குழந்தையின் நெற்றியில் முத்தம் கொடுத்து விட்டுப் புறப்படுகிறாள் நர்மதா.


# தமிழரசு

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 10-00 |
| அரையாண்டு | ரூ. 5-00 |
| தனி இதழ் | 40 காசு. |

'' ஏட்டய்யா, குழந்தையின் பெற்றோர் தேடிவரவில்லை யானால்..'' என்று மணிவாசகன் கேட்கவும், '' இரண்டு நாட்கள் எங்கள் பொறுப்பில் வைத்திருந்து பார்ப்போம். யாருமே தேடி வரவில்லை என்றால் மேலிடத்துக்குத் தகவல் அனுப்புவோம்; அனுப்பி விட்டு, இரண்டு மைல் தள்ளி ஒரு பாதிரியார் இருக்கிறாரே, அவரிடம் ஒப்படைத்து விடுவோம்.. அவர் நடத்தும் அனாதை இல்லத்திலே இவனுக்கு அடைக்கலம் கிடைக்கும்!'' என்று மறுமொழி கூறுகிறார் ஏட்டய்யா.

பால்வடியும் முகத்தோடும் பசுமைச் சிரிப்போடும் மலர்ந்து நிற்கும் இந்தக் குழந்தை அனாதையா? இருபத்தி நாலு மணி நேரத்திற்குள் இருபெண்களின் தாயன்பைப்பெற்ற இந்தக் குழந்தை அனாதையா ....?

ஆண்டவனே, இந்தக் குழந்தை அனாதையாகிவிடக் கூடாதே என்ற பிரார்த்தனை அனைவரின் நெஞ்சிலும் குடிகொண்டிருக்கிறது..

கோவிந்தன் வழிகாட்ட, மணிவாசகனும் நர்மதாவும் கற்பகத்தின் குடிசை நோக்கிப் போகிறார்கள்.

கையில் குழந்தையுடன் நிற்கும் காவலர் 505-ஐப் பார்த்து, ''ஏனய்யா நின்னுகிட்டிருக்கே? நட போலீஸ் ஸ்டேஷனுக்கு!'' என்கிறார் ஏட்டய்யா.

'' சார்....குற்றவாளி நான் இல்லே!''

'' சொல்றதை ஸ்டேஷன்லே வந்து சொல்லும்.... நட.... நட என்று மிரட்டியபடி முன்னால் நடக்கிறார் ஏட்டய்யா.

காவலர் மனத்துள் நிறைந்திருக்கும் நகைச்சுவை உணர்வை ரசித்துச் சிரிக்கிறான் ரோமியோ நண்பனைத்தேடிக்கொண்டு ஏரிக்கரைப் பக்கமாக வந்து நின்றவனுக்குக் காவலர்களின் நகைச்சுவை கருத்துக்கு விருந்து.

கண்ணுக்கு விருந்து தேடிப் பார்வையைச் செலுத்தியவன், மணிவாசகனும் நர்மதாவும் சேர்ந்து போகின்ற காட்சியைக் காண நேருகின்றது.

உதகையில் ஓர் எரிமலை—

உற்ற நண்பனின் போக்கைக் கண்டு ரோமியோவின் உள்ளத்தில் வெடித்த எரிமலை...!

எரிமலையின் தீச்சிதறல் ஒன்று சென்னையை நோக்கிப் புறப்படுகிறது...

## 6. பெண்ணுருவில் வந்த பெருந்தெய்வம்

நல்ல மருமகன் கிடைக்கப் பெற்றவன் ஒரு மகனை அடைந்தவன். தீய மருமகன் கிடைக்கப் பெற்றவன் தன்மகளைஇழந்தவன். மகளுக்கு மாப்பிள்ளை தேடும் எந்தத் தந்தையின் மனத்திலும் இந்தக் கருத்துத்தான் அலை மோதிக் கொண்டிருக்கும்.

பாண்டித்துரையின் நெஞ்சம் அலைமோதாமல் அமைதியாக இருப்பதற்கான காரணங்கள் இரண்டு. ஒன்று, அவர்நெஞ்சம் ஆழ்கடல்; மற்றொன்று, மணிவாசகன் மேல் அவர் வைத்துள்ள நம்பிக்கை. மகளின் திருமணம் பற்றித் தகப்பன் கொள்ள வேண்டிய பரபரப்போ கவலையோ இன்றி அவர் மிகவும் தெளிவாகவே இருக்கிறார்.

'' அப்பா.. ஊட்டியிலிருந்து ட்ரங்கால்......—உங்களுக்குத்தான்!'' என்று ராதை அழைத்ததும் '' மன்னிக்க வேண்டும் முத்தையா.. ஒரு விநாடியில் வருகிறேன்'' என எழுந்து போகிறார்.

' சாப்பாட்டைச் சீக்கிரம் முடிக்க முடியாமல் இதென்ன குறுக்கீடு ' என்று மனத்திற்குள் சிணுங்குகிறாள் முத்தையாவின் மகள் செண்பகம்.

அவள் பசியை உணர்ந்த ராதை ஒரு தட்டு நிறைய வறுவலும் பிஸ்கெட்டும் எடுத்துக் கொடுக்கிறாள்.

அடுத்த அறையில்—

'' ஹலோ.. நான் பாண்டித்துரை பேசுகிறேன்.. ஆமாம்.. வணக்கம்... வடிவேலுவா? ஊட்டியிலிருந்தா..... என்று கேட்ட பாண்டித்துரை, ஊட்டியிலிருந்து பேசும் வடிவேலு யாராக இருக்கலாம் என ஒரு விநாடி நிதானிக்கிறார்.

> தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் சட்டம் 1961-ன் படி கோவை மாவட்டத்தில் கோயம்புத்தூர், அவிநாசி, பல்லடம், உடுமலைப் பேட்டை, பொள்ளாச்சி ஆகிய 5 வட்டங்களில் இருந்தும், டிசம்பர் 1972 முடிய 999·02 ஏக்கர் உபரிநிலம் கிடைத்துள்ளது. உபரியாகக் கிடைத்த 999·02 ஏக்கரில், 878·28 ஏக்கரை 311 நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்து தரப்பட்டுள்ளது. இவ்வாறு ஒப்படை செய்து கொடுத்த பரப்பில், 253·32 ஏக்கர் இராணுவத்தில் பணியாற்றியவர்களும், 339·55 ஏக்கர் வேளாண்மைக் கூலி வேலை செய்பவர்களும், 105·60 ஏக்கர் குத்தகையாகச் சாகுபடி செய்துவரும் நிலமற்றவர்களும் 119·52 ஏக்கர் அரிசனங்களும் பெற்றுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

நெற்றிப் பொட்டை விரலால் அழுத்திச் சிந்தனை செய்தவர், நினைவுக்கு வந்தவராக, ''ஓகோ! கோயம்புத்தூர் வடிவேலுவா... வணக்கம்.. வணக்கம்..'' என்று பேச்சைத் தொடர்கிறார்.

'' திருமண விஷயம்தானே.. அதைத்தான் முன்னமே சொல்லியிருக்கிறேன்.. என் மருமகன் படிப்பு முடிந்ததும்— ''

'' உங்கள் மருமகன் படிப்புக்கும், உங்கள் மகள் திருமணத்திற்கும் இனிமேல் முடிச்சுப் போட வேண்டாம்..'' என்று மறுமுனையிலிருந்து குரல் வருகிறது.

'' என்னது?'' என்று பாண்டித்துரை சிரிக்கிறார்.

'' ஆமாம்!..சிரித்து மழுப்ப வேண்டாம். ஆறுமாதத்திற்கு முன்னால் நீங்கள் சொன்ன முடிவை நானும் ஏற்றுக்கொண்டேன். உங்கள் மகள் ராதையை என் மகனுக்காகக் கேட்ட விவரத்தை மறந்து விட்டேன். ஆனால் இப்போது நானே மீண்டும் கேட்கிறேன் என்றால்...''

'' எனக்குத் தெளிவுபடவில்லை. விவரமாகச் சொன்னால் நல்லது.

'' கொஞ்ச நேரத்துக்கு முன்னர் தான் நானும் என் மனைவி ரஞ்சிதமும் உங்கள் மருமகனையும் அவன் மணந்து கொள்ளப் போகும்.......''

''மணிவாசகனைப் பற்றியா பேசுகிறீர்கள் ?''

ஆமாம். சட்டக் கல்லூரி மாணவர்களுடன் உதகைக்குச் சுற்றுலா வந்திருக்கும் திருவாளர் மணிவாசகனைப் பற்றித் தான் நான் பேசுகிறேன்.''

அதன்பின்னர் பாண்டித்துரை அதிகம் பேசவில்லை. 'ஆமாம்' 'இல்லை' 'இருக்காது' என்பது போல் நறுக்குத்தெறித்து நாலே வார்த்தைகள் . . . . .

தொலைபேசியில் பேசுபவர் வடிவேலு. கோயம்புத்தூரில் பெரிய புள்ளி. பாண்டித்துரையின் சம்பந்தியாக வரவேண்டுமென்று ஆசைப்பட்டு இன்னும் அதற்காக முனைந்து நிற்பவர். 'ராதை, என் தங்கை மகன் மணிவாசகனுக்குத்தான் !' என்று பாண்டித்துரை தீர்மானமாகச் சொல்லி விட்டபடியால் ஒதுங்கிச் சென்றவர், மணிவாசகனை மற்றோர் பெண்ணுடன் உதகையில் ஏரிக்கரையை அடுத்த சுனையருகில் இணையாகப் பார்த்தவுடன் பரபரப்பாகத் தொலைபேசியின் எண்களைச் சுழற்றி விட்டிருக்கிறார் ! இந்தச் சேதி தெரிந்தால் இங்கே எத்தனை இதயங்கள் சுழன்று துடிக்கும் என்பதை எண்ணிப் பார்க்க அவருக்கு அக்கறையுமில்லை, அவகாசமும் இல்லை !

மணிவாசகன் ராதையை மணக்கப் போவதில்லை. ராதை கன்னிப் பெண்ணாகவே வாழ்ந்து விடவும் முடியாது. வேறு எவரேனும் ராதையைமனைவியாக்கிக் கொள்வதற்குள் தம் மகனுக்கு மணமுடித்துவிட வேண்டுமென்ற வேகம் அவருக்கு. . . . .

பாண்டித்துரை தம் மருமகனின் போக்கை எண்ணிக் கூட வருந்தவில்லை ; அவன் போக்கைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு அவசரமாகச் சம்பந்தம் பேசும் வடிவேலுவின் மன விகாரத்தை எண்ணியே வருந்துகிறார். . . . .

அடுத்தவரின் இழப்புகளைக் கணக்கிட்டுத் தமக்கு நன்மை தேடும் அளவுக்கு அவ்வளவு விரைவாகவா இந்த அவசர யுகம் இயங்கிக்கொண்டிருக்கிறது?

அட ஆண்டவனே !

'' வடிவேலு. . நீங்கள் உங்கள் சுற்றுலாவை முடித்துக்கொண்டு கோயம்புத்தூர் வரும் தேதியைத் தெரிவியுங்கள். நானே தொடர்பு கொள்கிறேன் . . . . நன்றி. . . . . . வணக்கம். . . . ''

மற்றவர்களாக இருந்தால், தன் மருமகனைச் சுற்றி வரும் மங்கை யார், எவர் என்ற செய்திகளைச் சேகரிப்பதில் பரபரப்புக் காட்டுவார்கள். இந்தப் பாண்டித்துரைக்கு அதில் பாதி—பாதி என்ன—துளிக்கூட அக்கறை இல்லையே என்ற ஆதங்கத்துடன் பேச்சை முடித்துக் கொள்கிறார் வடிவேலு.

காந்தி நூற்றுண்டு விழாவையொட்டி, முதல்வர் கலைஞர் ''காந்தி நினைவு'' படிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தினர். அதற்கேற்ப அரசு ஆணை 11866, சமூகநலம், 28-11-1970-ன் படி அது செயல்படுத்தப்படுகிறது. கோவை மாவட்டத்தில் 1970-71-ஆம் ஆண்டில் இரு மாணவர்களும், ஒரு மாணவியும் பயனடைந்துள்ளனர். 1971-72-ம் ஆண்டுக்கு ஒரு மாணவரையும் ஒரு மாணவியையும் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பரிந்துரை செய்யப் பட்டுள்ளது.

1970-71-ல் பரிசு பெற்றவர்கள்.

1. திரு என். மாடசாமி, பி. இ., அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை.

2. திரு டி. எஸ். சிவராஜ், பி. டெக்., கோவை தொழிற் கல்லூரி.

3. செல்வி பொற்செல்வி, எம்.பி.பி.எஸ்., மருத்துவக் கல்லூரி, கோவை.

உதகையிலிருந்து வந்த பேச்சும் குளுமையைத் தர வேண்டும் என்ற நியதி உண்டா என்ன ? பாண்டித்துரையின் போக்கில் ஏற்பட்ட மாற்றத்தை ஒரு நொடியில் கவனித்து விடுகிறாள் ராதை . . . . தந்தைக்கு மன வருத்தம் தரக்கூடிய செயலை எவர் செய்திருந்தாலும், அந்தச் செய்தியை எவர் அறிவித்திருந்தாலும் அவர்களை ராதை மன்னிக்கத் தயாராக இல்லை.

கலகலப்பும் சிரிப்புமாகச் சாப்பிட அமர்ந்தவர்களுக்கு மத்தியில் கலக்கம் தோய்ந்த விழிகளும், கனத்துக் கிடக்கும் இதயமுமாக வந்து அமருகிறார் பாண்டித்துரை.

''பாண்டித்துரை. உன் மருமகன் வந்ததும் நம் ஆலையின் வேலை விஷயமாக '' என்று ஆரம்பித்த முத்தையாவிடம், '' கட்டாயம் நான் கேட்டுச் சொல்கிறேன் மாமா '' என்று மறுமொழி கூறுகிறாள் ராதை.

முத்தையாவும், செண்பகமும் விடைபெற்றுப் போன பின்னரும் துயர் சுமந்த நெஞ்சத்துடன் பாண்டித்துரை குறுக்கும் நெடுக்குமாக உலவிக் கொண்டிருக்கிறார்.

'மணிவாசகனும் அவன் மணந்து கொள்ளப் போகும் பெண்ணும்' என்றாரே வடிவேலு; 'பார்த்த மாத்திரத்தில், அவனை மணக்கவிருப்பவள் ' என்ற உறவும், உரிமையும் தெரிய வேண்டுமானால் மணிவாசகன் எங்கே. . . எந்த இடத்தில். . . . எந்தச் சூழ்நிலையில். . ஐயோ. . நினைத்துப் பார்க்கவே அவர் நெஞ்சு கூசுகிறது.

மணிவாசகனைக் கட்டுப்படுத்தவோ, கட்டாயப் படுத்தவோ தமக்கு உரிமையில்லை என்று உணர்ந்தவர்தான் பாண்டித்துரை. ஆனால், ஆசைகளைச் சுமந்த படி ஆவலோடு காத்திருக்கும் தம் மகளின் மெல்லிதயம் இந்த அதிர்ச்சியை எப்படி ஏற்றுக் கொள்ளப் போகிறது. . .?

''என்னப்பா யோசனை ?'' என்று இதமாகக் கேட்கிறாள் ராதை.

''நான் சொல்லப் போகும் அதிர்ச்சியை உன் இதயம் தாங்குமா ?''

''அதிர்ச்சி தரக்கூடிய எந்தச் செய்தியும் உங்களிடமிருந்து எனக்கு வராது. நீங்கள் தாங்கிக்

கொண்டிருக்கும் எந்த அதிர்ச்சியையும் என்னால் நிச்சயமாகத் தாங்கிக் கொள்ள முடியும். ஏனென்றால், உங்களைவிட நான் இதயபலம் உள்ளவள்! சொல்லுங்கள்.''....

''ஆறுதலாகப் பேச நினைத்தால்கூட வார்த்தைகளுக்குப் பற்றுக்குறை. அதிர்ச்சி தரும் சேதிதான் முந்திக் கொண்டு வந்து நிற்கிறது. ..''

ஆறுதலுக்கு இப்போது என்னப்பா அவசரம்? அகராதியில் கூட அதிர்ச்சிக்குப் பிறகு தானே ஆறுதல் வருகிறது. அதிர்ச்சி தரும் செய்தியையே முதலில் சொல்லுங்கள்; ஆறுதலுக்கு அவசியமா இல்லையா என்பதை நான் கூறுகிறேன்.''

''இப்போது சொல்ல வேண்டுமா என்றுதான் தயங்குகிறேன் ராதா. உன் அத்தான் வந்த பிறகே, ..''

''நல்லது. நீங்கள் நிம்மதியாகத் தூங்குங்கள்.....''என்று அவரை அமைதிப் படுத்திவிட்டு ராதை அப்பால் போகிறாள்.

புயலையும், புழுக்கத்தையும் சுமந்தபடி நாலைந்து நாட்கள் நகருகின்றன.

பந்தயக் குதிரையின் வேகமும், பட்டத்து யானையின் கம்பீரமுமாக மணிவாசகன் சுற்றுலா முடிந்து திரும்புகிறான்.

அவன் வந்து இருபத்துநாலு மணி நேரமும் ஓடி விட்டது.

வசந்தத்தை எதிர்பார்த்துக் காத்து நிற்கும் ராதையின் முன்னால், வாடிய முகத்தோடு ரோமியோ வந்து நிற்கிறான்...

''மணிவாசகன் இல்லையே?''

''இல்லை''

''இருக்கக்கூடாதே என்று தான் எதிர் பார்த்தேன். அவன் முகத்தில் விழிக்கவே எனக்குப் பிடிக்கவில்லை...''

''அப்படியானால் என்முகத்தில் நீங்கள் விழிக்க முடியாது மிஸ்டர் ரோமியோ.''

''ராதா?''

''ஆமாம். என் அத்தானின் நண்பர்கள்தான் எனக்கும் நண்பர்கள். என் அத்தானின் விரோதிகள்''

''நான் இன்னும் விரோதியாகவில்லை.''

''அவருடைய விருப்பத்தின் விரோதிகள்எனக்கும் விரோதிகள் தாம்.—நீங்கள் வந்த விஷயம்?''

''ஊட்டியிலிருந்து கடிதம் எழுதினேனே, நாய்க்கு உள்ள நன்றி கூட என் நண்பனுக்கு இல்லை என்று!''

''அப்படிக் கடிதம் எழுத வேண்டிய காரணம்? நேரிலேயே வந்து சொல்லலாமே...!''

''நேரில் சொல்லும் வரை எனக்குப் பொறுமையில்லை''

''தவறு. நேரிலே சொல்லுகிற நெஞ்சுரம் உங்களுக்கில்லை!''

''ராதா?''

''பதட்டம் வேண்டாம். எனக்கிருக்கும் மன அமைதி ஏழு ஜென்மங்கள் வரை நிலைக்கும். நீங்கள் சொல்ல விரும்பும் சேதியை—புதிய செய்திகள் ஏதேனும் இருக்குமானால் சுருக்கமாகச் சொல்லலாம்!''

''உதகைக்குச் சுற்றுலா புறப்பட்ட நான்—சென்ட்ரல் ரயில் நிலையத்திலேயே மருத்துவக் கல்லூரி மாணவியிடம்''

''இது பழைய கதையாயிற்றே. மருத்துவக் கல்லூரி மாணவி நர்மதாவின் அலட்சியப் பேச்சு. ஆணவப் போக்கு. குதிரைக்காரக் கோவிந்தனிடம் சவாரிக் குதிரைக்காகப் போட்ட சண்டை ஏரிக்கரை ஓரமாக உல்லாசமான குதிரைச் சவாரி. கால் இடறி விழ இருந்த குழந்தையைக் காப்பாற்றிய கருணை. அதன் காரணமாக இணைந்த இதயங்கள். அந்த இதயங்கள் பரிமாறிக் கொண்ட ரகசியத் தொடர் கதைதான், தொடமுடியாத உயரத்திலிருக்கும் தொட்டபெட்டாவுக்குச் சென்ற தனிமைப் பயணம். இரண்டு இதயங்களும் ஈரேழு பிறவிகளாகத் தொடர்ந்து வருவதைப்போன்ற அன்பின் பிணைப்பு. 'நீயின்றி நானில்லை' என்ற நினைவின் முனைப்பு...''

> **நவ இந்தியாவின் சின்னம்!**
>
> நவ இந்தியாவின் நல்லதொரு சின்னமாக கோவை மாவட்டம் விளங்குகிறது.
>
> —ஜவகர்லால் நேரு.

ராதை தொடர்ந்து பேசப்பேச அவனுக்குத் தெரியாத பல விவரங்களைத் தெரிந்து கொண்ட அதிர்ச்சியையும், அதிர்ச்சியைக் கூட அழகான கவிதையாக வடிக்கின்ற ராதையின் நெஞ்சஉறுதியும் ரோமியோவை வியப்பில் ஆழ்த்துகிறது.

''ராதா இதெல்லாம் உங்களுக்கு...''

''அத்தான் சொன்னார்.''

''அவனே சொன்னானா? அவன் இரக்கமற்றவன். இதயமே இல்லாதவன்.''

''அவர் இதயமுள்ளவர்'' அதனால்தான் என்னிடமே எதையும் ஒளிக்காமல் சொன்னார்.

''ராதா! உங்களால் எப்படி இதை''

''இரைந்து பேசாதீர்கள். அப்பா காதில் விழுந்துவிடும். அப்பாவுக்கு இந்த விவரம் எதுவும் தெரியாது. பாவம். அவரிடம் பக்குவமாகச் சொல்லுவதும் இந்தத் திருமணத்திற்கு அவரிடம் அனுமதி பெற்றுத் தருவதும் என் பொறுப்பு.''

''இதையும் மணிவாசகனே உங்களைக் கேட்கச் சொன்னானா?''

''அவர் சார்பாக நான் கேட்கப் போகிறேன். அத்தான் படுகிற வேதனை எனக்குப் புரிகிறது. அதனால்தான் பொறுப்பை நானே ஏற்றுக் கொண்டேன். நேரம் வரும்போது தான் அப்பாவிடம் பேச வேண்டும். நீங்கள் அவசரப்பட்டு விடாதீர்கள்..''

இவள் பெண்ணா? பேதையா? பெண்ணுருவில் வந்து நிற்கும் பெருந்தவமா?

ரோமியோ செயலிழந்து நிற்கிறான்.

அழைப்பு மணி கிணுகிணுக்கிறது.

வாசலில் வந்து நிற்பவள்—நர்மதா!

(வளரும்)

# கோயம்புத்தூர் மத்தியக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

கோயமுத்தூர் – 18

அஞ்சல் பெட்டி எண் : 1398

தந்தி: "கோடிஸ்ட்பேங்க்"

தொலைபேசி எண்: வங்கி: 33447
33448
33449
பெருந்தலைவர்: 31304

## எங்களது வங்கியில் பிக்சட் டிபாசிட்டுகளுக்கு கீழ்க்கண்ட விகிதப்படி வட்டி அளிக்கப்படும்

ரூ. 1,000மும் அதற்கு மேலும்:

| | வருடத்திற்கு சதவீதம். |
|---|---|
| 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்கள் முடிய | 2·25 |
| 46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்கள் முடிய | 3·25 |

ரூ. 100-ம் அதற்கு மேற்பட்ட தொகைக்கும்:

| | |
|---|---|
| 91 நாட்களுக்கும் 6 மாதங்களுக்குள்ளும் .. | 5.00 |
| 6 மாதங்களுக்கும் 12 மாதங்களுக்குள்ளும் .. | 5.50 |
| 12 மாதங்களுக்கும் 24 மாதங்களுக்குள்ளும் .. | 6·50 |
| 24 மாதங்களுக்கும் 36 மாதங்களுக்குள்ளும் .. | 7.00 |
| 36 மாதங்களுக்கும் 60 மாதங்களுக்குள்ளும் .. | 7·50 |
| 60 மாதங்களுக்கும் அதற்கு மேலும் .. | 7.75 |

குறிப்பு:—தர்ம ஸ்தாபனங்கள் அல்லது மத ஸ்தாபனங்கள் (Charitable or Religious Institutions) கல்வி நிறுவனங்கள் பிக்சட் டிபாசிட்டுகளின் பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதத்திற்கு மேல் ½ சதவீதம் கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

36 மாதங்களுக்கும், அதற்கு மேலும் உள்ள பிக்சட் டிபாசிட்டுகளின் அசலுக்கும், வட்டிகளுக்கும் (கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குத் தவிர) அரசாங்க உத்தரவாதம் உண்டு.

**சேவிங்ஸ் டிபாசிட்டுகள்:**

1—7—1972 முதல் சேவிங்ஸ் டிபாசிட்டுகளின்மீதுள்ள அன்றாட நிலுவைகளின்மீது 4½ சதவீதம் வட்டி வழங்கப்படுகிறது.

திரு. ஏ. எம். இராசா, எம்.ஏ., எம். எல். ஏ.
பெருந்தலைவர்.

எம். பழனிசாமி, பி. காம்., எச். டி சி.
செயலாளர்.

| கிளைகள்: | தொலைபேசி எண்: | கிளைகள்: | தொலைபேசி எண்: |
|---|---|---|---|
| 1. ஈரோடு .. | 506 | 11. அவினசி | 34 |
| 2. உடுமலை .. | 202 | 12. கிணத்துக்கடவு | |
| 3. தாராபுரம் .. | 315 | 13. மேட்டுப்பாளையம் | |
| 4. கோபி .. | 195 | 14. பெருந்துறை | |
| 5. திருப்பூர் .. | 848 | 15. சூலூர் | |
| 6. வெள்ளக்கோவில் .. | 89 | 16. காங்கயம் | |
| 7. பொள்ளாச்சி .. | 984 | 17. தாளவாடி | |
| 8. ஆர். எஸ். புரம் (கூட்டுறவு சிறப்பு அங்காடி) | | 18. அந்தியூர் | |
| | | 19. அன்னூர் | |
| 9. கிருஷ்ணபுரம் (கூட்டுறவு சர்க்கரை ஆலை) | | 20. கவுந்தம்பாடி | |
| | | 21. நம்பியூர் | |
| 19. பவானி | 528 | | |

# மின்னல் வேகத்தில்

# மின்னிணைப்பு அளித்துள்ளோம்

கோவை மாவட்டம் உழவிலும், தொழிலிலும் உயர்ந்து விளங்க வேண்டுமென்பதற்காகக் கோவைக் மாவட்டத்தில் உள்ள எல்லா கிராமங்களுக்கும், குக்கிராமங்களுக்கும் (Hamlets) மின்சார வசதி அளிக்கும் பணியைத் தமிழ்நாடு அரசு விரைவுபடுத்தியது. 1969-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் முதல்வர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு முழுவதிலுமுள்ள கிராமங்கள், குக்கிராமங்கள் அனைத்திற்கும் 1972-ஆம் ஆண்டிற்குள் மின் வசதி அளிக்கப்பட வேண்டும் என்ற ஒரு சிறப்புத் திட்டத்தினை அறிவித்து அதற்கான வேலைகளைத் துரிதப்படுத்தினர். அதன் அடிப்படையில் கோவை மாவட்டத்தில் மின்வசதி அளிக்கும் வேலைகள் மின்னல் வேகத்தில் நடைபெற்றன. அதன் பயனும் இன்று கோவை மாவட்டத்தில் மின் வசதி பெருத கிராமங்களில்லை, குக்கிராமங்களில்லை என்ற அரிய சாதனையைப் பைக்காரா மின் அமைப்பும், ஈரோடு மின் அமைப்பும் ஏற்படுத்தியுள்ளன.

கோவை மாவட்டத்தில் உள்ள அவிஞசி, கோவை, பல்லடம், பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை ஆகிய 5 வட்டங்களுக்கு மின்வசதி அளிக்கும் பணியைப் பைக்காரா மின் அமைப்பும், ஈரோடு, தாராபுரம், பவானி, கோபிச்செட்டிபாளையம் ஆகிய 4 வட்டங்களுக்கு மின்வசதி அளிக்கும் பணியை ஈரோடு மின் அமைப்பும் மேற்கொண்டு வருகின்றன.

கோவை மாவட்டத்தில் உள்ள 9 வட்டங்களில் பல்லடம் வட்டமே முதன் முதலாக மின் வசதி முழுமை பெற்றது. 1966–67-ஆம் ஆண்டு வரை பல்லடம் வட்டத்தில் 204 கிராமங்களும், சிற்றூர்களுமே மின்வசதியைப் பெற்றிருந்தது. 1—4—1967 முதல் 31—8—19 31—8—1971 வரையான காலத்தில் மேற்கொள்ளப் பெற்ற தீவிர நடவடிக்கைகளின் காரணமாகப் பல்லடம் வட்டத்தில் மேலும் புதிதாக 452 கிராமங்களும், சிற்றூர்களும், 55,67 மின்விசை ஏற்றங்களும் மின்வசதி பெற்றன. பல்லடம் வட்டம் ஏறத்தாழ $4\frac{1}{2}$ ஆண்டுக் காலத்தில் 69 சத மின் வசதியைப் பெற்று, 27—9—1971-இல் மின்வசதி முழுமை விழாக் கொண்டாடியது. அதை அடுத்துப் படிப் படியாக, ஒவ்வொரு வட்டமும் மின்வசதி முழுமை பெற்று, இன்று கோவை மாவட்டம் முழுமையாக மின்வசதி பெற்றுள்ளது.

கோவை மாவட்டத்தில் 1—1—1973 தேதிய புள்ளி விவரப்படி 942 கிராமங்களும், 5,981 குக்கிராமங்களும், 2,783 அரிசனக் குடியிருப்புகளும் மின் வசதி பெற்றுள்ளன. அவைகளின் விவரங்கள் வட்ட வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் காணலாம்.

மேற்கண்ட அரிசனக் குடியிருப்புகளும், மலைச்சாதியினர் குடியிருப்புகளும் மின்வசதி பெற்று முழுமை அடைந்த போதிலும், அண்மையில் புதிதாக 6 அரிசனக் குடியிருப்புகளும், 17 மலைச்சாதியினர் குடியிருப்புகளும் தோன்றியுள்ளன. அப்புதிய குடியிருப்புகளுக்கும் மின் வசதியை அளிக்கும் பணியைப் பைக்காரா மின் அமைப்பு துரிதமாகச் செயல்படுத்தி வருகிறது. ஆனைமலையில் உள்ள தேயிலைத் தொழிலாளர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டத்தையும் பைக்காரா மின் அமைப்பு மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலையாய நோக்கம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு மின் வசதி அளிப்பதாகும். அதைச் செயலாக்கும் நோக்குடன், பைக்காரா மின் அமைப்பும் ஈரோடு மின் அமைப்பும் கிணறுகளில் அமைக்கப் பட்டுள்ள மின்விசை ஏற்றங்

**கோவை மாவட்டத்தில் மின்வசதி பெற்றுள்ள கிராமங்கள்—குக்கிராமங்கள்**

| வட்டத்தின் பெயர் | கிராமங்கள் | குக்கிராமங்கள் |
|---|---|---|
| அவிஞசி .. .. .. | 84 | 510 |
| கோயம்புத்தூர் .. | 90 | 278 |
| பல்லடம் .. .. | 106 | 549 |
| பொள்ளாச்சி .. .. | 133 | 209 |
| உடுமலைப்பேட்டை.. .. | 91 | 190 |
| ஈரோடு .. .. .. | 187 | 1,685 |
| தாராபுரம் .. .. | 83 | 1,030 |
| பவானி .. .. .. | 55 | 719 |
| கோபிச்செட்டிபாளையம் .. | 113 | 811 |
| மொத்தம் .. | 942 | 5,981 |

**கோவை மாவட்டத்தில் மின்வசதி பெற்றுள்ள அரிசன, மலைச்சாதி மக்கள் குடியிருப்புகள்**

| வட்டத்தின் பெயர் | அரிசனக் குடியிருப்புகள் | மலைசாதியினர் குடியிருப்புகள் |
|---|---|---|
| அவிஞசி .. .. .. | 291 | 1 |
| கோயம்புத்தூர் .. | 197 | 5 |
| பல்லடம் .. .. | 362 | .. |
| பொள்ளாச்சி .. .. | 237 | 4 |
| உடுமலைப்பேட்டை .. | 181 | .. |
| ஈரோடு .. .. .. | 606 | .. |
| பவானி .. .. .. | 259 | .. |
| கோபிச்செட்டிப்பாளையம் .. | 260 | .. |
| மொத்தம் | 2,783 | 10 |





## வளமான வளர்ச்சிக்கும் அதிக உற்பத்திக்கும் சிறந்தவை

# ரோவிமிக்ஸ்

டிரேட் மார்க்

மற்றும்

# ரோவிஸால் ஓரல்

டிரேட் மார்க்





**ரோவிமிக்ஸ்—சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களுக்கு:**

உங்கள் கால்நடைகளுக்கு சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களை சுலபமாகவும் குறைந்த செலவிலும் அளிக்க கனிஜங்களைக் கெடாத ரோவிமிக்ஸ் விடமின் பவுடர் வகைகளில் ஒன்றைத் தீனியுடன் கலக்கவும்.

**ரோவிஸால் ஓரல்—அதிகப்படியான விடமின்களுக்கு:**

ஒட்டுண்ணிகள் அல்லது தொத்து நோய் பற்றுதல், மருந்து ஊட்டுதல், அதிக சூடு, அதிகக் குளிர்ச்சி, சாம் அல்லது வாட்டி, சிறகுகளை உதிர்த்தல், துரிதமான வளர்ச்சி, ஓர் இடத்திலிருந்து மற இடத்திற்குக் கொண்டு போதல் ஆகிய காலங்களில், பிராணிகளின் விடமின் தேவை சாதாரண அளவைவிட இரு மடங்குக்கும் அதிகமாகக் கூடும். எனவே, விடமின் அளவை அதிகரிக்க, தேவைக்கேற்ப, பிராணிகளுக்கு ரோவிஸால் ஓரல் கொடுக்கவும்.

தயாரிப்பாளர்கள்

ROCHE ரோஷ் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்

88, நார்தேன் ரோட், பம்பாய்-34 WB

களுக்கு விரைவாக மின் இணைப்பு வழங்கி வருகின்றன.

பைக்காரா மின் அமைப்பு இந்த ஆண்டில் 3,500 கிணறுகளுக்கு மின்வசதி அளிக்கத் திட்டமிட்டுள்ளது. அதில் 31—1—1973 வரை 2,871 கிணறுகள் மின்வசதி பெற்று விட்டன.

இறுதியாகக் கிடைத்த புள்ளி விவரப்படிக் கோவை மாவட்டத்தில் (1—1—1973 தேதி வரை) 1,11,883 மின்விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. வட்ட வாரியாக மின் இணைப்புப் பெற்றுள்ள மின்விசை ஏற்றங்களின் விவரம் கொடுக்கப்பட்டுள்ளது அட்டவணையில் காணலாம்.

கோவை மாவட்டத்தில் மின் இணைப்புப் பெற்றுள்ள மின்விசை ஏற்றங்கள்

| வட்டத்தின் பெயர். | மின் இணைப்பு பெற்றுள்ள பம்புசெட்டுகள். |
|---|---|
| அவினாசி | 14,747 |
| கோயம்புத்தூர் | 14,621 |
| பல்லடம் | 15,480 |
| பொள்ளாச்சி | 12,720 |
| உடுமலைப்பேட்டை | 10,623 |
| ஈரோடு | 11,684 |
| தாராபுரம் | 13,848 |
| பவானி | 7,235 |
| கோபிச்செட்டிபாளையம் | 10,925 |
| மொத்தம் | 1,11,883 |

கோவை மாவட்டத்தில் உள்ள மொத்தக் கிராமங்கள், குக்கிராமங்களில் 80 சத அளவுக்கு மேல் கடந்த $5\frac{3}{4}$ ஆண்டுகளில்தான் மின் வசதி பெற்றுள்ளன. அது போலவே கடந்த $5\frac{3}{4}$ ஆண்டுகளில் தான், 1—4—1967-க்கு முந்திய எந்த ஆண்டுகளிலும் இல்லாத அளவிற்கு, ஆண்டு தோறும் அதிகமான மின்விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப் பெற்றுள்ளன.

கோவை மாவட்டத்தில் 31—3—1970 நிலவரப்படி 87,301 மின்விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் 1—4—1970 முதல் 1—1—73 வரையான $2\frac{3}{4}$ ஆண்டுக் காலத்தில் மட்டும் 24,582 மின்விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் தற்பொழுது 6,39,821 மின்சார பம்பு செட்டுகள் மின் இணைப்புப் பெற்றுள்ளன. அதில் 1,11,883 பம்பு செட்டுகள் கோவை மாவட்டத்தில் உள்ளன. அதாவது தமிழ் நாட்டில் உள்ள மின் இணைப்புப் பெற்ற பம்பு செட்டுகளில் 17 சத அளவு கோவை மாவட்டத்தில் தான் உள்ளது.

ஆழமான கிணறுகளில் 2 அல்லது 3 நிலைகளில் பம்பு செட் அமைத்துத் தண்ணீர் இறைக்க வேண்டிய இக்கட்டான நிலையில் இருக்கும் கோவை மாவட்ட உழவர் பெருமக்களுக்கு உதவி செய்யவே, வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு —வரலாறு காணாத அளவுக்கு —அதிகமான பம்பு செட்டுகளுக்கு மின்இணைப்பு கொடுத்து வருகிறது இன்றையத் தமிழ்நாடு அரசு.

கோவை மாவட்டத்தில் ஊரெங்கும் ஒளி மயமாக்கியதாலும், ஏராளமான பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்ததாலும், புத்தம் புது தொழிற்சாலைகளை நித்த நித்தம் துவங்கியதாலும், மின்சாரத் தேவை பெருகி விட்டது. அத்துடன் பருவமழை பொய்த்ததன் காரணமாக மின்சக்தி உற்பத்தி செய்யும் நீர்த் தேக்கங்களில் உள்ள தண்ணீர் குறைந்ததால் தற்பொழுது மின்சாரப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. ஆயினும் உழவர்களுக்கு உதவிடும் இன்றைய அரசு கேரள மாநிலத்திலிருந்து மின்சக்தி பெற ஆவன செய்துள்ளதுடன், மின்சக்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சிகளிலும், தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

ஊரெங்கும் ஒளிமயமாக்கும் பணியிலும், மின்விசை ஏற்றங்களுக்கு மின்இணைப்புத் தருவதிலும் பைக்காரா மின் அமைப்பும், ஈரோடு மின் அமைப்பும் மின்னல் வேகத்தில் பணியாற்றியுள்ளன என்றால் மிகையல்ல.



# கோயம்புத்தூர் கூட்டுறவுப் பால் வழங்கும் ஒன்றியம் லிமிடெட்

நிறுவனம் 1937

தலைவர்

திரு எம். எஸ். பழனியப்ப முதலியார், பி.ஏ.,

துணைத் தலைவர்

திரு சி. என். நாகப்ப கவுண்டர், பி.ஏ., பி.எல்.

ஆர். எஸ். புரம் அஞ்சல்,
கோயம்புத்தூர்-2.
தொலைபேசி 22389 & 32389.

35 ஆண்டுகளுக்கு மேலாகக் கோவையும், கோவையையடுத்த சுற்றுப்புற மக்களுக்குச் சுத்தமான பாலையும் பால் பொருள்களையும் நியாயமான விலையில் வழங்கி வரும் ஓர் உன்னதக் கூட்டுறவு நிறுவனம்.

| | | |
|---|---|---|
| இணைக்கப்பட்ட பால் சங்கங்கள் | .. | 63 |
| 1971–72-ம் ஆண்டில் வழங்கிய பால் | .. | 66,30,690 லிட்டர் |
| 1971–72-ம் ஆண்டில் பால், பால் பொருள்கள் விற்பனை. | | ரூ. 73,90,542 |
| செலுத்தப்பட்ட பங்குத் தொகை | .. | ரூ. 1,12,720 |
| நல நிதி .. .. | .. | ரூ. 2,03,750 |
| இதர ஒதுக்குத் தொகைகள் .. | .. | ரூ. 16,63,080 |
| தமிழ்நாடு மாதவரம் பால்பண்ணைக்கு 1-7-71 முதல் 30-6-72 முடிய வழங்கிய பால் அளவு. | | 6,95,000 லிட்டர். |
| | மதிப்பு | ரூ. 6,86,675 |

நவீன இயந்திரங்களைக் கொண்டு சுகாதார முறைப்படி பக்குவம் செய்யப்பட்ட பால், தினசரி வாடிக்கையாளர்களுக்கு அவர்தம் இல்லங்களில் குறித்த நேரத்தில் வழங்கப்பட்டு வருகிறது. அரசாங்க நகராட்சி மருத்துவமனைகளுக்கும், மகப்பேறு இல்லங்களுக்கும், மத்திய சிறை, கல்லூரி விடுதிகள், சிற்றுண்டிச்சாலைகள் ஆகிய நிறுவனங்களுக்கும் நியாயமான விலையில் பல்லாண்டுகளாகப் பால் வழங்கப் பட்டு வருகிறது.

பால் பண்ணையைப் புதுப்பிக்கும் திட்டத்தைச் சுமார் ரூ. 10·50 லட்சம் செலவில் மேற்கொண்டு வருங்காலப் பால் தேவையைப் பூர்த்தி செய்யத் தேவையான திட்டங்களை ஒன்றியம் உருவாக்கி அதைச் செயல்படுத்திக்கொண்டிருக்கிறது.

சுவைமிக்க பால் கோவா, ஐஸ்கிரீம் ''அக்மார்க்'' நெய் ஆகிய பொருள்கள் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

பி. நடராசன்,
விற்பனை மேலாளர்.

# தீண்டாமையை ஒழிக்க செய்துவரும் பணிகள்!

கோவை மாவட்டக் கிராமப் புறங்களில் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் செய்யவும், அரிசனக் குழந்தைகளின் நலம் பேணவும் சூலூர், பாலத்துறை, தளவாய்ப் பட்டினம் ஆகிய மூன்று இடங்களில் சமுதாய நல மன்றங்கள் இயங்கி வருகின்றன. இந்த மன்றங்கள் ஒவ்வொன்றிலும் 50 இளம் சிறுவர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது.

தீண்டாமை என்னும் தீயப் பழக்கம் மக்களிடையே இருந்து அறவே அகல, இம்மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு பல்வேறு வகைகளில் பெரு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வோர் ஆண்டும் சனவரி 24-ஆம் நாள் முதல் 30-ஆம் நாள் முடிய தீண்டாமை ஒழிப்பு வாரமாகக் கொண்டாடப்பட்டு




வருகிறது. இவ்விழாவின் போது அரிசனக் குடியிருப்புகளைச் சுத்தம் செய்தல், அரிசனக் குழந்தைகளைக் குளிப்பாட்டுதல், அரசினரால் அளிக்கப்படும் சலுகைகளை விவரித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ் விழாச் செலவிற்காகக் கோவை மாவட்டத்தில் ஆண்டொன்றுக்கு ரூபாய் 2,000 வரை செலவிடப்படுகிறது.

தீண்டாமை ஒழிப்பை ஊக்குவிக்கும் நோக்கத்தில் சிறந்து விளங்கும் இரு கிராமங்கள் மாவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்டு முதற் பரிசு ரூபாய்



1,000-மும், இரண்டாவது பரிசு ரூபாய் 500-ம் வழங்கப்பட்டு வருகிறது. பரிசுகள் பரிசுப் பத்திரங்களாக வழங்கப்படுகின்றன. 1967–68-ஆம் ஆண்டிலிருந்து கோவை மாவட்டத்தில் பரிசு பெற்ற கிராமங்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு. | வட்டத்தின் பெயர். | பரிசு பெற்ற கிராமத்தின் பெயர். |
|---|---|---|
| 1967–68 | பொள்ளாச்சி. | ஏரிப்பட்டி (முதற் பரிசு) |
| | பல்லடம். | கேத்தனூர் (2-வது பரிசு) |
| 1968–69 | தாராபுரம், | வீராஜிமங்கலம் (முதற் பரிசு) |
| | ஈரோடு. | நாட்டார்மங்கலம் (2-வது பரிசு) |
| 1969–70 | தாராபுரம். | நஞ்சியம்பாளையம் (முதற் பரிசு) |
| | கோவை. | விராளியூர் (2-வது பரிசு) |
| 1970–71 | தாராபுரம், | தளவாய்ப்பட்டினம் (முதற்பரிசு) |
| | பவானி. | தவிட்டுப்பாளையம் (2-வது பரிசு) |
| 1971–72 | கோவை. | பன்னிமடை (முதற் பரிசு) |
| | பொள்ளாச்சி. | ரொட்டிக்கடை (2-வது பரிசு) |
| 1972–73 | கோபிசெட்டி பாளையம். | பொலவக்காளிபாளையம் (முதற் பரிசு) |
| | ஈரோடு. | இரத்தினபுரி (2-வது பரிசு) |

அரிசனங்கள் தங்கள் குடியிருப்புக்களைத் தூய்மையாக வைக்க ஊக்குவிக்கும் பொருட்டு, தூய்மையாக வைத்திருப்பதில் போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தும் வகையிலும் கோவை மாவட்டத்தில் ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு சிறந்த அரிசனக் குடியிருப்பும் தேர்வு செய்யப்பட்டு, அந்த அரிசனக் குடியிருப்புக்கு ஒரு வானொலிப் பெட்டி பரிசாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் பின்கண்ட அரிசனக் குடியிருப்புகளுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.




வட்டம்

- அவினாசி . . . .
- பவானி . . . .
- தாராபுரம் . . . .
- கோவை . . . .
- ஈரோடு . . . .
- கோபி . . . .
- பொள்ளாச்சி . . . .
- பல்லடம் . . . .
- உடுமலை . . . .





பரிசு பெற்ற அரிசனக் குடியிருப்பு

வெங்கக்கல்பாளையம்
கருக்குப்பாளையம்
முள்ளிபுரம்
காந்திநகர் காலனி
காமராஜ் அரிசனக் காலனி
ஏமூர் காலனி
வஞ்சிப்பாளையம்
கரவளிமாதப்பூர்
குப்பம்பாளையம்

இன்றையத் தமிழ்நாடு அரசு சாதி வேறுபாட்டைக் களைந்தெறியும் வகையில் கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதியர்க்குப் பரிசளிக்கும் திட்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலாகக் கொண்டு வந்தது.

இத்திட்டம் தீண்டாமை என்னும் இருளை அகற்றுவதில் ஓர் ஒளி விளக்காய் அமைந்துள்ளது. கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கும் வகையில் மணமக்களில் யாராவது ஒருவர் அரிசனக் குடியைச் சார்ந்தவராக இருப்பின் கலப்பு மணம் செய்துகொண்ட தம்பதியர்க்குத் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை கோவை மாவட்டத்தில் கலப்புத் திருமணம் செய்து கொண்ட 21 தம்பதியர்களுக்குத் தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :—

| ஆண்டு. | பரிசு பெற்ற தம்பதியர்கள் (எண்ணிக்கை). |
|---|---|
| 1968–69 | 7 |
| 1969–70 | 3 |
| 1970–71 | |
| 1971–72 | 5 |
| 1972–73 | 6 |
| | 21 |

தற்பொழுது இத்திட்டத்தை மேலும் ஊக்குவிக்கும் வகையில் கலப்புத் திருமணம் செய்து




கொண்ட தம்பதியர்களுக்குத் தொழில் நடத்த வட்டியில்லாக் கடன் வழங்கவும், வீட்டு மனைக்கு நிலம் வழங்கவும் தமிழ்நாடு அரசு வழிவகை செய்துள்ளது.

இவ்வாறு பல்வேறு வகையில் கோவை மாவட்டத்தில் தீண்டாமையை அறவே ஒழிக்கச் சீரிய முறையில் செயலாற்றப்படுகிறது.


விவசாய முன்னணியில் நிகரற்ற சேவை

1. மானோபிளாக் செட்
2. கப்ளிங் பம்பு
3. கரும்பு ஆலை
4. மின்சாரச் சங்கு
5. மின்சார மோட்டார்
6. பெல்ட் பம்பு
7. மோட்டாருடன் பம்பு
8. மல்டிஸ்டேஜ் பம்பு
9. டொமஸ்டிக் பம்பு




தயாரிப்பாளர்கள் :

போன் : 22935.

தந்தி : "பவுண்டரி."

சுப்பையா பவுண்டரி,
அவினாசி ரோடு, P. N. பாளையம், கோயம்புத்தூர்-18.

# மூடிய மில்களைத் திறந்தோம்!

இந்தியாவெங்கும் உள்ள பஞ்சாலைகளில் அண்மைக் காலத்தில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டது. அதனால் கோவை மாவட்டத்தில் பல பஞ்சாலைகள் மூடப்பட்டன; பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றி வாடினர்.

தொழிலாளர்களின் துயரைத் துடைத்து அவர்களின் வாழ்வை வளப்படுத்த வேண்டுமென்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள தமிழ்நாடு அரசு



நலிவுற்ற பஞ்சாலைகளை ஏற்று நடத்திட ரூபாய் 5 கோடி அனுமதி பெற்ற மூலதனத்துடன் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தை அமைத்தது. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் தமிழ்நாடு அரசுக்கு முற்றிலும் சொந்தமானது. இது ஒரு தனி நிறுவனமாக 24—4—1969-ல் பதிவு செய்யப்பட்டது. பஞ்சாலைத் தொழில் குறித்துத் தமிழ்நாடு அரசுக்கு ஆலோசனை கூறும் அமைப்பாகவும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் பணியாற்றி வருகிறது.

கோவை மாவட்டத்தில் மூடப்பட்டிருந்த 13 பஞ்சாலைகளை (Sick Mills) தமிழ்நாடு அரசு ஏற்று நடத்த முடிவெடுத்தது. கீழ்க்கண்ட பஞ்சாலைகளை இது வரை அரசு ஏற்றுள்ளது.

ஓம் பராசக்தி ஆலை.

முருகன் ஆலை.

சோம சுந்தரா ஆலை.

கோவை ஸ்பின்னிங் அண்டு வீவிங் ஆலை.

கிருஷ்ணவேணி ஆலை.

ரெங்க விலாஸ் ஆலை.

கம்போடியா ஆலை.

பங்கஜா ஆலை.

சாரதா ஆலை.

பயனீர் ஆலை.

பாலராம வர்மா ஆலை.

மேற்கண்ட பஞ்சாலைகளை நடத்துவதற்கு நிதி உதவியை மாநில அரசு 49 சதமும் இந்திய அரசு 51 சதமும் தருவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி பின்கண்டவாறு உள்ளது.

| | ரூபாய் |
|---|---|
| இந்திய அரசு உதவி, | 1,64,83,000 |
| தமிழ்நாடு அரசு உதவி. | 1,44,66,000 |

இதில் 11—12—1972 வரை இந்திய அரசு 92 இலட்சம் ரூபாயையும், தமிழ்நாடு அரசு 117 இலட்சம் ரூபாயையும் கொடுத்துள்ளது. அரசு ஏற்று நடத்தும் பஞ்சாலைகள் அனைத்தும் இன்று இலாபத்தில் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

மூடிய பஞ்சாலைகளைத் தமிழ்நாடு அரசு ஏற்று மீண்டும் திறந்ததால் 13 பஞ்சாலைகளை சேர்ந்த 11,900 தொழிலாளர்கள் பயன் பெற்றனர். இது தமிழ்நாடு அரசு 'தொழிலாளர்களின் துயர் துடைக்கும் அரசு' என்பதற்கோர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.




இந்தியாவிலே எந்த மாநிலத்திலும், பஞ்சாலைகள் மூடப்பட்டு, அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு — வேலையிழந்து வேதனையிலே மூழ்கித் தவித்த தொழிலாளர்களுக்கு— நிவாரணத் தொகை அளிக்கப் பட்டதற்கு இதுவரை சான்றில்லை. ஆனால், கோவை மாவட்டத்திலே பஞ்சாலைகள் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குத் தமிழ்நாடு முதலமைச்சர் நிதியிலிருந்து இதுவரை 6 இலட்சம் ரூபாய் நிவாரணமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

## முன்னேற்றம் கண்டோம்!

# ஸ்ரீ வாழைத் தோட்டத்து அய்யன் கோயில்,

அய்யம்பாளையம்—மங்கலம் அஞ்சல்,

பல்லடம் வட்டம், கோவை மாவட்டம்.

—:O:—

''தொல்லுலகில் பல் வினையும் இரவிகண்ட பனியது போல்
வல்லமையா லகற்றும் வாழைவனத் தய்யாவுனை
நல்லோர்கள் புகழ்ந்திடுவர் : நஞ்சகற்றும் நாதனெனப்
பல்லோர்கள் தொழுதுய்யப் பாடுவது முன்புகழே.''

—:O:—

அஞ்செழுத்து மந்திரத்தால் நஞ்சகற்றும் நாதன் ஆகிய ஸ்ரீ வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் பல மகிமைகளுடன் தீராத பிணிகளையும், ஆறாத புண்களையும், சகல விஷக்கடிகளையும் போக்கி அருளும் திருத்தலமாகவும் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக விளங்கி வருகிறது. இத்திருத்தலத்தை சோமனூரிலிருந்தும், திருப்பூரிலிருந்தும் வரும் டவுன் பஸ்கள், இதர பஸ்கள் மூலமாகவும் அடையலாம். இத்திருக்கோவிலில் தற்சமயம் கர்ப்பகிரஹ அர்த்த மண்டப கருங்கல் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகிறது. மேலும் இத்திருக் கோவிலின் சார்பில் அனாதை மாணவர் இல்லம் ஒன்றும், சாமளாபுத்தில் உயர் நிலைப்பள்ளி ஒன்றும் துவக்கப் பெற்று செயல்பட்டு வருகிறது. பக்தர்கள் தங்க விடுதிகளும் மின்சாரம் குடிநீர், முதலான வசதிகளும் உண்டு. எனவே பக்தர்கள் அனைவரும் இத்திருத்தலத்திற்கு வருகை தந்து அருட் செல்வமும், பொருட் செல்வமும் பெற்று விளங்க வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

P. R. கோவிந்தராஜலு, B.A., B.Com.,
*செயல் அலுவலர்.*

சோ. கு. பழனிசாமி,
*தலைவர், அறங்காவலர் குழு.*

S. A. P. சுந்தரம்,
M. சின்னமாரப்ப கவுண்டர்,
M. பழனிசாமி,
M. சுப்பையன்.
*—அறங்காவலர்கள்.*




''பட்டினில் ஆடையும்,
பஞ்சில் உடையும்,
பன்னிமலைகளென
வீதி குவிப்போம்''.

என்று பாடினார், பாரதி. இப்பாட்டிற்கு உயிரூட்டம் கொடுத்துப் பஞ்சில் உடை செய்யும் தொழில் பரவிக் கிடப்பதே கோவை மாவட்டத்தில்தான் எனலாம். அந்த அளவிற்கு இங்குப் பஞ்சு உற்பத்தியாகின்றது. அவ்வாறு கிடைக்கும் பஞ்சைக் கொண்டு கதர்-கிராமக் கைத்தொழில் மூலமாகக் கோவை மாவட்டத்தில் ஆயிரக் கணக்கானவர்களுக்குக் கதர் நெசவுத் தொழிலில் வேலை தரப்பட்டுள்ளது.

கதர்-கிராமக் கைத்தொழில் மூலம் கோவை மாவட்டத்தில் வேலை வாய்ப்புப் பெற்றிருப்போர் அதிகமாகும். இம் மாவட்டத்தில் இந்தத் திட்டம் சீரிய முறையில் செயல்படுவது பெருமாநல்லூர் நெசவிய மையம் ( Fabric Centre ) ஆகும். இங்குதான் 'முகில்' என்னும் துணி கதர்-கிராமத் தொழில் மூலம் தயாரிக்கப்படுகிறது.

''முகில்'' ஒரு கண்ணோட்டம்

குறைந்த முதலீட்டில் கிராமப் புறங்களில் நிறைந்த வேலை வாய்ப்புப் பெறத் துவங்கப்பட்டதே கிராமிய நெசவியல் மையம். ரூபாய் 1·82 இலட்ச முதலீட்டில் கிராமப் புறத்தில் 68 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. கையால் இயக்கும் 6 கதிர்அம்பர் ராட்டைகளுக்குப் பதிலாக, மின் சக்தியின் உதவி கொண்டு, 48 கதிர்களைக் கொண்ட இராட்டையாக்கி, அம்மாதிரி இராட்டைகளை கொண்டு இயக்கப்படுகிறது. இத்துடன் பஞ்சு உடைத்தல், நெகிழ்த்துதல், பட்டை போடுதல், முறுக்குதல், பாவு தயாரித்தல், நெசவு ஆகிய அனைத்தும் மின் சக்தியின் உதவியால் இயக்கப்படுகிறது. இம்முறையில் பெருமாநல்லூர் கிராமிய நெசவியல் மையம் (Rural Fabric Centre) கடந்த இரண்டாண்டுகளாக இயங்கி வருகிறது. இந்த நிலையத்தில் பணியாற்றும் ஒவ்வொரு நபருக்கும் நாள் ஒன்றுக்கு ரூ. 3 கூலி கிடைக்கிறது. இதே போன்று கோவைக்கு அருகே 16 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சூலூரில் கிராமிய நெசவு மையம் ஆரம்பிக்கப்பட்டு உற்பத்தியும் துவக்க நிலையில் உள்ளது.

மேலும், மதுரை மாவட்டத்தில் இடையன்வலசு, நெல்லை மாவட்டத்தில் வள்ளியூர், குமரி மாவட்டத்தில் மயிலாடி ஆகிய மூன்று இடங்களில் இம்மாதிரியான நெசவு மையங்கள் துவங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இம்மாதிரி நெசவு மையத்தில் தயாரிக்கப்படுகின்ற துணி, இந்தியத்தர நிர்ணயக் கழகத்தின் (ஐ.எஸ்.ஐ.) தரத்துக்கு ஏற்றதாக உள்ளது. வட மாநிலங்களில் '' லோக்வஸ்திரா' என்றழைக்கப்படும் இந்தத் துணிக்கு கடந்த 13—2—1973-ஆம் நாளன்று சென்னை அரசினர் தோட்டத்தில் கதர் பொன்விழா கண்காட்சியைத் திறந்து வைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் '' முகில்'' என்று பெயர் சூட்டப் பெற்றுள்ளது.

**ம. நடராசன், எம்.ஏ.**

இம்மாதிரி ஒரு நெசவு மையத் திட்டம் இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ்நாட்டில் தான் செயல்படுத்தப்படுகிறது. எனவே இவ்வகையிலும், தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டியாகத் திகழ்கிறது என்றால் அது மிகையாகாது. இம்மாதிரி நெசவு மையத்தில் ஆண்டு ஒன்றுக்கு 18,000 கிலோ நூல் உற்பத்தி செய்து, அதனைக் கொண்டு 76,500 மீட்டர் துணி உற்பத்தி செய்ய முடியும்.

இதுபோன்ற கிராமிய நெசவியல் நிலையங்களின் மூலம் முரட்டு ரகத் (Cose Variety) துணி உற்பத்தி செய்வதனால், மக்களின் இந்த ரகத் துணித் தேவையைப் பூர்த்திச் செய்வதோடு, கிராமப் புறங்களில் குறைந்த மூலதனத்தில் நிறைந்த வேலை வாய்ப்பினை நல்கும் ஒரு சிறந்த திட்டமாகவும் செயல்படுகின்றது.

அனைவரும் விரும்பும்
அவினாசி ' ஜக்கார்டு '

தமிழகக் கதர் கிராமத் தொழில் துறையின் கீழ் ஜக்கார்டு துணி உற்பத்தி நிலையம் ஒன்று கோவை மாவட்டத்திலுள்ள அவினாசியில் இயங்கி வருகிறது. இங்கே பலவிதமான வண்ணங்களில் பூ வேலைப்பாடுகள், மற்றும் உருவங்களுடன் கூடிய ஜக்கார்டு துணி தயார் செய்யப்படுகிறது. இது விரிப்புத் துணியாகவும், திரைச் சீலையாகவும், போர்வையாகவும் பயன்படுத்தப்படுகிறது.

இந்த நிலையம் 16—7—1960 முதல் இயங்கி வருகிறது. ஆரம்பத்தில் வாடகைக் கட்டடத்திலும், சூலை 1972 திங்கள் முதல் வாரியத்தின் சொந்தக் கட்டடத்திலும் இயங்கி வருகிறது. இங்கு நிறுவப்பட்டிருக்கும் 9 தறிகளும் கதர் கிராமத் தொழில் துறைக்குச் சொந்தமானவை. நெசவாளர்கள் இந்நிலையத்திற்கு வந்து நெசவு செய்து, அதற்குரிய கூலியை வாரம் ஒரு முறை பெற்றுக் கொள்கிறார்கள். மீட்டர் ஒன்றுக்கு நெசவுக் கூலி ரூபாய் 2·25. ஒரு நெசவாளருக்கு வாரம் ஒன்றுக்கு ரூபாய் 45 முதல் ரூபாய் 50 வரை கூலி கிடைக்கிறது.

அவினாசியில் உற்பத்தி செய்யப்படும் ஜக்கார்டு துணி பொது மக்களால் பெரிதும் விரும்பி வாங்கப்படுகிறது.



# பசுமைப் புரட்சிக்குத் துணையாகும் பல்கலைக் கழகம்

''பழைய முறைமாற்றிப்
பயிர் செய்தால்,
நிறையப் பலன்
கிடைக்க வழியுண்டு ;
உழக்குத்தான் மிச்சமென்னும்
இருட்டு நிலை,
கிழக்கு வெளுத்ததுபோல்
மறைந்து விடும் ·''

(முதல்வர் கலைஞர்)

என்பதை நன்கு உணர்ந்த இன்றையத் தமிழ்நாடு அரசு, குறைந்த காலத்தில் நிறைந்த மகசூல் கொடுக்கக்கூடிய பயிர் வகைகளையும், செலவைக் குறைக்கும் கருவிகளையும், உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவும் சாகுபடி முறைகளையும் கண்டுபிடித்து அவைகளை உழவர்களிடையே பரப்பி, பசுமைப் புரட்சிக்கு மேலும் வலிவூட்டி, தமிழ்நாடு உழவர் பெருமக்களின் வாழ்வு உயரவும், தமிழ்நாட்டின் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும் வழிவகுக்கக்கூடிய வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்றினை ஏற்படுத்த, 1971-ஆம் ஆண்டில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தை நிறைவேற்றியது. இதனால், இந்தியாவின் முதல் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைத் தமிழ் நாட்டில் ஏற்படுத்திட வேண்டுமென்று 1958-ஆம் ஆண்டிலேயே மேற்கொள்ளப் பெற்று, பல்வேறு காரணங்களால் தடைபட்டு நின்றிருந்த முயற்சி, இன்றைய அரசினால் வெற்றி பெற்றதுடன்—'தமிழ் நாட்டில் ஒரு வேளாண்மைப் பல்கலைக் கழகம் இல்லை' என்ற குறை நீங்கியதுடன்—தமிழ் நாட்டின் நீண்ட காலத்தேவை நிறைவு பெற்றது.

தமிழ்நாடு அரசு கொண்டு வந்த வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டப்படி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல்நாள் முதல், கோவை நகரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் மொத்தம் 242 மாணவர்களை முதலாண்டு பி.எஸ்சி., (வேளாண்மை) வகுப்பில் சேர்த்துக் கொள்கிறது. அதுபோலவே முதலாண்டு எம். எஸ்சி., (வேளாண்மை) வகுப்பிற்கு 94 மாணவர்களைச் சேர்த்துக் கொள்கிறது. கோவை வேளாண்மைக் கல்லூரியில் மட்டும் ஆண்டுதோறும் முதலாண்டு பிஎச்.டி., (Ph. D.) படிப்பிற்கு 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர்.

பி.எஸ்சி., (தோட்டக்கலை) என்ற பட்டம் பெறுவதற்குரிய நான்கு ஆண்டுக் கால புதிய பட்டப்படிப்புப் பிரிவு, 20 மாணவர்களைக் கொண்டு 1972-ஆம் ஆண்டு சூன் திங்களில் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

பி.இ. (வேளாண்மை) என்ற பட்டம் பெறுவதற்குரிய 5 ஆண்டுக் காலப் புதிய பட்டப் படிப்புப் பிரிவு 40 மாணவர்களைக் கொண்டு 1972-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் துவக்கப் பட்டு, அதற்கான கல்வியும், பயிற்சியும் அளிக்கப்பெற்று வருகிறது.

### பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் ஆராய்ச்சி

''உழவர் பெருமக்களுக்கு ஏற்பட்டு வரும் களப்பிரச்சினைகளைத் (Field Problem) தீர்த்து வைத்து, உழவர் சமுதாயத்திற்கு உதவ வேண்டும்.' என்ற குறிக்கோளுடன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறது. உழவர் பெருமக்களுக்குள்ள களப் பிரச்சினைகளைத் தொகுத்து, தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறையைச் சார்ந்த முதுநிலை அலுவலர்களும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆராய்ச்சிப் பணியாளர்களும் அடங்கிய கூட்டத்தில் விவாதித்து, அப்பிரச்சினைகளுக்குரிய முக்கிய இடமளித்து, அதற்கேற்ப ஆராய்ச்சித் திட்டங்கள் தீட்டப்படுவதால், விரை

வில் உழவர் பெருமக்களின் களப் பிரச்சினைகள் தீரும் என்பது உறுதியாகின்றன. மொத்தம் 343 களப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய ஆராய்ச்சித் திட்டங்களையும் 47 அடிப்படை ஆராய்ச்சித் திட்டங்களையும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மேற்கொண்டுள்ளது. அவ்வாராய்ச்சிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தனது இடைவிடா ஆராய்ச்சி மூலம் இரண்டே ஆண்டுக் காலத்தில் பல புதிய பயிர் ரகங்களை உருவாக்கி உழவர் பெருமக்களுக்கு வழங்கியுள்ளதுடன், பசுமைப் புரட்சிக்கு வலுவூட்டியுள்ளது. அவைகளில் மிகவும் முக்கியமான ரகங்கள் பின்கண்டவைகளாகும்.

1. கோ. 1 ஒட்டு வீரிய சப்போட்டா

2. கோ. 8 மொச்சை—அவரை.

3. கோ. 2 சாமை

4. பி.ஓ.எல். 2. நிலக்கடலை (பொள்ளாச்சி-2)

5. எம்.சி.யூ. 7 பருத்தி

6. ‘பவானி’ நெல்.

7. கோ. 10 கேழ்வரகு.

கோவை மாவட்டத்தில், அண்மைக் காலத்தில், திராட்சைச் சாகுபடி விரைவாகப் பரவி வருவதற்கு, கோவை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சார்ந்த தோட்டக்கலைப் பிரிவே மூல காரணமாக விளங்குகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மேற்கொண்டு வரும் பயன்மிகு பணிகளைப் பொது மக்களுக்குத் தெரிவிக்க, விரிவினைக் கல்வித் துறை ( Department of Extension ) பின்கண்ட பணிகளை வெகு மும்முரமாகச் செய்து வருகின்றன.

1. ‘செய்திக் கதிர்’ ( News Letter ) என்னும் திங்களிதழைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டு வருகிறது.

2. ஆராய்ச்சியின் முடிவுகளைப் பற்றிய கட்டுரைகளை நாளிதழ்களுக்கும், சஞ்சிகைகளுக்கும் வழங்கி, வெளியிட விரிவினைத் துறை ஆவன செய்து வருகிறது.

3. 1972-ஆம் ஆண்டு சூன் திங்களில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் துவக்கப்பட்ட தகவல் தொடர்பு நிலையம் ( Communication Centre ) வேளாண்மைத் தொடர்புடைய எல்லா அறிவியல் நுட்பங்களையும், பல்வேறு பயிர்களின் சாகுபடி முறைகளையும் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிட்டு, அவைகளை உழவர் பெருமக்களுக்கும், வேளாண்மை விரிவாக்கப் பணியாளர்களுக்கும் வழங்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

4. ஆராய்ச்சி மூலம் உருவாக்கப்பட்ட புத்தம் புதிய, ரகங்களின் விதைகளையும், பூச்சி-பூஞ்சாள மருந்துகளையும், தகவல் தொடர்பு நிலையத்தின் கீழ் இயங்கும் விற்பனைக்கிடங்கு நேரடியாக உழவர்களுக்கு விற்பனை செய்து வருகிறது.

இவ்வாறு பல்வேறு வகையில் உழவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் இடையில் உள்ள ஒரு பாலமாகவும், புத்தம் புதிய ரகங்களையும் சாகுபடி முறைகளையும் உருவாக்கும் ஆராய்ச்சி நிலையமாகவும், பசுமைப் புரட்சிக்கு உதவும் பல்கலைக் கழகமாகவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் திகழ்கிறது.






# கோவை ஒரு கண்ணோட்டம்

| | |
|---|---|
| பரப்பு | 15,603.7 சதுர கிலோ மீட்டர் (பரப்பளவில் தமிழ்நாட்டில் மிகப்பெரிய மாவட்டம்). |
| மக்கள்தொகை | 43,57,373 (1971 கணக்கெடுப்பு) (மக்கள் தொகையாலும், தமிழ்நாட்டில் பெரிய மாவட்டம்.) |
| தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் கோவை மாவட்ட மக்கள் தொகையின் விகிதம். | 10·60 சதம். |
| எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் | 16,91,300 (38·81 சதம்) |
| வட்டங்கள் | 9 |
| ஊராட்சி மன்றங்கள் | 749 |
| பேரூராட்சி மன்றங்கள் | 105 |
| நகராட்சி மன்றங்கள் | 10 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 41 (அதிக ஊராட்சி ஒன்றியங்கள் கொண்ட மாவட்டம்.) |
| நகரியங்கள் | 2 |
| குழாய்களுடன் கூடிய மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டிகள். | 531 (அதிகம் உள்ள மாவட்டம்.) |
| குழாய் இல்லாத மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டிகள் | 320 ,, |
| தரைமட்ட குடிநீர்த் தேக்கங்கள் | 347 ,, |
| குடிநீர்க் கிணறுகள் | 8,480 |
| முதல்நிலை நல்வாழ்வு நிலையங்கள் | 45 (அதிகம் உள்ள மாவட்டம்.) |
| தாய்-சேய் நலவிடுதிகள் | 262 ,, |
| குடும்பநல நிலையங்கள் | 81 ,, |
| சமூகக் கல்வி நிலையங்கள் | 1,054 |
| குழந்தைகள் காப்பகம் | 102 |
| மகளிர் மன்றங்கள் | 1,154 |
| இளைஞர் மன்றங்கள் | 319 |
| கிராம வானொலி மன்றங்கள் | 889 |

### திரைப்பட அரங்குகள்

| | |
|---|---|
| 1. நிலையானவை | 50 |
| 2. தற்காலிகமானவை | 59 |

### மழையளவு

| | |
|---|---|
| 1. கோடைப்பருவம் | 15 முதல் 20 செ. மீ. |
| 2. தென்மேற்குப் பருவம் | தென்மேற்குப் பகுதி மட்டும் அதிகமழை பெறுகிறது. |
| 3. வடகிழக்குப் பருவம் | 15 முதல் 30 செ.மீ. |

### மண்வளம்

| | |
|---|---|
| 1. கரிசல்மண் | 25·7 சதம். |
| 2. செம்மண் | 74·3 சதம். |

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தி—மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை, அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.




Criterion CO 2882

நாடு போற்றும்

# சிந்தாமணி

கூட்டுறவு சிறப்பு அங்காடி

கோவை • திருச்சி • ஈரோடு

இல்லத்து தேவைகள்
எல்லாமே கிடைக்கும்.

சிந்தாமணியின் சேவை
உங்கள் சிறப்பான வாழ்வுக்குத் தேவை.



# இருளும்

# ஒளியும்



தமிழக முதல்வர்

**டாக்டர் மு. கருணாநிதி**

# இருளும் ஒளியும்




தமிழக முதல்வர்
டாக்டர் மு. கருணாநிதி

## பதிப்புரை

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், சட்டப் பேரவையிலும் சட்டமன்ற மேலவையிலும் 26—2—1973-ல், 'எல்லார்க்கும் எல்லாம்' என்கிற சோசலிசக் கொள்கையில் இந்த அரசு அசைக்க முடியாத நம்பிக்கையைக் கொண்டிருக்கிறது என்பதை யுணர்த்தும் நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்தார்கள். இதனையொட்டி, இரண்டு அவைகளிலும் தொடர்ந்து நடைபெற்ற விவாதங்கட்குப் பதிலளிக்கும் வகையில் 7—3—1973-ல் சட்டப் பேரவையிலும், 8—3—1973-ல் சட்டமன்ற மேலவையிலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உரையாற்றினார்கள். அப்பேருரைகளின் தொகுப்பே ''இருளும் ஒளியும்'' என்னும் இந் நூல். இதனைத் ''தமிழரசு'' 16—3—1973 இதழுடன் இலவச இணைப்பாக வழங்குகிறோம். இருள் நீக்கி ஒளிபரப்ப உதவும் இந்த ''இருளும் ஒளியும்'' தமிழக மக்கட்குப் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறோம்.

செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

சென்னை,
16—3—1973.

## சட்டப் பேரவையில்

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை மீது காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் உட்பட 81 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். 175 திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களில் 38 உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழகம் அல்லாத மற்றக் கட்சிகளைச் சேர்ந்த 58 உறுப்பினர்களில் 43 உறுப்பினர்களும், இந்த விவாதத்தில் கலந்து கொண்டு, அரிய கருத்துக்கள் பலவற்றை அவரவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற கட்சிகளின் கொள்கைகளுக்கு ஏற்ப, இங்கு விளக்கியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களில் சாதகமான கருத்துக்கள், பாதகமான கருத்துக்கள் எவை இருந்தாலும் அவைகள் அனைத்தும் இந்த ஆட்சிச் சக்கரம் நல்ல முறையில் சுழல்வதற்குப் பயன்படும் என்ற வகையில் கருத்து அறிவித்த எல்லாக் கட்சியினுடைய உறுப்பினர்களுக்கும் நான் என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

வழக்கமாக ஆளுநர் உரையின்மீது நடைபெறுகிற விவாதம் ஆளும்கட்சி உறுப்பினரால் பாராட்டுத் தீர்மானம் கொண்டு வரப்பெற்று, அதற்குப் பிறகு தொடங்கும். முதல் அமைச்சருடைய அல்லது நிதிஅமைச்சருடைய நிதிநிலை அறிக்கையின் மீது தொடங்குகிற விவாதம் வழக்கமாக எதிர்க்கட்சி முதலில் எதிர்த்துப் பேசி, பிறகு தொடங்கும். ஆனால், முதல் தடவையாக என்று நான் கருதுகிறேன். இந்த மாமன்றத்தில் ஆளும் கட்சியின் சார்பிலும் தொடங்கப் பெறாமல் மரபுவழி எதிர்க்கட்சியின் சார்பிலும் தொடங்கப் பெறாமல், தோழமைக் கட்சியின் சார்பில் இந்த விவாதம் தொடங்கப் பெற்று, ஆக, ஆரம்பத்திலேயே இதற்கு எதிர்ப்பு இல்லை என்கிற அளவில் இந்த விவாதம் தொடங்கியிருப்பதைக் காண நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் வகாப் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்துப் பேசி, நல் வாழ்த்துக்களைக் கூறி, விவாதத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

## திரு தங்கமணி வழக்கு

இங்குப் பேசிய கட்சித் தலைவர்களும், சில உறுப்பினர்களும், என்னுடைய அருமை நண்பரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவருமான கே. டி. கே. தங்கமணி அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் அவர்களுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு முடியாமல் தடுக்கப்பட்டு விட்டார்கள் என்ற கருத்தினை எடுத்துச் சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசியபோது, எனக்கு அது புரிந்தது. சுதந்திராக்

கட்சியின் சார்பில் திரு ஹண்டே அவர்கள் பேசியபோது அது எனக்குப் புரிந்தது. ஆளும் காங்கிரஸ் கட்சியின் சார்பில், திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் தவிர மற்ற வர்கள் பேசியபோதும் அது எனக்குப் புரிந்தது. ஆனால், பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு பொன்னப்ப நாடார் அவர்களும், வேறு சிலரும் பேசிய நேரத்தில் எனக்கு அது புரியவில்லை. ஏனெனில், இங்கே சுதந்திராக் கட்சியோ, கம்யூனிஸ்ட் கட்சியோ அல்லது ஆளுங் காங் கிரஸ் கட்சியோ தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஆட்சிப் பொறுப்பை இது வரையில் ஏற்றுக்கொண்டு இருந்த கட்சிகள் அல்ல. ஆனால், நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்களுடைய காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டை 20 ஆண்டுக் காலம் அரசோச்சிய கட்சியாகும். அந்தக் கட்சியின் சார்பில் நம்முடைய நிறுவன காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் என்னை 62 நாட்கள் பாளையங்



கோட்டைச்சிறைச்சாலையில் பூட்டிவைத்துவிட்டு இங்கே சட்ட சபைநடத்துவதற்குத் துணையாக இருந்தவர்கள். நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தண்டிக்கப்பட்டுச் சென்னைச் சிறைச்சாலையில் இருந்த போது, அவர் தலைமை வகிக்கும் கணக்காய்வுக்குழுவிற்கு ஒரு நாள் வந்து அதன் தலைமைப் பொறுப்பை ஏற்று, அந்தக் குழுவை நடத்தி வைக்க ஒரு நாள் விடுமுறை கேட்டபோது, அதற்காக வெளியே வந்துவிட்டுப்போக அனுமதி கேட்ட போது, அதை மறுத்த அன்றையப் பழைய காங்கிரஸ் கட்சியினுடைய போக்குக்குத் துணையாக இருந்த பொன்னப்ப நாடார் அவர்கள் அதைப்பற்றிப் பேசும்போதுதான் எனக்கு வேடிக்கையாக இருந்தது. ஆனால், நடைபெற்று இருப்பது என்ன? திரு தங்கமணி அவர்கள் மீது ஒரு வழக்கு. நான் அந்த வழக்கின் சாராம்சத்திற்குள்ளே நுழையவிரும்பவில்லை, அது நீதிமன்றத்தின் படிக்கட்டிற்குச் சென்றுவிட்ட காரணத்தால். ஏன் அதை அரசு திரும்பப் பெற்றுவிடக்கூடாது என்று திரு ஹண்டே அவர்கள் கேட்டார்கள். அது வேறு பிரச்சினை. ஆனால், அவருக்கு நீதிமன்றத்தில் தரப்பட்டிருக்கும் நிபந்தனை, அவர் சென்னையில் தங்கியிருக்கலாம் என்பது தான். சென்னையிலே தங்கியிருக்கலாம் என்று அளிக்கப் பட்டிருக்கும் அந்தத் தீர்ப்பு எப்படிச் சட்டசபைக்கு அவர் செல்லக்கூடாது என்று தடுக்கிறது என்பது எனக்குப் புரிய வில்லை. சென்னையில்தான் சட்டசபை நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. முன்பு ஒரு காலத்தில் நடந்தது போல் உதக மண்டலத்தில் சட்டசபை நடந்து, சென்னையில் தங்கமணி தங்கியிருக்கவேண்டுமென்று சொன்னால், ஐயோ, சட்ட சபைக்கு அவர் வர முடியாமல் தடுத்துவிட்டார்களே என்று ஆதங்கப்படநியாயம்இருக்கமுடியும். சென்னையில்சட்டமன்றம் நடந்துகொண்டுஇருக்கிறது.

## தீர்ப்பு என்ன?

நம்முடைய நண்பர் திரு. ஹண்டே நேற்றோ அதற்கு முதல் நாளோ என்று கருதுகிறேன்—இன்று படித்துக் காட்டிய நண்பர் தங்கமணி அவர்களின் கடிதத்தை என்னிடம் காட்டி, அவர் சட்டசபைக்கு வருவதற்கு விரும்பு கிறாரே, ஏன் அவர் ஜாமீன் கோரினால் விட்டுவிடக்கூடாதா? என்று கேட்டார்கள். நான் உடனே, அவரிடத்தில் சொன்னேன்; அது என் கையில் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். அது நீதிமன்றத்தில் இருக்கும் விஷயம். ஆனால் நான் உங்களுக்கு ஒரு செய்தி சொல்லுகிறேன். அவருக்கு அளிக்கப்பட்டு இருக்கும் தீர்ப்பில், அவர் சென்னையில் தங்கியிருக்கலாம் என்று இருக்கிறது. சட்டசபை நடவடிக்கை களுக்கு வர எந்தத் தடையுமில்லை என்று சொன்னேன். ஓகோ அப்படியா, என்று கேட்டுக்கொண்டார். ஆறுதல் பெற்றுச் சென்றார். இங்கே பேசுகிற போது அவர் அப்படித்தான் பேச வேண்டும்; பேசினார். ஆனால் அவர்கள் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்துஎடுத்துச் சொல்லப்பட்டகருத்துக்களை அதிலும்

பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னபோது நான் உள்ள படியே வியப்பு அடைந்தேன். இப்போதும் நாட்கள் ஒன்றும் ஆகிவிடவில்லை. இந்த மாமன்றம் இந்த மாதம் இறுதி வரையிலும், அதைத் தாண்டி ஏப்ரல் திங்கள் முதல் வாரம் வரையிலும் கூட நடைபெறக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதிலே கலந்து]கொள்ளும் வாய்ப்பினை திரு கே.டி.கே. தங்க மணி அவர்கள் பெறமுடியும்.

## நிதி ஆணைக் குழு

இந்த நிதி நிலை அறிக்கையில் பேசிய மாண்புமிகு உறுப் பினர்கள் சிலர் நான் கோடிட்டுக் காட்டி இருக்கின்ற ஒரு முக்கியமான விஷயத்தில் கொஞ்சம் கருத்து வேறுபாடு கொண்டார்கள். குறிப்பாக திரு சௌடி சுந்தரபாரதி அவர் களும், வேறு சில உறுப்பினர்களும் நிதி ஆணைக் குழு, தலை யாய இடத்தை மாநிலங்களுக்கு நிதி வழங்குவதில் பெற வேண்டுமென்று நான் சுட்டிக்காட்டி இருக்கின்ற கருத்துக் களை அவர்கள், தங்களுக்கு இருக்கின்ற வேறுபாட்டுக் கருத் தின் மூலமாக மறுத்துரைத்தார்கள். திரு சௌடி சுந்தர பாரதி அவர்கள் நிதி ஆணைக்குழு மூலமாக மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற ஒரு கொள்கை சொல்லப் பட்டிருக்கிறது. அது ஒரு சரியான கொள்கையாக எனக்குத் தெரியவில்லை என்று இங்கே குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்லும் விளக்கம் எல்லாம், மாநில அரசுகள் மத்திய அரசிடமிருந்து நிதி பெற வழி வகுப்பதில் நிதிஆணைக்குழுவே தலையாயஇடம் பெறவேண்டுமென்றுதான் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறேனே அல்லாமல், திட்டத்திற்கு ஆகும் செலவுகளை நிதி ஆணைக்குழுவே கணக் கிலே எடுத்துப் பரிந்துரைக்க வேண்டும் என்பதும், நிதிஆணைக் குழு வகுக்கும்கொள்கைக்கு ஏற்ப ஆண்டுக்கு ஆண்டு திட்டங் களுக்காக மாநிலங்களுக்கு உதவி அளிப்பதில் திட்டக்குழு விற்குப் பொறுப்புக் கொடுக்கலாம் என்பதும் நம்முடைய கருத்தாகும். அதைத்தான் இந்த அறிக்கையில் நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். நிதி ஒதுக்குவதில் திட்டக் குழுவிற்கு எந்த விதமான பங்கும் இருக்கக்கூடாது என்பது என்னுடைய வாதமல்ல.

மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு, நிதி ஆணைக்குழு கொடுக்கும் துண்டு மானியங்கள், இப்போதுள்ள நிலைமை களில் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி கொடுக்கப் படுகின்றன. அது அப்படியே இருக்க வேண்டுமென்று நாம் கூறுகிறோம். இவைகளை மாநில அரசு தன்னுடைய விருப்பப் படிச் செலவு செய்வதற்கான உரிமை பெற்ற அரசாக இருக்கிறது. ஆனால், திட்டக்குழு மாநிலத் திட்டச் செலவு களுக்கு என்று ஒதுக்கும் தொகையில்—அதை அனைவரும் அறிந்து கொள்வது நலம் என்று கருதுகிறேன்—திட்டக்குழு மாநிலங்களுடைய திட்டச் செலவுகளுக்காக ஒதுக்குகின்ற

தொகையில், உதவியாகத் தருவது, கடன் உதவியாகத் தருவது 70 சத வீதம்; மானியமாகத் தருவது 30 சத வீதந்தான் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதிலே நான் சொல்வது இந்த உதவி மானியத்தைப் பொறுத்தவரையில் நிதி ஆணைக்குழுவின் பொதுவான பரிந்துரைப்படி, திட்டக் குழு மாநிலங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்பதும், மத்திய நிருவாகச் சீரமைப்புக் குழுவின் கருத்தும் இதுவாகத்தான் இருக்கிறது என்பதுமாகும். திட்டக் கடன் உதவி, பெரிய குறிப்பிட்ட திட்டப்பணிகளுக்குக் கடன் அளிப்பதற்கு அனைத்து இந்தியக் கடன் நிறுவனம் ஒன்று ஏற்படுத்தி அதிலே மாநிலங்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்பது இந்த அரசினுடைய கருத்தாகும்.

மத்திய அரசின் சார்பில் மாநிலம் நடத்தும் பணிகள் உதவி, (Centrally sponsored schemes) மத்திய அரசின் பல துறைகள் தொடங்கும் திட்டங்களை மாநிலத்தில் மாநில அரசு நடத்துவதற்கு உதவி, ஆகியவைகளை எல்லாம் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு உட்படுத்த வேண்டும், என்று தான் சொல்லி இருக்கிறோமேயல்லாமல் எல்லாவற்றையும் நிதி ஆணைக் குழுதான் வழங்க வேண்டும், திட்டக்குழு அந்தப் பணியைச் செய்ய வேண்டுமென்று நான் குறிப்பிடவில்லை.

## பொதுச் சுகாதாரம்

இந்த நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் அவர்களுக்கு ஏற்பட்ட சில சந்தேகங்களைத் தங்களுடைய உரையில் குறிப்பிட்டார்கள். திருமதி அனந்த நாயகி அம்மையார் அவர்கள் ஒன்றைச் சுட்டிக்காட்டினார்கள். "பொதுச் சுகாதாரம் என்பதின் கீழ், வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு 12·45 கோடி ரூபாய் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் இதற்கான செலவு 10·04 கோடி ரூபாய் என்று காட்டப்பட்டிருக்கிறது; குறைந்து இருக்கிறது" என்று குறிப்பிட்டார்கள். அதை அவர்கள் கவனித்து எடுத்துக் காட்டியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அவர்களுக்கு நான் விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வரவு செலவுத் திட்டத்தில் 12·45 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு இருப்பதில், குடும்ப நலத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கம் 3·86 கோடியாகும். இதை நீக்கி விட்டுப் பார்த்தால் 8·59 கோடி ரூபாய் தான் பொதுச் சுகாதாரத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டது. அதில் இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிற 10·04 கோடி ரூபாயில் இந்தக் குடும்ப நலத் திட்டத்திற்காகச் செலவு செய்யப்படுவது அதிலே சேர வில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : அதே நேரத்தில் அடுத்த பக்கத்தில் பார்த்தால் குடும்ப நலத் திட்டத்திற்காக 6 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அது எப்படி வந்தது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைத்தான் நான் சொல்கிறேன் குடும்ப நலத் திட்டத்திற்காக 6 கோடி தனியாகப் போடப் பட்ட காரணத்தால் இதிலே அதைச் சேர்க்க வில்லை. பொதுச் சுகாதாரம் நிதி ஒதுக்கீடு 8·59 கோடி ரூபாய். திருத்த மதிப்பீடு 10·04 கோடி ரூபாயாக உயர்ந்து இருக்கிறது என்று நாம் தெரிந்து கொள்ள முடியும். பொதுவாக மருத்துவம், மக்கள் நல் வாழ்வு, குடும்ப நலத் திட்டம் என்ற மூன்று துறைகளுக்கும் 1972—73 வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 34·69 கோடி ரூபாய் மொத்த மதிப்பீடு; திருத்தப்பட்ட மதிப்பீடு 38·9 கோடி ரூபாயாக உயர்ந்து இருக்கிறது. இது 'பட்ஜெட் டீடெய்ல்ஸ்' என்ற புத்தகத்தில் பார்த்தால் விளக்கமாகத் தெரியும்.

## வேளாண்மைச் செலவு

திரு ஹண்டே அவர்கள் இதே போன்று இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். வேளாண்மைக்காகச் செலவிடப்படும் திட்டத் தொகை குறைந்து வருவதாகச் சொன்னார்கள். அதிலே இருப்பதை எடுத்துக் காட்டினார்கள். 1972—73 வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு இதற்கு 619 இலட்சம் ரூபாய். 1972—73 திருத்த மதிப்பீடு நிதி ஒதுக்கீடு 564 இலட்சம் ரூபாய் என்று இருப்பதை அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். இதிலே திட்டச் செலவு, திட்டம் இல்லாத செலவுகள் என்று இரண்டு இருக்கின்றன. நாம் அந்தக் குழப்பம் நீக்கப்பட வேண்டுமென்று அடிக்கடி நிதி நிலை அறிக்கையில் பேசுகிற நேரத்தில் எடுத்துச் சொல்லி வருகிறோம். திட்டச் செலவு, திட்டமில்லாத செலவு என்று இரண்டையும் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று அடிக்கடி எடுத்துக் காட்டி வருகிறோம். ஆனால் இந்த ரூ. 619 இலட்சத்தில் திட்டச்செலவு ரூ. 564 இலட்சம்; திட்டச் செலவு குறைந்து இருக்கிற அதே நேரத்தில் வேளாண்மைத் துறைக்குத் திட்டம் இல்லாத செலவுகளின் மூலமாக நிறைய ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்த 619 இலட்சம் ரூபாய் திட்டச் செலவோடு 1972—73-ல் நிதி ஒதுக்கீடு 20.16 கோடி ரூபாய் தான். ஆனால் திருத்தப்பட்ட மதிப்பீடு 24.18 கோடி ரூபாயாகி இருக்கிறது. ஆகவே, அது குறைந்துவிடவில்லை; திட்டச் செலவு என்ற வகையில் பார்த்தால் திரு ஹண்டே அவர்கள் சொன்னது சரியாக வரும். ஆனால் திட்டச் செலவு, திட்டம் இல்லாத செலவு என்று இணைத்துப் பார்க்கிற நேரத்தில் பொதுவாக வேளாண்மைத் துறைக்கு நாம் செலவு செய்யும் பணம் எதுவும் குறைந்து விடவில்லை என்று நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு காசிராமன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அவர்கள் இங்கு இல்லா விட்டாலும், அவர்கள் சொன்ன கருத்து, பத்திரிகையில் வந் திருக்கின்ற காரணத்தினால் நான் அதற்குப் பதில் அளிக்க வேண்டிய கடமை உடையவனாக இருக்கிறேன். அவர்கள் எடுத்துக்காட்டிய குறிப்பு-1966—67-ல் நிலவரி, பாசன வரி, செஸ் வரி, விவசாய வருமான வரி இவைகள் எல்லாம் சேர்ந்து, இந்த அரசுக்கு இவைகளின் மூலம் மொத்தம் ரூ. 840 இலட்சம் கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டு, அதே இனங்களில் இந்த அரசுக்குக் கிடைக்கும் தொகையும் ரூ. 840 இலட்சம் தான். எனவே இதில், மாற்றம் இல்லை. எந்த வரியும் குறைக்க வில்லை. ஆகவே நில வரியைக் குறைத்தோம் என்று சொல்லுவது ஒரு மாயை; 'Myth' என்று திரு காசிராமன் அவர்கள் அன்றைக்குக் குறிப்பிட்டார்கள்.

## விவசாய வருமான வரி

இதற்கு நான் விளக்கம் அளிக்க வேண்டுமானால், விவசாய வருமான வரியில் நாம் செய்திருக்கிற மாற்றங்களை மறந்து விடக்கூடாது. 5 ஏக்கர் வரையிலே நஞ்சைக்கும், புஞ்சை நிலத்திற்கும் அடிப்படை நிலத் தீர்வை இல்லை என்று நாம் அறிவித்துவிட்ட பிறகு, பணப்பயிர்கள் செய்துகொண்டிருக் கிற வசதிபடைத்த விவசாயிகளுக்கு விவசாய வருமான வரியை நாம் இங்கே உருவாக்கி, அதன் மூலமாகக் கொஞ்சம் அதிகமான பணத்தைப் பெறுகிறோம். அதையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிக் கணக்கில் எடுத்துக் கொள்வது மாத்திரம் போதாது. இந்த நில வரியைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு ஆண்டுக்கும் எவ்வளவு கிடைக்கின்றது என்ற கணக்கை விட, ஒவ்வொரு 5 ஆண்டுக் காலத்திற்கும் சராசரி எவ்வளவு கிடைத்திருக் கிறது என்பதைக் கணக்கிட வேண்டும். ஏனென்றால், சில ஆண்டுகளில் வரிவஜா அல்லது தவணை என்கின்ற இவை களெல்லாம் வந்து சேரும். ஆகவே, ஒரு ஐந்தாண்டுக் கணக்கை எடுத்துப் பார்த்து, சராசரி பார்த்தால், 1966—67 முடிய திரு காசிராமன் குறிப்பிட்டுக் காட்டிய 1966-67 முடிய உள்ள ஐந்து ஆண்டுகளுக்கு நில வரியின்கீழ்ச் சராசரி வரு வாய் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 8 கோடி. அதுபோல 1973-74-ஆம் ஆண்டோடு முடிவடைகிற ஐந்து ஆண்டுகளுக்குச் சராசரி நில வரி வருவாய் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6.3 கோடி. ஆகவே, ரூ. 2 கோடி அளவுக்குக் குறைந்திருக்கிறது. அடிப்படை நில வரியை ரத்துச் செய்ததன் காரணமாகச் சாதாரண விவசாயி களுக்கு இந்தச் சலுகைகள் மூலம் பயன் கிடைத்திருக்கிறது. இன்னும் போகப்போக இந்த வரியின் மூலம் கிடைக்கின்ற தொகை குறையக்கூடுமே அல்லாமல், அதிகரிப்பதற்கு வாய்ப்பு வசதிகள் இல்லை என்பதனையும் நான் தெரி வித்துக் கொள்கிறேன்.

## தொழில் அபிவிருத்தி

நம்முடைய பழைய காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசிய கம்பம் தொகுதியைச் சேர்ந்த திரு கோபால், அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ''1965—66-ல் தொழில் அபிவிருத்திக்காக ரூ. 6.56 கோடி ஒதுக்கப்பட்டது. 1973—74-ல் ரூ. 4.48 கோடி தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது'' என்று சொன்னார்கள். அவர்கள் பட்ஜெட் மெமொரண்டம் பக்கம் 37-ஐப் பார்ப்பார்களேயானால் ஒன்றைப் புரிந்து கொள்ளலாம். எண். 35—'' தொழில்கள் '' என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 1965—66-ஆம் ஆண்டுக்கு ரூ. 6.56 கோடி ஆகும். வரும் ஆண்டில் அதே எண். 35-ல் தொழில்கள் என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 7·50 கோடி ஆகும். தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுப்பட்ட தொகை நான்கு கோரிக்கைகளின் கீழ் வருகிறது என்பதையும் மறந்து விடக்கூடாது. சென்ற ஆண்டையும், அதற்கும் முந்திய ஆண்டையும் பார்த்தால், இரண்டு, மூன்று ஆண்டுகளாகத் தான் இம்மாதிரித் தனித் தனியாகக் கோரிக்கைகள் வைக்கப் படுகின்ற ஒரு முறையை நாம் கடைப்பிடித்து வருகிறோம். இந்தக் கோரிக்கைகளையெல்லாம் சேர்த்துத்தான் 1965-66-ல் திரு கோபால் அவர்கள் சொன்னது போல ரூ. 6·56 கோடி தொழிலுக்காக ஒதுக்கப்பட்டது. இதில் ஒரு கோரிக் கையை மாத்திரம் எடுத்துச் சொல்வது சரியல்ல. ஆனால் ''டான்ஸி'' நிறுவனத்திற்கு ரூ. 3·35 கோடி ஒதுக்கியதும் அடங்கியிருக்கிறது. இப்பொழுது டான்ஸி நிறுவனத்தின் மூலம் செலவழிக்கப்படுகின்ற தொகை ரூ. 7 கோடி, அதிலே இது அடங்காமல் தனியாகச் செலவழிக்கப்படுகிறது. இது மாநில நிதி நிலை அறிக்கையில் இப்பொழுது தொழில்களுக் காக ஒதுக்கப்பட்ட ரூ. 7·5 கோடிக்கும் மேற்பட்டது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே இந்த இரண் டையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் 1965—66-ல் ரூ. 6·56 கோடி தொழில் வளர்ச்சிக்காகச் செலவிடப்பட்டது என்பதற்கு மாறாக இப்பொழுது சுமார் ரூ. 15 கோடி அளவில் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மை புலனாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வரியில் பங்குத் தொகை

திரு ஜேம்ஸ் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பேசினார்கள். அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையை இங்கு சமர்ப்பிப்பதற்கு முதல் அமைச்சருக்கு உரிமையே கிடையாது என்று பேசினார்கள். நல்ல வேளையாக அப்படிப்பட்ட தகுதியற்ற ஒருவர் நிதிநிலை அறிக்கையை இங்கே வைத்த காரணத்தினால், அதிலே தான் பேச முடியாது என்று சொல்லிவிடாமல், என்பால் அன்பு வைத்து, அவர்கள்

இந்த நிதி நிலை அறிக்கையில் தன்னுடைய ஆழ்ந்த கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொன்னதற்கு, திரு ஜேம்ஸ் அவர்கள் இங்கே இப்பொழுது இல்லாவிட்டாலும், திரு பொன்னப்ப நாடார் அவர்களின் மூலம் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். 1966—67-ஆம் ஆண்டில் ரூ. 194 கோடி வருமானம் இருந்தது மாநில அரசுக்கு. 1973—74-ல் ரூ. 465 கோடி வருமானம் மாநில அரசுக்கு என்று சொல்லிவிட்டு 465-லிருந்து 194-ஐக் கழித்தார்கள். கழித்து, ஆக 271 கோடி ரூபாய் வரி அதிகமாக மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. ஆக வருமானம் முழுவதையும் வரி என்று கணக்கில் எடுத்துக்கொண்டு ரூ. 465 கோடி வரி இப்பொழுது, 1966—67-ல் ரூ. 194 கோடி வரி, ஆக 465-ல் 194 போனால் ரூ. 271 கோடி என்று கணக்கிட்டு ஒன்றைச் சொன்னார்கள். இது சுலபமான வாதம். ''7-ம் 8-ம் 15'' என்று சொல்கிறார்கள். நாம் அதை மறுக்கிறோம். ''7-ம் 8-ம் 15 என்பதை எப்படி மறுக்கிறாய்?'' என்று கேட்கிறார்கள்.

## சரியான கணக்கா ?

நாம் சொல்கிற சந்தேகம் எல்லாம் 7-ம், 8-ம் 15 தான், ஆனால் 7-ஐ நீங்கள் எப்படிக் கணக்கிட்டிருக்கிறீர்கள் என்றால், 4-ம் 2-ம் ஏழு என்று கணக்கிட்டு, பிறகு 7-ம், 8-ம் 15 என்று சொல்கிறீர்கள் என்றுதான் பதில் அளிக்கிறோம். அந்த வகையில் திரு ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்ட ரூ. 194 கோடி மாநில அரசுக்கு வரி மூலமாக 1966—67-ல் வருமானம் வந்திருக்கிறது என்பது; அதுவும் தவறு. 1973—74-ல் ரூ. 465 கோடி, வரி மூலம் வந்தது என்பது; அதுவும் தவறாகும். இந்த வருமானத்தில் பல இனங்கள் சேருகின்றன. 1966—67-ல் ரூ. 29 கோடியாக இருந்த மத்திய வரியில் பங்கு இப்பொழுது ரூ. 96 கோடியாக உயர்ந்திருக்கிறது. அம்மையார் அவர்களுக்கு ரொம்பச் சந்தோஷமாக இருக்கும். பாருங்கள், 1966—67-ல் மத்திய அரசு ரூ. 29 கோடி தான் கொடுத்தது, இப்பொழுது ரூ. 96 கோடி கொடுக்கிறது. இப்படிக் கொடுத்தும் கூடக் கருணாநிதி மாற்றாந்தாய் மனப்பான்மை என்று சொல்கிறாரே, இது நியாயமா, என்று கேட்பதற்கு அவர்களுக்கு மேடைக்கு ஒரு சரியான பாயின்ட் கிடைத்தது என்று கருதுகிறேன். ஆனால், நான் சொல்ல விரும்புவதெல்லாம், தமிழ்நாட்டிலும் சேர்த்து வசூல் பண்ணுகின்ற வரிப் பணத்திலிருந்துதான் மத்திய அரசு பங்குத் தொகையை அளித்து வருகிறது என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. மத்திய அரசின் மூலம் ரூ. 29 கோடி வந்த வரிப் பங்கு, இப்பொழுது ரூ. 96 கோடியாக உயர்ந்திருக்கிறது. 1966—67ல் ரூ. 23 கோடியாக இருந்த மத்திய அரசினுடைய உதவித்

தொகை இப்பொழுது ரூ. 54 கோடியாகியிருக்கிறது. 1966—67-ல் வரி தவிர்த்த வருமானம், அதாவது நான்டாக்ஸ் ரெவின்யூ, ரூ. 46 கோடியாக இருந்தது. அது இப்பொழுது ரூ. 89 கோடியாக உயர்ந்திருக்கிறது. இதையெல்லாம் கழித்துப்பார்த்தால் 1966—67-ல் வரி ரூ. 194 கோடி அல்ல.




வருமானம் ரூ. 194 கோடி. அதிலே வரி மாத்திரம் ரூ. 95 கோடிதான் 1966—67ல். அதைப்போலக் கழித்துப் பார்த்தால் இப்பொழுது மாநில வரி ரூ. 225 கோடி. 1966—67-ல் ரூ. 95 கோடி வரி, இப்பொழுது மாநில வரி ரூ. 225 கோடி. இது எந்தப் புதிய வரிகளையும் தாங்க முடியாதவர்கள் மீது போட்டு உயர்ந்த வரி அல்ல என்பதையும் இந்த அவையிலே பல நேரங்களில் அமைச்சர்களும் நானும் எடுத்து விளக்கியிருக்கிறோம்.

பழைய வரிகளைச் சிறிது உயர்த்தியதாலும், சீரமைப்புகள் பலவற்றைச் செய்ததாலும், நாட்டில் நம்முடைய மாநிலத்தின் தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி இவைகளிலே நாம் உண்டாக்கிய முன்னேற்றங்களினாலும் ரூ. 95 கோடி என்கின்ற அந்த வரி 7 ஆண்டுக் காலத்தில் ரூ. 225 கோடியாக உயர்ந்திருக்கிறது. இந்த 7 ஆண்டுக் காலத்தில் இவ்வளவு உயரலாமா? ஒரு நல்ல கேள்வி. ரூ. 95 கோடியாக இருந்த வரி 7 ஆண்டுக் காலத்தில் ரூ. 225 கோடியாக உயரலாமா என்பது நல்ல கேள்வி தான். அதே நேரத்தில் 1967-க்கு முன்பு ஒரு 7 ஆண்டுக் காலம் நாம் பின் நோக்கிச் சென்று பார்க்க வேண்டும். 1967-க்கு 7 ஆண்டுக்கு முன்பு 1959—60-ல் ரூ. 39 கோடியாக இருந்த வரி, 1966—67-ல் ரூ. 95 கோடியாக உயர்ந்திருக்கிறது. இது 2.45 மடங்கு அதிகம்

1959–60-ஐக் காட்டிலும் 1966–67-ல் உயர்ந்த வரி 2.45 மடங்கு அதிகம். அதை ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த 7 ஆண்டுக் காலத்தில் 95 கோடி ரூபாயாக இருந்தது 225 கோடி ரூபாயாக உயர்ந்திருப்பது 2·36 மடங்கு தான் அதிகம் என்பதை நன்ருகப் புலப்படுத்தும். ஆகவே முந்தைய ஏழாண்டுக் காலங்களிலே பார்க்கிறபோது 2.45 மடங்கு உயர்ந்திருக்கிறது; இப்பொழுது ஏழாண்டுக் காலங்களிலே 2·36 மடங்குதான் உயர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : இந்த 6, 7 ஆண்டுக் காலங்களிலே 6 ஆண்டுக் காலத்தைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். 1967-லிருந்து 1973 வரை 130 கோடி ரூபாய் அளவுக்கு வரியிலே உயர்வு இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா என்பதுதான் கேள்வி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : ஒப்புக்கொள்ளா விட்டால் வரி வராதே !

## பத்திரிகை விளம்பரம்

டாக்டர் எச். வி. ஹண்டே : மதிப்புக்குரிய முதலமைச்ச ரவர்கள் திரு கோபால் அவர்கள் பேசியதற்குப் பதில் சொன்ஞர்கள். கோபால் அவர்கள் இன்னும் ஒரு கருத்தைச் சொன்ஞர்கள். விளம்பரத்திற்கு ஏராளமான பணம் செலவு செய்கிருர்கள்; அது எதற்காக என்று சொன்ஞர்கள். அதற்குப் பதில் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : திரு ஹண்டே அவர் களுக்கு இவ்வளவு அவசரம் கூடாது. அடுத்த பாயின்ட் அதுதான். திரு கோபால் அவர்கள் சொன்ஞர்கள் ; குறித்து வைத்திருக்கிறேன். அண்ணு அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது—இரண்டாண்டுக் காலத்திலே பத்திரிகை விளம்பரச் செலவுகளுக்காக ரூபாய் 2·18 இலட்சம் என்றும், அது இப்போது அதிகமாகிவிட்டது என்றும் திரு கோபால் அவர்கள் குறிப்பிட்டார்கள். முதலிலே ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

அண்ணு அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சிட்கோ, சிப்காட், சுற்றுலா வாரியம், குடிசை மாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவை இல்லை. இப்போது இந்த நிறுவனங்களின் சார்பாகவும் விளம்பரங் கள் தரப்படுகின்றன. அது மட்டுமல்ல. 1969-க்குப் பிறகு பத்திரிகைகளின் விளம்பரக் கட்டணங்களை உயர்த்தியிருக் கிருர்கள். திரு கோபால் அவர்கள் பேச்சைக் கட்டம் கட்டிப்

போட்ட பத்திரிகைகளுக்கே கூட இது நன்ருகத் தெரியும் : பத்திரிகை விளம்பரக் கட்டணங்களை உயர்த்தி யிருக்கிருர்கள். அப்படியே இருந்தாலுங்கூட திரு கோபால் அவர்கள் சொன்னது தவருன கணக்காகும். அண்ணு அவர்கள் முதலமைச்சராக இருந்து ஆட்சிபுரிந்த இரண்டாண்டுக்காலத்தில் 2·18 லட்சம் ரூபாய்தான் விளம்பரங்களுக்குச் செலவிட்டார்கள் என்பது தவறு, முற்றிலும் தவறு. 1967—68-ல் மாத்திரம் —அண்ணு அவர்கள் ஆட்சிபுரிந்தபோது —5,20,945 ரூபாய், 1968—69-ல் 8,09,151 ரூபாய். ஆக 13 லட்சத்திற்கு மேல் அந்த இரண்டாண்டுக் காலத்தில் விளம்பரத்திற்காக அண்ணு அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தரப்பட்டிருக்கிறது. 1969—70-ஆம் ஆண்டிலே 12 லட்சம் ரூபாய், 1970—71-ஆம் ஆண்டில் 20,43,000 ரூபாய், 1971—72-ல் 24,83,000 ரூபாய். இந்த மூன்று , நான்கு ஆண்டுக் காலத்தில் விளம்பரத்திற்காக மொத்தம் செலவிட்ட தொகை 57 லட்சம் ரூபாய். இதிலே அவர்கள் குறிப்பிட்டார்கள்—1½ லட்சம் ரூபாய்க்கோ, 2 லட்சம் ரூபாய்க்கோ முரசொலிக்கு விளம்பரம் தந்து விட்டார்கள் என்று. உண்மை. 57 லட்சம் ரூபாயில் 1½ அல்லது 2 லட்சம் ரூபாய் முரசொலிக்கு விளம்பரம் தந்தது போக மிச்சம் உள்ள 55 லட்சம் ரூபாய் மற்றப் பத்திரிகைகளுக்கு விளம்பரத்திற்காகத் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு பெரிய தவறு நடந்து விட்டதாக யாரும் சொல்லமுடியாது.

DR. H. V. HANDE: : முரசொலிக்கு விளம்பரம் கொடுத்ததற்காக நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், சர்க்குலேஷன் எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்குக் கொடுக்க வேண்டும் என்று கோபால் அவர்கள் இங்கே சொன்னார்கள். நானும் அதுதான் சொல்லுகிறேன்.

What is the basis on which the advertisement is given. What is the circulation of 'Murasoli' and whether the advertisement is proportionate to its circulation. That is the only question I want to ask and if the Hon. Chief Minister gives the figures, it would be more useful to the House and also we would be having no objective assessment of the problem.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : நான் சொல்கிறேன் அதைப்பற்றி. விளம்பரச் செலவு இங்கே மாத்திரம் உயர்ந்திருக்கவில்லை. மத்திய அரசிலே பார்த்தால்கூட 1963—64-ல் 55 இலட்சம் ரூபாயாக இருந்தது 1971—72-ல் 115 இலட்சம் ரூபாயாக அங்கே உயர்ந்திருக்கிறது. எந்த அடிப்படையிலே தரப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அன்றைக்குச் செய்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டில் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் எந்த அடிப்படையில் தரவேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள் என்றால், அதைப் படிக்கிறேன்—கேட்டுக்கொள்ளுங்கள்.

டிசம்பர் மாதம் 8-ஆந்தேதி புதுடில்லியில் செய்தி விளம்பரத்துறை அமைச்சர்கள் மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசும்போது, ''அரசாங்க விளம்பரச் சாதனங்கள் அரசாங்கத்தினுடைய கொள்கைகளைப் பரப்புவதற்குத்தான் பயன்படுத்த முடியுமே தவிர, அரசாங்கத்தின் கொள்கைகளைக் கடுமையாக விமர்சிக்கின்றவர்களுக்காக அல்ல'' என்பதை இந்தியப் பிரதமர் தெரிவித்தார். இன்னும் சொன்னார்: ''மக்கள் ஒரு அரசாங்கத்தை—அவர்களுடைய கொள்கைகளை அமல் நடத்துவதற்காகத் தேர்ந்தெடுத்து இருக்கும்போது, அந்த மக்களுடைய வரிப் பணத்திலிருந்து செலவு செய்யக்கூடிய இந்த விளம்பரம், அந்தக் கொள்கைகளை ஏற்றுக் கொள்கின்ற முறையில் இருக்க வேண்டும்'' என்றும் பிரதமர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனாலும் கூட, இந்தியப் பிரதமர் அவர்கள் தெரிவித்த அதே கொள்கையிலேதான் இங்கே விளம்பரங்கள் தரவேண்டுமென்று நான் வைதீகமுறையில் இல்லாமல், கொள்கை வேறுபாடு இருந்தாலும், அவதூறாக—பொய்யாக—இந்த அரசாங்கத்தை இழித்தும் பழித்தும் வேண்டுமென்றே செய்திகளை வெளியிடுகிற பத்திரிகைகளை ஒதுக்கி விட்டு, மற்றப் பத்திரிகைகளுக்கு விளம்பரம் தருகிறோம். இந்திரா காந்தி அவர்கள் சொன்ன அந்தக் கொள்கை வேறுபாடு என்கிற அந்த அடிப்படையில்கூட இல்லாமல் எல்லாப் பத்திரிகைகளுக்கும் இந்த அரசாங்கம் விளம்பரம் தந்துகொண்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அப்படியென்றால் நியூட்ரல் பேப்பர்ஸ் எத்தனையோ இருக்கின்றன. அவைகளுக்குக் கொடுத்திருக்கலாம். தனிப்பட்ட பத்திரிகைகளுக்கு மட்டும் என்றில்லாமல் மக்கள் மத்தியிலே 'நியூஸ் வால்யூ' இருக்கின்ற பத்திரிகைகளும் இருக்கின்றன. அவைகளுக்குக் கொடுக்கலாம். உங்கள் கட்சிப் பத்திரிகைகளுக்கு மட்டும் கொடுக்கிறீர்கள் என்றால் இது நியாயமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் ஏற்கெனவே சொன்னேன். 57 இலட்சம் ரூபாயில் 55 இலட்சம் ரூபாய் மற்றப்பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்படுகின்றது. $1\frac{1}{2}$ அல்லது 2 இலட்சம் ரூபாய் முரசொலிக்குத் தரப்படுகிறது என்று திரு கோபால் அவர்கள் சொன்னார்கள். அது முரசொலிக்குத் தரப்பட்டிருக்கிறது. அதிலே தவறு ஏதுமில்லை. அது தொடர்ந்து நடத்தப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: What is the circulation of 'Murasoli' and what is the amount given towards advertisement charges and whether it is proportionate to its circulation. Of course, the Hon. Chief Minister says that he is not going to give advertisement to newspapers which criticise him harshly.

That is a different matter which I do not want to go into now. Also what is the circulation of newspapers like 'Dinamani', 'The Hindu' and 'The Indian Express' which the Government consider as neutral papers and what is the amount given to them towards advertisement charges. I am asking a specific question and I want a specific answer. In this connection, I want to point out that so far as the circulation of 'Murasoli' is concerned, it is about 15,000. If it is more than 15,000 it has to pay 2 paise extra as tax to the Central Government and that is a different matter. So, I request the Hon. Chief Minister to clarify whether the amount of advertisement charges is commensurate with its circulation.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ;** இந்தக் கேள்விக்கு இந்த அவையிலே அமைச்சராக இருந்த திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். விளம்பரம் பத்திரிகைகளின் எண்ணிக்கையைப் பொறுத்துக் கொடுப்பது இல்லை என்றும் பத்திரிகையின் -டோன் அண்டு கன்டென்ட் - (Tone and content) ஆகியவைகளைப் பொறுத்துத்தான் கொடுக்கப்படும் என்றும் செய்தித் துறை அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அவையில் அன்றையச் சர்க்குலேஷன் பற்றி ஏற்கெனவே டில்லிக்குக் கொடுக்கப்பட்ட பதிலில்—நீங்கள் டில்லியிலே கொண்டு போய்க் கொடுத்த புகார்ப் பட்டியலுக்கு அளிக்கப்பட்ட பதில் புத்தகத்தில்-இருக்கிறது. திரு ஹண்டே அவர்கள் அதை ஓய்வாகப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

## விலைவாசி உயர்வு

அடுத்து, மிகமுக்கியமான விலைவாசி உயர்வு குறித்து இந்த மாமன்றத்திலே எல்லா உறுப்பினர்களும் எடுத்துக்காட்டினார்கள். இதற்கு இந்த அரசு கவலையேபடவில்லை.; கொஞ்சம்கூடச் சிந்தித்துப்பார்க்கவேயில்லைஎன்று திரு பொன்னப்ப நாடார் அவர்களும், திரு ஹண்டே அவர்களும் வேறு சில உறுப்பினர்களும் சுட்டிக் காட்டினார்கள். நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பெரியவர் மணலி அவர்களும் நேற்றைய தினம் சொன்னார்கள். 'இதற்கெல்லாம் நீங்கள் யாரும் கவலைப்படவில்லை' என்று சொன்னார்கள். கவலை எடுத்துக் கொள்ளவில்லை என்று திரு ஹண்டே அவர்கள் சொன்னதை அவர்களே மறந்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். மத்திய அரசும் மாநில அரசும் மட்டுமே இந்தப் பிரச்சினையில் கவலைப்படவேண்டுமே அல்லாது பாமர மக்கள் கவலைப்பட வேண்டியதல்ல என்று குறிப்பிட்டார்கள். அதோடு வாக்கியத்தை நிறுத்திவிடக் கூடாது. பாமர மக்கள் கவலைப்படமாட்டார்கள். ஆனால் நாமே இந்த மன்றத்திலே

விவாதித்து இதற்கு யார் பொறுப்பு என்பதில் அக்கறை செலுத்தியாக வேண்டும். அதை மக்கள் இடத்தில் எடுத்துச் சொல்லியாக வேண்டும். திரு மணலி அவர்கள் கூடச் சொன்னார்கள், பழைய கால மித்திரன் பத்திரிகையில் இருந்து ஒரு பாட்டை எடுத்துக்காட்டி, இந்தப் பாட்டை ஆளும்கட்சி உறுப்பினர்கள் எல்லாரும் பாடுங்கள் என்றுகூடச் சொன்னார்கள். தமிழிலும் பாடலாம். மலேயாளத்திலும் அதை மொழி பெயர்த்துக் கேரளத்திலும் போயப் பாடலாம். அகில இந்தியாவில் எல்லா மாநிலங்களிலுமே பாடவேண்டிய பாட்டாகத் தான் அந்தப் பாட்டு இருக்கிறது. இதைக் கேலியாகச் சொல்லவில்லை. அவர்கள் சொன்ன இலக்கிய நயத்தோடு பதிலளிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இது ஒரு மாநிலத்தின் பிரச்சினையாக இல்லாமல் இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்கள் பிரச்சினையாகவும் இருக்கிறது. அந்த முறையிலே இந்தப் பயங்கரமான பிரச்சினையை அணுகி ஆகவேண்டும். இதற்கு நாம் மத்திய அரசு பொறுப்பு என்று சொல்கிற நேரத்தில் மக்களிடத்திலிருந்து எப்படியாவது தப்பித்துக்கொள்ள வேண்டும் என்பதற்குச் சொல்லவில்லை. ஒரு உண்மையைச் சொல்கிறோம்.

## உண்மை என்ன ?

அதற்கு விளக்கம் அளிக்கிறோம். இந்த விளக்கம் ஏற்கெனவே இருந்த பழைய அரசுகளால் அளிக்கப்படவில்லை. அப்போது எப்படி விளக்கம் அளிக்கப்பட்டதென்றால், விலைவாசி உயர்ந்து விட்டால், அப்போது தரப்பட்ட பதிலெல்லாம், அப்படித்தான் விலைவாசி உயரும் என்பதுதான். விலைவாசி உயர்ந்து விட்டது என்று நாங்கள் கிளர்ச்சியில் ஈடுபடுகிறோம் என்றால், அது கேலி புரியப்பட்டது. அரிசிக்காக கியூ நிற்கிறார்களே என்று சொன்னால், சினிமாவிற்கு கியூ நிற்கவில்லையா என்கின்ற கேள்வியின் மூலம் பதிலளிக்கப் பட்டது. இன்று இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் எதிரொலித்த அதே கருத்துக்களை இந்த அரசும் எதிரொலிக்கக் கடமைப் பட்டிருக்கின்றது. நாங்கள் பொறுப்பிலேயிருந்து தட்டிக் கழித்துவிட என்றைக்கும் நினைத்ததில்லை. நினைக்க விரும்பியதுமில்லை. ஆனால் உண்மை நிலைமைகளை மக்களுக்கு உணர்த்த நாம் அனைவரும் கடமைப்பட்டிருக்கின்றோம். ஒவ்வொரு நாட்டிலும் (1) தேசிய வருமான வளர்ச்சி (2) நாணயப் புழக்கம்—'மணி—சப்ளை'— இந்த இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தாக வேண்டும். அப்படிப் பார்த்தால், இங்கே கவர்ன்மென்ட் ஆப் இண்டியா வெளியிட்டிருக்கின்ற ''எகனாமிக் சர்வே 1972—73''— என்ற புத்தகத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். 1968-ஆம் ஆண்டை விட 1968—69-ல் தேசிய வருமான வளர்ச்சி 7 சத விகிதம்தான் உயர்கிறது.

அதே நேரத்தில் நாணயப் புழக்கம் 8·1 சதவிகிதம் என்று உயர்கிறது. 1969—79-ல் 1968—69-ஐ விட தேசிய வருமான வளர்ச்சி 7·3 சதவீதம் என்று உயர்கிறது. நாணயப் புழக்கம் 10·8 சதவீதம் என்று உயர்கிறது. 1970—71-ல் தேசிய வருமான வளர்ச்சி முன் ஆண்டை விட 4.6 சதவீதம் அதிகமாகிறது. அதே சமயத்தில் நாணயப் புழக்கம் முன் ஆண்டைவிட 11·1 சதவீதம் அதிகமாகிறது. ஆனால், திடீரென்று பயங்கரமாக 1971—72-ல் தேசிய வருமான வளர்ச்சி 1.5 என்ற வீதத்திலிருந்து இரண்டு புள்ளி என்று இழுபறி நிலைக்குப் போய் நிற்கிறது. அதற்கு மாறாக, நாணயப் புழக்கம் 12·9 சதவீதம் என்று உயர்கிறது. இதே நிலைமைதான் 1972—73-லேயும் ஏறத்தாழ நீடிக்கிறது.




ஆகவே, தேசிய வருமான வளர்ச்சிக்கு மேலாக நாணயப் புழக்கத்தை அனுமதித்து விட்டால், அதன் விளைவாக, விலைவாசி பாதிக்கப்படுகிறது. ஆகவே, நாணயப் புழக்கத்தைக் கட்டுப் படுத்துகின்ற உரிமை—அதிகாரம்-மாநிலஅரசுக்கு இருக்கிறதா அல்லது ரிசர்வ் பாங்கிக்கு மற்றப் பாங்குகளைக் கட்டுப் படுத்துகின்ற அதிகாரம் இருக்கிறதா ? அந்தக் கேள்விக்குப் பதில் காண்கின்ற நேரத்திலே தான் நாணயப் புழக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் மாநில அரசின் பொறுப்பு அல்ல, மத்திய அரசின் பொறுப்பு என்று சொல்கின்றோம். அப்படிப் பொறுப்போடு சொல்கின்ற நேரத்தில், ஒரு விரலைக் காட்டி, குற்றவாளி என்று சொல்லவில்லை. அந்தப் பொறுப்பு இருக்கிற காரணத்தால், நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறோம். அப்படி எடுத்துக்கொள்கின்ற நேரத்தில் இடைஞ்சல்கள் இருக்கின்றன. திட்டங்கள் போட வேண்டுமானால் அதற்குப் பணப்புழக்கம் தேவை. ஆகவே, இப்படி இது ஒரு பெரிய சர்க்கிளாகச் சுழன்று கொண்டிருக் கிறது. அந்தச் சங்கடம் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே,

பொறுப்பு மாநில அரசுக்கு அல்ல, மத்திய அரசுக்குத் தான் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேனே அல்லாமல் வேறல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி:**— தலைவரவர்களே, இவ்வளவு விவரமாக, பொறுப்பு மாநில அரசுக்கா, மத்திய அரசுக்கா என்று கனம் முதலமைச்சரவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். தேர்தலிலே அன்றைக்கு நின்றபோதே மத்திய அரசுக்குத் தான் அந்தப் பொறுப்பு என்ற உணர்ச்சியோடு பேசாது, ''நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விலைவாசியைக் குறைத்து விடுவோம், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வரியையெல்லாம் குறைப்போம்'' என்று சொன்னார்களே, இன்றைக்கு அவர்களுடைய பங்கு என்ன என்பதைத் தெரிந்துகொண்டால் நல்லது. இன்றைக்குத் தப்பித்துக்கொள்கிற வகையில் பழியை மத்திய அரசிடம் போடுகிறார்கள். இது எப்படிச் சரியாகும்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** :—என்ன செய்வது? உங்களை நம்பித்தான் சொன்னோம். மத்திய அரசு பொறுப்போடு நடைபெறும் என்று நம்பித்தான் சொன்னோம். நம்பிக்கை மோசம் செய்து விட்டீர்கள். எங்களுக்கு மாத்திரமா செய்தீர்கள்? அவர்களுக்கும் சேர்த்துத்தான் செய்தீர்கள்.

**டாக்டர் எச். வி. ஹண்டே.**—தலைவரவர்களே, மதிப்புக்குரிய முதலமைச்சரவர்கள் பேசுகின்ற நேரத்தில், இந்தப் பண வீக்கத்தைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். நானும் அதைத்தான் என்னுடைய பேச்சின்போது, எகனமிக் சர்வே ஆப் இண்டியா-வைப் பற்றி சொல்ல ஆரம்பித்தேன். உடனே, மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் ''இது பாராளுமன்றத்தில் பேசவேண்டிய பேச்சு'' என்று என்னைத் தடுத்து நிறுத்தினார்கள். ஆனால், அதையே நான் உங்களுக்குச் சொல்லவில்லை. இது நீங்கள் இங்கே பேசவேண்டிய பேச்சுத் தான். இதற்குப் பரிகாரம் என்னவென்றால், ''இன்கிரீஸ்ட் புரொடக்ஷன்.'' பொருள்கள் உற்பத்தி செய்தால்தான் இதற்குப் பரிகாரம் என்று சொல்ல வந்தேன். அதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டீர்கள் என்றுகேட்டேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி.**—தலைவரவர்களே! திரு ஹண்டே அவர்கள் இதே விஷயத்தைத்தான் சொல்ல வேண்டுமென்று கருதியிருந்ததாகச் சொன்னார்கள். அவர் சொன்னால் என்ன, நான் சொன்னால் என்ன ? அவர்கள் கடைசியாகச் சொல்ல வந்ததாக ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள்; அது உண்மைதான். உற்பத்தி பெருகினால்தான் இப்படிப்பட்ட பணப்புழக்கம் ஏற்படுகிறது. இப்படி ஏற்படுகிற நேரத்தில் பொருளாதார வளர்ச்சியும் பெருகிட வேண்டும். அந்தப் பெரிய இடைவெளியைத் தான் நான் இங்கே சுட்டிக் காட்டினேன்.

அது மாத்திரமல்ல, இன்னும் சில காரணங்கள் இருக்கின்றன. விலைவாசி உயர்வுக்கு, மேலும் ஒரு பெரிய காரணமாக இருப்பவர்கள் வரி ஏய்ப்பவர்கள். நாட்டில் இந்த வரி ஏய்ப்பவர்களிடமிருக்கிற கறுப்புப் பணம்—''அன் அகௌண்டட் மணி'' புழக்கத்திற்கு வராமலேயே அடிபட்டு விடுகிற காரணத்தால் விலைவாசி உயர்கிறது. நாட்டு மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அந்தக் கறுப்புப் பணக்காரர்களை—அன் அகௌண்டட் மணி வைத்திருப்பவர்களை—வெளியே கொண்டு வருகின்ற அந்தப் பொறுப்பும் நமக்கில்லை என்பதும், அது மத்திய அரசிடம்தான்




இருக்கிறது என்பதும், அதன் காரணமாக நாட்டில் என்னென்ன மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டுவிட்டன என்பதும் யாரும் அறியாதவை அல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்:—தலைவரவர்களே, கறுப்புப் பணம் எப்படி விளையாடுகிறது என்பதை முதலமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:— அதைப் போலவே உற்பத்தியைப் பற்றிச் சொன்னார்கள். இன்றைக்கு நமது தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், அரிசியை உற்பத்தி செய்கிறோம். அதே நேரத்தில் அரிசி விலையைக் கட்டுப்படுத்தக்கூடிய அந்தச் சூழ்நிலை நமக்கு இருக்கிறது. வேறு மாநிலங்களுக்குச் செல்லாமல் அப்படிக் கட்டுப் படுத்துகிறோம். மற்ற உணவுப் பண்டங்களில் பெரும்பாலானவை அப்படி அல்ல. நமது மாநிலத்தின் கட்டுப் பாட்டிற்குள் இருக்கிற காரணத்தால் உணவுப் பண்டங்களிலே மிக முக்கியமான அரிசி விலையை நாம் கட்டுப்படுத்தி வைக்க முடிகிறது. அப்படி இல்லாத காரணத்தால்—பருப்பு, எண்ணெய் போன்ற பொருட்களுக்கெல்லாம் நாம் வேறு மாநிலங்களை நம்பியிருக்க வேண்டிய காரணத்தால்—இந்தச் சூழ்நிலை இந்தியா முழுமைக்குமாகப் பரவிக்கிடக்கின்ற காரணத்தால்—இப்பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்து

கின்ற சூழ் நிலை இல்லாத காரணத்தால்—தீர்க்க முடியாத சங்கடத்திற்கு நாம் ஆளாகி இருக்கிறோம்.

இந்தக் காரணங்களால் தான் பருப்பு போன்ற தானிய வகைகளை எல்லாம் தமிழ்நாட்டில் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்ற முனைப்போடு, முயற்சியோடு இருக்கிறோம் என்று நிதி நிலை அறிக்கையிலும், கவர்னருடைய பேருரையிலும் இந்த அரசின் சார்பாக எடுத்துக் காட்டியிருக்கிறோம். மத்திய அரசே பொறுப்பு என்று கூறிவிட்டு மாநில அரசு எந்தப் பொறுப்பும் எடுத்துக்கொள்ளாமலிருந்து விடுமென்று யாரும் கருதத் தேவையில்லை. இயன்ற அளவிற்கு எல்லாப் பொறுப்புக்களையும் எடுத்து விலைவாசியைக் கட்டுப் படுத்துகின்ற வகையில் என்னென்னவழி வகைகளைக் கையாள முடியுமோ அத்தனை வழிகளையும் இந்த அரசு கையாளு




மென்ற உறுதி மொழியை மிக மிக முக்கியமான இந்தப் பிரச்சினையில், இந்த மாமன்றத்திற்கு மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## மின்வெட்டு

அடுத்து, இன்று நமது தமிழ்நாட்டில் பரபரப்பிற்கு உள்ளாகியிருப்பது மின்வெட்டு. அதைப்பற்றியும் அனைவரும் இங்குப் பேசியிருக்கிறார்கள். தமிழகமே இருளில் மூழ்கிக் கிடக்கிறது என்றெல்லாம் மிகைப்படுத்தப்பட்டுப் பேசப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் அரசியல் கட்சிகள் அவரவர் கட்சிகளின் இயல்புக்கேற்ப இந்தப் பிரச்சினையை அணுகுகின்றன. நான் எல்லா அரசியல் கட்சிகளையும் மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்வது, இது ஒரு பொதுப் பிரச்சினை, ஒரு தனிப் பிரச்சினை அல்ல, கொள்கைப் பிரச்சினை அல்ல. குறிப்பாக மாணவர்களுக்குப் பயிற்றுமொழி

ஆங்கிலமா தமிழா என்ற கேள்வி வருகிற நேரத்தில்—மாணவர்கள் தங்களுக்குப் பயிற்று மொழி. ஆங்கிலம்தான் வேண்டும்; தமிழ் தேவையில்லை என்று சொல்கிற நேரத்தில், இதைத் தமிழ் மக்கள், தமிழ்நாடு என்று பார்க்கிற நேரத்தில் இது பொதுப் பிரச்சினையாக வருகிறது என்றாலும் கூட அதை விட்டுக்கொடுத்து, அதிலே கூட அரசியல் காரணம் ஏற்பட்ட நேரத்தில்—அதை அரசியலுக்காகச் சிலர் பயன்படுத்திக்கொண்ட நேரத்தில்—அதை நாம் அணுகியிருக்கிறோம்.

அப்படியில்லாமல் இது அனைவரையும் பாதிக்கக்கூடியது என்று திரு ஹண்டே அவர்கள் குறிப்பிட்டதைப்போல, திரு மணலி அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, இதை ஓர் போர்க்காலச் சூழ்நிலையைப் போலக் கருதி, நாம் ஈடுபட




வேண்டிய பெரிய காரியமாகும். அதே நேரத்தில் ஒரு அரசு தன்மீது சுமத்தப்படுகிற பழி, சொல்லப்படுகிற குற்றச்சாட்டு ஆகியவற்றிற்குப் பதில் அளிக்க வேண்டியிருக்கிறது என்றாலும், எப்படி இது ஒரு பொதுப் பிரச்சினை என்று சொல்லி அரசை ஒரு மூலையில் கொண்டுபோய்த் தள்ளி, மற்றவர்கள் குற்றம் சாட்டுவதற்கு விரும்புகிறார்களோ அதைப் போலத் தான், தான் அந்தக் குற்றச்சாட்டிற்கு ஆளாக்கப்படும் நிலைமையில் இல்லை; தான் அதற்குப் பொறுப்பு இல்லை என்பதை எடுத்துச் சொல்கிற உரிமையை அரசும் பெற்றிருக்கிறது.

இந்த அரசு வந்த பிறகு மின்சார உற்பத்தியே நடைபெறவில்லை. ஆகவே தான் சங்கடங்கள் ஏற்பட்டன என்று திரு மணலி அவர்களே சொன்னார்கள். நாம் உஷாராக இருக்கவில்லை என்றும் சொன்னார்கள்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது மாநிலத்திற்கு 110 மெகாவாட் மின்சாரம் கிடைத்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 315 மெகாவாட் மின்சாரம் கிடைத்தது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 510 மெகாவாட் மின்சாரம் கிடைத்தது. ஆக 51 முதல் 67 வரை ஏறத்தாழப் பதினைந்து வருடத்தில் நமது மாநிலத்தில் 935 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக் கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் 67 முதல் 72 வரை. இந்த ஐந்தாண்டுக் காலத்தில் மட்டும் 625 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. பதினைந்து ஆண்டுக் காலத்தில் 935 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது என்ருல் இந்த ஐந்தாண்டுக் காலத்தில் மட்டும் 625 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே நாம் உற்பத்தி செய்ய வில்லை என்ற குற்றச்சாட்டுக்கு இந்த அரசை ஆளாக்குவது முறை அல்ல என்பதற்கான விளக்கத்தை இதன் மூலம் நான் தரவிரும்புகிறேன்.



இன்னென்றையும் மறந்துவிடக்கூடாது. கேரளாவை எடுத்துக்கொண்டால் அங்கே ஒருநாளைக்குத் தேவையான மின்சாரம் 60 இலட்சம் யூனிட் தான். மைசூருக்கு ஒரு நாளைக்குத் தேவையான மின்சாரம் 130 இலட்சம் யூனிட். ஆந்திரத்திற்கு ஒரு நாளைக்குத் தேவையான மின்சாரம் 90 இலட்சம் யூனிட். ஆகவே இந்த மூன்று மாநிலங்களையும் சேர்த்துக் கொண்டாலும்-கேரளா, மைசூர், ஆந்திரா ஆகிய மூன்று மாநிலங்களையும் சேர்த்துக் கொண்டாலும்—ஒரு நாளைக்குத் தேவையான மின்சாரம் 280 இலட்சம் யூனிட் தான். ஆனல் தமிழ்நாட்டுக்கு மட்டும் தேவையான மின்சாரம் ஒரு நாளைக்கு 225 இலட்சம் யூனிட். இங்கே தொழில் வளர்ந்திருக்கிற காரணத்தினுல்—இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு 6 இலட்சம் பம்பு செட்டுக்கு மின்சார இணைப்புக் கொடுத்திருக்கிற ஒரே மாநிலம் தமிழ்நாடு என்ற காரணத்தினுல்—கேரளா, மைசூர், ஆந்திரா ஆகிய மூன்று மாநிலங்களுக்கும் சேர்த்து ஒரு நாளைக்கு ஆகிற மின்சார அளவைக் கிட்டத் தட்டப்போய்த் தொடுகின்ற அளவுக்கு 225 இலட்சம் யூனிட் இந்த மாநிலத்திற்குத் தேவைப்படுகிறது.

இப்போது ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகள், நீர் மீன்சார நிலையங்களுக்கு இயற்கையினுல் ஏற்பட்டுவிட்ட ஆபத்தே தவிர வேறு அல்ல. இயற்கை திடீரென்று, எதிர்பாராத வகையில் ஏமாற்றிவிட்ட காரணத்தினுல் நமக்கு நீர் மின் நிலையங்களில் இருந்து கிடைக்க வேண்டிய மின்சாரம் கிடைக்கவில்லை.

## திட்டங்களே கேட்கவில்லையா?

மத்திய அரசிடமிருந்து நாம் திட்டங்களே கேட்கவில்லையா என்று பார்த்தால் 71, 72, 73 இந்த மூன்று ஆண்டுகளில் பத்துத் திட்டங்களைக் கேட்டிருக்கிருேம். (1) சேர்வலாறு திட்டம், (2) நெல்லித்துறைத் திட்டம், (3) சொலாட்டிப்புழா திட்டம், (4) மேல் அமராவதித் திட்டம், (5) பரலியாறு திட்டம், (6) சண்முகா நதித் திட்டம், (7) கூனூர் கல்லாறு திட்டம், (8) கீழ் மோயாறு திட்டம், (9) தூத்துக்குடி அனல் மின் நிலையம், (10)மேட்டூர் அனல் மின் நிலையம். ஆக இந்தப் பத்துத் .திட்டங்களின் மூலம் 1,035 மொவாட் கிடைக்கக்கூடிய திட்டங்களை மத்திய கமிஷனின் ஒப்புதலுக்காக அனுப்பியிருக்கிருேம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: All these 10 schemes have been sent to the Centre to be included in Fifth Plan which starts from 1974 and ends in 1979. Why did you not send the same for inclusion in Fourth Plan. That is the point.

**திரு ஆர். பொன்னப்ப நாடார்** : சண்முகா நதித் திட்டமானது, நான்காவது திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்

கிறதா? அல்லது ஐந்தாவது திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தத் திட்டங்கள் எல்லாம் அனுமதிக்கப்பட்ட பிறகுதான் அது எந்தத் திட்டத்திற்கு உட்படும் என்பது தெரியும்.

இவைகள் அன்னியில் கல்பாக்கம் விரிவுத் திட்டம், நெய்வேலி இரண்டாவது அனல் மின் நிலேயம், தூத்துக்குடி இரண்டாவது அணு மின் நிலேயம் ஆகிய மத்திய அரசின் திட்டங்களேயும் நாம் தொடர்ந்து வற்புறுத்தி வருகிருேம். இந்த மன்றத்தில் தீர்மானங்கள் போட்டதை எல்லாம் முன்பொரு தடவை விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன்.

ஆளும் காங்கிரசைச் சேர்ந்த திரு குமாரசாமி அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்ஞர்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில்—அம்மையார் அவர்களும் சொன்ஞர்கள். அதை ஒட்டி வருகிறது—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு மின் நிலேயத்தை ஏற்படுத்த மத்திய அரசினர் ஒத்துக் கொண்டிருக்கிருர்கள் என்ருல்—குமாரசாமி சொன்ஞர்—பிறகு ஏன் அதில் அவர்கள் குறுக்கிட்டப் போகிருர்கள்—இது அவர்கள் கேள்வி. நமக்குத் தேவையான திட்டத்தை நாம் போட்டுக்கொண்டு மத்திய அமைச்சரிடம் சொல்லிவிட்டு, நாமே நிறைவேற்றிக் கொள்ள வேண்டியது தானே, அப்படிச் செய்யத் தவறியதால் தான் இந்த நிலேமை என்று திரு குமாரசாமி சொன்ஞர். எனக்கு இருக்கிற பயம் எல்லாம், ஏதோ சொன்னதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்பது அல்ல. இதே கருத்தைப் பொதுமக்களிடம் சொல்கிற நேரத்தில் பாதிக்கப்பட்டிருக்கிற மக்கள் என்ன கருதிக் கொள்வார்கள் ? நான்காவது திட்டத்தில் ஒரு மின் நிலேயத்தை ஏற்படுத்த மத்திய அரசினர் ஒத்துக்கொண்டிருக்கிருர்கள், மத்திய அரசின் அனுமதியைக்கூடப் பெருமல் நாம் அதனே நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று திரு குமாரசாமி சொல்லிவிட்டார். அமைச்சர்கள் ஏன் இதைச் செய்யாமல், வீணே பொழுதைக் கழித்தார்கள் என்றுதான் பொது மக்கள் எண்ணத் தோன்றும்.

ஆஞல் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், அந்த மின் நிலேயத்தை உடனடியாக ஏற்படுத்தி விடுவது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல என்பதை ஏற்கெனவே ஆட்சிப்பொறுப்பில் இருந்தவர்கள் நன்கு உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

முதலில் திட்டத்திற்கு விரிவான அறிக்கையைத் தயாரித்து அனுப்புகிருேம்.

அந்த அறிக்கையை மத்திய நீர்மின் குழு ஆராய்ந்து மத்திய மின்சாரத்துறை அமைச்சரின் ஒப்புதலேப் பெற்ற பின், திட்டக் குழுவிற்கு அதை அனுப்பும்.

திட்டக் குழுவில் தொழில் நுட்ப ஆலோசனைக் குழு மறுபடியும் அதை ஆராய்ந்து, அதற்குப் பிறகு ஒப்புதல் அளிக்கிறது. இந்தச் சம்பிரதாயங்களின்படி இந்த வழி முறைகளில் ஒரு திட்டத்தை ஏற்றுக்கொள்ளக் குறைந்தது இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. உதாரணமாக நெல்லித்துறை, சேர்வலாறு, பரலியாறு ஆகிய திட்டங்கள் 1970—71-ல் அனுப்பப்பட்டன. இன்னும் அந்தத் திட்டங்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

திட்டக் குழுவின் அனுமதி இல்லாமல் நாம் ஏன் ஏற்படுத்திடக்கூடாது என்று திரு குமாரசாமி குறிப்பிட்டார்—கடற்கரையில் அம்மையாரும் பேசியதாக நான் கேள்விப்பட்டேன். அப்படி மத்திய அரசின் அனுமதியைப் பெறுமல் நாம் செயல்பட முற்பட்டால்—அந்த நிலையத்திற்கான சாதனங்களை—பாய்லர், ஜெனரேட்டர் ஆகிய கருவிகளை-மத்திய அரசின் அனுமதி இல்லாமல் எந்தத் தொழிற்சாலையும் உற்பத்தி செய்து தர முன்வராது, அதுமாத்திரம் அல்ல. அந்தக் கருவிகளை இந்தத் தொழிற்சாலைகளில் இருந்து பெற முடியாமல் வெளி நாட்டில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டுமென்றுல் மத்திய அரசின் ஒப்புதலைத்தான் நாம் பெற்றுக வேண்டும். ஆக அவர்களைக் கேட்காமல் பிறகு Ratification வாங்கிக் கொள்ளலாமென்று திட்டங்களை நிறைவேற்ற மாநில அரசுக்கு எந்த வழியும் இல்லை என்பதை நான் விளக்க விரும்புகிறேன்.

நாம் மின்சாரத்தைச் செம்மையாகவும், சிக்கனமாகவும் செலவழிக்கிறேமா ? ஏதோ ஊழல் நடந்திருக்கிறது, நடந்திருக்கிறது என்று சொல்கிறுர்கள். உடனேயே அதற்கு ஊழல் விசாரணைக் குழு போடவேண்டும், நீதி விசாரணைக் குழு போடவேண்டும் என்கிறுர்கள்.

## மத்தியில் இருந்து.. ......

இப்படி எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரில் இருந்து வர வேண்டும். தேர்தல் நடக்கிறதா, மத்திய சர்க்காரில் இருந்து தேர்தல் அதிகாரி வரவேண்டும்; ஏஜெண்டு போடுகிறுர்களா மத்தியில் இருந்து வரவேண்டும்; போலிங் பூத்தில் உட்காருகிறுர்களா மத்தியில் இருந்து வரவேண்டும். இன்னும் கொஞ்ச நாட்களில் இங்கே சட்டமன்றம் நடக்கும்போது, திருமதி இந்திராகாந்தி அங்கே பாராளுமன்றத்தை நடத்தாமல் விட்டு இங்கே வந்து முதலமைச்சர் பொறுப்பைப் பத்து நாள் பார்த்துவிட்டு மறுபடியும் டெல்லிக்குப் போக வேண்டுமென்று சொன்னுலும் சொல்வார்கள் என்று கருதுகிறேன். அப்படிச் சொல்லி மத்தியில் இருந்து அமைச்சர்களை வரவழைத்தால் அவர்கள் நிற்கமாட்டார்கள் என்பதை இந்திய வரலாறு சொல்லிக்கொண்டிருக்கிறது. தேர்ந்

தெடுக்கப்படுகிற அமைச்சர்கள்தான் வரவேண்டும். நியமிக்கப்படுகிற அமைச்சர்கள் வந்தால் அவர்களின் ஆட்சி நிற்பதாக இந்தியாவின் சரித்திரம் சொல்லவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அப்படி நியமனம் செய்யப்படுகிறவர்கள் அடுத்த 6 மாதத்திற்குள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டே வந்தாக வேண்டும் என்பதை நினைவு கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் ஆறுமாதக் கதையைச் சொல்லவில்லை. அதற்குப் பின் நடந்த கதையைச் சொல்கிறேன்.

**திரு ஆர். பொன்னப்ப நாடார் :** ஒரிசாவில் எப்படி மந்திரி சபை கவிழ்ந்ததோ அதுபோல நடக்காதிருக்க ஆயாராம் கயாராம் நம்மிடையே இருக்கக்கூடாது என்பதை நானும் ஒத்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஆயாராம், கயாராம்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தாகிவிட்டது என்பது திரு பொன்னப்பநாடார் அவர்களுக்கும் தெரியும். இப்படி எல்லாம் மின்சார வாரியத்தில் ஊழல்; ஊழல் விசாரணை செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். மத்திய அமைச்சராக இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற மதிப்பிற்குரிய திரு கே.எல். ராவ் அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசியிருக்கிறார்கள். அது 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகையில் வந்திருக்கிறது. நல்லவேளையாக அவர்கள் போட்டார்கள், போனால் போகட்டும் என்று ! திரு கே.எல். ராவ் அவர்களது பேச்சின் ஒரு பகுதி இது:—

He complimented Tamil Nadu for making the best use of power without wastage.

என்று திரு கே.எல்.ராவ் அவர்கள் தமிழ்நாட்டைப் பாராட்டி நாடாளுமன்றத்தில் பேசியிருக்கிறார்கள். அது மாத்திரம் அல்ல. பொதுவாக மின் திட்டங்கள் மத்திய அரசு அளவில் சரியாகச் செயல்படவில்லை என்பதை அவரே குறிப்பிட்டிருக்கிறார். திட்டங்கள் எப்படி நிறைவேற்றப்படவேண்டும், மின்சாரத் திட்டங்கள் எப்படி நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கருத்தை ஒரு கருத்தரங்கில் அவர் சொல்கிறார்:—

The power planning so far had been totally wrong. **It should never have been linked to the general Five Year Plan.** Power planning should be a continuous process.

என்று திரு கே.எல்.ராவ் அவர்கள் டெல்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் 23—2—1972-ல் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இன்னொன்றையும் சொல்வேன், உங்கள் தகவலுக்காக. 26—7—1972-ல் ஐதராபாத்திலே நடைபெற்ற Zonal Council, மண்டலக் குழுவிற்கு நானும் கல்வி அமைச்சரும், தொழில் அமைச்சரும் சென்றிருந்தபொழுது அங்கே திரு கே. எல். ராவ் பேசும்பொழுது ஒன்றைச் சொன்னார்கள். அதாவது ஒரு மாநிலத்திலே இருக்கிற ஆட்சியினுடைய அக்கறையற்ற தன்மையினால் இந்தச் சங்கடங்களெல்லாம் ஏற்பட்டுவிட்டதாகச் சொல்கிறார்களே, அதற்காக நான் சொல்கிறேன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கவனமாகக் கேட்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்:—

The power supply position in the States of Southern Zone was going to be extremely bad because of delay in the construction of a 390 MW Idikki project due to labour trouble and delay in the commissioning of the 89 MW Unit at Sharavathi on account of delay in supply of equipment, etc., for the project.

என்று சொன்னார்கள். அப்பொழுது இடிக்கியிலே ஒரு பெரிய வேலை நிறுத்தம் நடைபெற்றது. வேலை நிறுத்தத்தை நடத்தி




யவர்கள் வேறு கம்யூனிஸ்டுகள். ஆனால் வேலை நிறுத்தம் விரைவிலே முடிவடைந்திருக்குமானால், 390 மெகாவாட் உற்பத்தி அங்கு வந்திருக்குமேயானால், 'சதர்ன் ஸோன்', தென்மண்டலத்திலே இருக்கிற தமிழ்நாட்டிற்கு நாம் கேரளாவிலிருந்து கொஞ்சம் அதிகமான மின்சாரத்தைப் பெற்றிருக்க முடியும். இப்படிப் பல்வேறு நிலைமைகள் பல இடங்களிலே நடைபெற்றுவிட்ட காரணத்தினாலேதான் இந்த

மின்சார வெட்டினுல் நாம் பாதிக்கப்பட்டிருக்கிறோம். இதையே சொல்லிக்கொண்டிராமல் ஆகவேண்டிய காரியங்களையும் நாம் பார்க்க வேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹண்டே :** கே. எல். ராவ் சொன்ன கருத்தைத் தான் நான் காலையிலே சொன்னேன். இப்பொழுது இருக்கிற குறையெல்லாம் பேசின் பிரிட்ஜ் பவர் ஹவுசிலே 70 மெகாவாட் இருந்த காலத்தில் இன்ஸ்டால்ட் கப்பாசிட்டி 60 மெகாவாட் உற்பத்தியாகிக்கொண்டிருந்தது. இப்பொழுது 97.5 இருக்கிற நேரத்தில் 35 மெகாவாட் தான் உற்பத்தியாகிக்கொண்டிருக்கிறது. ஆக, நம்முடைய உற்பத்தியிலும் கொஞ்சம் கோளாறு இருக்கிறது என்றுதான் நான் காலையிலே சொன்னேன்.

**மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, பேசின் பிரிட்ஜ் பவர் ஹவுசில், கட் இல்லாத நேரத்தில், சென்ற ஆண்டு 24 இலட்சம் யூனிட் தயார் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 30 இலட்சம் யூனிட் தயார் செய்யப்படுகிறது. குறைந்துவிட்டது என்று சொல்லுவதற்கு எந்த விதமான ஆதாரமும் கிடையாது. அது மட்டுமல்ல, எண்ணூரிலே கூட அப்படித்தான் என்று சொன்னுர்கள். பவர் கட் இல்லாதபொழுது முழுமையாக இருந்தது என்று சொல்கிறுர்கள். இப்பொழுது நாங்கள் உற்பத்தியைப் பெருக்கவில்லை, எங்களுடைய கவனக் குறைவு என்று சொல்கிறுர்கள். அதற்காகச் சொல்கிறேன், எண்ணூரிலே கூட சென்ற ஆண்டு பவர் கட் இல்லாத நேரத்தில் 40 இலட்சம் யூனிட்தான் தயார் செய்யப்பட்டது. ஆனுல், இந்த ஆண்டு 73 இலட்சம் யூனிட் தயார் செய்துகொண்டிருக்கிறுர்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஒரே ஒரு இன்ஃபர்மேஷன்! பவர் கட் இல்லாத பொழுது நாங்கள் இவ்வளவு உற்பத்தி செய்தோம். இன்றைக்கு எவ்வளவு உற்பத்தி செய்கிறோம் என்பதல்ல. பவர் கட் இல்லாதபொழுது நீர் நிலையத்திலிருந்து உங்களுக்குத் தேவையான மின்சாரம் வந்துகொண்டிருந்ததால் அதிலே, சற்று அக்கறை இல்லாமல் இருந்தது. இப்பொழுது பவர் கட் இருக்கிறது, இப்பொழுது அனல் மின்சார உற்பத்தியை ஃபுல்லஸ்டு கப்பாசிடிக்கு யுடிலைஸ் செய்கிறீர்களா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் :** அது முழுமையாக ஓடிக்கொண்டிருக்கிறது. மத்திய சர்க்காருடைய அமைச்சர் டாக்டர் கே.எல். ராவ் கூறும்பொழுதுகூட, அது ஓடவில்லையென்று சொல்லவில்லை. தண்ணீர் வராததற்குத் தட்டுப்பாடு இல்லாமல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கிறுர்களே தவிர, குறை இருப்பதாகச் சொல்ல

வில்லை. குறையில்லாமல் தமிழ்நாட்டிலே ஜெனரேட்டர்களைத் திருப்திகரமாக ஓட்டியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மின்சார வெட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, அவர்களைப் பற்றிக் கவலையே கொள்ளாமல், இந்த அரசு அலட்சியமாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். கடந்த பல தினங்களாக வேறு எந்த வேலையையும் கூடக் கவனிக்காமல், இந்த வேலையை நானும், அமைச்சரவையிலே இருப்பவர்களும், அதிகாரிகளும் கவனித்து வருகிறோம். குறிப்பாகக் கைத்தறியாளர்களுக்காக ஆலை அதிபர்களோடு நேற்றையதினம் பேச்சு வார்த்தை நடத்திக், கணிசமான நூலைப் பெறுவதற்கு




முயற்சிகள் முடிவுற்று இருக்கின்றன என்பதை இன்று பத்திரிகைகளிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பார்த்திருக்கலாம்.

ஆலைகளிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்குக் கூடுமான வரையில் அவர்களுடைய சங்கடங்களைத் தவிர்க்க, அரசு, தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள், தொழில் அதிபர்கள் அடங்கிய முத்தரப்புக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய பணிகளும் வேகமாக நடைபெற்று வருகின்றன.

## விவசாயிகளுக்குச் சலுகைகள்

விவசாயிகளைப் பொறுத்த வரையில், என்னையும் வேறு சில அமைச்சர்களையும் இரண்டு நாட்களுக்கு முன்பு விவசாயிகளுடைய பிரதிநிதிகள் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்து சந்தித்தார்கள். நீண்ட நேரம் 10 மணியிலிருந்து கிட்டத்தட்ட 2 அல்லது $2\frac{1}{2}$ மணி நேரம், எங்களோடு விவாதித்தார்கள். நல்ல பயனுள்ள விவாதமாக இருந்தது. பல

சங்கடங்களையெல்லாம் எடுத்துத் தெரிவித்தார்கள். அவர்களுடைய கருத்து, இப்பொழுது 4 மணி நேரம் கொடுக்கப்படுவது சரியாகக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், சில இடங்களிலே கோளாறு ஏற்படுகிறது என்றும், 4 மணி நேரத்தினை 6 மணி நேரமாக ஆக்கித்தர வேண்டுமென்றும் சொன்னார்கள்.

அதை ஆராய்ந்து பார்த்ததில் தற்பொழுது 4 மணி நேரம் தரப்படுகிற மின்சாரத்தை 5 மணி நேரமாக ஆக்குவதற்கு இப்பொழுது நாம் முடிவு செய்திருக்கிறோம்.

அதற்குப் பரீட்சார்த்தமாக, முதல் கட்டமாக நேற்றைய தினம் வேலூர் மின் திட்டத்தில் முதல் பிரிவு, காலை 4 மணி முதல் 9 மணி வரை என்றும், இரண்டாவது பிரிவு, காலை 8-30 மணி முதல் பகல் 1-30 மணி வரை என்றும், மூன்றாவது பிரிவு, பிற்பகல் 1 மணி முதல் மாலை 6 மணி வரை என்றும்,




பிரித்து மின்சாரம் வழங்கப்படுகிறது. தொடர்ந்து மற்ற இடங்களில் வெகு விரைவிலே இதைப் பார்த்துக் கொண்டு அமலாக்கப்பட இருக்கிறது.

டிரான்ஸ்பார்மர்களில் மின்பளு 'லோட்' அதிகமாகி, பழுது ஏற்படுவதைத் தடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கவேண்டுமென்று கூறினார்கள். அதற்குப் பல புதிய டிரான்ஸ்பார்மர்களுக்கு உடனடியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. முதலில் ஆயிரம் டிரான்ஸ்பார்மர்களை அங்கங்கே நிறுவுவதற்கு முடிவெடுக்கப்பட்டு அந்தப் பணிகளும் ஆரம்பிக்கப் பட்டுவிட்டன என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

மின் வெட்டு நிலைமை சீர்படும் வரையில் மின்சாரத்திற்கான குறைந்த பட்சக் கட்டணம் விவசாயிகளுக்கும் தொழிற்




சாலைகளுக்கும் தற்காலிகமாக ரத்து செய்யப்படுகிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சார வெட்டால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குப் பருவ மழை தவறும் நேரங்களில் எந்த அடிப்படையில் விவசாயிகளுக்குச் சலுகைகள் அளிக்கப்படுகிறதோ, அதே சலுகைகள் இப்போதும் மின் வெட்டால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக விரைந்து அளிக்கப்படுகிறது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாரியம் வழங்கும் மின்சாரத்திற்கு மாற்றாகத் தனியார் ஜெனரேட்டர்கள் வாயிலாக உற்பத்தி செய்யும் மின்சாரத்திற்கு விதிக்கப்படும் வரி, இந்த நெருக்கடி தீரும் வரை ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நகரங்களில் தெரு விளக்குகள் இரவு 7 மணி முதல் 10 மணி வரையில் மட்டுமே எரியலாம். அலங்கார விளக்கு களுக்கு ஜெனரேட்டர்தான் பயன்படுத்தப்பட வேண்டும்.

திரைப்பட அரங்குகளில் மின்சாரத்தை உபயோகித்து ஒரு காட்சி மட்டுமே நடத்தப்பட வேண்டும். இது நம் முடைய திருப்பூர் மொய்தீன் அவர்களுக்கு ஓரளவு மகிழ்ச்சி தரும் என்று கருதுகிறேன். திரைப்பட அரங்குகளில் மின் சாரத்தை உபயோகித்து ஒரு காட்சி மட்டுமே நடத்தப்பட வேண்டும். பிற காட்சிகளை ஜெனரேட்டர் மூலம் நடத்த எந்தத் தடையும் இல்லை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையிலுள்ள தெர்மல் நிலையங்களின் நிலக்கரித் தேவை யைப் பூர்த்தி செய்வதற்கு, ஆறு மாதத்திற்கு அயல் நாட்டுக் கப்பலைப்பயன்படுத்துவதற்கு ஷிப்பிங் டைரக்டர் ஜெனரலின் அனுமதி கிடைத்துவிட்டது. தென்னிந்திய ஷிப்பிங் மேனே ஜிங் டைரக்டர் திரு தஸ்தாருடன் தொடர்பு கொண்டு ஏற் பாடுகளை முடிவு செய்யுமாறு மின்வாரியத் தலைவருக்குக் கூறப்பட்டுள்ளது. மாதம் ஒன்றுக்கு 21,000 டன் நிலக்கரி கொண்டுவருவதற்கான இத் திட்டம் நம் தேவையைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்யும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : கலைக் கண்காட்சிகள் எங்கு பார்த்தாலும் நடத்தப்படுகின்றனவே, அதற்கு மின் சாரம் கொடுக்கப்படுமா, நிறுத்தப்படுமா என்று அரசாங்கம் அறிவிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : தயவு செய்து எங்கே நடக்கிறது என்று சொன்னால் சரியாக இருக்கும். எங்கே நடக்கிறது ?

**திருமதி த. ந. அனந்தநாயகி** : பல இடங்களிலே பார்க் கிறோமே அந்தப் போர்டை! 36-வது டிவிஷனிலே நடக்கிறதே!

**டாக்டர் எச். வி. ஹண்டே** : 36-வது டிவிஷன் என்று சொன்னார்கள். அதை முதலமைச்சர் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : அவர்களுக்கு ஜெனரேட்டர் கூட அல்ல, லைசென்ஸே வழங்கப்படவில்லை. அவர்கள் கொட்டகைகளை எல்லாம் போட்டுவிட்டு வந்து, 'நாங்கள்போட்டுவிட்டோம், இருந்தாலும் முதல் அமைச்சர் நீங்கள் இப்படி அறிவித்தீர்கள். எப்படியாவது, [illegible]ங்கள்

செலவு செய்துவிட்ட காரணத்தினுலே கொடுக்க வேண்டு' மென்று கேட்டார்கள். முடியவே முடியாது என்று சொல்லி யாகிவிட்டது. கொடுக்கப்படவில்லை.

**டாக்டர் எச். வி. ஹண்டே :** ஒரு அமைச்சர் போய்த் துவக்கி வைத்தார்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அமைச்சர்களே போய்த் திறந்து வைத்தாலும் அதற்கு லைசென்சுகள் வழங்கப் பட மாட்டாது என்பது கண்டிப்பான உத்தரவு.

## குடியிருப்பு மனைப்பட்டா

பிறகு நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு சுப்பையா அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பட்டாக்களில் சில புகார்களைச் சொன்னார். ஏதோ முதலமைச்சர் வந்து ஒரு இலட்சத்து 57 ஆயிரம் பேருக்கு வழங்கினார். பல பேருக்குக் கிடைக்கவே இல்லை; சில பேருக்குத்தான் கிடைத்தது என்று சொன்னார்கள். அவர் கள் எந்த அடிப்படையிலே சொன்னார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நான் உடனடியாக அதைப் பற்றி விளக்கங் கள் எல்லாம் சேகரித்தேன்.

27—2—1972-ல் திருவையாற்றிலே வழங்கப்பட்ட குடி யிருப்பு மனைப் பட்டா 6,764. 15—6—1972-ல் திருத்துறைப் பூண்டியில் 26,150. அதிலே திரு மணலி அவர்களும் திரு சுப் பையா அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றியிருக்கிறார் கள். 14—9—1972 அன்றும், 28—2—1973 அன்றும் கும்ப கோணத்தில் 1,15,227. ஆக, பிப்ரவரி 1973 முடிய வழங் கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை 1,48,000. இதிலே, இந்த 1,48,000 குடியிருப்பு மனைப் பட்டா பெற்றவர்களில் 1,41,000 பேர் அதைப் பெற்றுக்கொண்டதற்கான அக்னு லெட்ஜ்மென்டுகளை அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவை அதிகாரிகளிடத்தில் இருக்கின்றன. இன்னும் ஏழு ஆயிரம் பேர்களிடமிருந்து அக்னுலெட்ஜ்மென்ட் வந்தாக வேண்டும். பட்டா வழங்கப்பட்ட பிறகு ஆட்சேபனை தெரிவிக்கப்பட் டும், உரிமை மறுப்புத் தெரிவிக்கப்பட்டும்; விசாரணையில் இருப்பவை 8,700 ஆகும். ஆக இதையும் சேர்த்து மொத் தம் ஒரு இலட்சத்து 57 ஆயிரத்தில் ஒரு இலட்சத்து 41 ஆயி ரம் பட்டாக்களுக்கு அதைப் பெற்றுக்கொண்டதற்கு ரசீது கிடைத்துவிட்டது. எட்டு ஆயிரம் பட்டாக்களிலே வழக்கு இருக்கிறது. ஏழாயிரம் பட்டாக்களுக்கு ரசீதுகள் வரவில்லை. ஆக ஒரு இலட்சத்து 57 ஆயிரம் பட்டாக்களுக்கான அந்த விவரத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

## ஒன்பது அறிவிப்புகள்

குத்தகைதாரர் சட்டம் போன்ற 9 அறிவிப்புகள் இந்த மாமன்றத்தில் அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, ஏழை எளியவருக்கு இந்த அரசு எந்த எந்த வகையிலே தன்னுடைய பணிகளை ஆற்றிக்கொண்டிக் கிறது என்பதற்கு அடையாளமாக—பொதுவுடைமைக் கொள்கையில், சோஷலிஸக் கொள்கையில், இந்த அரசு கொண்டிருக்கிற அழுத்தமான நம்பிக்கைக்கு அடையாள மாக—9 அறிவிப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. நீ 9 அறிவிப்புகள் தந்தாய், நான் 10 அறிவிப்புகள் தருகிறேன் என்று நண்பர் ஹண்டே அவர்கள் காலையிலே பேசும் பொழுது பத்துப் பாயிண்டுகளை வைத்துக்கொண்டு இவை களுக்கு எல்லாம் என்ன பதில் என்று கேட்டார்கள். நான் அந்தப் பத்துப் பாயிண்டுகளுக்கும் என்னுல் முடிந்தவரையில் பதில் அளித்திருப்பதாகக் கருதுகிறேன். இந்த 9 அறி விப்புகள் மாத்திரம் போதாது தமிழ்நாட்டை முன்னேற்றி விடுவதற்கு என்பதை நான் உணராமல் இல்லை.

குத்தகைதாரர்கள் சட்டம் பற்றியெல்லாம் இங்கே எடுத்துச்சொல்லப்பட்டது. அதிலே அடிக்கடி மாண்புமிகு மணலி அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் களும், மற்ற உறுப்பினர்களும் கேரளா நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் பாருங்கள், பாருங்கள் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறுர்கள்.

## கேரளத்தைப் பார்ப்போம்

கேரள நில உச்சவரம்புச் சட்டத்தைப் பொறுத்தவரை யிலும்—விதிவிலக்குகள் தமிழ்நாட்டிலே எவை எவைக்கு அளித்திருக்கின்றோம்—கேரளத்திலே எவை யெவைக்கு விதிவிலக்கு அளித்திருக்கிறுர்கள் என்பதை நான் ஆராய்ந்து பார்த்தேன்.

தமிழ்நாட்டிலே மாநில மத்திய அரசின் நிலங்கள், உள் ளாட்சி நிறுவனங்களின் நிலங்கள் விதிவிலக்கு. கேரளத்திலே மாநில மத்திய அரசின் நிலத்திற்கு விதிவிலக்கு.

தமிழ்நாட்டிலே அரசின் உத்தரவு பெற்ற தொழிற் சாலை, வாணிப நிலை நிறுவனங்கள்—விதிவிலக்கு. கேரளத் திலே தொழிற்சாலைகளும் வாணிப நிறுவனங்களும்—விதி விலக்கு.

தமிழகத்திலே மலைத் தோட்டம் விதிவிலக்கு. கேரளத்திலே மலைத்தோட்டம் விதிவிலக்கு.

தமிழகத்திலே கோயில், மசூதி, மாதாகோவில், அற நிலையங்களின் நிலங்கள் விதிவிலக்கு. கேரளத்திலே கோயில், மசூதி, மாதாகோவில் நிலங்கள் விதிவிலக்கு.

தமிழ்நாட்டில் நிலங்கள் வைத்திருக்கும் ஆலயங்கள் கோயில்கள் 1—3—72-க்குப் பிறகு மேலும் நிலம் வாங்க முடியாது என்று இருக்கிறது. கேரளத்திலே இருப்பதாகத் தெரியவில்லை.

பழத் தோட்டங்கள், தோப்புகள் 1—7—59-ல் இருந்த நிலம் மட்டும் தமிழ்நாட்டிலே விதிவிலக்கு. கேரளத்திலே தனியார் காடுகள் விதிவிலக்கு.

பூதான நிலங்களுக்குத் தமிழ்நாட்டில் விதிவிலக்கு, கேரளத்திலும் விதிவிலக்கு.

தமிழ்நாட்டில் பல்கலைக் கழக நிலங்கள் விதிவிலக்கு. கேரளத்தில் பல்கலைக் கழக நிலங்கள் விதிவிலக்கு.

தமிழ்நாட்டில் கல்லூரிக்கு 40 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொள்ளலாம். உயர்நிலைப் பள்ளிக்கு 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொள்ளலாம். ஆரம்ப அல்லது உயர்தர ஆரம்பப் பள்ளிக்கு 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொள்ளலாம். மாணவர் விடுதிக்கு 25 ஸ்டாண்டர்டு ஏக்கர், தொழிற் பள்ளிக்கு 25 ஸ்டாண்டர்டு ஏக்கர், விவசாயப் பள்ளிக்கு 25 ஸ்டாண்டர்டு ஏக்கர், அனாதை இல்லத்திற்கு 25 ஸ்டாண்டர்டு ஏக்கர், பிற டிரஸ்டுகளுக்கு 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இன்றைக்கு இருக்கிறது. கல்வி நிலையங்கள், டிரஸ்டுகள் கேரளத்தில் விதிவிலக்கு.

ஆகவே உச்சவரம்பைப் பொறுத்தவரையில் கேரளாவிலிருந்து நாம் மிகவும் பின்தங்கிவிடவில்லை யென்பதையும், சில விஷயங்களில் நாம் கொஞ்சம் முற்போக்காக இருக்கிறோம் என்பதையும் நான் நம்முடைய மணலி அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் சொல்வது எல்லாம் உச்சவரம்புச் சட்டத்தைப்பற்றி அல்ல. அந்தச் சட்டத்திற்குப் பின்னால் கொண்டுவரப்பட்ட லேண்ட் ரிஃபார்ம் ஆக்ட்ஸ் 1969-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு, 1970-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதி அமலுக்கு வந்து இருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி நிலத்தை உழுபவன் அந்த நிலத்திற்கு உரிமையாளனாகிவிடுகிறான். இடைத்தரகர் வர்க்கமே எடுக்கப்பட்டிருக்கிறது. கோயில் நிலமாக

இருந்தாலும் அவனுக்குச் சொந்தம் உண்டு. ஆனால் அதில் அந்த விதிவிலக்குகளில் எல்லாம் விடப்பட்டுப்போகின்றன. அந்தச் சட்டத்தைப்பற்றித்தான் நாங்கள் சொல்கிறோம். நீங்கள் அதைச் சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எல்லாம் சேர்ந்த சட்டத்தைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன். இணைப்புச் சட்டம் பற்றித்தான் நான் சொல்கிறேன். குத்தகைதாரர் சட்டம்பற்றி விரிவாக விவாதிக்க இருக்கிறோம்.

திரு சுப்பு அவர்கள் கூடச் சொன்னார்கள். அங்கே குத்தகைதாரர்கள் சட்டத்திலே உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். நஷ்ட ஈடு அங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. முறைகள், வகைகள் எல்லாம் வேறுபாடாக இருக்கின்றன. குத்தகைதாரர்கள் சட்டம்பற்றி நாம் அதிகமாக விவாதிக்க இருக்கிறோம். அப்பொழுது பேசிக்கொள்ளலாம் என்பதால் இத்தோடு விட்டுவிட விரும்புகிறேன்.

நம்முடைய மணலி அவர்களுடைய பேச்சில் பெரும்பாலும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு நிறைந்த அறிவுரைகளையெல்லாம் வழங்கினார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய ' குன்றின் மேலிட்ட விளக்கு ' என்ற புத்தகத்தை நீங்கள் எல்லாரும் படிக்க வேண்டுமென்று திரு மணலி அவர்கள் சிபாரிசு செய்தார்கள். திரு மணலி அவர்கள் எப்பொழுது இப்படி மாறினார் என்று எனக்குப் புரியவில்லை. எந்தப் புத்தகமானாலும், ஒரு கட்டுரையானாலும், கடைசியிலே என்ன கருத்தைச் சொல்லி முடிக்கிறார்களோ அதுதான் அந்தப்புத்தகத்தை எழுதிய ஆசிரியர், அல்லது தலைவர், அல்லது எழுத்தாளர், அல்லது கட்டுரையாளரின் நோக்கத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கும்.

## குன்றின் மேலிட்ட விளக்கு

'குன்றின் மேலிட்ட விளக்கு' என்ற புத்தகத்தில் கடைசிப் பக்கத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் **"திருப்பரங்குன்றம் மாநாடு கண்டவர்கள், அங்ஙனம் கூறத் துணியார். திராவிட நாட்டைத் திராவிடர்காக்கும் தீரப்படையொன்று உண்டு என்பதைத் திருப்பரங்குன்றம் மாநாடு காட்டிற்று! எங்கிருந்து கிடைத்தது இந்த எழுச்சி நிலை? ' தம்பி ' எல்லாம் உன் வீரத்தின் விளைவு. எழுச்சியின் பயன். உழைப்பினில் விளைந்த உயர்வு. வாழ்த்துகிறேன் உன்னை. வளர்க நின் ஆர்வம்! வெல்க திராவிடம்! அண்ணன் அண்ணாதுரை''** என்று எழுதி முடிக்கிறார். இதை இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று திரு மணலி அவர்கள் சொல்வது எனக்குப் புதிராக இருக்கிறது. இதை

மீண்டும் படியுங்கள், இதன்படி நடவுங்கள் என்று திரு மணலி அவர்கள் ஏன் சொன்னார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

**திரு மணலி கந்தசாமி :** மாண்புமிகு கலைஞர் அவர்கள் ரொம்ப லாவகமாக எனக்கு ஒரு கேள்வி போட்டிருக்கிறார்கள். நான் குறிப்பிட்டது எல்லாம் அந்தப் புத்தகத்திலே பொது வாழ்வில் எப்படியிருக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிற நியதிகளையெல்லாம் தி.மு.க. உறுப்பினர்கள் படித்துப் பார்க்க வேண்டும் என்பதுதானே தவிர, அந்தப் புத்தகம் பூராவையும் ஒப்புக்கொண்டதாகக் கூறவில்லை. இன்றைக்கு உங்களுடைய நிலைமையும் மாறியிருக்கிறது. நீங்கள் திராவிட நாடு திராவிடர்க்கே என்று சொன்ன நிலையிலே எல்லாம் இன்றைக்கு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. பொதுவாழ்விலே அதிலே குறிப்பிட்ட நியதிகள், ஒழுக்கம் இவைகளையெல்லாம் நீங்கள் மீண்டும் ஒரு முறை படித்துப்பாருங்கள் என்றுதான் சொனனேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பொது வாழ்விலே இருக்கிறவர்கள் அந்தக் கட்சியிலிருந்து பிரிந்து அந்தக் கட்சியையே அழிப்பதற்கு முனையக்கூடாது என்ற கருத்தையும் ' குன்றின் மேலிட்ட விளக்கு ' என்ற புத்தகத்திலே அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இன்றைக்கு உங்களோடு உறவு வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ.தி.மு.க. உறுப்பினர் திரு கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் நான் ஏ.டி.எம்.கே.யில் சேர்ந்தபிறகு அண்ணா அவர்களின் கட்டுரைகளைப் படிக்க ஆரம்பித்தேன் என்று சொன்னார்கள். நான் உள்ளபடியே ரொம்ப வருத்தப் படுகிறேன். படித்துப் பார்த்துவிட்டு அதனால் கவரப்பட்டு ஒரு கட்சிக்குச் செல்வதுதான் முறையே தவிர, ஒரு கட்சியிலே சேர்ந்துவிட்டுப்பிறகு அந்தக்கட்சியினுடைய கொள்கை புனிதமானது என்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. அவர் எல்லாப் புத்தகத்தையும் படித்து இருப்பார் என்று கருதுகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய ஒரு புத்தகத்தில்—அவர் அதைப் படித்திருப்பாரோ என்னவோ எனக்குத் தெரியாது—அதிலே,

பேராசைப் பெருந்தகையே போற்றி !
பேச நா இரண்டுடையாய் போற்றி !
தந்திர மூர்த்தி போற்றி !
தாசர்தம் தலைவா போற்றி !

வஞ்சக வேந்தே போற்றி !
வன்கண நாதா போற்றி !
கொடுமைக் குணாளா போற்றி !
கோழையே போற்றி, போற்றி !
பயங்கொள்ளிப் பரமா போற்றி !
படுமோசம் புரிவாய் போற்றி !
சிண்டு முடிந்திடுவாய் போற்றி !
சிரித்திடு நரியே போற்றி !
ஒட்டுவித்தை கற்றோய் போற்றி !
உயர் அநீதி உணர்வோய் போற்றி !
எம் இனம் கெடுத்தோய் போற்றி !
ஈடில்லாக் கேடே போற்றி !
இறைவா, போற்றி, போற்றி !
ஏத்தினேன் போற்றி ! போற்றி !

என்று எழுதியிருக்கிறார்கள் 'ஆரிய மாயை' என்ற புத்தகத்தில். அதை அவர்கள் படிக்கவில்லை என்று கருதுகிறேன். நல்ல பொருத்தமான அட்டையெல்லாம் போடப்பட்டு இருக்கிறது இந்தப் புத்தகம்.

## முடிப்புரை

இந்த நிதிநிலை அறிக்கையில் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சியின் தலைவர்களும், அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களும் எடுத்து வைத்த பல அரிய கருத்துக்களைப் பற்றியெல்லாம் நான் இங்கே நீண்ட நேரம் என்னுடைய விளக்கங்களை அளித்திருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு, தமிழ்நாட்டில் எவ்வளவு பெரிய நெருக்கடிகள் வந்தாலும் அந்த நெருக்கடிகளையெல்லாம் சமாளிக்கின்ற அளவிற்கும், தமிழ்நாட்டுப் பெருமக்களுடைய ஒத்துழைப்பைப் பெறுகின்ற அளவிற்கும், நெருக்கடிகளை அலட்சியப்படுத்தாமல், அவைகள் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியவை என்று உணர்ந்து செயல்படும் அளவிற்கும் எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்திருக்கிறது என்பதையும் இந்தப் பதிலுரையில் நான் தேவையான அளவிற்குச் சுட்டிக்காட்டி யிருக்கிறேன். அந்த வகையிலே தங்களுடைய கருத்துக்களைச் சொன்னதன் மூலமாக இந்த நிதிநிலை அறிக்கையை, நிறைவுசெய்த எல்லாக் கட்சியின் தலைவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நான் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு இந்த அளவில் அமைகின்றேன்.

# சட்டமன்ற மேலவையில்

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இந்த மன்றத்தில் வைக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையின் மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்பட 42 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கின்றார்கள். இந்த அவையிலே மொத்தமுள்ள 62 உறுப்பினர்களில் 42 உறுப்பினர்கள் கருத்துக்களை வழங்கி, இறுதியாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் நல்ல பல யோசனைகளையும், நாட்டிலே இருக்கிற நிலைமைகளையும் இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அவர்களுடைய உரையைத் தொடங்கும்போது இந்த நிதி நிலை அறிக்கை வைக்கப்பட்ட நேரத்தில் தமிழகத்தில் ஒரு அமைதியான சூழ்நிலை இருந்தது என்று குறிப்பிட்டு, ஆனால் இடையிலே இரண்டொரு நாட்களாக ஆசிரியர்களுடைய கிளர்ச்சியின் காரணமாக் அமைதியிழந்த ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அவர்களுக்கு இந்த ஆசிரியர்கள் கிளர்ச்சி பற்றிய எல்லா உண்மைகளும் நிச்சயமாகத் தெரியும். நேற்று நம்முடைய நண்பர் ஆறுமுகசாமி அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். எதிர்க் கட்சிகளானாலும், ஆளும் கட்சிகளானாலும் மக்களைப் பயிற்சியளிக்கின்ற முறையிலே, மக்களுக்கு நல்ல விஷயங்களை விளக்குகின்ற முறையிலே பாடுபட வேண்டுமென்று சொன்னார்கள். அவருடைய பேச்சைப் பொறுத்த வரையில், நேற்றையத் தினம் அவர்கள் இந்தியாவை ஆளுகின்ற கட்சியின் சார்பிலும் இல்லாமல், அல்லது இங்கே எதிர்க் கட்சியினுடைய சார்பிலும் இல்லாமல், கிட்டத்தட்ட திரு ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் நிலைமையில் இருந்து, சில பிரச்சினைகளை ஆராய்ந்தார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள், ஆசிரியர்கள் கிளர்ச்சியினுடைய உண்மை விவரங்கள் அனைத்தும் தெரிந்து

கொண்டிருந்தும் கூட, ஆசிரியர்களுடைய உண்மையான பிரதிநிதிகளோடு முதலமைச்சரும், கல்வியமைச்சரும் பேச வேண்டுமென்று சொன்னது கிளர்ச்சி செய்கின்ற .........

**திரு கே. ராஜாராம் நாயுடு:** தவருன அர்த்தத்திற்குப் போய் விடக்கூடாது முதல்வர் அவர்கள். அவர்களுடைய பிரதிநிதி என்று ஒப்புக் கொள்கிறவர்களை அவர்கள் அனுப்ப வேண்டு மென்று சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவர்கள் சொன் னது, ஒரு வேளை நாங்கள்—நானும், கல்வியமைச்சரும்— உண்மையான பிரதிநிதிகளோடு பேசவில்லையோ என்கின்ற ஒரு தவருன பொருளைக் கொடுத்து விடக்கூடாது என்பதற் காகத் தான் குறிப்பிடுகின்றேன். 5-ந் தேதியன்று என்னை யும், கல்வியமைச்சரையும் சந்தித்தவர்கள் பட்டதாரி ஆசிரி யர்களுடைய சங்கத்தின் தலைவரும், பொதுச் செயலாளரும், அவர்களோடு கூடிய ஒரு சில நிர்வாகிகளும்தான் சந்தித் திருக்கிருர்கள். இதைவிட உண்மையான பிரதிநிதிகள் பட்ட தாரி ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பாக யார் இருக்கிருர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இப்போது ஏற்பட்டிருக் கின்ற வேடிக்கை;கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் கிளர்ச்சிகள் நடைபெறுவது என்பது ஒரு முறை. ஆனுல் நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இருக் கின்ற துர்ப்பாக்கியமான சூழ்நிலை—கோரிக்கைகள் நிறைவேற் றப்பட்ட பிறகும், நம் பெருமைக்குரிய இதுபோன்ற மா மன்றத்தில் அறிவித்து விட்ட பிறகும், அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்று இந்த மாமன்றத்தில் உள்ள மிகத் தகுதி வாய்ந்த பெரியவர்களை எதிரில் வைத்துக்கொண்டு உறுதியாகச் சொன்ன பிறகும், எங்கள் ஆறு கோரிக்கைகள் தீர்க்கப்படவில்லை, தீர்க்கப்படவில்லை என்று ஆசிரியர் களுடைய சங்கத்தினர் செய்திகளை வெளியிடுவதும், அவை களைப் பற்றி நாட்டிலே இருக்கின்ற நல்லவர்கள் எந்த வித மான கருத்தையும் அறிவிக்காமல், ஒரு வேளை இந்தக் கிளர்ச்சி நடந்தால் இது ஒரு வகையில் அரசியல் இலாபமாக இருக்கட்டும் என்கின்ற எண்ணத்தில் மௌனமாக இருப்ப தும், நம் எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்ன நாட்டின் எதிர்கால நன்மைக்கு உகந்ததல்ல என்பதை நான் மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்வேன்.

சில நல்ல காரியங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகும், கிளர்ச்சி நடத்துகிருர்கள் என்ருல் அந்த ஆசிரியர் களைத் தூண்டிவிடுகின்றவர்கள் அல்லது ஆசிரியர்கள் சங்கத்திலே எப்படியோ வந்து புகுந்துவிட்டவர்கள், அதன் மூலமாக விளம்பரம் தேட விரும்புகிருர்கள் அல்லது மேற்படி ஆசிரியர்களை அவர்கள் பால் கவர்ந்து கொள்ள, இழுத்துக்கொள்ள நினைக்கிருர்கள்.

# நடனமாடிய எமன்

இது எப்படி இருக்கிறது என்ருல் நேற்றையத் தினம், நம்முடைய அவையிலே இருந்து மறைந்த கலைஞர் டி. கே. சண்முகம் எழுதிய ''எனது நாடக வாழ்க்கை'' என்ற புத்தகத்தை நான் படித்துக்கொண்டிருந்தேன். அதில் ஒரு இடத்தில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிருர்கள். சுமார் 40 ஆண்டுக் காலத்திற்கு முன்பு விருதுநகர் அருகிலுள்ள மல்லாங்கிணறு என்ற இடத்திற்கு அவர் மிகச் சிறுவனுக இருந்தபோது நாடகம் ஆடுவதற்கு அந்த நாடகக் குழுவோடு சென்ருராம். அவர் மிகச் சிறியவனுக இருந்து நாரதர் வேடம் போடக்கூடிய நிலைமை அப்போது. அந்த ஊரிலே மின்சார விளக்குகள் கிடையாது. அரிக்கேன் விளக்குகள், பெட்ரோமாக்ஸ் விளக்குகள், இவைகளை வைத்துக்கொண்டு, நாடகம் நடத்தியிருக்கிருர்கள் ஏராளமான கூட்டம். கூட்டம் எப்படி வந்தது என்பதையும் தெரிவித்திருக்கிருர்கள். சுவரொட்டிகள் அச்சிட்டோ, துண்டு விளம்பரங்கள் செய்தோ அல்லாமல், இரவு 8 மணிக்கு அந்த ஊரில் பொது இடத்திலே ஒரு வெடிகுண்டு வைத்து வெடிப்பார்களாம். பக்கத்து ஊரில் உள்ளவர்களெல்லாம் அங்கே நாடகம் நடப்பதாக அறிந்து குழுமி விடுவார்களாம்.



ஒருநாள் நாடகம் ஆரம்பமாகி நீண்ட நேரம் ஆகியும் மக்களிடமிருந்து எந்த ரசனையும் வரவில்லையாம். கை தட்டலும் இல்லையாம். நாடகத்தினுடைய அதிபர், டி.கே. சண்முகம் அவர்களை அழைத்து ''நீ சீனுக்குப்போனுல் வழக்கமாகக் கைதட்டு வரும். அதைப் போல நீ சீனுக்குப் போ'' என்று சொல்லி நாரதரை வேடிக்கைக் காட்சிக்கு அனுப்பினுராம். இது கை தட்டலை எதிர்பார்த்துத்தான். நல்ல பாட்டுப் பாடிக்கொண்டு வந்தார். கைதட்டல் எதுவும் இல்லை. அயர்ந்து கொஞ்ச நேரத்துக்கெல்லாம் திரும்பி விட்டார்.

அடுத்த காட்சி எமதர்மன் காட்சி. எமதர்மன் வழக்கத்திற்கு மாருக நடனம் ஆடிக்கொண்டு காட்சியிலே பிரவேசித்தாராம். உடனே நாடக ரசிகர்கள் எல்லாம் கைதட்டி, ஆரவாரத்தோடு வரவேற்ருர்களாம். அது ஏன் என்பதை டி. கே. சண்முகம் விளக்கியிருக்கிருர்கள்.'' என்றைக்கும் நடனம் ஆடாத எமதர்மன் திடீரென நடனம்



ஆரம்பித்தவுடன் எல்லோரும் ரசித்தார்கள்'' என்று அந்த வாழ்க்கைக் குறிப்பிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிருர்கள். அதைப் போல நல்ல பாட்டுப் பாடுகிற நாரதர் வந்தால் ரசிக்கின்ற காலமாக இல்லாமல், ஆட்டம் ஆடுகிற எமதர்மன் வந்தால் சில பேர் ரசிப்பார்கள் என்ற நிலைமையை எண்ணி, இன்றைக்கு, ஆசிரியப் பெருமக்கள் இது போன்று கிளர்ச்சி களிலே ஈடுபட்டிருக்கிருர்கள் என்பதை நான் எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கும், ஆசிரியர்கள் கிளர்ச்சியைப் பற்றித் தவருன கருத்துக்களை யாராவது கொண்டிருப்பார்களாளுல் அவர்களுக்கும் சொல்ல மெத்தவும் கடமைப்பட்டிருக் கின்றேன்.

## வரிக்கு வாய்ப்பில்லையா?

இந்த நிதி நிலை அறிக்கையில் நம்முடைய நண்பர் சாமி நாதன் அவர்கள் பேசும்போது வரியில்லா பட்ஜெட் தயா ரித்திருப்பதற்காக மகிழ்ச்சி அடைய முடியாது என்று குறிப் பிட்டார்கள். எதிர்க் கட்சித் தலைவர்களும் அதேதான் சொன்னுர்கள். ஆளும் கட்சியின் சார்பிலோ, அல்லது

தோழமைக் கட்சிகளின் சார்பிலோ வரியில்லாமல் இந்த வரவு செலவுத் திட்டம் அளிக்கப்பட்டிருப்பதை வரவேற்பது தவறல்ல. அதே நேரத்தில் இந்த ஆண்டு வரியில்லாத நிதிநிலை அறிக்கை ஒன்று கொடுத்துவிட்ட காரணத்தினுலேயே என்றைக்குமே வரி போடாமல் இருந்து விடுவோம் என்பதும் சரியல்ல. வரி போடுவதற்கே இடம் இல்லை என்று சாமிநாதன் அவர்கள் சொன்ஞர்கள். கொஞ்சம் நிதி இலாகாவும் மற்ற இலாக்காகளும் ஆழ்ந்து கவனித்தால், தேட ஆரம்பித்தால், இடம் கிடைக்காமல் போய் விடாது. ஆனல் அப்படிக் கிடைக்கின்ற இடங்கள் தாங்கக் கூடிய இடங்களாக இருக்கிறதா என்று பார்த்துத்தான் இந்த அரசு வரியைப் போடும் என்பதையும், நான் தெரிவித்துக்கொள்வேன்.

## தனிநபர் வருமானம்

அவர்கள் ஒரு கணக்கைச் சொன்ஞர்கள். தனிநபர் வருமானம் 397 ரூபாய். முன்பு ரூ.370-ஆக இருந்தது. அப்போது தனிநபர் வரி செலுத்த வேண்டியதுரூ.39-ஆக இருந்தது. இப்போது ரூ 70 அல்லது 75-ஆக ஆகிவிட்டது என்று சொன்ஞர்கள். இதெல்லாம் ஒரு பெருக்கல், வகுத்தல் கணக்கேயல்லாமல், தனி நபர் வருமானம் ரூ.397 என்று சொல்லுகின்ற நேரத்தில் தமிழ்நாட்டிலேயிருக்கின்ற 4 கோடி மக்களும், ஒவ்வொருவரும் 397 ரூபாய் சம்பாதிக்கிருர்கள் என்று நாம் எடுத்துக்கொள்ள முடியாது. நானே, திரு சாமிநாதனே அல்லது இன்னெரு சாதாரணமாக இருக்கக்கூடியவரையோ எடுத்துக் கொண்டு, என்னுடைய வருமானம் 20 ரூபாய், சாமிநாதன் வருமானம் 10 ரூபாய், இன்னெருவருடைய வருமானம் 3 ரூபாய் என்று கணக்கிட்டு, 20+10+3=33 ஆக மூன்று பேருக்குமாக 11 ரூபாய் என்ருல் எனக்கு 9 ரூபாய் குறையலாம், சாமிநாதனுக்கு ஒரு ரூபாய் குறையலாம்; ஆனல் அந்த 3 ரூபாய் சம்பாதிப்பவருக்கு 8 ரூபாய் அதிகமாகிவிட்டது என்று பொருளல்ல. அதைப் போலவேதான் 75 ரூபாய் தலைக்கு இப்போது வரி ஏறிவிட்டது என்று சொன்னலும், எப்படித் தனிநபர் வருமானத்தில் 397 ஒரு அளவாக 4 கோடி மக்களிலே ஒவ்வொருவருக்கும் இல்லையோ, அதைப் போல வரி 4 கோடி மக்களில் ஒவ்வொருவருக்கும் இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். வரியில்லாத வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்த நீங்கள் ஏன் பங்களாதேஷ் வரியை நீக்கியிருக்கக் கூடாது என்று நம்முடைய நண்பர் தாமோதரன் அவர்களும், பெரியவர் கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்களும் கேட்டார்கள். பங்களா தேஷ் வரியைப் பொறுத்தவரையில், போடுகிற நேரத்தில் கூட, இதை பங்களா தேஷ் வரி என்று குறிப்பிட்டுச் சொல்லாமல் இப்படி ஒரு நேரம் வருமென்று முன்

கூட்டியே தெரிந்து, பாதுகாப்புக்கும், வளர்ச்சிப் பணிகளுக்கும் என்று பொதுவாகத்தான் இந்த வரியை நாம் போட்டோம்.

ஆகவே, இப்போது பாதுகாப்பும் தேவை; வளர்ச்சிப் பணிகளும் தேவை. இந்த மாநிலத்திலும், மைசூர் மாநிலத்திலும், பஞ்சாப் மாநிலத்திலும், இந்த வரி தொடர்ந்து இருந்து வருகிறது. பஞ்சாபில் இதை எஜூகேஷனல் செஸ், கல்வி செஸ் என்று மாற்றியமைத்திருக்கிறார்கள். இராஜஸ்தானத்தில் வறட்சி வரி என்று மாற்றியமைத்திருக்கிறார்கள். பங்களா தேஷ் வரியை மத்திய அரசில் எடுத்துவிட்டார்களே, இங்கே ஏன் எடுக்கவில்லை என்று சில பேர் கேட்டார்கள். மத்திய அரசிலே எடுத்த முறைப்படி எடுப்பதானால், இங்கேயும் எடுப்பதற்கு நான்தயாராக இருக்கிறேன். அங்கே ரூ. 290 கோடிக்கு மேல் வரியைப் போட்டுவிட்டு பங்களா தேஷ் வரியை எடுத்தார்கள். இங்கேயும் இந்த அவை அனுமதிக்குமேயானால், அப்படி வேறொரு வரியை அறிமுகப்படுத்திவிட்டு, பங்களா தேஷ் வரியை எடுக்க இயலும். இப்போதைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். அதிலே மத்திய அரசுக்கு ஒரு பங்கைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே எடுத்துவிட்டால் என்ன என்று, கேட்டார்கள். அவர்கள் கேட்டுக்கொள்வதற்காக மத்திய அரசுக்கு இந்தப் பங்கைக் கொடுக்காமல், நாமே அதைச் சேர்த்து, அடுத்த ஆண்டிலிருந்து எடுத்துக்கொள்வது என்கின்ற முடிவுக்கு இந்த அரசு வந்திருக்கிறது என்பதை மாத்திரம் நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## தொலைதூரப் பேருந்தில் வருவாய்

எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இரண்டொரு வேறுபாடுகள் பட்ஜெட் மெமோராண்டத்திலே இருப்பதாக எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் அதைச் சரியாகக் கூர்ந்து கவனித்திருப்பார்களேயானால் அந்த சந்தேகம் அவர்களுக்கு வந்திருக்காது. 'லாங் டிஸ்டன்ஸ் பஸ்ஸஸ்' 'டிஸ்ட்ரிக்ட் சொர்விஸஸ்' ஆக இரண்டுக்கும் 1972—73 வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 680 லட்சம் வருமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், திருத்த மதிப்பீட்டில் இவற்றை இரண்டாகப் பிரித்து இப்போது நாம் போட்டிருக்கிறோம். அவர்கள் அதிலே பார்க்கத்தவறியதாக நான் எண்ணுகிறேன். லாங் டிஸ்டன்ஸ் சர்விசில் ரூ. 620 இலட்சம் போட்டிருக்கிறது. பட்ஜெட் எஸ்டிமேட்டில் ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் அதைப் பிரித்து லாங் டிஸ்டன்ஸ் சர்விஸஸ் ரூ. 462 இலட்சம், டிஸ்ட்ரிக்ட் சர்விசஸ் ரூ. 362 இலட்சம் போட்டு ரூ. 825 இலட்சமாக அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பக்கம் 71-ல் அது குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆகவே, 1973—74 பட்ஜெட் எஸ்டிமேட்டில் அது ரூ. 10 கோடியாக உயருமேயல்லாமல் குறையாது என்பதையும் நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்வேன். 1972—73 எஸ்டிமேட்டில் ரூ. 680-ஐ எடுக்காமல் அப்படியே போட்டிருப்பதால் அதற்கு நேராக இருக்கிற 462 குறைந்துவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எண்ணிவிட்டார்களென்று நான் கருதுகின்றேன்.

இன்னென்றைச் சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியன்களுக்கும்— ஊராட்சி ஒன்றியங்களுக்கும். நான் சென்ற ஆண்டு அவ்வளவு எடுத்துச் சொன்ன பிறகும் ரூ. 117 லட்சம் தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். பல கோடி ரூபாய் செலவு செய்யும் இந்த இலாகாவில் ரூ. 117 இலட்சம் ஒதுக்கியிருக்கிறீர்களே, இது நியாயமா'' என்று அவர்கள் கேட்டார்கள். அதுவும் ஒருதவருன அடிப்படையிலே தான் அவர்கள் கேட்டதாக நான் விளக்க விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியங்களுக்கு இந்த ரூ. 117 இலட்சம் கொடுத்திருப்பது புதிய பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கு மாத்திரம் தான். ஊராட்சி ஒன்றியங்கள் பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கு இணை மானியங்கள் தருவதற்காகத்தான் இந்த ரூ. 117 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் ஊதியங்களுக்குத் தரப்படும் தொகை பக்கம் 101-ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ரூ. 35 கோடிக்கு மேல் கல்வி மானியத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தரப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்வேன். ஆகவே, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் அந்தத் தவருன கருத்துக்குத் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டாம் என்பதற்காக இந்த விளக்கங்களை நான் அளித்தேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுந்தரேசத் தேவர் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். 1962-ல் ரூ. 5·84 கோடி போலீஸ் துறைக்குச் செலவழிக்கப்பட்டது. 1966—67-ல் ரூ. 8·45 கோடி ரூபாயாகச் செலவழித்து, இன்றைக்கு ரூ. 22·75 கோடி செலவழிக்கப்படுகிறது. போலீஸ்காரர்களுக்கு இந்த நாட்டில் ஏன் இவ்வளவு ஏற்றமென்று அவர்கள் கேட்டார்கள். இந்த ஏற்றம் படிப்படியாக வந்த ஏற்றமே தவிர வேறு அல்ல என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1959—60-ல் ரூ. 5 கோடி அளவில் ஒதுக்கப்பட்டது. அவர்கள் தவருகச் சொன்னார்கள் ரூ. 8 கோடி என்று. அல்ல, 1966—67-ல் ரூ. 10 கோடி செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆக 7 ஆண்டுகளில் ரூ. 5 கோடி என்பது ரூ. 10 கோடியாக இரண்டு மடங்கு உயர்ந்திருக்கிறது. அடுத்த 7 ஆண்டுகளில் அந்த ரூ. 10 கோடி—அவர்கள் சொன்ன ரூ. 22 கோடியாக அல்ல—ரூ. 20 கோடியாக, மீண்டும் இரண்டு மடங்குதான் உயர்ந்திருக்கிறதே

அல்லாமல் அதிகமல்ல. அவர்கள் ரூ. 22 கோடி என்று சொன்னது தீயணைப்புப் படைகளுக்குச் செலவழிக்கப்படுகின்ற ரூ. 2 கோடியைச் சேர்த்து அவர்கள் தவருகச் சொன்ஞர்கள். இன்னும் தீயணைப்புப் படைகள் தேவை என்று நாட்டிலேயிருந்து முறையீடு வந்துகொண்டிருக்கிற நேரத்தில் அவைகளை நாம் நிச்சயமாகக் குறைப்பதற்கில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## குழப்புவது யார் ?

இந்த நேரத்தில் மக்களை நம்பிக்கைக்கும், பீதிக்கும் ஆளாக்காமல் வழி நடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு எதிர்க் கட்சிகளுக்கும் இருக்க வேண்டுமென்று சொல்கிறீர்களே, ஆளும் கட்சிகளுக்கே இருக்கிறதாவென்று நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர்—பழைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் கேட்கக்கூடும்; சுதந்திரக் கட்சியின் தலைவர் கேட்கக்கூடும்; முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் கேட்கக்கூடும்; திரு ஏ. ஆர். தாமோதரன் அவர்களும், திரு ராஜா அய்யர் அவர்களும் கேட்கக்கூடும். ஆனல் நான் மிகுந்த வேதனையோடு தெரிவித்துக்கொள்வேன். மத்தியிலுள்ள அமைச்சர்கள் திடீர் திடீரென்று இங்கு நிலைமைகள் சீர்பட்டு வருகிற நேரத்தில் மக்களுடைய உள்ளத்தைக் குழப்புவதைப் போல் ஏதாவதொன்றைச் சொல்லிக் கொண்டிருக்கிருர்கள்.

திரு மோகன் குமாரமங்கலம் அவர்கள் இங்கே வந்தார்கள். வந்தவர், நிலக்கரி கேட்டார்கள், அனுப்பி வைத்திருக்கிறேன் என்று சொன்னல்,—கேட்டார்கள், அனுப்பி வைத்தேன் என்பது அவருக்குப் பெருமைதான். அத்தோடு முடித்திருக்கலாம். 'தமிழ் நாட்டில் நிலக்கரி தேவை என்று பத்திரிகையில் பார்த்தேன். உடனே அனுப்பச் சொன்னேன்' என்று அவர் செய்தி தந்துவிட்டுப் போகிருர்.

மக்கள் என்ன கருதுகிருர்கள் ? ''இந்த அரசாங்கம் எந்த விதமான பொறுப்பையும் எடுத்துக்கொள்ளவில்லை, பத்திரிகையில் வந்த செய்தியைப் பார்த்துவிட்டு நம்முடைய திரு மோகன் குமாரமங்கலம் எவ்வளவு தாராள மனத்தோடு இந்தக் காரியத்தைச் செய்திருக்கிருர்'' என்று மக்கள் எண்ணுகிருர்கள். திரு மோகன் குமாரமங்கலத்திற்குப் பெருமை வருகிறது. நமக்குச் சிறுமை வருகிறதென்றுகூட நான் கவலைப்படவில்லை. ஆனல் ஒரு பெரிய பிரச்சினையைப் பற்றி இந்த அரசு எந்தவிதமான கவனமும் செலுத்தாமல், பத்திரிகையைப் பார்த்து ஒரு மத்திய அமைச்சர் தெரிந்து

கொள்கிற அளவுக்கு நிலைமை வளர்ந்துவிட்டதே என்கிற அளவுக்கு ஒரு தவறான எண்ணம் மக்களிடத்தில் வந்தால், அதைக்கொண்டு அரசியல் இலாபம் தேட முனைவோர் அவர்களைக் கிளப்பிவிட்டால், நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதி கெடுவதற்கான சூழ்நிலைகள் தன்னால் பிறந்து விடுகின்றன.

நான் சட்ட மன்றத்திலும், பேரவையிலும் அதுபற்றி மறுத்து அறிக்கை வெளியிட்டபிறகும் கூட, எந்தத் திருத்தமோ அல்லது விளக்கமோ இதுவரை மத்தியிலிருந்து வரவில்லை. திடீரென்று ஒரு நாள் மத்திய அமைச்சர் திரு சட்டோபாத்தியாயா அவர்கள், தமிழ்நாட்டிற்காக ஒதுக்கிய கைத்தறி நூலை இன்னும் அவர்கள் எடுத்துக் கொள்ளவில்லையென்று சொல்லிவிட்டார்கள். நம்முடைய தொழில் அமைச்சர் திரு மாதவன் அவர்கள், அப்படி எதுவுமில்லை. அவர்கள் ஒதுக்கவுமில்லை, நாம் எடுத்துக்கொள்ள மறுக்கவுமில்லை என்று பேரவையில் பதில் அளித்தார்கள். நான் இங்கேயும் அதுபற்றி விளக்கம் அளித்திருக்கிறேன். அதற்குப் பிறகும் அவர்கள் அதற்கு ஒரு திருத்தம் சொன்னார்களா, விளக்கம் அளித்தார்களா என்றால் கிடையாது.

## ஆருடம் பார்க்க முடியுமா?

இன்று காலையில் பத்திரிகையில் பார்த்தால் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள்; முழுமையாகக் குறிப்பிடவில்லையென்று நினைக்கிறேன்; அவர்கள் கூடச் சொன்னார்கள்; நம்முடைய மதிப்பிற்குரிய திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் நாடாளு மன்றத்தில் என்ன பேசுகிறார்கள்? சமயநல்லூர் அனல் மின் நிலையத்தை எடுக்காமல் இருந்திருந்தால் இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்காதென்று சொல்கிறார். எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கு விவரங்கள் தெரியாமல் இருக்கக்கூடிய நிலைமைகள் உண்டு. ஆளும் கட்சியில் இருப்பவர்; அதுவும் அமைச்சராக இருப்பவர்; தமிழ்நாட்டில் அமைச்சராக இருந்தவர்; நாடாளு மன்றத்தில் ஒன்றைச் சொல்கிறார் என்றால், வேண்டுமென்றே சொல்கிறாரோ, இங்கே தன் கட்சிக்கு அரசியல் இலாபத்தோடு ஆதரவு தேடச் சொல்கிறாரோ என்று நான் சந்தேகப்பட்டால் அது என்னுடைய குற்றமல்ல; அவருடைய குற்றமே தவிர வேறு யாருடைய குற்றமுமல்ல. சமயநல்லூர் அனல் மின் நிலையத்தை விற்றுவிட்டார்கள். இந்த நிலையை எதிர்பார்த்திருக்க வேண்டுமென்று சொல்கிறார். சமயநல்லூரில் அந்த அனல் மின் நிலையத்திற்குக் கடைசியாக டெண்டர்களை முடிவுக்கு விடப்பட்டது 1972 பிப்ரவரி மாதம். இப்பொழுது 1973 மார்ச் மாதத்திலே நாம் இருக்கிறோம். கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்காலம் பரிபூர்ண

மாக முடிந்துவிட்டது. 1972 பிப்ரவரியில், இப்படி மழைத் தட்டுப்பாடு வரும்; தென்மேற்குப் பருவக் காற்று மோசம் செய்யும்; ஆகவே குந்தா போன்ற நீர் மின் நிலையங்களில் நமக்குத் தண்ணீர் கிடைக்காது; பல்லாயிரக் கணக்கான இலட்சம் கன அடி தண்ணீர் இருக்க வேண்டிய குந்தாவில் 1,000, 1,500 இலட்சம் கன அடி தண்ணீர்தான் கிடைக்கும் என்றெல்லாம் ஆரூடம் தெரியுமா? ஜோஸ்யம் பார்க்க முடி முடியுமா? அப்படியானால் சொல்வதெல்லாம் உண்மையா? அப்படி ஆரூடத்தில் சொன்னாலும் நம்பிக்கை கொண்டிருக்க முடியுமா?

## 30 மெகாவாட் அல்ல: 14 மெகாவாட்

எதிர்பாராத வகையில் ஒன்று ஏற்பட்டது. 55 இலட்சம் ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு சமயநல்லூர் அனல் மின் நிலையத்தில் நஷ்டம் ஏற்பட்டது. 1968-ஆம் ஆண்டு அதை என்ன செய்ய லாமென்று ஆராய ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டது. அந்த நிபுணர் குழு அதை மூடி விடலாமென்று யோசனை கூறியது. 55 இலட்சம் ரூபாய் அனாவசியமாகச் செலவா கிறது; 14 மெகாவாட் அதிகபட்சம் அங்கே கிடைக்கிறது; அந்த 14 மெகாவாட் மின்சாரம் என்பது ஒரு நாளைக்கு 1 இலட்சம் யூனிட்தான். 225 இலட்சம் யூனிட் தேவைப்படுகிற தமிழகத்திற்கு ஒரு நாளைக்கு அந்த ஒரு இலட்சம் யூனிட்டைப் பற்றிக் கருதிப்பார்க்க முடியாது. ஒரு ஆண்டுக்கு முன் நடை பெற்றகாரியம் அது. வேறு எந்தத் தவறும் நடைபெற வில்லை. இன்னும் சொல்லப்போனால் தனியாருக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஆசை கூட அல்ல. 1970-ஆம் ஆண்டில் கூடப் பஞ்சாப் மாநிலத்தினுடைய மின் வாரியத்திற்கு அதை நாம் தந்துவிடச் சம்மதித்தோம். அவர்களும் பெற்றுக் கொள்ளச் சம்மதித்தார்கள். முதலில் 40 இலட்சம் ரூபாய் என்று பேசி முடித்து, 42 இலட்சம் ரூபாய்க்கு எடுத்துக் கொள்ளுங்களென்று கேட்டோம். பஞ்சாப் மின் வாரியத் திலிருந்து 9—7—1970-ல் சொன்னார்கள்.

'The offer of Rs. 45 lakhs was bad on behalf of the Board. However as a matter of compromise, an agreed figure of Rs. 42 lakhs has been adopted subject to confirmation by the Boards on either side'

என்று 9—9—70-ல் பஞ்சாப் மின் வாரியம் கடிதம் எழுதி யது. பிறகு அவர்களே, 6—8—71-ல் இன்னொரு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தில்,

'I regret to say that the Board gave a second look to your offer and decided not to proceed with it further'

என்பதாக அவர்கள் எழுதிவிட்டார்கள். தனியார் யாருக்கும் தர வேண்டுமென்ற எண்ணம் நமக்குக் கிடையாது. அதற்குப் பிறகு டெண்டர்கள் விடப்பட்டது. டெண்டர்கள் விட்டதில் நாம் அதற்குப் போட்ட 'புக் வேல்யூ' இருக்கிறதே. அதை எட்டுகின்ற அளவுக்கு டெண்டர்கள் வரவில்லை. மறுபடியும் டெண்டர்கள் விடப்பட்டு, 59 இலட்சம் ரூபாய் டெண்டர்—அதுதான் உயர்ந்த டெண்டர்—அவருக்குத் தரப்பட்டது. திரு சி. சுப்பிரமணியம் என்ன சொல்கிறார் ? 14 மெகாவாட் அதிகப் பட்சம் தரக்கூடிய அந்த அனல் மின் நிலையம் 30 மெகாவாட் தரக்கூடியது ; பல இலட்சம் யூனிட்டுகளை தரக்கூடியதென்று அவர் சொல்லியிருக்கிறார். இப்படிச் சொல்வதன் மூலமாகப் பிரச்சினையை அணுகுவதற்கு அக்கறை எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக, மக்களைத் திசைதிருப்பி விடுவதற்கு அக்கறை எடுத்துக் கொள்கிறாரோ என்பதற்காகத்தான் நான் வருத்தப்படுகிறேன். மத்தியிலிருந்து இப்படி, அமைச்சர்கள் இங்கு வந்தாலும், வர நேரம் இல்லாவிட்டால் அங்கேயே உட்கார்ந்துகொண்டும் தமிழ் நாட்டில் தங்கள் பேச்சின் மூலமாக ஒரு கலவரச் சூழ்நிலையை, மக்களுக்கு இந்த அரசின் மீது அதிருப்தியை ஏற்படுத்த வேண்டுமென்று முனைவது உள்ளபடியே வருந்தத் தக்கதென்று இதுவரை சொன்னேன்;

இப்போது சொல்கிறேன்; அவைகள் வன்மையாகக் கண்டிக்கத் தக்கதென்று நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

## விசாரணைக் குழு

இந்த அவையில் கடைசியாகப் பேசிய நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்களும், நேற்றைய தினம் பேசிய சிலம்புச் செல்வர், தமிழரசுக் கழகத்தின் தலைவர், இந்த மேலவையினுடைய துணைத்தலைவர், திரு ம. பொ. சி. அவர்களும், நண்பர் திரு ஈஸ்வரமூர்த்தி அவர்களும், திரு சுவாமி நாதன் அவர்களும் விசாரணைக் குழு பற்றி இங்கே பேசினார்கள். விசாரணைக்குழு பற்றி எதிர்கட்சித் தலைவரவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள் ; திரு சுவாமிநாதன் அவர்களும் சொன்னார்கள். நான் முதலில் அவர்களைக் கேட்க விரும்புவதெல்லாம், இந்தக் கருத்துக்களையெல்லாம் திரு மாதவன் அவர்களுடைய தலைமையில் அமைந்திருக்கிற அந்தப் பொறுக்குக் குழுவில் போய்ச் சொன்னாலென்ன ? அது என்னுடைய முதல் கேள்வி. இப்போது பதில் சொல்ல வேண்டாம். நீங்களே சிந்தித்துக் கொள்ளுங்கள் என்பதற்காகச் சொல்கிறேன். அந்த மசோதா வேண்டாமென்று சொல்லவில்லை. குற்றம் நிரூபிக்கப்படாவிட்டால் 3 ஆண்டுக் காலம் தண்டனையென்று இருக்கிறதே, அதற்காகத்தான் அந்த மசோதா வேண்டாமென்று அவர்கள் சொல்லியிருப்பதாகச் சொல்கிறார்கள். பொறுக்குக் குழுவிலே அமர்ந்து, எதை எதை வைத்துக் கொள்ளலாம், எதை

எதை விலக்கிவிடலாமென்று அங்கே சொல்கிற உரிமை அவருக்கும் இருக்கிறது. பொறுக்குக் குழுவில் வெளி நடப்புச் செய்வதைவிட, அவர்கள் சொன்னவைகள் அதில் எடுபடாவிட்டால், பிறகு மறுப்பு உரைக்கின்ற உரிமையும் எதிர்க் கட்சித் தலைவருக்கும், உறுப்பினர்களுக்கும் இருக்கிறது. அதை நிறைவேற்ருமல்; இதுவே கறுப்பு மசோதா, ரௌலட் சட்டம் என்றெல்லாம் சொன்ஞல் 'ஓகோ, ரௌலட் சட்டம் என்ருல் இதுதான் போலும்', என்று மக்கள் எண்ணிக்கொள்வர். மாண்புமிகு அங்கத்தினர் ஆறுமுகசாமி அவர்கள் சொல்வதைப் போல, நாம் மக்களைப் பயிற்றுவிக்க வேண்டும். இந்த மசோதாவை ரௌலட் சட்டம் என்று சொல்லிவிட்டால், ரௌலட் சட்டம் என்ருல் என்ன என்று மக்கள் எண்ணும்போது, இதுவரையில் ரௌலட் சட்டத்தைப் பற்றிப் படிக்காத மக்கள், 'இப்படி ஒரு நீதி விசாரணைக் குழு போடுவது தான் ரௌலட் சட்டம் போலும்' என்றுதான் நினைப்பார்கள். அந்தக் காலத்திலே அப்படித்தான் ஒரு சட்டம் போட்டான் போலும் என்று மக்கள் தவருகப் புரிந்து கொள்வார்கள். ஆகவே மக்களைச் சரியாகப் பயிற்றுவிக்க வேண்டும்.

## அந்தச் சட்டம் தெரியுமா?

நான் ஏன் இதைச் சொல்லிக் கொள்கிறேன் என்ருல் இந்த மசோதாவை மறுத்து வெளியேறியவர்களில் ஆளும் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் இருக்கிருர்கள். ஆளும் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் தான் -ராஜஸ்தானத்திலும் இருக்கின்ருர்கள்—மராட்டியத்திலும் இருக்கின்ருர்கள். இங்கே நம்முடைய தமிழ் நாட்டிலே போடப்பட்டிருக்கின்ற மசோதாவில் அவர்கள் சொல்வது போலக் 'குற்றம் நிரூபிக்கப்பட்டுவிட்டால்' என்றெல்லாம் கூட இல்லை. Punishment for false, frivolous, fictitious complaint என்ற தலைப்பில்,

'notwithstanding anything contained in this Act, every person who makes a false, frivolous or fictitious complaint against public men under this Act shall on conviction be punished with imprisonment for a term which may extend to three years and shall also be liable to fine. No Court shall take cognisance of the offence, except with the previous sanction of the Commissioner' என்று நம்முடைய இந்த செலக்ட் கமிட்டியிலே இருக்கின்ற இந்தச் சட்ட வரைவில் நாம் குறிப்பிட்டிருக்கின்ருேம். ராஜஸ்தானத்தில் ஆளும் காங்கிரஸ். அவர்களுடைய அவசரச் சட்டம் "First Published in Rajpatra" என்கின்ற தலைப்பில் —ஃபர்ஸ்ட் பப்ளிஷட் இன் 'ராஜபத்ரா'—'ராஜ பத்ரா'— என்ருல் கெஜட் என்று சொல்லப் படுகிறது—எக்ஸ்ட்ரா ஆர்டினரி பார்ட் 4, டேட்டட் 25-1-1973-ல் அதிலேயும் இதுதான் இருக்கின்றது, 13-வது பிரிவில்

contained in Section 10 or any other provision of this Ordinance, every person who wilfully or maliciously, makes any false complaint under this Ordinance shall on conviction be punished with imprisonment for a term which may extend to three years and shall also be liable to fine '

இப்படி இருக்கின்றது ராஜஸ்தானத்தில் உள்ள சட்டத்தில். மராட்டியத்தில் உள்ள சட்டத்திலும் இதே பிரிவு இடம் பெற்று இருக்கின்றது. இதிலே வேடிக்கை என்னவென்றால், மராட்டியத்திலும் ராஜஸ்தானத்திலும் உள்ள சட்டத்தில் அமைச்சர்களும், இது போன்ற புகார்களுக்கு ஆட்படுத்தப்படுவார்கள் என்று இருக்கின்றது. அவர்கள் மீது விசாரணை நடந்தாலும் அவர்கள்மீது குற்றம் சுமத்தலாம் என்று. ஆனால்,

Minister means, ' A member (other than the Chief Minister) of the Council of Ministers by whatever name called for State of Maharashtra ; that is to say a Minister of State or Deputy Minister '

அமைச்சர் என்றால் முதல்வரைத் தவிர என்று இருக்கிறது ராஜஸ்தானத்தில், மராட்டியத்திலும் அப்படித்தான் இருக்கின்றது. ஆனால் தமிழ்நாட்டிலே முதலமைச்சரையும் சேர்த்துக் குற்றம் சாட்டலாம் என்று சட்டம் கொண்டு வந்திருக்கின்றோம். ஆனால் இதைக் கறுப்பு மசோதா என்று பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஆளும் காங்கிரசைச் சேர்ந்தவர்களும், அவர்களோடு இணைந்திருக்கின்ற — ராஜஸ்தானத்திலே இணைந்திருக்கின்ற, மராட்டியத்திலே இணைந்திருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் நண்பர்களும் சொல்வது எனக்குப் புரியவில்லை. பழைய காங்கிரஸ் காரர்கள் நாங்கள் அங்கெல்லாம் ஆளவில்லை. ஆகவே நாங்கள் இந்தக் குற்றம் சாட்டுகிறோம் என்று தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் ஆளுகின்ற காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இதற்கு என்ன சொல்லுகின்றார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

நான் இன்னொன்றும் சொல்வேன். அங்கத்தினர் திரு சாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். விசாரணைக்குழு ஏன்? அவர்கள் வைத்த குழுவிற்குள்ளே நீங்கள் புகுந்து கொள்ளக்கூடாதா? என்று இது ஒரு வாதம். இதிலே நம்முடைய பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் கொஞ்சம் பரவாயில்லை. அவர்கள் அமைக்கின்ற குழு என்ன? ஒரு குழுவைப் போட்டு நீங்களே அதற்குள்ளே புகுந்துகொள்ளுங்களேன் என்று அவர்கள் சொல்லுகின்றார்கள்.

## அண்ணுவின் பதில்

ஆனல் மற்றவர்கள், மத்தியிலே வைக்கின்ற விசாரணைக் குழுவிலே ஏன் நுழைத்துக்கொள்ளக் கூடாது என்று கேட்கிருர்கள். இந்த விவாதம் இன்று நேற்று அல்ல, 1968-ஆம் ஆண்டிலேயே, உள் துறை அமைச்சராக இருந்த திரு சவான் அவர்கள் இருந்த காலத்திலேயே, அவர்கள் அண்ணு அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினர்கள். அந்தக் கடிதத்தில் அவர்கள் ஒரு 'லோக் பால்' என்கின்ற அமைப்பை அங்கே நிறுவ வேண்டுமென்றும், அந்த அமைப்புக்கு எல்லா மாநிலங்களும் ஆதரவு தர வேண்டுமென்றும் மாநிலங்களில் உள்ள அமைச்சர்கள்மீது புகார் கூறப்பட்டால் அந்த மத்திய அமைப்பு விசாரிக்க உரிமை பெற்றதாக இருக்கும் என்றும் சொல்லி நம்முடைய முதலமைச்சர் அண்ணு அவர்களுக்கும் மற்ற மாநில முதல் அமைச்சர்களுக்கும் கடிதம் எழுதினர்கள். அந்த நேரத்தில் அண்ணு அவர்கள் சொன்ன கருத்து:

'Constitutionally, the Central Ministers are under the control of the Prime Minister and the State Ministers are under the control of the Chief Minister. The Chief Minister is independent of the Prime Minister and the Union whole Ministers. So, the Chief Minister will be the authority of the State Ministers'

என்று அழுத்தம் திருத்தமாகப் பேரறிஞர் அண்ணு அவர்கள் அப்போது திரு சவான் அவர்களுக்குத் தெரிவித்தார்கள். அது மாத்திரமும் அல்லது இன்றைக்குச் சுதந்திரா கட்சிக் காரர்கள் எல்லாம் கூடச்சேர்ந்து கொண்டு மத்திய சர்க்கார் வைக்கின்ற விசாரணைக் குழுவிலே நீங்கள் உங்களை நுழைத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லுகின்ருர்கள். அப்படிச் சொன்னல்கூடப் பரவாயில்லை. மத்திய சர்க்காரே இவர்கள் மீது விசாரணைக் குழு போடு என்று சொல்கின்ருர்களே, அவர்களுக்குச்சொல்வேன், சுதந்திரக் கட்சியினுடைய முதல் அமைச்சராக ஒரிசாவிலே இருந்த திரு சிங்தேவ் அவர்கள் இந்த 'லோக் பால்' பற்றிச் சவானுக்கு என்ன எழுதினர் கள் தெரியுமா ?

'It may not be keeping with the demands of the Constitutional propriety that the observance of the Code of conduct by the Chief Minister should be entrusted to the Prime Minister and the Union Home Minister. In order to develop proper democratic practices, the State Legislature should be the authority for enforcing their observance of the code of conduct by the Chief Minister in the same way as the Parliament is the authority for ensuring the observance of the Code of conduct by the Prime Minister'

அதாவது ஒரு அரசினுடைய முதலமைச்சர் நெறி முறைகளைப் பின்பற்றுவதை மேற்பார்வை செய்யும் பொறுப்பை, நாட்டின் பிரதமரோ அல்லது உள்துறை அமைச்சரோ ஏற்றுக்கொள்வதென்பது அரசியல் அமைப்பின் அடிப்படைக்கு உகந்தது ஆகாது. நெறிவழுவாமல் நாட்டின் பிரதமர் செயல்படுகின்றாரா இல்லையா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பு நாடாளுமன்றத்திற்கு எப்படி இருக்கின்றதோ-அது போலவே ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் நெறிமுறை வழுவாமல் நடக்கிறாரா இல்லையா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பும் அந்த அதிகாரமும் படைத்தது அந்த மாநிலச் சட்ட மன்றம் தான். இது தான் சிறந்த ஜனநாயகப் பண்புகளை வளர்க்க ஏதுவாக இருக்குமென்று ஒரிசாவின் முன்னாள் முதலமைச்சர் திரு சிங்தேவ் அவர்கள் சவானுக்குக் கடிதம் எழுதினார்கள்.

அதற்குப் பிறகு அண்ணா அவர்கள் மாநில அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி அதிலே ஒருமுடிவினை எடுத்து அதையும் சவானுக்கு அறிவித்தார்கள்.

'The Council have examined the suggestion in detail and have decided not to agree to it on various grounds including the ground that the institution of the Lok Pal have contemplated the infringe on the State autonomy guaranteed by the Constitution.'

அதாவது, உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது. இது மாநில சுயாட்சித் தன்மைக்குப் பொருத்தமற்றது. ஆகவே இதை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லையென்று 2—6—1968-ல் திரு சவான் அவர்களுக்கு அண்ணா அவர்கள் கடிதம் எழுதினார்கள். அதிலே அவர்கள் சொன்னார்கள்:—

'We feel that the setting up of a Lok Pal have contemplated by the A.R.C. would infringe on State autonomy as envisaged under the Constitution and as such we would advice against it'

என்று கடிதம் எழுதினார்கள். அதே நிலைதான் 1968-லிருந்து இதுவரையில் இந்த அரசு பின்பற்றி வருகிறதே அல்லாமல் ஏதோ விசாரணைக்குப் பயந்து நடக்கிறோம் என்று எண்ணி, என் மீதோ அல்லது மற்ற அமைச்சர்கள் மீதோ புகார்களை அங்கே எடுத்துச் சொல்லி, உடனேயே மத்திய சர்க்கார் விசாரணைக் குழு வைப்பது என்றால், நான் உள்ளபடியே வேதனைப்படுகின்றேன். இன்றைக்கு இங்கே திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டு கொண்டிருக்கின்றது. நாளை இங்கே திராவிட முன்னேற்றக் கழகம் இல்லாமல், வேறு ஒரு கட்சி ஆண்டு, அதே போல் மத்தியிலே வேறு ஒரு கட்சி ஆளுகின்ற அந்தப்பொறுப்பு ஏற்றிருக்கின்ற நேரத்தில், மத்தியிலே இருக்கின்ற கட்சிக்கு மாநிலத்திலே ஆளுகின்ற கட்சியை வீழ்த்த வேண்டுமென்றால், மிகச் சுலபமான ஆயுதம் ஒன்று கிடைத்து விடுகின்றது. அவர்கள் என்ன செய்ய

வேண்டும்? ஒரு நாலு பேரைப் பிடிக்க வேண்டும். யாராவது கட்சியிலே காழ்ப்புணர்ச்சியால் வெளியேறியவர்கள் இருக்கின்றார்களா என்று பார்த்து, அல்லது அப்படி இல்லாவிட்டால்கூட நாலு பேரைத் தேடிப் பிடித்து அவரிடத்திலே ஒரு புகார் ஒன்று தயாரித்துக் கொடுத்து அதைக்கொண்டு வந்து என்னிடத்திலே கொடு. நான் விசாரணைக் குழு வைக்கிறேன். வைத்தவுடனே மந்திரிகள் ராஜினாமாச் செய்வார்கள். மந்திரிகள் ராஜினாமா செய்து விட்டால், அங்கு இருக்கின்ற எம்.எல்.ஏ. க்கள் சிதறிப் போவார்கள். பிறகு ஒரிசாவினைப்போல ஆகும். அல்லது வேறு மாநிலம்போல ஆகும். பிறகு அங்கு ஜனாதிபதி ஆட்சி வரும் என்பார்கள்.

ஆகவே தனக்குப் பிடிக்காத ஆட்சி எந்த மாநிலத்திலே இருந்தாலும், அதைக் கவிழ்த்துவிட, குலைத்துவிட, சீரழித்துவிட மத்திய சர்க்கார் கையிலே இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் சொல்லுகின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அல்ல: நாளைக்குக் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்தாலும்-நல்ல காலமாக வராது-வந்தாலும், வேறு எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், மத்திய சர்க்காருக்கு விரோதமான ஒரு கட்சியினுடைய ஆட்சி மாநிலத்திலே இருக்கின்ற நேரத்தில் அதைக் கவிழ்க்க வேண்டுமென்று மத்தியிலே இருக்கின்றவர்கள் சர்வாதிகார எண்ணம் கொண்டு, ஜனநாயகப் போர்வையில் இருக்கின்ற பிரதமரும் மற்றவர்களும் எண்ணுவார்களானால், அந்த மாநிலத்திலே 4 பேரைப் பிடித்துப் புகார் கொடுக்கச் சொல்லி அதிலே விசாரணை வைத்து அதன் காரணமாக அந்த அமைச்சர்கள் பதவி விலகச் செய்து, அங்கே ஒரு கிளர்ச்சி ஏற்படுத்தி, அந்த அரசைக் கவிழ்த்துவிட முடியும்.

நம்முடைய சிலம்புச்செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்கள் இங்கே ஒருமுறை பேசுகிற நேரத்தில் எடுத்துக் காட்டினார்கள். அதைத்தான் அப்போது சிங்தேவ் அவர்கள், சுதந்திரக் கட்சியினுடைய அமைச்சர், ஒரிசாவினுடைய முதல்வர், அப்போதே சுட்டிக்காட்டினார்கள். அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். என்மீது விசாரணை என்றால் சட்டமன்றம் இருக்கிறது. பிரதமர்மீது விசாரணை என்றால் நாடாளுமன்றம் இருக்கிறது. பிரதமர் மீது விசாரிக்கத் தனியாக ஒருவிசாரணை குழு போட முடியாது என்பது எப்படிச் சரியோ, அதேபோல மத்திய சர்க்கார் ஒரு விசாரணைக் குழுவை இங்கே அமைக்க முடியாது என்பதும் சரியானதாகும். ஆகவே தான் இன்னும் மெத்த வேதனையோடு ம. பொ. சி. அவர்கள் இங்கே சொன்னார்கள். இப்படி ஒரு விசாரணைக் குழு போடவேண்டிய நிலைமையை பொது வாழ்வில் சில பேர் ஏற்படுத்தி விட்டார்களே! இப்படிப்பட்ட புகார்ப் புழுதி கிளப்பப்பட்டுவிட்டதே! இருந்தாலும் இந்த அரசு துணிச்சலோடும்,

நேர்மையோடும், நிதானத்தோடும் இப்படிப்பட்ட விசாரணைக்குழு போட முன் வந்ததற்காக மகிழ்ச்சி அடைகிறேன் என்று சொன்னார்கள்.

இப்படித்தான் இன்றைக்கு அந்த விசாரணைக்குழு போடுவதற்கான சட்டத்தை, அந்த வரைவினை நாம் கொண்டு வந்திருக்கிறோம். நான் இன்னும்கூடச் சொல்வேன் எதிர்க்கட்சித் தலைவர் சொன்னது போலத் திருத்தங்கள் இன்னின்னவை தேவை என்பதை எடுத்துச் சொல்லி அவைகளைக் கலந்து ஆலோசிப்பதற்கு நல்ல வாய்ப்பினை அளித்த சட்ட அமைச்சருக்கு உதவியாக இருப்பது தான் இங்கே இருக்கிற ஸ்தாபன காங்கிரசானாலும், சுதந்திரக் கட்சியானாலும், நம்முடைய ஆளுங் காங்கிரசானாலும், கம்யூனிஸ்ட் கட்சியானாலும், மற்றக்கட்சிகளுடைய பொறுப்பாக இருக்க வேண்டுமென்று இங்கே எடுத்துக் காட்டிட விரும்புகிறேன்.

## நமது எதிர்ப்பு

விவசாய வருமான வரியைப் பற்றி இங்கே சர்ச்சை எழுந்தது. திரு சாமிநாதன் அவர்களும், திரு நாராயணசாமி அவர்களும் இப்போது பேசிய நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் எடுத்துச்சொன்னார்கள். இந்த விவசாய வருமான வரி தமிழ்நாட்டில் இருக்கிற விவசாயிகளைப் பாதிக்கக்கூடும் என்கிற ஒரு கருத்தை நான் ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கிறேன், டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டிலும் கூட விவசாய வருமான வரியை அவர்கள் சேர்த்துக் கொள்தற்கு மாநிலச் சார்பாக நான் மறுப்புத் தெரிவித்திருக்கின்றேன்.

அதற்குப் பிறகும் விவசாய வருமான வரி இப்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டு இருப்பதை நாம் காண்கிறோம். ஆகவே விவசாயிகளுடைய ஊக்கத்தை இது இங்கே பாதித்துவிடுமோ என்ற அச்சம் இருக்கிற காரணத்தினால், ஒருவேளை மத்திய அரசு இதைக் கைவிடக்கூடும். அப்படிக் கைவிடாவிட்டால் நாம் மத்திய அரசிடத்திலே உரிமையோடு கேட்பதெல்லாம், இங்கே இருக்கிற விவசாய வருமான வரியை வைத்துத் தான் நீங்கள் உங்களுடைய வரியைப் பெருக்கிக் கொள்கிறீர்கள்; வருமானத்தைப் பெருக்கிக் கொள்கிறீர்கள்! உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் இப்போது போடப்பட்டிருக்கிற இந்த விவசாய வருமான வரியில் இப்போதுள்ள நிலை—விவசாயம் அல்லாத வருமானம் 5 ஆயிரம் உள்ளவர்களுக்கு அவர்களுக்கு விவசாயத்தில் எவ்வளவு வருமானம் வந்தாலும் வரிகிடையாது. மத்திய சர்க்காருக்கு வரி கிடையாது. விவசாயிகளுக்கு எவ்வளவு வருமானம் வந்தாலும் மாநில சர்க்காருக்கு வரி இருக்கிறது. ஆனால் 5 ஆயிரம் ரூபாய் தான்

விவசாயம் அல்லாத வருமானம் என்றால் அவர்களுக்கு விவசாயத் துறையில் இருந்து வரி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் 6 ஆயிரம் ரூபாய் என்றால் மத்திய அரசிற்கு வரி தர வேண்டும். விவசாயம் இல்லாத வருமானம் 6 ஆயிரம் என்றால் வரி தர வேண்டும். 6 ஆயிரம் ரூபாய்க்கு 110 ரூபாய் வரி தர வேண்டும், வருமான வரி. அந்த 6 ஆயிரம் ரூபாயோடு விவசாய வருமானம் 5 ஆயிரம் சேர்ந்தால் 11 ஆயிரம் ரூபாயானால் அதிலே சிலாப் சிஸ்டம் அமைந்து 187 ரூபாய் வரி தர வேண்டும். 6 ஆயிரம் ரூபாய் விவசாயம் அல்லாத வருமானம் உள்ளவர்கள் 110 ரூபாய் வரி கொடுத்தார்கள். இப்பொழுது விவசாயத்திலே அவர்களுக்கு 5 ஆயிரம் வருமானம் வருமானால் 110 கொடுத்தவர்கள் 187 ரூபாய் கொடுக்க வேண்டும். ஆக 77 ரூபாய் அதிகமாக வரி கொடுக்க வேண்டும். இது இங்கே இருக்கிற விவசாயத்தினுடைய அடிப்படையில் போடப்படுகிற வரி என்ற காரணத்தினால் இதைக் கணக்கிலே எடுத்து அந்த 77 ரூபாயைத் தமிழ் நாட்டிற்குக் கொடுத்து விடுங்கள் என்று நாம் தமிழ்நாடு அரசு சார்பாக மத்திய அரசை வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். மத்திய அரசும் இது வருகிற காரணத்தினால் தானே 110, 187 ஆக ஆகிறது என்பதை மனத்திலேவைத்து ஆவன செய்யுமென்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

## தியாசாபிகல் சொசைட்டி விவகாரம்

திரு வசந்தபாய் அவர்கள் பேசுகிற நேரத்தில் தியாசாபிகல் சொஸைட்டியைப் பற்றிச் சொன்னார்கள். அந்தச் சொசைட்டி ஏற்கெனவே வைத்துக் கொண்டு இருக்கிற நிலம் 296 ஏக்கரா. அந்த 296 ஏக்கராவில் 106 ஏக்கரா நிலத்தை வீட்டு வசதி வாரியம் எடுத்துத் தென் சென்னை வீட்டு வசதி வாரியம் சார்பில் வீடுகள் கட்டலாம் என்று 71-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மாநில அரசை அணுகியது. அந்த நிலத்தைத் தியாசாபிகல் சொசைட்டியில் சங்கத்தினர் கொடுக்க மறுப்புத் தெரிவித்தார்கள். மறுப்புத் தெரிவித்ததும் அதைப் பற்றி மாநில அரசு பரிசீலனை தொடங்கியவுடன் என்ன செய்தார்கள் என்றால், அப்போது நடந்த வேலைதான் மிகுந்த சங்கடமானது. வீட்டு வசதி வாரியத்திற்கு அதைக் கொடுக்கக் கூடாது என்று மறுப்புத் தெரிவித்து விட்டு இடையிலே என்ன செய்தார்கள் என்றால் 56-1 ; 56-2 என்கிற சர்வேயில் 1½ கிரவுண்டில் இருந்து 3 கிரவுண்டு வரை 191 கிரவுண்டுகளாக மனை ஒன்றுக்கு 8 ஆயிரம் ரூபாய் வீதம் சென்னையிலே உள்ள தனிப்பட்ட ஒரு நிறுவனத்திற்கு, சென்னை

வாரியம் அதைக் கையகப்படுத்துகிற நடவடிக்கையிலிருந்து தப்பித்துக் கொள்ள 4—6—1971முதல் 8—6—1971-க்குள் தனிப்பட்ட நிறுவனமான ரியல் எஸ்டேட்டுக்கு அவசர அவசரமாகப் பத்திரம் ஒன்றினை எழுதிக் கொடுத்தது கலெக்டர் மூலம் நமக்குத் தெரிய வந்தது. இது உண்மையா அல்லவா என்பதற்கு அத்தாட்சி சொல்ல வேண்டுமானால், அந்த ரியல் எஸ்டேட் என்ற நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் அரசுக்கு ஒரு முறையீடு செய்து கொண்டார்கள் ஜூலை 1972-ல். என்ன முறையீடு என்றால், வீட்டு வசதி வாரியம் அந்த சொசைட்டியினுடைய நிலத்தைக் கையகப்படுத்த உத்தேசித்து இருக்கிறதாம்; அதிலே நாங்கள் 191 கிரவுண்ட் நிலத்தை வாங்கி இருக்கிறோம். அதை விட்டு விட்டுக் கையகப்படுத்திக் கொள்ளுங்கள் என்று அவர்கள் அரசுக்கு ஒரு முறையீட்டைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் இப்படிப்பட்டவர்கள் தங்களுக்கு இருக்கிற சங்கடத்தை, தயக்கத்தை, மறுப்பைத் தெரிவிக்கிற நேரத்தில்—அரசு அதைப் பற்றி யோசித்துக் கொண்டு இருக்கிற நேரத்தில்—இடையில் 191 கிரவுண்டுகளை விற்று விட்டிருப்பது என்பது சரியானதல்ல. ஒரு பெரிய புனிதமான சொசைட்டி என்று சொல்கிற இந்த சொசைட்டி சார்பாக இந்தத் தவறு நடைபெற்று இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு கே. ராஜாராம் :—அவர்கள் வாங்கினதா இந்த நிலம்? அல்லது சர்க்கார் அக்வைசன் பண்ணினதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : —அது பழைய நிலம். அந்த விவரங்கள் அவ்வளவாக எனக்குத் தெரியாது.

## திண்டுக்கல் தேர்தல்

கடைசியாகத் திண்டுக்கல்லைப் பற்றிச் சொன்னார்கள். திண்டுக்கல் தேர்தலுக்குத் தேதி வைக்கவில்லை. முதலிலேயே திண்டுக்கல்லில் திராவிட முன்னேற்றக் கழகம் அழிந்து விடும், தோற்று விடும், கவிழ்ந்து விடும் என்று எல்லாக் கட்சிகளும் சொன்னார்கள். ஆளும் காங்கிரஸ், ஸ்தாபன காங்கிரஸ், அ.தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சி, எல்லாக் கட்சிக் காரர்களும் சொன்னார்கள். சுதந்திரக் கட்சியைச்சேர்ந்த திரு சாமிநாதன் தன்னைச் சொல்லவில்லை என்று வருத்தப்படுகிறார். தோற்று விடும், தோற்று விடுமென்றார்கள். பிறகு கொஞ்ச நாளைக்குப் பிறகு, 10 நாள் பரபரப்பு அடங்கிய பிறகு, திண்டுக்கல்லிலே தவறான வாக்குகள் பதிவாகி விட்டன என்று சொன்னார்கள்,

நான் சட்டப்பேரவையிலே சொன்னேன். ஒரு இலட்சம் வாக்குகள் தவருன வாக்குகள் என்று சொன்னூர்கள். ஒரு இலட்சம் வாக்குகள் இல்லே. மொத்தம் 11 ஆயிரம் வாக்குகள். அந்த வாக்குகள்பரிசீலிக்கப்படுகின்றன. நாகர்கோவில் தேர்தலிலே கிட்டத்தட்ட 50 ஆயிரம் சேர்க்கப்பட்ட வாக்குகள், உப தேர்தலுக்காகச் சேர்க்கப்பட்டன. அதைப் பற்றியெல்லாம் பிரச்சினே எழவில்லே. யாரும் எழுப்பவில்லே. ஆனல் இங்கே 11 ஆயிரம் வாக்குகள் சேர்க்கப்பட்ட நேரத்தில் இவ்வளவு பெரிய பிரச்சினேயாக்கி இருக்கிருர்களே என்று நான் சட்டசபையிலே கூட எடுத்துச் சொன்னேன். இதற்காக அங்கிருந்து ஒரு அதிகாரிகூட வந்தார். யாரும் எதிர்க்கவில்லே வந்ததை. தாராளமாக வரட்டும், வந்து பரிசீலிக்கட்டும் என்று விட்டு விட்டோம். அவர்களும் வந்தார்கள். நிருபர்கள் கேட்டார்கள். ஒரு இலட்சம் வாக்குகள் தவறுதலாகச் சேர்க்கப்பட்டிருப்பதாக நிருபர்கள் கேட்டார்கள். கேட்டதற்கு அந்த அதிகாரி சொல்லியிருக்கிருர்:— ஒரு இலட்சம் வாக்குகள் சேர்க்கப்பட்டிருந்தால் அவர்களுடைய பெயர்கள், முகவரிகள் இருக்க வேண்டுமே; அவைகளெல்லாம் எதுவும் இல்லேயே என்று அவர்கள் சொன்னூர்கள்.

அதற்கு மேல் அவர் சொன்னல் அரசியலாகிவிடும் என்பதற்காக—ஒரு அதிகாரி எந்த முறையிலே சொல்ல வேண்டுமோ அந்த முறையிலே அதிகாரி சொன்னூர்; ஒரு இலட்சம் வாக்குகளுக்கு முகவரி கிடையாது, பெயர் கிடையாது என்று சொன்னூர். அதற்குப் பிறகும் எனக்கு உள்ளபடியே வருத்தம்; நம்முடைய எதிர்க்கட்சித் தலேவர், திண்டுக்கல்லில் ஒரு கூட்டத்தில் பேசுகிற நேரத்தில், அவர்களுடைய கட்சித்தலேவர்களோடு சேர்ந்துகொண்டு பேசுகிற நேரத்தில், ஏதோ வாக்காளர் பட்டியலில் தவறு நடந்து விட்டதாகச் சொல்கிருர்கள் என்ருல்—உள்ளபடியே நான் வேதனேப்படுகிறேன். கேட்டால் திரு சாமிநாதன் அவர்கள் சொன்னது போல சொல்லக் கூடும்—என்னுடைய சூழ்நிலே அப்படி நான் சொன்னேன் என்று அவர்கள் சொல்லக் கூடும். 11 ஆயிரம் பேரில் 4 பேர், 5 பேர், 10 பேர் ஏதோ தவறு செய்திருப்பார்களானல் அதற்காக அவர்களுடைய நாளே நீட்டித்துக் கொடுத்திருக்கிருர்கள். நாளும் நீட்டிக்கப்பட்டு அதுவும் அறிவிக்கப்பட்டது. தவறு இருந்தால் திருத்திக் கொள்ளக் கூடிய சூழ்நிலேயை ஏற்படுத்திக் கொடுத்த பிறகும் இப்படித் தேவையில்லாத ஒரு பிரசாரம் செய்வது முறைதாஞ என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு தேர்தலுக்கும் இதைச் சொல்லுகிருேம். ஆட்சேபனே மனுக்கள் வந்திருப்பது சட்ட அமைச்சர் சொல்வது 300 மனுக்கள் தான். இப்படி 11 ஆயிரம் என்பதில் 300

மனுக்கள்தான் வந்திருக்கின்றன. ஆட்சேபனை மனுக்கள் இருந்தால் கொடுங்கள் என்று நாள் நீட்டிக்கப்பட்டது.

திரு கே. ராஜாராம் :—ஆட்சேபனை மனுக்கள் கொடுத்தவர்கள் நேரில் வந்து சொன்னதைத் தான் நான் சொல்கிறேனே தவிர நானாக இட்டுக் கட்டிக் சொன்னதில்லை. நேரில் வந்து அவர்கள் பொறுப்போடு சொன்னதைத் தான் நான் எடுத்துச் சொன்னேனே தவிர சொல்லாததை நாங்களாகச் சொல்வதில் அர்த்தமில்லை. சட்ட அமைச்சர் சொல்கிறார்கள் 300 ஆட்சேபனை மனுக்கள் வந்திருக்கின்றன என்கிறார்கள். என்னிடம் நேரில் வந்து 4, 5 பேர் சொன்னார்கள், இன்னின்ன குறைகள் ஏற்பட்டிருப்பதாக. அதைத்தான் நான் அடுத்துச் சொன்னேனே ஒழிய வேறு இல்லை.

## மாற்றம்!

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:—பிறகு அதிகாரிகளையெல்லாம் மாற்றிவிட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். திருச்சியிலே கூட அதிகாரி மாற்றப்பட்டிருக்கிறார் ஒரு வாரத்திற்கு முன்பு. சென்னையிலே போலிஸ் அதிகாரிகள் மாற்றப்பட்டிருக்கிறார்கள் ஒரு வாரத்திற்குள்ளாக. ஆகவே அதிகாரிகளை மாற்றுவது இயல்பாக எப்போதும் நடைபெறுகிற காரியமேயல்லாமல் வேறல்ல! இன்னும் தேர்தலுக்குத் தேதியே வைக்க வில்லை. எந்த விதமான காரியமும் நடைபெறவில்லை. அதற்குள்ளாகத் திண்டுக்கல், கள்ள வாக்கு, இலட்சம் வாக்கு, தவறான வாக்கு என்றெல்லாம் சொல்லுவதால் பொறுப்பான அரசியல் கட்சிகளை நடத்த முடியாது.

இதில் எனக்கு இன்னொரு வேடிக்கை. நம்முடைய திரு பொன்னப்பநாடார் பேரவையிலே சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்களெல்லாம் சொல்லுகிறார்கள். அவர்களுடைய ஏடுகளெல்லாம் எழுதுகின்றன. மத்திய சர்க்காரிலிருந்து போலீஸ் வர வேண்டும் தேர்தலை நடத்த. மத்திய சர்க்கார் அதிகாரிகள் வந்து தேர்தல் நடத்த வேண்டும் என்று, திடீரென்று இவர்களுக்கு மத்திய சர்க்கார் பற்று எப்படி வந்தது என்று எனக்குத் தெரியவில்லை. அதே மத்திய சர்க்கார் நடத்திய தேர்தல்தான் 71-ஆம் ஆண்டிற்கான தேர்தல். இப்போதிருக்கின்ற ஸ்தாபன காங்கிரஸ்காரர்களெல்லாம் சேர்ந்து கொண்டு பேசினார்கள். அதிலே ஒரு ரசாயன மையை வைத்து விட்டார்கள். ரஷ்யாவிலிருந்து அந்த மை வந்தது. ஆகவேதான் ஜெயித்து விட்டார்கள் என்று சொன்னார்கள். இப்போது அவர்களை அழைப்பதற்கு என்ன காரணம். அவர்கள் வந்தால் அந்த மையோடு வர மாட்டார்களா? என்ன காரணம்? எனக்குப் புரியவில்லை,

இப்படி எதற்கெடுத்தாலும் மாநிலத்தினுடைய உரிமைகளைக் கொண்டு போய் நாமே வலுவினிலே மத்திய சர்க்காருடைய கையிலே கொடுப்பது முறையானது அல்ல. மத்திய சர்க்காருக்குச் சில பொறுப்புகள் இருக்கின்றன. சில பொறுப்புக்களை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நாம் கேட்கின்ற மாநில சுயாட்சியில் இந்தியாவினுடைய ஒற்றுமைக்கு, இந்தியாவினுடைய பாதுகாப்பிற்கு, இந்தியாவினுடைய பலத்திற்கு, ஊறுதேடாத வகையில் பொறுப்புக்கள், அதிகாரங்கள், உரிமைகள் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டுமென்று சொல்லுகிறோம். அதே நேரத்தில், இன்றைக்கு இருக்கின்ற நிலைமைகளை நாம் உணர்ந்து கொள்ளவும், அந்த நிலைமைகளுக்கேற்ப நடக்கவும் தயாராக இருக்கின்றோம். வேண்டுமென்றே, எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்கார் வரவேண்டும், மத்திய சர்க்கார் அதிகாரி வர வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தால், அது மாநில உரிமைகளைத் தாமே குழி தோண்டி புதைப்பதற்குச்சமமாகி விடும்.

. திராவிட முன்னேற்றக்கழகமே இந்த உலகம் உள்ளளவும் ஆண்டு கொண்டு இருக்கப்போகிறது, வேறு கட்சி இங்கே வரவே வர முடியாது என்ற எண்ணத்திலே, தவருகக் கருதிக் கொண்டு, மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டாம் என்று நான் மாண்புமிகு எதிர்க் கட்சியினுடைய தலைவரையும் கேட்டுக் கொள்வேன். காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரவர்களையும் நான் கேட்டுக் கொள்வேன். ஆகவே மாநிலத்தினுடைய உரிமைகள் முக்கியமாக இருக்க வேண்டுமென்ற காரணத்திற்காகத்தான் நான் இங்கு இந்த நிதி நிலை அறிக்கையிலே நம் உரிமைகள் எந்தெந்த அளவுக்கு பாதிக்கப்பட்ருக்கின்றன என்பதை விவரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

இந்த அறிக்கையின் மீது, இந்த மன்றத்தினுடைய நல்லறிவு வாய்ந்த பெரியவர்கள், சான்ருேர்கள், தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லி, இந்த அரசினுடைய காரியத்திற்காக ஊக்க உணர்ச்சி தருகின்ற வகையிலே உதவியதற்காக என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அளவில் முடிப்பதற்கு முன்பு நம்முடைய அடிகளார் அவர்கள் ஆலயப் பணியாளர்களைப் பற்றி எடுத்துச் சொன்னுர்கள். நம்முடைய பராங்குசம் அவர்கள் காங்கி மஸ்தூர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று எடுத்துச் சொன்னுர்கள், தொடர்புடைய அமைச்சர்கள் இருவரும் விரைவிலேயே கலந்து யோசித்து முடிவெடுத்து, பேரவையிலும், மேலவையிலும் நல்ல முடிவுகளை அறிவிப்பார்கள் என்று அவர்கள் இருவருக்கும் சொல்லி, இந்த அளவிலே முடிக்கின்றேன். வணக்கம்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநரால்.
சென்னை, தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.




# இலவச இணைப்பு